
புத்தம் புதிய மல்லிகை நாவல்
ரமணிசந்திரன்
நான் என்பதும்
நீ என்பதும்...
அழகிய
மங்கையர்
நாவல்
ரூ. 20/-
உலகிலேயே மிக அதிகமானவர்கள் படிக்கும் தமிழ் நாவல்

# நான் என்பதும் நீ என்பதும்



ரமணிசந்திரன்

அப்பாடா! யார் கண்ணிலும் படாமல், நகரத்தை விட்டு வெளியே வந்தாயிற்று! இனி, நிம்மதியாகச் சில மணி நேரத்தைக் கழிக்கலாம்! வேண்டாதவர்களைச் சந்திக்கத் தேவையில்லை., போய்த் தொலையுங்கள் என்று முகத்தில் அடித்தாற்போலச் சொல்ல முடியாமல் அவர்கள் சொல்வதைக் கேட்கவும் கட்டாயம் இல்லை! யாரைப் பார்த்தாலும், கல்யாணம், கல்யாணம் என்று துளைத்து எடுக்கிறார்கள்! அதிலும், அந்த வக்கீல்! அவருக்கென்ன வந்தது? உயிலில் என்ன இருக்கிறதோ, அதன்படி செய்ய வேண்டியதுதானே, அவரது வேலை?

பார்க்கும் போதெல்லாம், பார்க்காவிட்டாலும் டெலிஃபோன் செய்தாவது, "தம்பீ, இன்னும் இத்தனை நாள்தான் இருக்கிறது! சீக்கிரமாகக் கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளுங்கள்." என்கிறார்!

இன்றைக்கு, "இன்னும் வடிவாக ஒரே மாதம்தான் இருக்கிறது!" என்று நினைவூட்டல்!

என்ன பெரிய கல்யாணம்?

அவனுடைய தந்தை இரண்டு திருமணங்கள் செய்தவர்! வெகு முட்டாள்த்தனமாக!

ஒன்று, அவனுடைய தாயாரை! இன்னொன்று, சித்தி என்ற பெயரில் இருக்கும் ஒரு பிசா...சே, அப்படிச் சொல்லக் கூடாது! எப்படியும், ஒரு மதிப்புக்குரிய உறவில், அவனுடைய தந்தையுடைய மனைவியாக வாழ்ந்தவள்! சிற்றன்னை எப்படிப்பட்டவள் என்றாலும், தந்தையுடைய மனைவி என்பது பொய்யில்லையே! ஆதாரமாக, ஓர் அசட்டுப் பிள்ளையை வேறு பெற்று வைத்திருக்கிறாளே!

ஆயினும், வீட்டரசியாக ஒருத்தி இருக்கையில், அவளுடைய கணவனை வலை வீசிப் பிடித்தவளுக்கு எப்படி மதிப்புக் கொடுப்பது?

ஆனால் ஒன்று! மூத்த மனைவியைப் பிரித்து விட்டாயிற்று., இவன்தான் சொத்துக்கு வாரிசு என்று அந்த மாதவி நீலா சொல்லிக் கொண்ட போதும், புரந்தரன் என்றால் இந்திரன் என்று அர்த்தம் என்று கேள்வியுற்றதால், அவனுக்கு மேலாகத் தன் மகனுக்கு இந்திரேசன் என்று பெத்த பெயராகத் தேடிப் பிடித்துச் சூட்டிய போதும், அவள் விரும்பிய விதமான பிள்ளையில்லை, அவன்!

என்னதான் பெற்றவள் வெறுப்பை ஊட்டி வளர்த்தபோதும், இந்திரேசனுக்குப் புரந்தரனிடம் ஒரு பிரமை! மதிப்பு, மரியாதை!

எங்காவது கண்டுவிட்டால், ஒரே ஊரில் இருந்து வளரும் போது, கல்வி விளையாட்டு என்று பல விதமாகச் சந்திக்க நேர்வதைத் தவிர்க்க முடியாதுதான், அப்படிப்பட்ட தருணங்களில், 'அண்ணா, அண்ணா' என்று அகட்டு நாய்க்குட்டி மாதிரி, புரந்தரனைச் சுற்றுவான்!

பெரியவனுக்குத்தான், ஒரு மாதிரிக் கூச்சமாகவும், சங்கடமாகவும் இருக்கும்!

யார் என்று இவனை மற்றவர்களிடம் அறிமுகப்படுத்துவது? என் அப்பாவின் இரண்டாவது உறவில் பிறந்த பிள்ளை என்றா? இவனை வைத்துதான், என் அம்மாவின் இடத்தை, இவன் தாய் பிடித்தாள் என்றா?

ஆனால், என்ன ஒதுக்கினாலும், புரந்தரனைப் பார்த்துவிட்டால் போதும்., இந்திரேசன் அவனிடம் ஓடோடி வந்துவிடுவான்!

இது பிடிக்காமல் போகவே, கல்லூரிப் படிப்பை வெளியூரில் வைத்துக் கொண்டதோடு, வேலையையும் அங்கேயே போடுமாறு ஏற்பாடு செய்து கொண்டிருந்தான்!



ஆனால் ஒன்று! நிச்சயமாக இந்திரேசன் அசடன்தான்!

எப்போதும் நிம்மதியற்றே வாழ்ந்த பெற்றவர்களைப் பார்த்து வளர்ந்திருந்த போதும், அவனும் ஒரு பெண்ணைத் துணிந்து திருமணம் செய்து வைத்திருக்கிறானே!

எப்படித்தான் முடிந்ததோ?

முடிவதென்ன? அவளும் லங்கிணிதானே?

பெரும் சொத்து வரும் என்று, மாமியாரைப் போலவே, சாயாவும் சொத்தின் வாரிசை... வாரிசென்று அவள் நினைத்தவனை, பிள்ளை பெற்றுக் கொள்ளவில்லையே தவிர அதே மானம் கெட்ட முறையிலேயே வளைத்துப் பிடித்து விட்டாள்.

தன்னைப் போல இன்னொருத்தியை, அந்த நீலா அம்மாள் எப்படி சகிப்பாள்?

அவள் எவ்வளவோ தடுத்துப் பார்த்தும், சாயாவின் துணிவான மிரட்டல்களுக்கு அஞ்சி, அப்போது உயிரோடு இருந்த சுதர்சனம், தன் சின்ன மகனுக்கும் சாயாவுக்கும் திருமணத்தை நடத்தி வைத்துவிட்டார்!

மாமியார், மருமகள் இருவருக்கும் எப்போதும் குடுமிப் பிடிச் சண்டைதான் என்பது ஊரறிந்த ரகசியம்!

ஆனால், இப்போது சொத்து இன்னொருவனுக்குப் போய்விடுமோ என்று ஆகவும், இரு துருவங்களாக இருந்த மாமியாரும் மருமகளும் ஒன்று சேர்ந்து என்ன ஆட்டம் ஆடுகிறார்கள்!

இவர்களுக்கு என்ன திமிர் இருந்தால், அவனைப் பின் தொடர்ந்து உளவறிய ஆள் போடுவார்கள்?

வெறுமனே வழி கேட்பது போன்ற மிகவும் சாதாரணமான விஷயத்துக்காக ஒரு பெண்ணிடம் புரந்தரன் பேசினாலும், அவளிடம் போய் என்ன பேசினான், என்ன கேட்டான் என்று துளைத்து எடுப்பதும், அவளிடம் அவனைப் பற்றித் தவறாகப் பேசுவதும், அதற்கும் மேலாக அவனிடமே அந்தப் பெண்ணைப் பற்றிப் பச்சை பச்சையாகக் கேவலமாகக் கூறுவதும்... சே!

இதற்கு மேல், ஒருவரால் தரம் இறங்க முடியுமா என்கிற அளவுக்குப் போயாயிற்று!

புரந்தரன் ஒன்றும், இவர்களின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள் அல்லவே!

இவர்களுக்கு முகத்தில் அடி கொடுப்பதற்காகவே, தான் ஒரு திருமணத்தைச் செய்து கொண்டாலென்ன என்று சில சமயங்களில் அவனுக்குத் தோன்றுவது உண்டு!

இருவரும் என்னமாகத் தவித்துப் போவார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போதே, சுகமாக, ஆனந்தமாக இருக்கும்! சிரிப்பு கூட வரும்!-

ஆனால், அது முகத்தின் மீது கோபத்தில் மூக்கை வெட்டிக் கொண்ட கதை போல ஆகிவிடக் கூடாதே என்ற பயமே அவனைப் பின்னுக்கிழுத்து நிறுத்தியது எனலாம்!

அது சரியான பயமும்கூட! பின் விளைவு கட்டாயம் அப்படித்தான் ஆகும் என்பதும் அவனுக்கு நிச்சயமே!

ஏனெனில், அவனும் ஒரு பெண்ணையல்லவா திருமணம் செய்து கொள்ள நேரும்!

அவனது வாழ்வில் அவன் இது வரை பார்த்த, அவனுடைய தாயாரையும் சேர்த்து அவன் அறிந்த மூன்று பெண்களுமே பெண்களிடம் அவனுக்குச் சற்றும் மதிப்பை ஏற்படுத்தியவர்கள் அல்ல!

நேர் எதிரான உணர்வுதான்!

சிற்றன்னை ஒரு கை தேர்ந்த சூழ்ச்சிக்காரி என்றால், அந்த சூழ்ச்சிகளைப் பலிக்கவிட்ட அவனுடைய தாயார் ஒரு முட்டாள்! நீலாவின் சூழ்ச்சிகளைத் தெரிந்து கொண்ட பிறகும், அவளை விரட்டியடிக்கும் துணிவற்று இருந்ததோடு, அந்த அசட்டுத்தனத்துக்குத் தியாக வர்ணம் பூசி, செயலற்றிருந்த பயந்தாங்குளி!

"உன் அப்பாவை ஒரேயடியாகத் தப்பு சொல்ல முடியாது புரந்தரா! இவள் போய் நின்று, இது என் இடம்., நீ போடி வெளியே என்று நின்றால்தானே, அவராலும் அதற்கேற்ப ஏதாவது செய்ய முடியும்? இவள் பெரிய தியாகி போல, ஒரு பெண்ணின் வாழ்க்கையை அழிப்பது பாவம்., அவள் அப்படிச் செய்தாள் என்று, அவளைப் போல நானும் நடப்பதா, அப்படி, இப்படி என்று வசனம் பேசுகிறாள்! நான் ஒற்றைப் பெண்பிள்ளை என்ன செய்வது என்று! வாழ்க்கைப் பணம் நிறையத்தானே தருகிறார்! பேசாமல் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு சும்மா இருந்துவிடலாம் என்று அவள் சொன்ன போதுதான், நம் மகள் வெறும் மண்புழு என்று எனக்கே புரிந்தது! நாமாக நாலு பேரைக் கூட்டிக் கொண்டு, மருமகனிடம் போய் ஏதாவது பேசிப் பார்க்கலாம் என்ற எண்ணத்தையும், அதன் பிறகுதான் அடியோடு விட்டேன்! அங்கே வைத்து, எல்லோர் முன்னிலையிலும், இவள் இதே போலச் சொன்னாள் என்றால், அப்புறம் சொந்தம், பந்தம் என்று, நான் யார் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியும்? இந்த மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்க முடியாது., கடவுள் விட்ட வழி ஆகட்டும் என்று நானும் இருந்துவிட்டேன்!" என்று அவனுடைய பாட்டி சொன்னதிலிருந்தே, புரந்தரனுக்குத் தன் தாயார் மீது மதிப்புக் குறைவுதான்.

பெரிய 'மனோகரா' சினிமாவில் வருகிற மகாராணி மாதிரி, தன்னை நினைத்துக் கொண்டார்களாக்கும்! என்ன நடந்தாலும் புருஷனுக்காகப் பொறுத்து, ஒதுங்கிப் போகிற தியாகசீலி! ஆஃபீஸ் வேலைக்காரி கூடக் கூட வந்து, புருஷனோடு அறைக்குள் புகுந்து பூட்டிக் கொள்கிறாளே என்று யோசிக்கத் தெரியவில்லை! அவள் யார் ஏவுவதற்கு என்று ஆத்திரப்படத்



தெரியவில்லை!

ஒண்ட வந்த பிடாரிக்கு இடம் கொடுத்து, ஊர்ப் பிடாரி வெளியேறினால், பெரிய தப்பு யாருடையது?

பெண்களே மோசம் என்ற முடிவுக்குப் புரந்தரன் வந்தது, அந்தப் பதினைந்து வயதில்தான். நம் வாழ்க்கையில், ஒரு பெண்ணுக்கு இடமே கொடுக்கக் கூடாது என்று முடிவும், அவன் அப்போது எடுத்ததுதான்!

அது வரை எல்லாம் சரிதான்!

ஆனால், அதன் பிறகு, அவன் செய்த தப்பும் ஒன்று இருக்கிறது! இப்போதைக்குப் பெரிய தப்பாகவே தெரிவது! ஆனால், அப்போது, அது ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை!

அதனாலேயே, தனக்குள் முடிவு செய்ததோடு இராமல், பாட்டியிடம் அது பற்றி வெளிப்படையாக, அவன் தெரிவித்து வைத்தான்!

பாட்டியும், அப்போது, அவன் பேச்சைப் பெரிதாக எண்ணவில்லைதான்!

அப்போதைக்கு, ஒரு மீசை முளைக்கும் பருவத்துச் சின்னப் பையனின் உணர்ச்சி வேகம் என்று எண்ணிய பாட்டி, அதைப் பற்றிப் பெரிதாகக் கவலைப்படவில்லை!

தொடர்ந்து, அவனது படிப்பு, விளையாட்டுகளில் அவனுக்கு இருந்த ஈடுபாட்டில் காலம் வேகமாகப் பறந்து போயிற்று!

படிக்கும்போதே காம்பஸ் செலக்ஷனில், அவனைப் பெரிய வேலை தேடி வந்தது!

நல்ல வேளையாக வெளியூர் நிறுவனம்! சென்னையில் போடவா என்று நிறுவனம் கேட்டபோது, வேண்டாம் என்று முந்திக் கொண்டு சொல்லிவிட்டான்!

எல்லாம் அவன் விரும்பியபடி நடக்கையில், எல்லாம் தலைகீழாக மாறக் காரணமும் அவனேதான்!

வேலை கிடைத்த கையோடு திருமணத்துக்குப் பெண் பார்க்கப் போவதாகச் சொன்ன பாட்டியிடம், ஏதாவது பொய்யான காரணம் சொல்லித் தட்டிக் கழிக்காமல், பெரிய வாய்மைவாதியாகத் தன் காரணத்தை அவன் மீண்டும் அழுத்தம் கொடுத்துச் சொன்னது, மிகப் பெரிய தப்பாகிப் போயிற்று!

எவ்வளவோ சொல்லியும் கேளாத பேரனை மாற்றும் வழி தெரியாமல், பாட்டி, அதை மருமகனிடம் போய்ச் சொல்லி, வத்தி வைத்தாள்!

தந்தை சுதர்சனம், மகனை மாற்ற இன்னொரு திட்டம் போட்டார்.

நிதானமான திட்டம்!

பாட்டி அஞ்சுகம் பழங்காலப் பெண்மணி. என்னதான் மகளும் மருமகனும் பிரிந்தே வாழ்ந்தாலும், தந்தையின் தொடர்பு பேரனுக்கு இருக்க வேண்டும் என்று, மகள் இருக்கும்போதே, அவ்வப்போது மருமகனிடம் புரந்தரனை

அனுப்புவாள்.

சிற்றன்னையான நீலாவைப் பற்றிய எச்சரிக்கை பலமாக இருக்கும்!

ஆனாலும், தந்தை முகமறியாத அன்னியராக இருக்காத அளவுக்கு, சுதர்சனத்துக்கும் புரந்தரனுக்கும் இடையே ஒரு தொடர்பு இருந்தது!

ஆனால், அவ்வளவுதான்!

அங்கே சென்றிருக்கும் வேளைகளில்கூடத் தந்தை என்று அவன் ஒட்டியதோ, மகனே என்று சுதர்சனம் குலாவியதோ கிடையாது! பொம்மை மாதிரி உட்கார்ந்திருந்துவிட்டு, மாலைக்குள் பத்து முறை ஃபோன் செய்து பாட்டியிடம் கெஞ்சிக் கேட்டுத் திரும்பிச் சென்றுவிடுவான் புரந்தரன்.

முதலில் கண்குத்திப் பாம்பாய்ப் பார்வையாலேயே பின் தொடர்ந்த நீலாவுக்கும், அலுத்துப்போய், அலட்சியமாக விட்டுவிட்டாள்.

இதெல்லாமே புரந்தரன் கல்லூரியில் சேரும் வரைதான். அதன் பிறகு அவனே, அங்கே போவதை நிறுத்தி விட்டான்!

புரந்தரன் திருமணத்தை மறுத்ததைத் தொடர்ந்து, ஊர்ச் சொத்துகளை நேரடியாகப் பார்த்துக் கொள்வதோடு, கோயில் குளம் என்று போய் வந்து, ஓய்வாகப் பொழுதைக் கழிக்கப் போவதாகக் கூறி, அஞ்சுகத்தம்மாள் சொந்தக் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தாள்.

சென்றது மட்டுமில்லை! இப்போதுதான் நல்ல சுத்தமான காற்றை சுவாசித்துக் கொண்டு, நிம்மதியாக இருப்பதாகவும், இவ்வளவு நாள், சென்னையில் எப்படித்தான் இருந்தோமோ என்று அவளுக்கே ஆச்சரியமாக இருப்பதாகவும், கடிதம் வேறு எழுதினாள்.

புரந்தரன் வேலை செய்த நிறுவனத்தில், சென்னைப் பொறுப்பைப் பார்த்துக் கொண்டிருந்த கிளை நிர்வாகிகளில் ஒருவர், பதவி உயர்வில் மும்பைக்குச் செல்ல, அந்த இடத்துக்கு புரந்தரன் அனுப்பப் பட்டான்!

தந்தையின் வீட்டில், மற்றவர்களோடு கூட வாழ்வதில், புரந்தரனுக்கு அவ்வளவு விருப்பம் இருக்கவில்லை!

கிராமப்புறச் சூழலில் ஒன்றிவிட்ட பாட்டியைத் திரும்பி வரச்சொல்லவும் அவனுக்கு மனமில்லை!

நிறுவனத்து 'கெஸ்ட் ஹவுசி'லேயே தங்கிவிட அவன் முடிவு செய்தது, சுதர்சனத்துக்கு வருத்தம்தான் என்றாலும், மகனிடம் மறுத்து வாதாடவில்லை! வாதாடிப் பயன் இராது என்று அவருக்கு நன்றாகவே புரிந்திருந்தது!

எனவே, மகன் தங்குமிடத்தைப் பற்றி வாய் திறவாது இருந்தவர், தொழில் நடக்கும் இடத்துக்கு, அவனை அடிக்கடி அழைத்துச் சென்றார்!

வேலை முடிந்து, ஐந்து மணிக்குத் திரும்பி வந்தால், சுவரையும், டீவியையும் பார்த்துக் கொண்டு, மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருப்பதற்குத் தந்தையோடு செல்வது, புரந்தரனுக்கும் சுகமாகவே பட்டது!



சென்று பார்த்த பிறகு, முதல் முறையாகப் பெற்றவரிடம் அவனுக்கு மரியாதை கூட உண்டாயிற்று!

பத்திரிகை நடத்துகிறேன் என்ற பெயரில், இயல்புக்கேற்றபடி, 'பரிமளவாணி' என்ற பெயரில், சும்மா ஒரு நாலாந்தரப் பத்திரிகையைத் தந்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்றுதான் அதுவரை புரந்தரன் எண்ணியிருந்தான்!

அங்கே போய்ப் பார்த்த பிறகுதான், என்ன மாதிரி ஈடுபாட்டோடு, சுதர்சனம் அதை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பது, அவனுக்குப் புரிந்தது!

அது புரிந்ததால்தான், என்னமாயும் போய்த் தொலையட்டும் என்று விட்டுத் தொலைக்க முடியாமல் இன்று அவன் இவ்வளவு சஞ்சலப் படுவதும்!

ஆனால், எதிர்காலத்தில் இப்படி ஒரு பிரச்சினை எழக்கூடும் என்ற எண்ணமே இல்லாததால், அப்பாவுடன் சென்று பார்த்தபோது, அவரது பத்திரிகை அலுவலகத்தின் பரபரப்பும், அங்கே நடந்த வேலையும் முதல்நாளே அவனை ஈர்த்துவிட்டன.

அந்த ஈர்ப்பில், சுதர்சனம் அழைத்த போதெல்லாம் அவரோடு செல்லத் தொடங்கி, கடைசியில், அலுவலகத்திலிருந்து வந்து உடை மாற்றிக் கொண்டு, தினமுமே அங்கே போவது அவனுக்கு வழக்கமாகிப் போயிற்று!

கெட்டிக்காரத்தனமாக, இந்த விஷயத்தில் சுதர்சனம் அவனை வற்புறுத்தவே இல்லை!

அப்படி மட்டும் அவர் கட்டாயப்படுத்தி அழைத்திருந்தால், இவர் என்ன என்னைக் கட்டுப்படுத்துவது என்று, அவன் அந்தப் பக்கம் எட்டிப் பார்த்திருக்கக் கூட மாட்டான் எனலாம்!

ஆனால், அவர் அந்தத் தப்பைச் செய்யவே இல்லை என்பதோடு, தந்தையின் ரத்தமோ என்னவோ, அவனாலும் பத்திரிகை அலுவலகத்தை ஒரேயடியாக விட முடியவில்லை!

எரிச்சலூட்டும் இத்தனை பிரச்சினைகளுக்குப் பிறகு, இப்போதும்கூட!

பத்திரிகை அலுவலகத்துக்குள் போய் விட்டால், அது ஒரு மாயா லோகம்!

பக்கம் மேக்கப் பண்ணுவது, ப்ரூஃப் படிப்பது, விளம்பரம், தொடர்கதை, உண்மைக்கதை, இன்செட், பிட், படம்... என்று, அட்டைப் படம் தொடங்கி, கடைசிப் பக்கம் வரை தயார் பண்ணுவதும், ஒருவருக்குப் பலராகச் சரி பார்ப்பதும், பார்க்கப் பார்க்க அவனுக்கும் பரபரப்புதான்!

தந்தையின் அறையில் போய் உட்கார்ந்து, ஒரு பழச்சாறுக்குச் சொல்லி, அது வந்து சேருமுன், "கடைசி நேர விளம்பரம் வந்திருக்கிறது. பெரிய பார்ட்டி. ஆனால், மூன்றாம் பக்கம் வேண்டுமாம். அதிகப்படி பணம் கட்டுவதாகச் சொல்கிறார்கள். ஆனால், முன்னரே ஒத்துக் கொண்ட இன்னொரு விளம்பரம் இருக்கிறது." என்று விளம்பர மானேஜர் வந்து நிற்பார்!

அதே போலக் கடைசி நேரச் செய்தி ஒன்றைப் பற்றித் தலைமை எடிட்டர் தகவல் கொடுப்பார்!

"பாதிப் பணம் அனுப்பிவிட்டு, பிரதிகளை மட்டும் இரு மடங்கு அனுப்பச் சொல்கிறார் இந்த ஏஜெண்ட்!" என்று சர்க்குலேஷனில் இருந்து வருவார்கள்!

இதையெல்லாம் எப்படி சமாளிக்கிறார் தந்தை என்று பார்ப்பது, ரொம்ப முக்கியமாகப்பட்டது மகனுக்கு!

எல்லாவற்றையும் தந்தை சிரித்த முகமாய் சமாளிப்பதைப் பார்க்கப் பார்க்க, அவர் மேல் இதுவரை இல்லாத மரியாதையும், பிரியமும்கூட, புரந்தரனுக்குத் தோன்றி வளரலாயின.

அதை விடவும் பத்திரிகைத் தொழிலின் தாக்கம் அதிகமாக இருந்தது!

வாராந்திரப் பத்திரிகையாக முதலில் தொடங்கிய 'பரிமளவாணி'யிலிருந்து, இளைஞர்களுக்கு, சின்னப் பிள்ளைகளுக்கு, வருமானத்துக்கு, ஆன்மீகத்துக்கு, ஆரோக்கியத்துக்கு என்று இப்போது ஆறு பத்திரிகைகள் வெளிவந்தன.

எல்லாவற்றுக்குமே ஓரளவு நல்ல வரவேற்புதான். 'பரிமளவாணி'யின் குடும்பம் என்றால், அருவருப்பின்றி படிக்கலாம் என்று பரவலாக இருக்கும் கருத்துதான், பத்திரிகையின் உண்மைப் பலம் என்று பத்திரிகையின் பல்வேறு முகங்களைப் பற்றி மகனுக்கு எடுத்துச் சொல்லி, விவரித்த போது, சுதர்சனம் சொன்னார்! அத்தோடு, 'இப்படிக் கூறப்படுகிறது', 'அப்படிச் சொல்லப்படுகிறது' என்று பரபரப்புக்காகப் பொய்யைப் பிரசுரிப்பதும் கிடையாது!

"நான் இருக்கும் வரை கட்டிக் காத்துவிடுவேன்! அப்புறம் எப்படியோ?" என்று அவர் பெருமூச்சு விட்டபோது, புரந்தரனுக்கு ஏற்பட்ட பரிவு, உடனே மறைந்தது!

அதுதான் வாரிசாக எதற்கும் துணிந்த எல்லாம் வல்ல மனைவியோடு, மகன், மருமகளும் இருக்கிறார்களே! அருமையாகப் பார்த்துக் கொள்ளுவார்கள்!

உள்ளத்தில் நினைத்ததை அப்படியே சொல்ல, அவனுக்கு மனம் வரவில்லை! மனதை விட, வாய் வரவில்லை எனலாம்! எனவே, எண்ணியதை மறைத்து, "அதுதான் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி ஆட்களை முழுப் பொறுப்புக் கொடுத்து வைத்திருக்கிறீர்களே! அவர்கள் நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள்! அதனால், கவலைப்படாதீர்கள், அப்பா!" என்று தேறுதலாகக் கூறினான் அவன்.

மகனின் அபூர்வமான 'அப்பா' அழைப்பில் மனம் குளிர்ந்தபோதும், அவனது பிடிகொடுக்காத பேச்சில், அவருக்கு வருத்தம்தான் என்பதைப் புரந்தரனால் நன்றாகவே உணர முடிந்தது!

ஆனால், அதற்காக நான் என்ன செய்ய முடியும்? இது என் பொறுப்பில்லையே என்று தனக்குள் சற்று அலட்சியமாக நினைக்கவும் செய்தான்!

ஆனால், தான் என்ன செய்ய முடியும் என்று வெகுவாக யோசித்து, கெட்டிக்காரத்தனமாகச் செயல்பட்டு, சுதர்சனம், மகனைப் பொறிக்குள் மாட்டி வைத்தார்!



# 2 நான் என்பதும் நீ என்பதும்



இந்த மகன்தான் தன் பத்திரிகைத் தொழிலைத் தொடர்ந்து சிறப்பாக நடத்தக் கூடியவன் என்று வெகு விரைவிலேயே, சுதர்சனத்துக்கு மனதில் நிச்சயப்பட்டுப் போயிற்று!

புரந்தரனுக்குப் பத்திரிகைத் தொழிலில் ஆர்வம் இருப்பதோடு, அவனது யோசனைகளும், அவருக்குச் சிறப்பாகத் தோன்றின.

உதாரணமாக, இளைஞர்கள் பத்திரிகையில் மட்டுமே கம்ப்யூட்டர் பற்றி செய்திகளைச் சுதர்சனம் வெளியிட்டு வந்தார். புதிய கண்டுபிடிப்புகள், என்னென்ன படித்தால், என்னென்ன வேலைக்கு உதவும் என்பன போன்றவை!

ஆனால், தாய்ப் பத்திரிகையான பரிமளவாணியிலும் அந்தச் செய்திகளைப் போடச் சொன்னான் மகன்.

"பெரும்பாலும் குடும்பப் பெண்கள் படிக்கும் பத்திரிகை, இது. அவரவர் பிள்ளைகளுக்கு வழி காட்ட, இது உதவும். அத்தோடு, வீட்டில் இருந்தபடியே ஒரு கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டு, அவர்களே சம்பாதிக்கவும் வழி வகுக்கும்." என்று புரந்தரன் சொன்னது அவருக்குச் சரியாகவேபட்டது.

அவனது கருத்தின்படி வெளியிட்ட முதல் இதழுக்கே பெருத்த வரவேற்பும் கிடைக்கவும், மற்ற பத்திரிகைகளிலும் மகனின் ஆலோசனைகளைச் செயலாக்கத் தொடங்கினார் சுதர்சனம்.

படக்கதைகள் பாப்பாக்களுக்கு மட்டும் அல்ல., பெரியவர்களும் இறுக்கம் தளர அதைப் படித்துப் பார்ப்பார்கள் என்றான். அதிலும், 'டின்டின்' போன்ற புத்திசாலித்தனமும், நகைச்சுவையும் கலந்த படக்கதைகளை சிபாரிசு செய்தான் அவன்.

இந்த எண்ணம் அவருக்கு வந்திராது! இது வரை வரவும் இல்லை!

ஆனால் இன்னமும், அவர் விரும்பியது நடக்கவில்லை!

தந்தையின் தொழிலில் புரந்தரனுக்கு ஈடுபாடு இருந்தபோதும், அவரது தொழில் வாரிசாக அவன் தன்னைக் கருதக் காணோம்!

நிறுவனத்தின் அலுவலர்கள் எல்லோருமே, அவனிடம் மரியாதை செலுத்துவதும், ஆலோசனை கேட்பதுமாகப் பழகத் தொடங்கிய பிறகும், புரந்தரனுக்கு அங்கே முழு உரிமை எடுக்கும் எண்ணமே வரவே இல்லை.

காலம் பறப்பதாகவும், தனக்கிருக்கும் அவகாசம் வேகமாகக் குறைவதாகவும் உணர்ந்த தந்தை, தன் அடுத்த முயற்சியைத் தொடங்கினார்!

மகனிடம் அடிக்கடித் தனிமையில் பேசலானார்.

பொது விஷயங்கள்தான்! ஆனால், அவரது அடுத்த குடும்பத்தைப் பற்றிய தகவல்களும், அவ்வப்போது அவரது பேச்சில் வெளிப்படலாயின!

இரண்டாம் மனைவியின் பேராசை, ஊதாரித்தனம், அவளே அச்சான மருமகள், கம்ப்யூட்டர் தவிர, வேறு ஆர்வம், ரசனையே இல்லாத சின்ன மகன்...

கூடவே, அவரது உடல் நிலை பற்றி பல வைத்தியர்களின் கருத்துக்கள்!

அதாவது, சுதர்சனத்தின் இதயத் துடிப்பு எப்போது வேண்டுமானாலும், நின்று போகலாம்!

மாமியாருக்கும், மருமகளுக்கும் வாய்ப்புக் கிடைத்தால், முதல் வேலையாகப் பத்திரிகையை மூடி, போட்டியாளர்களிடம் நல்ல விலைக்கு விற்றுக் காசாக்கி, அந்தப் பணத்தை விரைவிலேயே கரியாக்கியும் விடுவார்கள்!

அடுத்து வீட்டுக்கும் அதே கதிதான்! அடுக்கு மாடி வீடுகளாகிவிடும்!

அதுவும் வேதனைதான் என்றாலும், வீடாவது போகிறது!

ஆனால், இந்தக் கொடுமையிலிருந்து, பத்திரிகையை யார் காப்பது?

இந்தக் கவலையே, அவரது உயிரை வெகு சீக்கிரமாகக் குடிக்கப் போகிறது!

புரந்தரனின் மனதைக் கரைத்து, பத்திரிகைப் பொறுப்பை அவனாகவே ஏற்கும்படி, சுதர்சனம் செய்தது இப்படித்தான்!

அது மட்டுமின்றி, பத்திரிகை மாயையில் மூத்த மகன் நன்றாகச் சிக்கிவிட்டான் என்று நினைத்து, அவர் இன்னொரு பொறுப்பையும், அவனது தலையில் கட்ட முயன்றதுதான் இப்போதைய பெரும் தலைவலியின் அடிப்படைக் காரணம்!

அது, புரந்தரனுடைய பாட்டி, அவனுக்குத் தெரியாமல், அவரிடம் கொடுத்த பொறுப்பு!

அவனது திருமணம்!

தன் மாமியார் செய்த முன் முயற்சிகள் எதையும் அறிந்திராதவர் போல, அவருடைய நண்பருடைய மகளைப் பற்றிப் புரந்தரனிடம் பேச்செடுத்தார் சுதர்சனம்!

பெண் படித்தவள்., அழகானவள்., என்று அவள் என்ன படித்தாள், எவ்வளவு உயரம் என்பதையெல்லாம் குறுப்பிடாமல் மரியாதையுடன் கேட்டுக் கொண்டிருந்தவன், "உனக்குப் பொருத்தமாக இருப்பாள்!" என்று அவர் கூறவும், சட்டென எழுந்துவிட்டான்.

ஆத்திரமாக அவரை முறைத்துப் பார்த்துவிட்டு, "பாட்டியின் வேலை என்று தெரிகிறது! அங்கே கிராமத்தில் இருந்து கொண்டு, இங்கே, உங்களுக்குச் சாவி கொடுக்கிறார்களாக்கும்! ஒன்று கேட்டால், பெற்றவரிடம் மரியாதை இல்லாது பேசுவதாகத் தோன்றும்! ஆனாலும் சொல்லுங்கள்! இரண்டு திருமணம் செய்து



என்ன பெரிய சுகத்தைக் கண்டுவிட்டீர்கள்? உங்களைப் பார்த்தும், இந்திரேசன் எப்படித் திருமணம் செய்து கொண்டான் என்பதே எனக்கு ஆச்சரியம்! அதற்கு மேல், நானும் வேறா? ஒரு போதுமில்லை! என் மனோதிடம் பற்றி, உங்களுக்குத் தெரியாதுப்பா! இன்னொரு தடவை இந்தப் பேச்சை எடுத்தீர்கள் என்றால் அதைப் புரிந்து கொள்ள நேரிடும்! விட்டுவிடுங்கள்!" என்று கடினமான குரலில் கூறிவிட்டு, அந்த இடத்தை விட்டு அகன்று சென்றான் அவன்.

செய்வதறியாது திகைத்து நின்றார் தந்தை!

பாட்டியின் வேலை என்று வினாடிக்குள் ஊகித்து உணர்ந்த மகனின் புத்திசாலித்தனம் பெருமையூட்டிய போதும், அதுவே கவலையையும் மிகுதிப்படுத்தியது!

பிடிவாதத்தை நிலை நிறுத்தவும், இதே புத்திசாலித்தனம் முனைந்து வேலை செய்யுமே! அதன் பலனாகப் புரந்தரன் இப்படியே இருந்துவிட்டால்?

அதை அனுமதிக்க முடியாதே!

அவரது உயிர் போன்றது இந்தப் பத்திரிகைத் தொழில்! அவருடைய இரண்டாவது குடும்பத்தில் யார் கைக்குப் போனாலும், அடியோடு நாசம் பண்ணி விடுவார்கள்!

அதில் அவருக்கு சந்தேகமே இல்லை!

இந்திரேசன் பெயருக்கு எழுதி வைத்தாலும், இந்தத் தொழிலைக் கொண்டு நடத்தும் கெட்டிக்காரத்தனம் அவனுக்குக் கிடையாது என்பதோடு, தாயை எதிர்த்து நிற்கும் தைரியமும் அடியோடு கிடையாது!

அவருக்கே இல்லாத ஒன்றை, அவனிடம் எதிர்பார்ப்பது மடமைதானே!

விற்க, விலை செய்யக் கூடாது என்ற நிபந்தனையோடு கொடுத்தால்கூட, போட்டிப் பத்திரிகைக்காரர்களிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டு, வேண்டும் என்றே நஷ்டப்படுத்தி அழித்து விடுவாள் நீலா!

இப்போதைக்கு மூத்த மகனிடம் கொடுத்தாலும், அவனுக்கு வாரிசற்றுப் போனால், பின்னர் நடப்பது, இதுவாகத்தான் இருக்கும்!

என்ன, ஒரு பத்திருபது ஆண்டுகள் தாமதமாக நடக்கும்! மற்றபடி, நடக்கக் கூடியது, அதுவேதான்!

இது மட்டுமின்றி, இன்னொன்றும் இருக்கிறது!

நீலா நடத்திய நாடகம் என்று அறியாமல், அதை நம்பி, முதல் மனைவியை அடியோடு ஒதுக்கிய பாவத்துக்கும், அந்தச் சதிகாரியை மாதவியின் இடத்துக்குக் கொண்டு வந்ததற்கும் அவர் பிராயசித்தம் செய்தாக வேண்டாமா?

மூத்த மகன் திருமணத்தை வெறுப்பதன் காரணமும், அவரே அல்லவா? அதற்கும் கூடத்தான் பரிகாரம் செய்தாக வேண்டும்!

சரியாகச் சொல்லப் போனால், நீலாவிடம் அவருக்கு மயக்கம் இருந்த போதும்,

மாதவியின் தன்மை பற்றிய தவறான கருத்து ஏற்பட்டிராவிட்டால், அவர் ஒரேடியாக நீலாவின் வலையில் சிக்கியிருக்க மாட்டார் என்பது, குறைந்த பட்சமாக, அவருக்கு நிச்சயம்!

மாதவி என்ற பெயர் வேறு!

இது எல்லாமே, அப்போது அவர் தன்னைத்தானே நியாயப்படுத்திக் கொள்வதற்காகக் கண்டுபிடித்த சாக்காகவும் இருக்கலாம்! அது சாக்குதான் என்பது, அவருக்குப் பின்னர் தெளிவான விஷயம்!

ஆனால், உண்மையை முழுமையாக உணர்ந்தபோது, இன்னொரு பிள்ளையோடு, அவர் திரும்ப முடியாத தூரத்துக்குச் சென்று விட்டிருந்தார்!

எதிர்ப்புக் காட்டாமல், மாதவி ஒதுங்கிப் போனதும், ஒரு வகையில் அவருக்கு நிம்மதியாகிப் போயிற்று!

தலை தூக்கிய மனச்சாட்சியை, மூத்த மனைவிக்குக் கொடுத்த அதிகப் பணத்தின் மூலம் சமாளித்தது போலவே, வந்தவளின் சதியும் சூழ்ச்சியும் தெரிய வரவும், அவளுக்கும் எலும்புத் துண்டாய் அள்ளிப் போட்டுவிட்டு, அவளை விட்டும் விலகித் தொழிலே கதியென்று ஒதுங்கிப் போனார்.

நல்ல வேளையாக, அவரது தொழிலும் இயந்திர கதியில் ஒரே மாதிரிச் செல்வது அல்ல!

தினம் தினம் ஆர்வமும் பரபரப்புமாக முழு ஈடுபாட்டோடு செய்ய வேண்டிய ஒன்று!

'பரிமளவாணி' அலுவலகத்துக்குள் நுழைந்ததுமே, சொந்த வாழ்வு பற்றிய நினைவுகூட அவருக்கு மறந்துவிடும்!

இத்தனை காலத்தை, இப்படியே கடத்தியவரைக் கடவுள் அடித்த அபாயமணி இப்போது உலுக்கிவிட்டிருந்தது!

ஏதாவது செய்தாக வேண்டிய கட்டாயம்! அதுவும் விரைவாக!

மறைந்துவிட்ட மூத்தவள் பெற்ற பிள்ளைக்கும், பரிமள சுகந்தமாக அறிவொளியைப் பரப்பும் கலைமகள் என்று யோசித்து, யோசித்துப் பெயர் வைத்து, சொந்தப் பிள்ளைகளுக்கும் மேலாக வளர்த்த இந்தத் தொழிலுக்கும்!

பெற்ற பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதற்குக் கூட, சுதர்சனம் இவ்வளவு யோசித்ததில்லை!

இந்தப் பத்திரிகையை எப்படிச் சாக விடுவது?

என்ன செய்வது? எப்படிச் செய்வது?

அவரிடம் கோபத்தில், புரந்தரன் பத்திரிகை அலுவலகத்துக்கே வராமல் இருந்து விட்டால்? அதை நினைக்கவே அவருக்குத் தாங்கவில்லை!

மறுநாள் பத்திரிகை அலுவலகத்தில் மகனைப் பார்க்கும்வரை, சுதர்சனத்துக்கு உடம்பு கூடச் சரியாக இல்லாதது போலத் தோன்றிற்று!



புரந்தரனைக் கண்டதும், வழக்கத்துக்கு மாறாக் உணர்ச்சி வசப்பட்டு, "என் மேல் எவ்வளவு கோபம் என்றாலும், இந்தத் தொழிலை நீ கைவிட்டு விடக் கூடாதுப்பா!" என்று, அவனது கையைப் பிடித்துக் குரல் தளுதளுக்க வேண்டினார்!

"ஷ்! என்னப்பா இது? அங்கும் இங்குமாக, எத்தனை பேர் நிற்கிறார்கள், பாருங்கள்! மனதை அடக்கிக் கொள்ளுங்கள்!" என்று எச்சரித்த போதும், அவனுக்கு உள்ளூர இளக்கமே!

தந்தையின் முகம் தெளியாதது கண்டு, தானாகவே, "வீணாகக் கவலை வேண்டாம். எப்போதும் உங்களுக்கு உதவியாக இருப்பேன்!" என்று சேர்த்துச் சொன்னான்.

அப்போதும் கவலைக்குறி மாறாமல், "எனக்கு அப்புறமும் பார்த்துக் கொள்ளவேணும், தம்பி! அந்த வாக்கு, எனக்குக் கொடு!" என்று அவர் கெஞ்சிக் கேட்க, மெல்லத் தலையை மட்டும் அசைத்து வைத்தான் பிள்ளை!

அடுத்த வினாடியே, 'பக்கம்' தயாராகிவிட்டது என்று ஆள் வரவும், அதைப் பார்க்கவென்று, தந்தையை மறந்து ஓடிய மகனைப் பார்க்கவும், அவர் மனம் ரொம்பவே தெளிந்து போயிற்று!

அன்று வீடு திரும்பியவர், சின்ன மகனைக் கூப்பிட்டுச் சற்று நேரம் பேசினார்! அவன், ஒரு வார்த்தை கூட மாறு சொல்லவில்லை!

அவனுக்குச் சற்று வலுக்குறைவான முதுகெலும்புதான் என்றாலும், கெட்ட புத்தி கிடையாது! பலமாக ஓர் அடிபட்ட பிறகு, அவனது அசட்டுத்தனம் கூட, வெகுவாகக் குறைந்து வருவது போலவே, அவருக்குத் தோன்றியது! ஆனால், பத்திரிகையை நடத்த, அது போதாது!

எனவே, திட்டமிட்டபடியே அடுத்து வக்கீலிடம் சென்றார்!

மறுநாள் திரும்பி வந்தபோது, வக்கீலின் வீட்டுக்கே போய்விட்டு வந்தார்.

ஒரு வாரத்தில் சுதர்சனத்தின் உயிர் அவரது தூக்கத்திலேயே பிரிந்து போய்விட்டதாக அவருடைய வக்கீலிடமிருந்து தகவல் வரவும், புரந்தரன் ரொம்பவே அதிர்ந்து போனான்!

என்னதான் தன் உடம்பைப் பற்றி, அவ்வப்போது சுதர்சனம் சிறுசிறு குறிப்புகள் கொடுத்துக் கொண்டே இருந்தபோதும், இந்த மாதிரித் திடும் என்று ஒரு முடிவைப் புரந்தரன் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை!

தந்தையின் உயிலை வக்கீல் படித்தபோது, இன்னமும் அதிகமாக அதிர்ந்தான்!

ஏனெனில், ஓரளவு நினைவு தெரிந்த நாளிலிருந்து அன்று வரையிலுமாக, முதல் முதலாகச் செய்வது அறியாது அவனைத் திகைத்துத் திணற வைத்தது, அந்த உயில்!

அவனை மட்டுமல்ல! அவனுடைய சிற்றன்னையையும்!

## 3 நான் என்பதும் நீ என்பதும்



சுதர்சனத்துக்கும் நீலாவுக்கும் இடையே பேச்சுவார்த்தை நின்றுபோய், ரொம்ப காலம் ஆயிற்று!

மனைவி என்று ஆகி, அவளுக்கு ஒரு பிள்ளையும் பிறந்த பிறகு, அவளை வீட்டை விட்டு வெளியேற்ற அவரால் முடியவில்லை!

தன் வருமானத்துக்காகப் பிள்ளையைக் குப்பை பொறுக்க... அதைவிடவும் கேவலமாகப் பிச்சை எடுப்பதற்கு அனுப்பக்கூட நீலா தயங்க மாட்டாள் என்பது, அவரது கருத்து!

அவள் வயிற்றில் பிறந்திருந்தாலும், இந்திரேசனும் அவருடைய பிள்ளை ஆயிற்றே!

எனவே, நீலாவை வீட்டோடு இருக்க வைத்து, செலவுக்காக மாதாமாதம் ஒரு கணிசமான தொகையைக் கொடுப்பதோடு தன் கடமை தீர்ந்தது என்று நினைத்தார் அவர்!

தன் சூழ்ச்சி வெளிப்பட்டுப் போய், கணவனின் குலாவல்கள் நின்று போனது, அவளுக்குச் சற்று வருத்தம்தான்! ஆனால், ரொம்பவும் அடி மட்டத்தில் பிறந்து, வளர்ந்த நீலாவுக்கு அந்தப் பெரிய வீடு, கார், கை நிறையப் பணம், நல்ல சாப்பாடு என்று தாராளமாகக் கிடைத்த இந்த வசதிகளை விடக் கணவனின் அன்பு போன்ற மேன்மையும் மென்மையுமான விஷயங்களுக்கு அவளது அகராதியில் பெரிதாக அர்த்தமேதும் இருக்கவில்லை!

எனவே, பணம் தடையற்று வரும்வரை, சுதர்சனத்தின் தொழிலையோ, அவரது நலத்தையோ பற்றிக்கூட அவளுக்கு அக்கறையும் இருக்கவில்லை!

எப்படியோ, கணவன் நடத்துவது நல்ல வருமானமுள்ள ஒரு தொழில்! புருஷனுக்கு ஏதேனும் நேர்ந்தாலும், ஏதேனும் என்று என்ன நாசுக்கு, சுதர்சனம் செத்தாலுமே தொழிலை விற்று, ரொம்பப் பெரிய தொகை தேற்றலாம்! அந்தத் தொகையைக் கொண்டு, காலம் காலத்துக்கும் குந்தியே தின்னலாம்!

இதற்கு மேல், என்ன வேண்டும்? எதுவுமில்லை என்பது அவளது கருத்து.

எப்படியும் மூத்தவள் விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்திட்டுத் தந்ததோடு, செத்தும் போய்விட்டாள்! இனி எல்லாம் அவளுக்கு மட்டும்தான்!

அவளுக்கும் அவளுடைய பிள்ளைக்கும்தான். அவனிடம் கூட, கல்யாணம் பண்ணிக் கொண்ட கழுதை, பிறகு எப்படி மாறுமோ, எதற்கும் இருக்கட்டும் என்று வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி வைத்திருந்தாள்.

நல்ல வாழ்வைப் பற்றிய அவளது அளவுகோல் பணம் மட்டுமே!



எனவே, தன்னை யாரும் அசைக்க முடியாது, என்றைக்கும்தான் ராணிதான் என்பதில் நீலாவுக்கு முழு நம்பிக்கை இருந்தது!

இப்படி ஓர் வளமான எதிர்காலம் இருப்பதாகக் கணக்கிட்டு நீலா இறுமாந்திருந்த போதுதான், சுதர்சனம் பட்டென்று மண்டையைப் போட்டு வைத்தார்!

சும்மா அல்ல! அவளது திட்டத்திலே ஒரு மூட்டை மண்ணையும் அள்ளிப் போட்டுவிட்டு!

சுதர்சனத்தின் இறுதிச் சடங்குகளின் போது, வாடின முகத்துடன் புரந்தரன் வந்து நின்றபோதுகூட, அவள் பெரிதாக ஒன்றும் எண்ணிவிடவில்லை!

"அண்ணா, அண்ணா!" என்று இந்திரேசன் அவனிடம் நெருங்கி நின்று பேசியபோதும் எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல் சும்மாவேதான் இருந்தாள்.

அவன் அம்மாதான் விடுதலைப் பத்திரமே எழுதித் தந்துவிட்டாளே., பிறகென்ன என்ற அலட்சியம்!

அப்பன் செத்ததற்கு வந்திருக்கிறான். கடைசிக் காரியம் முடிந்ததும் போய்விடுவான். அவ்வளவே என்று நினைத்தாள்.

ஆனால், பத்திரிகை அலுவலகத்து ஆட்கள், புரந்தரனுக்குத் தனி மரியாதை தெரிவிப்பதாக மருமகள் சாயா வந்து சொல்லவும் அவளுக்குச் சற்றே துணுக்கென்றது!

அவளுடைய புருஷனான சுதர்சனத்தின் தொழிலுக்கும், மூத்தாள் மகனுக்கும் என்ன தொடர்பு? அங்கே வேலை செய்கிறவர்களுக்கு, அவனை எப்படித் தெரியும்?

ஒரு நாள் ஆ·பீஸ் பியூனை வரச்சொல்லி விவரம் கேட்க வேண்டும் என்று அவள் இருக்கையில், அதற்கு முன்பாகவே எல்லாம் எல்லாம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது!

மூன்றாம் நாள் உயில் படிக்க என்று வக்கீல் அழைத்தார் என்று போனால், அங்கேயும் புரந்தரன் உட்கார்ந்திருந்தான்.

தனக்கு ஏதாவது கிடைக்காதா என்று நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு கொஞ்சமும் வெட்கமில்லாமல் வந்து நிற்கிறான் என்று, பக்கத்தில் சாய்ந்து கிடந்த மருமகளிடம் மேடை ரகசியமாக நீலா முணுமுணுத்தாள்.

இந்திரேசன்தான் முறைத்தானே தவிர, புரந்தரன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை!

'திமிரா' என்று எண்ணியதைச் சொல்லுமுன், வக்கீல் தொண்டையைக் கனைக்கவும் நீலா உட்பட எல்லோர் கவனமும் அவரிடம் சென்றது!

அவர் உயிலை வாசிக்க வாசிக்க, எல்லோருமே அதிர்ந்து போயினர்!

இந்திரேசன் தவிர!

ரொம்பவும் அதிர்ந்து போனது, நீலாதான்!

சற்று நேரம், முயன்றும் அவளுக்குப் பேச்சே வரவில்லை!

எப்படி வரும்?

தொழில் புரந்தரனுக்கு! இருபத்து நாலு ஆண்டுகளாக, மகாராணியாக அவள் வாழ்ந்த அந்தப் பெரிய வீடும் மூத்தாள் மகனுக்கே!

இன்னும் என்னென்னவோ! அவையெல்லாம் இருப்பதுகூட, நீலாவுக்குத் தெரியாது!

ஆனால், அவளுக்கு என்ன வைத்திருக்கிறார்? ஒன்றும் இல்லாவிட்டால், அவளுடைய மருமகள் எள்ளி நகையாடுவாளே!

கடைசி கடைசியாகப் போரூர் பக்கத்திலே ஒரு வீடு, சுதர்சனம் எப்போதோ வாங்கிப் போட்டிருந்தார் போல! அதைச் சின்ன மகனுக்கும், இரண்டாவது மனைவிக்குமாக எழுதி வைத்திருந்தார்!

இப்படிச் சின்னதாகக் கொடுக்க வேண்டும் என்றே வாங்கினார் போல என்று கொதிப்புடன் எண்ணினாள் நீலா!

ஏதோ வைப்பு நிதி பற்றி வக்கீல் சொன்னார். உடைக்க முடியாதிருந்த அதிலிருந்து வரும் வட்டிப் பணம் இந்திரேசனுக்கும் அவனுடைய தாய் மற்றும் குடும்பத்துக்கும் என்றார் வக்கீல்.

மாதம் எவ்வளவு வரும் என்ற சாயாவின் கேள்விக்கு, சுமார் இருபது ஆயிரம் என்று வக்கீல் பதில் சொன்னார்!

மேலும் ஏதோ வாசித்தார் அவர்!

ஆனால், நீலாவின் காதுகளில், அவரது பேச்சு ஒன்றுமே விழவில்லை!

வெறும் இருபது ஆயிரத்தில், கார், ஃபோன், வேலையாட்கள், சினிமா என்று எப்படி வாழ்வது? சதி வேலை தெரிந்தும், ஒதுங்கிப் பேரய்ச் சும்மாதானே இருக்கிறான் புருஷன் என்கிற இந்த மண்ணுணி என்று நினைத்ததற்கு, நன்றாகப் பழி வாங்கிவிட்டானே, பாவி!

இந்த உயிலைப் படித்துப் பார்த்துவிட்டுத் தருவதாகச் சொல்லிக் கிழித்து எரித்து விடலாமா?

வக்கீலுக்கு ஏதாவது பெரிய தொகை கொடுத்து, உயிலையே அழிக்கச் சொல்லிக் கேட்கலாமா?

டீவி சீரியலில் வருகிற மாதிரி, அடியாள் ஏற்பாடு செய்து, இந்த வக்கீல், புரந்தரன் இருவரையும் போட்டுத் தள்ளிவிடலாமா?

ஆனால், அடியாளுக்கு எங்கே போவது? யாரைக் கேட்பது?

என்னென்னமோ உருப்படாத திட்டங்களை மனதுள் போட்டு நீலா உருட்டிக் கொண்டிருக்கையில், அவளது தொடையைச் சுரண்டி, "அத்தை, அந்த மச்சான் மூஞ்சைப் பாருங்களேன்!" என்று காதோரம் ரகசியம் பேசினாள் சாயா.

மருமகள் சொல்லி, எதையும் நீலா செய்வது கிடையாது என்றாலும், அதிர்ந்திருந்த மனநிலையில், தன்னை அறியாது, புரந்தரனிடம் அவளது பார்வை சென்றுவிட்டது!

பார்த்த அளவில் அவளுக்கும் திகைப்புதான்!



கோடிக்கணக்கில் மதிப்புள்ள பத்திரிகையையும் இந்தப் பெரிய பங்களாவையும் அடைந்த சந்தோஷம் புரந்தரன் முகத்தில் கொஞ்சமும் இல்லை! நேர்மாறாக, எள்ளைப் போட்டால் வினாடியில் பொரிந்துவிடும் போல, அப்படியொரு கடுப்புதான் காணப்பட்டது!

ஏனோ? இதை விடவும் அவனுக்கு என்ன வேண்டுமாம்?

அந்தப் போரூர் வீட்டையும் சேர்த்து எழுதி வைக்கவில்லை என்ற ஆத்திரமா?

"இத்துனூண்டு எனக்குக் கொடுத்ததுகூட, இவனுக்கு ஆத்திரமாக்கும்!" என்றாள் எரிச்சலோடு, அவள்!

"வீடு உங்களுக்கு மட்டும் இல்லை! நம் மூன்று பேருக்கும்!" என்று மாமியாரைத் திருத்திய சாயா, உடனேயே தொடர்ந்து, "ஆனால், நமக்குள்ளே சண்டை போட இது நேரம் இல்லை, அத்தை. வக்கீல் இப்ப, மச்சான் கல்யாணம் பற்றி ஏதோ சொன்னார்! என்னமோ இந்த ஒரு வருஷத்துக்குள்ளாகக் கல்யாணம் கட்ட வேணும் என்று... சொத்து பத்தை மாமா, சும்மா மூத்த பையன் கையிலே கொடுத்து விடலை, அத்தயம்மா! ஏதோ கோடு போட்டு வைத்திருக்கிறார்! அது மட்டுமில்லை! அந்த நிபந்தனை மச்சானுக்குப் பிடிக்கலை என்றும் தெரியுது! சத்தம் காட்டாமல் கவனியுங்கள். சொத்து, நம் கைக்கே வந்தாலும் வரும் என்று எனக்குத் தோணுது!" என்று கூறவும், நீலாவும் மீண்டும் உயிர் வந்தவளாக, ஆவலாக மருமகளோடு சேர்ந்து நடப்பதைக் கவனிக்கலானாள்!

சாயா கூறியதே சரியாக, சுதர்சனம் எழுதி வைத்திருந்த உயிலின் ஒரு பகுதி, புரந்தரனுக்குக் கொஞ்சமும் பிடிக்காததாக இருந்தது! எதிர்பாராததாகவும்!

கடைசி ஒரு மாத காலமாக, அவனது கம்ப்யூட்டர் வேலையை விட்டுவிட்டுப் பத்திரிகை அலுவலகத்தில் அமர்ந்ததால், இப்படி ஒரு கிடுக்கிப் பிடி போட்டுத் தன்னை மாட்டி வைக்க எண்ணினாரா என்று ஆத்திரமாகவும்!

எல்லாவற்றையும் உதறிவிட்டுப் போய்விடலாமா என்றுகூடத் தோன்றிற்று!

அவனுக்குப் பிழைப்புக்கு ஒன்றும் கஷ்டமிராது! இன்னொரு வேலை இலகுவாகவே கிடைக்கும்! ஆனால்...

ஆனால்... பத்திரிகையை எப்படி விடுவான்?

பத்திரிகை மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த ஈடுபாட்டைப் புரிந்து கொண்டு, தந்தை இப்படி ஒரு நிபந்தனையைத் திணித்திருக்கிறார்! ஆனாலும், என்ன பைத்தியக்காரத்தனம்!

ஆனால், இந்தப் புரந்தரனைப் பற்றி, பெற்றவராயினும் அவருக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை! தன் கருத்து, கொள்கை தவிரப் புரந்தரனுக்கு எதுவும் பொருட்டில்லை., சொத்து, சுகத்தை அவன் பெரிதாக நினைப்பவன் இல்லை என்று தெரியாமல், இந்த மாதிரி, அவனைக் கட்டுப்படுத்த முயன்றிருக்கிறார். பாவம்!

ஆத்திரத்துடன் புரந்தரன் எழுந்து, ஏதோ சொல்லத் தொடங்கியபோது, வக்கீல் சகாயம், கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுமாறு, சைகை செய்து, அவனது

பேச்சை நிறுத்தினார்!

"பொறுங்கள், புரந்தரன். முதலில் நான் முழுவதையும் படித்து முடித்து விடுகிறேன்! பிறகு தனிமையில் உங்... அவரவர் பிரச்சினையைக் கேட்கிறேன்!" என்று நயந்த குரலில் அவர் கேட்ட விதத்தில் ஒன்றும் பேசாமலே அவன் உட்கார்ந்தான்.

ஆனால் அவரது பேச்சை மறுத்து, "அட, நீங்கள் சும்மாயிருங்க, வக்கீலு! வீட்டுப்பிள்ளை, ஏதோ முக்கியமாகச் சொல்ல வருகிறானில்ல? அதைப் போய்த் தடுக்கிறீர்களே! என்னமோ, ஏதோ? தாய், தம்பி முன்னாலே சொல்லாமல், வேற்றாள், உங்கள் கிட்டே தனியாக அவன் எப்படிச் சொல்லுவான்? முதலிலே, அவன் சொல்லட்டும்! கண்ணு புரந்தரா, நீ சொல்லும்மா? உயிலிலே என்ன தப்பு? அதிலே, ஏதானும் உனக்குப் பிடிக்கலை என்றால், மறைக்காமல் சொல்லுப்பா!" என்று மூத்தாள் மகனை நீலா ஊக்கினாள்.

வக்கீலின் பார்வையில் இருந்த ஆயிரம் அர்த்தங்கள், புரந்தரனுக்குத் தேவை இருக்கவில்லை!

நீலா, சாதாரணமாகப் பேசியிருந்தால்கூட எப்படியோ? சிறு வயதில் வரும்போதே சற்றும் கண்டு கொள்ளாத அவள், திடுமெனக் கண்ணு, மூக்கு எனவும், அவன் சுதாரித்துக் கொண்டான்!

ஒன்றுமில்லை என்பது போலப் பேசாமல் தலையசைத்துவிட்டு, மேலே தொடருமாறு, வக்கீலுக்கு சைகை செய்தான்.

அப்பனுக்கு மேலே திமிர் என்று உள்ளூரக் கடுத்தவாறு, வக்கீல் சொல்வதைத் தானும் கவனித்தாள் நீலா.

அவர் ஏதேதோ சொல்லி முடிக்கவும், "புரந்தரன் கண்ணு, அப்போவே ஏதோ சொல்ல வந்தாயே, அதை இப்ப சொல்லும்மா! எல்லாருமாகக் கேட்போம்!" என்று அவனைத் தூண்டினாள்.

அவனோ, இப்போதும் அவளுக்குப் பதில் சொல்லாமல், "நீங்கள் அறிவிக்க வேண்டியது முடிந்துவிட்டால், நாங்கள் கிளம்பலாமா, சார்! 'பிரஸ்'சில் எனக்கு வேலை இருக்கிறது!" என்று எழுந்தான்.

என்ன திமிர்! என்ன திமிர் என்று கொதித்தது நீலாவின் மனம்!

சொந்த சித்திக்காரி! பெற்ற தாய்க்குச் சமானம்! அவளை மதித்துப் பதில் சொல்ல முடியலையாக்கும்!

இவனையெல்லாம், பழைய காலம் மாதிரி, சுண்ணாம்புக் காளவாயிலே போட்டுப் பொசுக்க வேணும்!

அப்பன் எல்லாவற்றையும் தனக்கே எழுதிவிட்டான் என்பதால் வந்த திண்ணக்கமா?

இருக்கும்! எல்லாம், அந்த அப்பன்காரனைச் சொல்ல வேணும்!

ஆனால், அதற்காகச் சும்மா விட்டுவிடுவார்களா?

இருக்கட்டும்! இவனுக்கு வைக்கிறேன் ஆப்பு!



அப்போதைக்குப் புரந்தரனை ஒன்றும் செய்ய மாட்டாமல், வக்கீலை நோக்கி, "ஏன் வக்கீலு, இரண்டு பிள்ளைகளிலே, ஒருத்தனுக்கு மட்டும் அத்தனை சொத்தையும் கொடுத்தால் எப்படி? இந்த உயிலை நாங்களெல்லாம் ஒத்துக் கொள்ள மாட்டோம், கேஸ் போடுவோம் என்று... அட, கேஸ் போடுவோம்தான்!" என்று ஆத்திரத்துடன் கூறினாள், நீலா!

பெரும்பாலும் புரந்தரனை அதிர வைக்கும் நோக்கத்தோடு தொடங்கிய போதும், கேட்கும்போதே, ஒருவேளை, இப்படி ஒரு வழி கிடைக்கும் போலிருக்கிறதே என்ற ஆவலும் தோன்றிவிட்டது அவளுக்கு!

எனவே புரந்தரனைப் பார்த்து, "ஆமாம்! சும்மா விட மாட்டோம்! மரியாதையாகப் பாதிப் பத்திரிகையைக் கொடுத்துவிடு!" என்றாள் மிரட்டலாக.

இப்போது அவன் பதில் சொன்னான். "பாதிப் பத்திரிகையா? அதை என்ன செய்வதாக உத்தேசம்? கிழித்துப் பட்டம் செய்து பறக்கவிடப் போகிறீர்களா?" என்று எகத்தாளமாகக் கேட்டான் அவன்!

## 4 நான் என்பதும் நீ என்பதும்



புரந்தரனின் நக்கலில், நீலா ரொம்பவே கொதித்துப் போனாள்!

புரந்தரனுக்குத் தகப்பன் என்றாலும், இந்தப் பத்திரிகையைத் தொடங்கிய சுதர்சனம், அவளுடைய புருஷன்தானே?

பத்திரிகையைத் தொடங்கி நடத்தினவன் மனைவி, கிழித்துப் பட்டம் விடவா, பத்திரிகையில் பங்கு கேட்பாள்?

கொழுப்பு இந்தப் பையனுக்கு! உச்சியிலிருந்து, உள்ளங்கால் வரை, முழுக்க முழுக்கக் கொழுப்பு மட்டும்தான்!

இவனைச் சும்மா விடக் கூடாது!

இந்த ஆத்திரத்தில், "இதை நான் சும்மா விட மாட்டேன், வக்கீலு! விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தவர்களோட பிள்ளைக்கு ஒரு பைசாக் கொடுக்க, நான் என்ன முட்டாளா? சத்தமில்லாமல் வெளியே போகச் சொல்லுங்கள். ஏதோ பாவம் என்று, ஐந்தோ, பத்தோ... அதான் லட்சத்திலே அள்ளிப் போடச் சொல்லுகிறேன்! மற்றது, மொத்தமா என் பிள்ளைக்கு வந்தாக வேண்டும்! அதற்கான ஏற்பாட்டைப் பார்த்துச் செய்யுங்கள். வேணுமானால், உங்களுக்கும் அதே போலக் கொடுத்திட என் பிள்ளை கிட்டே சிபாரிசு பண்ணுகிறேன்! போங்க, போய் நான் சொன்ன மாதிரி வேலையைப் பாருங்கள்!" என்று சகாயத்திடம் சற்று அதிகாரக் குரலில் நீலா கூறினாள்.

முகம் சிவக்க, "கொஞ்சம் சும்மா இருங்களேன், அம்மா!" என்று தவித்தான் இந்திரேசன்.

அவனைச் சற்று இரக்கத்துடன் பார்த்துவிட்டு, "நீங்கள் சொல்லுகிற மாதிரி எதுவும் நடக்காது, மேடம்!" என்றார் வக்கீல் சகாயம். "பத்திரிகையைத் தொடங்குவதற்குப் பணம் போட்டதில் இருந்து, எல்லாமே சுதர்சனம் சாருடைய சொந்த முயற்சியில் உருவாகி வளர்ந்ததுதான்! அதற்குரிய கணக்கையும் அவர் கொடுத்திருக்கிறார்! அதனால், நீங்கள் கேஸ் போட்டாலும், கோர்ட்டில் அதை எடுத்துக் கொள்ள மாட்டார்கள்! அத்தோடு, வீணாக அலைக்கழித்தீர்கள் என்று அதற்கான செலவுத் தொகையும் கட்ட நேரும்! பரவாயில்லை என்றால், நீங்களாக ஏதேனும் செய்து பாருங்கள்! இந்தக் கச்சடாவில் என்னை இழுக்காதீர்கள்!" என்றார் மனிதர் சலனமே இல்லாமல்!

குதிரை கீழே தள்ளிக் குழியையும் பறித்த கதையாக அல்ல இருக்கிறது என்று எண்ணிய நீலா, "சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டால், என்னென்னமோ சொல்லுகிறீங்களே! அப்படி நான் யார் மேலே கேசைப் போடுவேன்? புரந்தர் தம்பி மேலேயே? அது, பிள்ளையாச்சுதே! யாராவது, சொந்தப் பிள்ளை மேலே கேஸ் போடுவாங்களா?" என்று சமாளித்தாள்.

தன் பதிலுக்காகக் காத்து நின்ற புரந்தரனிடம் திரும்பி, "உயில் முழுவதையும் கேட்டுக் கொண்டீர்கள் அல்லவா? உங்கள் தந்தையின் மனம் சாந்தி அடையும்படியான முயற்சிகளைச் சீக்கிரமே தொடங்குவீர்கள் என்று நம்புகிறேன், புரந்தரன்! இப்போதைக்கு, எல்லாம் முடிந்தது! நீங்கள் கிளம்பலாம்! உங்களுக்கு என்ன சந்தேகம் என்றாலும், என் அலுவலக எண்ணும், செல்ஃபோன் எண்ணும் கார்டில் இருக்கிறது!" என்று அவர் சொல்ல, தலையாட்டிவிட்டு, அவன் கிளம்பினான்.

அவன் பின்னோடு ஓடி, "அண்ணா, அப்பாவின் முன்புறப் பெரிய அறையிலே நீங்கள் தங்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார். அந்த அறையைச் சுத்தம் செய்தும் வைத்திருக்கிறேன்! உங்கள் சாமான்களை அனுப்புகிறீர்களா, நான் பிரித்து அடுக்கி வைக்கிறேன்!" என்று கேட்டான்!

ஆசையாகப் பின்தொடரும் அதே நாய்க்குட்டித்தனம்!

அலுப்புடன் நோக்கும்போதே, கொஞ்சம் வருத்தமாகவும் இருந்தது புரந்தரனுக்கு!

இவனும் பிள்ளைதான்! ஆனால், இவனுக்கு ஒன்றுமே இல்லாமல் தந்தை பண்ணிவிட்டாரே! வருமானத்தில் பாதி என்றாவது... என்று எண்ணமிடும்போதே, அப்புறம், அந்தப் பணம் என்ன ஆகும் என்று அப்பாவுக்குத் தெரிந்திருக்கும் என்றும், புரந்தரனின் யோசனை ஓடிற்று!

இப்படி ஒரு பெண்ணிடம் பழகியது பெரும் குற்றமே என்றாலும், இப்போது தந்தை சரியாகத்தான் செய்திருக்கிறார்! ஆனால் இப்போது, பெரிய பொறுப்பு அவனுக்குத்தான்! இந்திரேசனுக்கு நீதி செய்வதையும் சேர்த்து!

தொழில் பற்றித தந்தை செய்திருப்பது சரியே என்று தோன்றிய பிறகு, வீடு பற்றியும், தந்தை யோசித்துதான் செய்திருப்பாரோ என்று புரந்தரன்



யோசிக்கலானான்.

இந்த வீட்டை விட்டுச் சிற்றன்னை லேசில் கிளம்ப மாட்டாள்! ஆனால், அவளைக் கட்டுக்குள் வைத்திருக்க, புரந்தரன் இங்கிருப்பது, உதவியாக இருக்கலாம்!

இந்திரேசனைக் கொஞ்சம் உருப்படியாக ஆக்கவும்!

அத்தோடு, இந்திரேசன் சொல்வது, இன்னொரு வகையிலும் வசதிதான்.

வெளி வேலையை விட்டபோது, அப்போதைக்கு அவனது பொருட்களைப் பத்திரிகை அலுவலகத்தில் ஓர் அறையில் போட்டுப் பூட்டிவிட்டு, அவனும் அங்கேயே தங்கி சமாளித்துக் கொண்டிருந்தான்.

அதை நிரந்தரம் ஆக்க முடியாது.

அத்தோடு, இந்த வீடும் அவனுக்குத்தான் என்று தந்தை எழுதி வைத்திருக்கிறார்! சின்ன வயதில், அவன் ஆடி, ஓடி, விளையாடிய இடம்! இருக்கச் சொல்லியிருப்பதும், அவனுடைய பெற்றோர் சேர்ந்து வாழ்ந்த அறையில்!

முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த இளையவனிடம், "செய் தம்பி! சீக்கிரமே என் சாமான்களை அனுப்புகிறேன்...!" என்றுவிட்டுக் கிளம்பிப் போனான், அவனுடைய அண்ணன்.

"ஏ பைத்தியக்காரா! அவன் கிட்டே போய்க் கொஞ்சுகிறாயே! உன் பொருளைத் தட்டிப் பறித்தவன் என்பதுகூட, இல்லையே! இப்படி சுரணை கெட்ட பிறவியாக என் மகனை ஆக்கி வைத்திருக்கிறாயே, பாவி! நீ உருப்படுவியா?" என்று மருமகளை வைதாள் நீலா!

"ஆமாம்! இல்லாவிட்டாலும், பாய்ந்து சீறும் பாஞ்சாலச் சிங்கத்தைதான் பெற்றுப் போட்டீர்களாக்கும், சுரணையும் மண்ணாங்கட்டியும் புதிதாக இப்போது நாசமாகப் போய்விட! என்னங்க, நானும்தான் கேட்கிறேன்! அந்த ஆள்... அவர் பேரென்ன, புரந்தரன்! அவரிடம் காலிலே விழாத குறையாகத்தான் நீங்கள் பேசியாக வேண்டும் என்று, என்ன கட்டாயம்? பார்க்கும்போது, எனக்கு ரொம்பவும் அவமானமாக இருந்தது!" என்று கண்ணைக் கசக்கினாள் சாயா.

அவளை வெறித்துப் பார்த்த இந்திரேசனின் உதடுகள் லேசாகத் துடித்தன! ஆனால், ஒன்றும் சொல்லாமலே, திரும்பிப் போய், வக்கீலின் அருகில் அமர்ந்து கொண்டான்.

சில நடைமுறைகளை அவனிடம் விவரித்துவிட்டு, சகாயம் கிளம்பிச் சென்றார்.

ஆனால் அவர் எதிர்பார்த்தது போலவே, அவனிடம் பேச அவகாசம் இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டு, விரைவிலேயே, புரந்தரன் அவரிடம் வந்து நின்றான்!

அவனுக்குத் தந்தை இட்ட நிபந்தனை குறித்து விளக்கம் கேட்டான்!

"அதுதான் அப்போதே சொன்னேனேப்பா! பெரிதாக ஒன்றும் இல்லை!

சுதர்சனம் உனக்கு வேண்டிய அவகாசமும் கொடுத்துதான் இருக்கிறார்! சரியாக ஓர் ஆண்டு! ஒரு வருஷம்! வரும் அடுத்த நினைவு நாளின்போது, நீ மனைவியோடு இருக்க வேண்டும்! அவ்வளவுதானே?"

"என்ன பெரிய அவகாசம்!" என்று எரிந்து விழுந்தான் புரந்தரன்! "நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று அவருக்கு நன்றாகத் தெரியும்! அப்படி இருந்தும், இது என்ன அசட்டுத்தனமான நிபந்தனை?"

"ஒருவேளை, உன் உத்தேசம் தெரிந்துதான், அதை மாற்ற வேண்டி, இந்த ஏற்பாடு பண்ணினாரோ, என்னவோ?" என்றார், சுதர்சனத்தோடு சேர்ந்து உயிலைத் தயாரித்த சகாயம்!

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன்! இரண்டு திருமணம் செய்து, அவர் என்ன சாதித்து விட்டாராம்? இரண்டிலும் அவர் அடைந்தது வெறும் கசப்புதான். அதையே, என்னையும் செய்யச் சொல்லி... சரி, அதை விடுங்கள்! உயிலின் ஷரத்துப்படி நான் திருமணம் செய்து கொள்ளாமல், இப்படியே இருந்துவிட்டால், அப்புறம் என்னதான் ஆகும்? அதைச் சொல்லுங்கள்!" என்று கேட்டான் அவன்.

"உன் தந்தையின் நம்பிக்கை பொய்த்து, நாசமாகிப் போகும்! ஆசை, நிராசை ஆகும்!" என்று வருத்தத்துடன் கூறினார் வக்கீலும், சுதர்சனத்துடைய நண்பருமான சகாயம்!

சலிப்புடன் நோக்கி, "வக்கீல் சார் இந்த அலங்கார பாஷையை எல்லாம், நீங்கள் ஏதாவது கதை எழுதும்போது பயன்படுத்துங்கள், போதும்! இப்போது, நடப்பைச் சொல்லுங்கள்! நான் திருமணம் செய்து கொள்ளாவிட்டால், அப்புறம் என்ன ஆகும்?"

"அலங்காரமே இல்லாமல் சொல்கிறேன், கேட்டுக் கொள். உங்கள் 'வாணி' குரூப்பின் பத்திரிகைகள் உன் சித்தி கைக்குப் போய், அடியோடு அழிந்து போகும்! நல்ல பெண்மணியான உன் பாட்டியின் வம்சம், வளராமல் அழிந்து போகும்!"

கெட்டிக்காரத்தனமாகப் பாட்டியைப் பற்றி மட்டுமாகச் சொல்லி, நிறுத்திவிட்டார் வக்கீல்! பெற்றோரைப் பற்றிச் சொல்லியிருந்தால், ஆத்திரப்பட்டிருப்பான்!

இப்போதும், புரந்தரன் ஒன்றும் அதிகம் இளகிவிடவில்லை!

மனைவியாக ஏற்கும் அளவுக்குப் பெண்களிடம் மதிப்பும் கூடி விடவில்லை!

அவன் முகத்திலிருந்தே, பதிலை ஊகித்து, "திருமணம் பற்றிய பதிலை அவசரப்பட்டுத் தெரிவிக்க வேண்டாம் புரந்தரன். உன் தந்தை உனக்கு முழுதாக ஓர் ஆண்டு, முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் அவகாசம் கொடுத்திருக்கிறார்! இத்தனை நாட்களில், என்னென்ன, எப்படியெப்படி நடக்குமோ! அவர் தந்திருக்கும் அவகாசம் முடிகிற சமயம், எதையும் தீர்மானமாகச் சொல்லலாமே! அதற்குள்ளாக என்ன அவசரம்?" என்று, அவனது முடிவைத் தள்ளிப் போட்டார்



சகாயம். "குறைந்த பட்சமாக, இந்த ஓர் ஆண்டேனும், பத்திரிகை நல்லபடியா நடக்கட்டுமே!"

புரந்தரனின் வாயைக் கட்டியது, இந்த வார்த்தைதான்!

பத்திரிகையைப் பற்றித் தந்தையுடைய மறு மனைவியின் அபிப்பிராயம் அவனும் அறிந்ததே!

"இதற்கு, ராவாய்ப் பகலாய் இந்தப் பாடுபட வேண்டுமா? பேசாமல் விற்றுத் தொலைத்துவிட்டால், மொத்தமாய்க் கைக்கு வரும் பணத்தைக் கொண்டு சுகமாக வாழலாமே" என்று நீலா தன்னை அரித்தெடுப்பதாக, சுதர்சனம் பலமுறை கூறியிருக்கிறார்!

வழக்கம் போலவே, காது கேளாதது போல இருந்துவிட்டுக் கிளம்பி வெளியே, கிளப்பிற்குப் போய்விட்டதாகவும்.

அப்படிப் போய்க் குடித்துதான், உடம்பை ஒரேயடியாக அழித்துக் கொண்டார்!

ஆனால், பத்திரிகையைப் புரந்தரன்தான் காப்பாற்ற முடியும் என்பதை வலியுறுத்துவதாக எண்ணி, அவர் ஒரு பிழை செய்துவிட்டார்!

சும்மாவே பெண்களிடம் நல்ல அபிப்பிராயம் இல்லாதிருந்தவன் புரந்தரன். இப்போது பெண்களிடம் அவனுக்கு இருந்த மதிப்பு, அதல பாதாளத்துக்கே போய்விட்டது!

அதற்கு மேல், திருமணம் அவனுக்கு எப்படிப் பிடிக்கும்?

உயிலின் ஷரத்துகளை அறிந்த பிறகு நீலாவும், சாயாவும் நடந்து கொண்ட முறை, பெண்களின் மீது, புரந்தரனுக்கு மேலும் மேலும் வெறுப்பையே அதிகப்படுத்தியது!

இந்த மட்டமான பெண் பிறவிகளில் ஒருத்தியை எப்படி மணப்பது?

ஆனால், மணம் புரியவில்லை என்றால், பத்திரிகை என்ன ஆகும்? கொஞ்சமும் யோசியாமல், தந்தை எழுதி வைத்துத் தொலைத்திருக்கிறாரே!

இந்தத் தவிப்பில்தான், இப்படிக் காரை எடுத்துக் கொண்டு கண்ட சாலைகளிலும் புரந்தரன் சுற்றத் தொடங்கியது!

போக்குவரத்துக் குறைவாக இருந்துவிட்டால் போதும்! வேகம் எடுத்துவிடுவான்!

அந்த வேகம், என்னவோ மனதுக்கு இதம் அளிப்பது போன்ற உணர்வு!

இவ்வளவு பணம் தருகிறேன்., மனைவியாக நடி. ஆனால், பிரச்சினை தீர்ந்து உயில்படி பத்திரிகை கைக்கு வந்ததும், பணத்தை வாங்கிக் கொண்டு பிரிந்து போய்விட வேண்டும் என்பதாக ஓர் ஒப்பந்த அடிப்படையில் எவளையாவது தேடிப்பிடித்து மணந்து கொண்டால் என்ன என்று புதிய திட்டம் ஒன்று சில நாட்களுக்கு முன் புரந்தரன் மனதில் தோன்றியது.

முதலில் ஏதோ பிரமாதமான யோசனையாகத்தான் தோன்றியது!

ஆனால், புது யோசனைகளின் சாதக பாதகங்களைக் கணக்கெடுத்துப் பார்க்கும் அவனது வழக்கப்படி இதையும் ஆராய்கையில், திட்டத்தில் நிறைய

ஓட்டைகள் இருப்பதை, அவனே கண்டுபிடித்தான்!

முதல் குறையாக, நல்லதை நாடும் வக்கீலாகட்டும், தீமையை விரும்பும் சிற்றன்னையாகட்டும், இருவருமே சும்மா ஒருத்தியைக் கூட்டிவந்து, இவள்தான் மனைவி என்றால் நம்பப் போவதில்லை!

திருமணம், அவர்கள் முன்னே நடந்தாக வேண்டும்!

அப்படித் திருமணச் சடங்குகளைப் பிறர் அறிய நடத்திவிட்டால், அப்புறம், மனைவியாக நடிக்க முன்வந்த அந்தப் பெண்ணிடம் இருந்து விடுதலை பெறுவது கடினம்!

என்னதான் பெருந்தொகையைக் கொடுக்கிறேன் என்றாலும், 'பரிமள'த்தின் பெறுமானத்துக்கு எம்மட்டும்? முறைப்படி திருமணம் செய்த மனைவிக்கு இதில் எவ்வளவு கிடைக்க முடியும்?

இந்தக் கணக்குப் பாரரமல், அவள் எப்படி இருப்பாள்?

இப்படி நடிக்க வருகிறவள், சும்மாவே கொஞ்சம் மோசமாக... எதற்கும் துணிந்தவளாகவே இருப்பாள்! இவ்வளவு செல்வத்தோடு, செல்வாக்கும் கிடைக்கும் என்றால், எப்படி விடுவாள்?

அப்புறம் அவனது நிலைக்கு ஏகப்பட்ட உதாரணங்கள்!

ஆப்பசைத்த குரங்கு! புலி வாலைப் பிடித்த மனிதன்!

இன்னும், வலைக்குப் தப்பிப் புலி வாயில் மாட்டியது, வாணலிக்குத் தப்பி அடுப்பில் விழுந்தது என்று எத்தனையோ!

இந்த மாதிரி ஒரு பரிதாப நிலை அவனுக்குத் தேவைதானா?

இல்லை என்றால் பத்திரிகை?

அவனது புதிய உத்திகளின் மூலமாகக் கிட்டத்தட்ட இருபது சதவீதம் அதிகமாக விற்கத் தொடங்கியிருக்கும் பத்திரிகைகள்... புதிதாக அவன் தொடங்க இருக்கும் கலைப் பத்திரிகை! ரவிவர்மாவின் படம் ஒன்றை முதல்அட்டையாகப் போட்டு, ஓவியம், சிற்பம், ஆடல் பாடல் இன்னும் எல்லாக் கலைகளின் புதிய, பழைய பரிமாணங்கள், கலை வல்லுனர்கள் என்று எல்லா விவரங்களையும் உள்ளடக்கிப் பளபளவென்று ஆர்ட் பேப்பரில் வெளிவர இருக்கும் 'கலாவாணி'யின் முதல் பிரதிக்கான ஆர்டர் அவனே எதிர்பாராத அளவு அதிகம்!

இந்த மாதிரியான எத்தனை திட்டங்கள்...

என்ன ஆனாலும், பத்திரிகையைக் காப்பாற்றுவதற்கு, ஏதாவது செய்தே ஆக வேண்டும்!

திடுமெனப் பின்னிருந்து, காரின் ஒரு புறமாகப் பெரிதாக எதுவோ, வேகமாக முட்டுவது போன்ற உணர்வு!

தடுமாறிய காரைச் சமாளிக்க முயன்றவாறே பார்த்தால், முன்னே சென்ற வண்டியை ஒரு பெரிய லாரி, இடப்பக்கமாக முந்த முயன்றதில், தன் காரை முட்டித் தள்ளியிருக்கிறது என்பது அரை குறையாகப் புரிந்தது!

ஆனால் அதைப் பற்றிய ஆராய்ச்சியைத் தொடர முடியாமல், கார்



பக்கவாட்டில் உருண்டு கொண்டிருந்தது!

எந்தவிதக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் கார் உருள, நச் நச்சென தலையும் உடலும் எங்கெங்கோ மோதின. சென்னிப் புறத்தில் இருந்து ரத்தம் பீறிட்டதில், உடைந்து சிதறிக் கொண்டிருந்த முன்புறக் கண்ணாடி சிவப்பானது!

கார் எந்த வினாடியும் தீப்பிடிக்கக் கூடும்! முதலில் காரை விட்டு வெளியேற வேண்டும்!

எண்ணம் ஓடியதே தவிர, எதற்கும் சக்தியற்றுக் கை, கால் சோர்ந்து கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது!

கடவுளே! பத்திரிகை! என்னென்ன திட்டங்கள் போட்டான்! கடைசியில் எதையும் சாதிக்காமல் அவன் சாகப் போகிறான்! பத்திரிகை அழியப் போகிறது! அப்பா, உங்கள் நம்பிக்கையை வீணாக்கிவிட்டேன்! என்னை மன்னியுங்கள்!

அதற்கு மேல், எல்லாம் இருட்டாகிப் போயிற்று!

கும்மிருட்டு!

யாரோ கூப்பிடுவது போலத் தோன்றியது!

சொர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ அவனை அழைத்துப் போக, ஆள் வந்தாயிற்றா?

சொர்க்கமா? நரகமா?

தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றாதவர்களை நரகத்துக்குத்தான் அனுப்புவார்களோ?

மீண்டும் யாரோ அழைத்தார்கள்!

சும்மா இருந்தாலும், விட மாட்டார்கள் போலத் தோன்றவே, ஒன்றோடு ஒன்று பசையிட்டு ஒட்டிக் கொண்டது போன்றிருந்த இமைகளைச் சிரமத்துடன் மெல்லப் பிரித்துப் பார்த்தான், புரந்தரன்.

கண் திறந்து பார்த்தவனின் பார்வை, அப்படியே நிலைத்துப் போயிற்று.

இவள் யார்? தேவதையா?

ஆக, அவன் சொர்க்கத்துக்குத்தான் போகப் போகிறான். மற்ற இடத்துக்கு அழைத்துச் செல்ல, அழகு தேவதை வரமாட்டாளே!

ஆனால், தந்தையின் ஆசையை நிறைவேற்றவில்லையே! அப்படியும் சொர்க்கமா?

"ஏதோ, சமயத்திலே பார்த்து, காரை விட்டு வெளியே இழுத்துப் போட்டு, ஆளைக் காப்பாற்றி விட்டேம்மா! ஆள், பிழைத்துக்கிடுவார். நான் போற வழியிலே வைத்தியரய்யாவை வரச் சொல்லிவிட்டுப் போறேன்!" என்றது ஒரு முரட்டு ஆண் குரல்!

அப்படியானால், புரந்தரன் சாகவில்லை! சமயோசிதமாகச் செயல்பட்டு, இந்த தேவதைப் பெண், அவனைக் காப்பாற்றி இருக்கிறாள்!

பத்திரிகையையும், இப்படியே காப்பாற்றித் தருவாளா?



சந்தேகம் தீர்வது, அப்போது மிகவும் முக்கியமாகத் தோன்றியது.

எனவே, இருக்கிற சக்தியை எல்லாம் திரட்டி, "தேவதைப் பெண்ணே, நீ என் பத்திரிகையைக் காப்பாற்றுவாயா?" என்று அவளிடம் கேட்டான் அவன்.

"காப்பாற்றுகிறேன்." என்றாள் அவள்.

## 5 நான் என்பதும் நீ என்பதும்



புரந்தரனின் நல்ல காலமோ, பொல்லாத காலமோ, ரத்தமிழந்திருந்த அவனது பலவீனமான நிலையில், அவனது குரல், ஓர் உருத்தெரியாத முனகலாகத்தான் வெளிப்பட்டது!

அருகில் இருந்த அந்தப் பெண்ணுக்கே அவனது கடைசி வார்த்தைதான் தெளிவாகக் கேட்டது!

அவனைக் காருக்குள்ளிருந்து வெளியே இழுத்துக் கொணர்ந்தது அவளே என்று, அவன் அறிய வாய்ப்பில்லை!

யாரோ, எவரோ நமக்கென்ன வந்தது என்று, அவனை அப்படியே விட்டுவிட்டுப் போய்விடக் கூடாது என்பதற்காகக் காப்பாற்றச் சொல்லிக் கேட்கிறான் என்று தோன்றவும், அவளுக்கும் மிகவும் பரிதாபமாகிவிட்டது!

எரியத் தொடங்கியிருந்த காரிலிருந்து அவனை நந்தினி காப்பாற்றிய பின்னரே, தீ எரிவதைக் கண்டு அங்கே ஓரிருவராக வந்து சிறு கூட்டம் ஒன்று கூடியிருந்தது!

அருகில் இருந்த குட்டை நீரைக் கொண்டு, சிலர் நெருப்பை அணைக்கவும் செய்தனர்!

அங்கும் இங்குமாகச் சூழ நின்றோர், அவனது குரல் கேட்டு, வியந்து அவன் என்ன சொல்கிறான் என்று குனிந்து, காது கொடுத்துக் கவனித்துக் கேட்கு முன்னரே, எண்ணியதைச் சொல்லி முடித்துப் புரந்தரன் மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்து விட்டான்!

குனிந்து அவன் நெஞ்சில் காது வைத்துக் கேட்டுவிட்டு, "மூச்சு, துடிப்பு எல்லாம் பலமாகத்தான் இருக்குது!" என்றார் ஒருவர்.

"சரி... ஆளுக்கு உயிருக்கு ஆபத்தில்லை, நந்தினி! அவர் திரும்பக் கண் முழிக்கும்போது, அவரோட வீடு, விலாசம் எல்லாம் கேட்டுத் தெரிஞ்சுக்கம்மா! அவரோட சொந்தக்கார மனிதர்களுக்குத் தகவல் கொடுக்க வேணுமில்லையா? அப்போ, இரண்டு பேர் கை கொடுங்கப்பா! இவரை, அப்படியே, உன் வீட்டிலே விட்டுவிட்டு, நாங்க கிளம்புறோம், தாயி!" என்று கூடியிருந்தோர் கூறவும், நந்தினி திகைத்தாள்!



அவள் வீடா? அப்படி ஒன்று எங்கே இருக்கிறது?

ஆனால், காப்பாற்றுகிறேன் என்று சொல்லிவிட்டு, எப்படியும் போகட்டும் என்று இவனை எப்படி விடுவது?

வீட்டில் கொண்டு விடுகிற அளவு உதவ முன்வந்தாலும், இவர்கள் யாருமே, அதற்கு மேல் எதுவும் செய்யக் கூடியவர்கள் அல்ல! செய்யும் வசதி படைத்தவர்களும் கிடையாது!

அவளும் அப்படித்தான்! சொல்லப் போனால், அவர்களை விடவும் மோசம் என்றே சொல்ல வேண்டும்!

இந்த மாதம் முழுவதற்கும், மாமாவின் பூந்தோட்டத்தை விற்ற பணம் வந்து அத்தையின் கைக்கு வந்து சேரும் வரையிலும், அவளுக்கு, வயிற்றுக்குச் சோறும், தலைக்கு மேல் கூரையும் உண்டு!

அப்புறம்... மேலே வானம், கீழே பூமிதான்! அவ்வளவு மோசம்!

அதற்காக அத்தையைக் குறை கூறுவதும் சரியில்லைதான்!

ரத்த சம்பந்தமே இல்லாத ஒரு பெண்ணுக்காக, அத்தை தன் சுகங்களைத் தியாகம் செய்ய வேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

அது தப்புதான்! குறை கூறுவது என்றால், அவளைப் படைத்து அனாதையாக்கிய கடவுளைத்தான் சொல்ல வேண்டும்!

ஆனால், அது அவளது கதை! இந்த நேரத்தில், அவசியமற்ற ஒன்று!

விபத்துக்கு ஆளான இந்த மனிதனை வீட்டுக்குக் கூட்டிப் போவது, நிச்சயமாக அத்தைக்குப் பிடிக்காதுதான்!

ஆனால், இவனது முகம், உடம்பெல்லாம் கசிந்தும் வழிந்தும் இருக்கும் ரத்தத்தைத் துடைத்து, அவனது வீட்டாரோடு தொடர்பு கொண்டு... இதெல்லாம் செய்யாமல், இவனை, இங்கேயே எப்படி விட்டுப் போவது!

அடிபட்டுக் கிடக்கும் இவனைப் பார்த்து, அத்தைக்கே பரிதாபம் ஏற்பட்டாலும் படலாம்!

பாதி கருகி நின்ற காருக்குள் தேடித் தட்டையாக ஒரு கைப்பெட்டியை யாரோ கொண்டு வந்து கொடுத்தார்கள்! "நம்பர் பூட்டு போலத் தெரியுது. திறக்க முடியலைம்மா! யார், என்னன்னு பார்க்க வழியில்லை!" என்றார்கள்.

அந்தப் பெட்டியையும், அவனையும், நந்தினி வசிக்கும் அவளுடைய அத்தை வீட்டில் சேர்ப்பித்துவிட்டு, உதவிக்கு வந்தவர்கள் விடை பெற்றுக் கொண்டனர்!

நன்றி சொல்லி, அவர்களை அனுப்பும்போதே, அவளுக்கு உள்ளூர ஒன்று முரண்டியது!

தூக்கி வந்து படுக்க வைத்திருக்கிறார்களே, அந்த மனிதனுக்காக அவள் என்ன நன்றி சொல்வது? தூக்கி வந்த அவர்களை விடவும், அவள் ஒன்றும், அவனுக்கு அதிக உறவில்லை! நட்பும் கிடையாது! அவளும், அன்றுதான் முதல் முறையாக அவனைப் பார்த்திருக்கிறாள்!

அப்படியிருக்க, என்னவோ அவர் பொறுப்பு மாதிரி, எல்லோருமாகச் சேர்ந்து, இந்த மனிதனை, இங்கே கொணர்ந்து விட்டுவிட்டுப் போய்விட்டார்களே! நின்றால், ஏதேனும் பொறுப்பு ஒட்டிக் கொள்ளுமோ என்ற பயம்! அப்படி ஒட்டிக் கொண்டால், சமாளிக்க சக்தி வேண்டுமே!

அப்படிப் பார்த்தால், அங்கேயே ஓடிவிடாமல், இதுவரை தூக்கி வந்து சேர்த்ததே பெரிதுதான்!

ஆனால், முதலில் பார்த்து, முதல் உதவியைச் செய்தாள் என்பது தவிர, அவளுக்கு மட்டும் என்ன கடமை?

அதுவும், அவள் இருக்கிற நிலைமையில் இது மலையைத் தூக்குவது போலத்தான்!

அவனை இழுத்து வெளியே போட்டதோடு, ஓசைப்படாமல் ஒதுங்கி வந்திருக்க வேண்டும்!

ஆனால், அது எப்படி முடியும்? ரத்த காயத்தோடு சக்தியற்று... சுய நினைவு கூட இல்லாமல் கிடக்கையில், எத்தனை நாய் நரிகள், கழுகு காகங்கள்... மேலே எண்ணிப் பார்க்கவும் முடியாமல், நந்தினியின் உடல் சிலிர்த்தது!

ஊகூம்! அப்படி ஓடுவது, அவளால் இயலுகிற செயல் அல்ல!

அத்தைக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, மெல்லிய முனகலுடன் கிடக்கும் இவனை ஓரளவேனும் நலம் பேணி, அவனுடைய வீட்டாரிடம் ஒப்படைக்காமல் ஒதுக்கித் தள்ளவும், அவளரல் முடியாததுதான்!

அப்படிப்பட்ட ரத்தம், அவள் உடம்பில் ஓடவில்லை!

யோசித்தவாறே, அவனது காயங்களைக் கழுவுவதற்கு வென்னீர் போடச் சென்றால், இடை வழியில் நின்று, சற்றே ஏளனத்துடன் பார்த்தவாறு அத்தை பூரணி நின்றிருந்தாள்.

தயக்கத்துடன், "அத்தை... செடிகளில் மிச்சம், மீதி விட்டிருந்த பூக்களைப் பறிக்கப் போனேனா? அப்போது, கார் உருண்டு, இந்த ஆள்..." என்றவளின் பேச்சில், பொறுமையற்றுக் குறுக்கிட்டாள் பூரணி.

"இத்தனை பேரில் ஒருத்தருக்கும் இல்லாமல், உனக்கு ஏனடி இந்தத் தலைவிதி? இதே தீக்குள்ளே மாட்டியவர்களைக் காப்பாற்றப் போகிறேன் என்றுதான், உன் அப்பா, அம்மா இரண்டு பேருமே மாட்டிக் கொண்டு செத்தார்கள்! இன்றைக்கு, இந்த நிலையிலே தத்தளிக்கிறாய்! இதற்கு மேல், யார் எப்படிப் போனால், உனக்கு என்ன?" என்று எரிச்சல் பட்டாள்!

"கண் முன்னாலே ஓர் உயிருக்கு ஆபத்து என்றால், எப்படியோ போகட்டும் என்று, என்னால் வர முடியவில்லையே அத்தை!" என்றாள் பெண் தன்னிலை விளக்கமாக!

இதனாலெல்லாம் அத்தை இளகி விட மாட்டாள்தான்! ஆனால், கோபம் குறையக் கூடுமோ என்ற ஆசைதான்! ஆனால், எதிராகவும் போகலாம்.

ஆனால், அஞ்சியது போலவே, "ரொம்ப சந்தோஷம்!" என்றாள் பூரணி



ஏளனமாக. "இப்போது வைத்தியர் வருவாரே, அவருக்குக் கொடுக்கப் பணம் வைத்திருக்கிறாயா?" என்ற கேள்வியும் தொடர்ந்தது!

பூந்தோட்டத்தைப் பிழைப்பாக மாமா நடத்திக் கொண்டிருந்தபோது, கூடமாட வேலை செய்கிறாள் என்கிற பெயரில் மாமா ஏதாவது பணம் கொடுப்பார்! அதைக் கொண்டே நந்தினி படிப்புச் செலவை சமாளித்துக் கொண்டிருந்தாள்! ஆனால், மாமா படுக்கையில் விழுந்து, இந்த இரண்டு ஆண்டுகளாகத் தோட்டத்தைப் பார்க்க அத்தை செல்ல, மாமாவுக்குப் பணிவிடை செய்யும் பொறுப்பு நந்தினியுடையதாகி விடவே, பூந்தோட்ட வேலை, அதைக் கொண்டு படிப்பு என்று எதுவும் இல்லாது போயிற்று!

ஆனாலும், எப்படியும் மாமா சீக்கிரமே பிழைத்து எழுவார்., படிப்பைத் தொடரலாம் என்று இரண்டு ஆண்டுகள் பொறுமையோடு காத்திருந்த மருமகளின் எண்ணத்தில், அவரது மரணம் மண்ணைப் போட்டது!

அப்புறம், எல்லாமே மலைப்புதான்!

அது மட்டுமின்றி, தோட்டம், வீடு இரண்டையும் விற்று எடுத்துக் கொண்டு, மும்பையில் இருக்கும் தங்கை வீட்டோடு போய்விடுவதாக அத்தை எடுத்த முடிவு, நந்தினியின் தலையில் இடியாக இறங்கியது!

அவள் கதி என்ன?

இன்னும் ஓர் ஆண்டுப் படிப்பை முடித்திருந்தாலேனும், டவுனில் ஏதோ ஒரு சிறு வேலையாவது கிடைக்கக் கூடும்!

இருபத்தியிரண்டு வயதில், ஓர் இளம்பெண் பிழைப்புக்கு வழி தெரியாமல் திகைத்து நிற்கிறாள் என்றால், இன்றைக்கு அது நகைப்புக்கு இடமான விஷயம்தான்!

ஆனால், அவளது உண்மையான நிலையும் அதுவேதான்.

ஒரு விடிவும் காணாமல், இதையே எண்ணி, எண்ணி எத்தனையோ இரவுகளைத் தூக்கமின்றிக் கழித்தாயிற்று!

ஆனால், இப்போது உடனடியாகக் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் அது அல்ல!

வைத்தியருக்குப் பணம்!

வரும்போதே, அதையும் அவள் யோசித்து வைத்திருந்தாள்.

அதன்படி, "அத்தை, எனக்கு ஆயிரம் ரூபாய் தந்துவிட்டுப் போவதாகச் சொன்னீர்களே! இப்போது வைத்தியருக்குக் கொடுத்துவிட்டு, அந்தப் பணத்தை அதில் கழித்துக் கொள்ளுங்கள், அத்தை. ப்ளீஸ்!" என்றாள் கெஞ்சலாக.

தலைச்சுமையாக வந்தவளிடம் பூரணி பாசத்தைக் கொட்டியது இல்லை என்றாலும், பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கூடவே இருப்பவள் ஆயிற்றே! அந்தப் பழக்க தோஷம் இருக்கிறதே!

ஒரு சலித்த மூச்சுடன், "என்னமாய்த்தான் உருப்படப் போகிறாயோ?



சீக்கிரமே, உன் முழுச் சொத்துமே, நான் பாவம் என்று கொடுக்கப் போகிற இந்த ஒரே ஆயிரம்தான் என்றாகப் போகிறது! அதிலிருந்து, யார் என்றே தெரியாத ஒருவனுக்காகத் தானமா? இது உனக்கே முட்டாள்த்தனமாகத் தெரியவில்லை?" என்று கேட்டாள் பெரியவள்!

தயக்கத்துடன், "காப்பாற்றுகிறேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டேன், அத்தை! அதை எப்படி மீறுவது? பாவமா...ய்..." என்று இழுத்தாள் பெண்!

"எப்படியோ போ! பணம் தருகிறேன். ஆனால், உன் ஆயிரத்தில்தான்! அதற்கு மேல், என்னிடம் எதையும் எதிர்பாராதே! அதற்கு மேல் உனக்குத் தருவதற்கு, என்னிடமும் கொட்டிக் கிடக்கவில்லை!" என்று, கறார்க் குரலில் கூறி நந்தினிக்கு ஒரு சிறு நிம்மதியைத் தந்த அத்தையம்மாளுக்கு, அதற்கான மருமகளின் நன்றியைப் பெற்றுக் கொள்ளக் கொஞ்சமும் விருப்பமில்லை!

சின்னவளின் பேச்சில் மனம் உருகி விடுமோ என்று அஞ்சியவளைப் போல, "சரிசரி, போ! போய் வென்னீரைப் போடு! வைத்தியர் வருகிற மாதிரித் தெரிகிறது!" என்று அவளை அனுப்பி வைத்தாள் பூரணி!

பூந்தோட்டங்களைக் கொண்டு பிழைத்துக் கொண்டிருந்த அந்த சின்னஞ் சிறு கிராமத்தின் வைத்தியர், உண்மையில் வைத்தியம் படித்தவர் அல்ல! ஆனால், அனுபவஸ்தர்! ஒரு பெரிய டாக்டரிடம், கம்பவுண்டவராக, சுமார் இருபது ஆண்டுகள் பணி புரிந்தவர் என்பதால், நோய்களும், அவற்றிற்கு உரிய மருந்துகளும் அவருக்கு அத்துபடி! அவரது சக்திக்கு மீறியதாகத் தோன்றினால், உடனே டவுன் மருத்துவமனைக்கு அனுப்பி விடுவார்!

பணமும் குறைவாகவே வாங்கியதால், சுற்றிலும் உள்ள சில சிற்றூர்களுக்கு அவர் மட்டும்தான் பெரிய வைத்தியர்! கைராசிக்காரர் என்ற பெயரும் உண்டு!

அவர் வந்து பார்த்து, எலும்புகள் முறியவில்லை., வெறும் சதைக் காயம்தான்., உயிருக்கும் பயமில்லை என்று சொல்லி, புரந்தரனுக்குக் காயங்களைச் சுத்தம் செய்து, மருந்து போட்டுக் கட்டிவிட்டார்!

தெம்பு வருவதற்கென, புழுங்கல் அரிசி உலை நீரும், எலுமிச்சம்பழச் சாறும் அவரது முக்கிய சிபாரிசுகள்!

சொல்லிவிட்டுக் கிளம்பினார்!

கூடவே வந்த நந்தினியிடம், "பாரம்மா, உன் நிலைமை, நான் அறியாதது அல்ல! உன்னிடம் வாங்கித்தான் என் பை நிரம்ப வேண்டும் என்று கடவுள் வைக்கவில்லை அடிபட்டுக் கிடக்கிறவருக்கு, உன்னைப் போலவே உதவுவதாக நினைத்துக் கொள்கிறேன்." என்று கூறிவிட்டார்!

பணத்தைக் கொண்டு போய் அப்படியே அத்தையிடம் கொடுத்த நந்தினி அதற்கு விளக்கம் கொடுக்கத் தேவையிருக்கவில்லை!

பணத்தை வாங்கிப் பர்சில் வைத்தபடியே, உன்னைப் போல வைத்தியரும் பைத்தியமாகி விட்டார் என்று தெரிகிறது! என்றாள் அத்தையம்மாள்!

நன்றாகத் தூங்கிய புரந்தரன் விழித்து எழும்போதே கிட்டத்தட்ட முழு



உணர்வும் திரும்பியவனாகக் காணப்பட்டான்! உடலில் மட்டும் சற்றுப் பலவீனம் இருந்தது!

தலைக் கட்டைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "கார் என்ன ஆயிற்று?" என்று விசாரித்து தெரிந்து கொண்டான்.

பெட்டியைக் கொண்டு வரவும், "பரவாயில்லை., இதுவாவது தப்பியதே!" என்று கொஞ்சம் சந்தோஷப்பட்டான்.

கூடவே, பெட்டியைத் திறந்து, அவனது அலுவலகத்தோடு தொடர்பு கொண்டிருக்கலாமே என்று எரிச்சலும் பட்டான்.

பெட்டியைத் திறக்க முடியவில்லை என்று சொன்னதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல், பெட்டியைத் திறந்து, உள்ளிருந்து ஒரு செல்ஃபோனை எடுத்துப் பேசினான். அந்த இடத்தின் விவரம் கேட்டு, செல்ஃபோனில் சொன்னான்.

வெகு விரைவிலேயே, இரண்டு கார்களும், அவற்றில் சில மனிதர்களும் அங்கே வந்து சேர்ந்தனர்.

வந்தவர்களில் ஒருவர், அந்தப் பகுதியில், அவனுக்கு ஏதோ ஏஜண்ட் என்று பேச்சில் தெரிந்தது!

கார், அதற்கு இன்ஷ்யூரன்ஸ் என்று ஏதேதோ பார்க்கச் சொல்லி, வந்தவர்களில் இன்னொருவனிடம் சொன்னான்.

கார்களைக் கண்டு கூடிய எல்லோருக்கும் பொதுவாக நன்றி தெரிவித்தான்.

காரில் வந்த ஏஜன்டிடம் இருந்து கொஞ்சம் பணம் வாங்கி, "என்னைக் காப்பாற்றிய எல்லோருக்குமாகப் பிரித்துக் கொடுங்கள்!" என்று சொல்லி, அத்தையம்மாவிடம் கொடுத்தான்.

கையில் சிறு நூறுகளுடன் நந்தினியைப் பார்த்தவன், அவள் ஓர் அதிர்ச்சியுடன் பின்னடையவும், ஒன்றும் சொல்லாமல் கிளம்பிச் சென்றுவிட்டான்!

இனம் புரியாத ஏமாற்றத்தை மறைத்தவண்ணம் நடமாடினாள் நந்தினி.

எதற்கு ஏமாற்றம்? அவள் என்ன எதிர்பார்த்தாள் என்றால், அதுவே புரியாத குழப்பம்தான்!

அவன் சொன்னதும், இரண்டு கார்கள் வந்து நின்றனவே! எப்படியும் வசதி படைத்தவனாகத்தான் இருக்க வேண்டும்!

ஏதாவது உதவி வேண்டுமா என்று அவன் கேட்பான் என்று அடி மனதில் ஏதேனும் ஆசை தெளிவற்றுத் தோன்றி இருந்ததோ? ஆனால், முழுக் கவனத்துடன், அவள் அப்படி எண்ணிப் பார்க்கவில்லை என்பது, அவளுக்கு நிச்சயமே!

ஆனால் அவளாகவே, அவனிடம் ஏதாவது வேலை கேட்டிருக்க வேண்டுமோ?

ஆனால், வேலைத் தகுதி பற்றிக் கேட்டால் எங்கே போய் முட்டிக் கொள்வது?

படுக்கையாகக் கிடந்த மாமாவுக்கு இரண்டு ஆண்டுகள் பணிவிடை செய்தேன் என்று மட்டும்தானே சொல்ல முடியும்? அதற்காக யார், என்ன வேலை தரப் போகிறார்கள்!

மற்றபடி, வெறும் பிளஸ்டூ அவளுக்கு எப்படி வேலை கொடுப்பார்கள்!

அது பற்றி எதிர்பார்ப்பது என்ன, எண்ணிப் பார்ப்பது கூட, மடத்தனம்தான்!

அப்படியானால், அவளது எதிர்காலம் என்ன ஆகும்!

## 6 நான் என்பதும் நீ என்பதும்



**தொ**டர்ந்த சில நாட்கள், அவளது எதிர்காலம் பற்றிய சிந்தனையில், நந்தினி ரொம்பவே தவித்துப் போனாள் எனலாம்.

எப்போதுமே, எண்ணி எண்ணித் தூக்கமின்றித் தவிப்பதுதான்! ஆனால், ஏனோ இப்போது துன்பம் இரு மடங்காகிவிட்டது போல உணர்ந்தாள்! என்ன யோசித்தும், சிறு தெளிவும் கூட வர மறுத்தது!

மாமாவிடம் செய்தது போலப் பூந்தோட்ட வேலை செய்யலாம். செடி அதிராமல் பூப்பறிப்பது, இலை உருவி விடுவது, வேரைப் பாதியாமல் கொத்தி விடுவது என்று இந்த வேலைகள் அவளுக்குத் தெரியும்தான்!

ஆனால், அவளுக்கு முழுக் கூலி தரும் அளவுக்குப் பெரிய பூந்தோட்டக்காரர்கள், அங்கே யாரும் இல்லையே! எல்லோருமே, மாமாவைப் போலச் சின்னச் சின்ன துண்டு நிலத்துக்காரர்கள்தான்! அவரவர் குடும்பமே முழு வேலையும் பார்த்து விடுவார்கள்! அப்படியே, ஒரு பெரிய ஆளின் முழுக்கூலியைத் தந்தாலுமே, உணவு, உடை, உறைவிடம் மூன்றுக்கும், வெகு சிக்கனமாக இருந்தாலுமே, அது போதாது!

எட்டாக் கனவாகப் படிப்பு வேறு கண்ணைச் சிமிட்டியது!

நந்தினிக்கு மட்டும் ஏன் இந்த அல்லல்?

பதினோரு வயதுவரை, அவளும் எவ்வளவோ சந்தோஷமாகத்தானே இருந்தாள்!

அவளுடைய பெற்றோர் பணக்காரர்கள் அல்ல என்றாலும், வரவுக்கும் செலவுக்கும் தாராளமாகவே கட்டி வந்தது! மகளின் எதிர் காலத்துக்கு காப்பு நிதிப் பாலிசி ஒன்றுகூடக் கட்டி வந்தனராம்.

அந்தப் பொல்லாத நாளில், தீப்பிடித்து எரியும் கட்டிடத்துக்குள் பல சிறுவர், சிறுமியர் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவும், நந்தினியுடைய பெற்றோர் இருவருமே, தீக்குள் பாய்ந்துவிட்டனர்! அவரவர் பங்குக்கு ஐந்தாறு பேரைக் காப்பாற்றிய போதும், அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல், அவர்களும் அழிய நேர்ந்தது!



அந்தச் சின்னஞ்சிறு வயதில், நந்தினி தன்னந் தனியே நின்றாள்!

தானாகப் போய் மரணத்தைத் தழுவியதாகக் காரணம் காட்டி, காப்பு நிதியும் கைநழுவிப் போயிற்று!

அது போன்ற சூழ்நிலையில், ஒரு பூந்தோட்டத்தை வைத்து, சாதாரண நிலையில் வாழ்ந்து வந்த தாய்மாமன் குடும்பம், பெண் குழந்தையான நந்தினியை ஏற்றதே பெரிய விஷயம் என்றார்கள்!

சற்று வளர்ந்த பிறகு யோசித்துப் பார்த்த நந்தினிக்கும் அப்படித்தான் தோன்றியது!

மாமன் மனைவி பூரணி, நந்தினியிடம் பெரிதாக அன்பு காட்டாவிட்டாலும், வயிற்றுக்கு வஞ்சனை செய்தது இல்லை!

மாறிவிட்ட இந்தச் சூழ்நிலையிலும், கவனம் செலுத்திப் படித்ததால், நந்தினி அவளது வகுப்பில் முதல் மாணவிதான்!

ப்ளஸ் டூ முடித்து ஏகப்பட்ட கனவுகளுடன் கல்லூரியில் அடியெடுத்து வைத்தால்... ஒரே ஒரு வருஷம்தான் கனவைத் தொடர முடிந்தது!

அப்போதும், புதுப்புது விதமான துணிமணிகளுடன் வளைய வரும் மற்ற மாணவிகளிடையே, தன் சாதாரணமான பழைய ஆடைகளுடன் இருப்பது அவளுக்குக் கடினமாகத்தான் இருந்தது!

எல்லாம் இன்னும் இரண்டே ஆண்டுகள்! படிப்பு முடிந்ததும், வேலை பார்த்து, சம்பாதித்து, வேலை பார்த்துக்கொண்டே மேலே படித்து இன்னும் நிறைய சம்பாதித்து... என்று எல்லாக் கனவுகளும், திடீரென்று நேர்ந்த மாமாவின் நோய்த் தாக்குதலில் ஆட்டம் கண்டு, அவரது மறைவோடு கிட்டத்தட்ட முடிந்து போயின!

தமக்கை கணவரின் மரணத்துக்காக வந்த அத்தையுடைய சகோதரி, மக்கள் பேறற்ற தன் சகோதரி, இங்கே தனியே கிடந்து மருக வேண்டாம் என்று, அவள் வசிக்கும் மும்பைப் பக்கம் வந்துவிடுமாறு பூரணியை அழைத்தாள்!

அவள் அழைத்தது, தமக்கை மீது உள்ள பாசத்தினால்தான்! கணவரே இல்லாதபோது, அந்தக் கணவருடைய சகோதரி மகளுக்காகப் பூரணி உள்ளதையும் விட்டுவிட்டு, வயதான காலத்தில் பணம் காசு இல்லாமல் தனிமையில் தவிக்கும்படி ஆகிவிடக்கூடாது என்று, அவள் எண்ணியதிலும் தவறேதும் கிடையாதுதான்!

அது சரியே என்று பூரணி ஏற்றதையும் தப்பு சொல்ல முடியாதுதான்!

ஆனால், நிலத்தையும் வீட்டையும் விற்றுவிட்டு, அந்தப் பணத்தோடு பூரணி மும்பை செல்வதாக முடிவெடுத்தபோது, நந்தினியின் எதிர்காலக் கனவுகள் எல்லாமே அடியோடு தகர்ந்து தரைமட்டமாய் அழிந்து போயின!

அவளது நிலைமை பரிதாபகரம்தான்! ஆனால், எந்த உரிமையில், அவள் பூரணியைத் தடுக்க முடியும்?

படித்து முடித்ததும் வேலை பார்த்து அந்த வருமானத்தில் உன்னைப் பாதுகாப்பேன் என்று அவள் சத்தியமே செய்தாலும், மற்றவர்களுக்கு அது



வெறும் வாய் வார்த்தைதானே? எழுதியே கொடுத்தாலும், அதைக் கடைப்பிடிப்பாள் என்று யார் நம்புவார்கள்?

சொத்துக்களை அத்தை விலை பேசி விற்பதையும், இங்கே உள்ளவற்றை ஒதுக்கிக் கொண்டு கிளம்ப ஆயத்தம் செய்வதையும், நெஞ்சு வலிக்க வலிக்க ஒரு கையாலாகாத்தனத்துடன் பார்த்துக் கொண்டு, நந்தினி சும்மா இருக்க வேண்டியதாயிற்று!

கழுத்திலும் காதிலுமாக அவள் அணிந்து வந்த மெல்லிய நகைகளும் பூரணி மனமிரங்கித் தர இருக்கும் ஆயிரம் ரூபாயும்தான், இனி நந்தினியின் மொத்த சொத்தாக இருக்கப் போகிறது!

நகைகளை விற்றால், மொத்தம் ஐந்து ஆயிரம் தேறுமோ, என்னவோ?

இதை வைத்து என்ன செய்வது?

ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைக்கக்கூடப் போதாது என்பதோடு, அந்தச் சிற்றூருக்குத் தேவையான அளவில், ஏற்கனவே ஒரு கடையும் இருந்தது! போட்டி போட்டு ஜெயிப்பது கடினம்! அதற்கான தெம்போ, தைரியமோ அவளுக்குக் கொஞ்சமும் இல்லை!

ஒரே ஒரு தரம், "அத்தை நானும் உங்களோடு மும்பைக்கு வருகிறேனே! அங்கே எவ்வளவு வேலை வேண்டுமானாலும் செய்கிறேன்." என்று பூரணியிடம் கேட்டுப் பார்த்தாள்.

ஆனால். "உன்னைப் பார்த்தால் பாவமாகத்தான் இருக்கிறது! ஆனால் நானே சசி வீட்டில், ஒரே ஓர் அறையில் இருந்து கொண்டு, இங்கிருந்து கொண்டு போகும் பணத்தை 'டெப்பாசிட்' செய்து, அந்த வட்டிப்பணத்தைக் கொடுத்துதான் சாப்பிடப் போகிறேன்! இதில், உனக்கும் சோறு போடச் சொல்லி, எப்படிக் கேட்க முடியும்! அங்கே, இன்னும் சில பையன்களும் இப்படிச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்களாம்! இந்த வயதில், உன்னை அங்கே அழைத்துப் போவது, வம்பை விலைக்கு வாங்குவது போல! அதைச் சொல்லியே, உன்னைக் கூட்டி வர வேண்டாம் என்று சசி சொன்னாள். அவளை மீற, என்னால் முடியாது!" என்று தெளிவாக அவள் மறுக்கவும், அதற்கு மேல், அந்தப் பேச்சை நந்தினி விட்டுவிட்டாள்!

வேண்டாம் என்கிறவளிடம் கெஞ்சுவார்களா, என்ன?

ஆனால், இப்படியே இருந்தால், மண்ணோடு மண்ணாக மக்கித்தான் போக நேரும்!

அந்த மாதிரி ஆவதற்குக் கடவுள் அவளைப் பிறப்பித்திருக்கவே வேண்டாமே!

உலகில், ஒவ்வொருவர் பிறப்புக்கும், ஓர் அர்த்தம் இருக்கும் என்பார்கள்!

அவளது பிறப்புக்கு என்ன அர்த்தம் இருக்கக் கூடும்?

அந்த விபத்துக்கு ஆளாவனைக் காப்பாற்றியதா?

அவனைக் காப்பாற்றியதில், அவளுக்கு ஏதாவது நன்மை நடக்கக் கூடுமா?

அப்படி நன்மை நடப்பதாக இருந்தால், அவன் ஏன் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் போக வேண்டும்?



ஐயன் கோயில் விழா வில்லுப் பாட்டில் சொன்னது போல, ஏதோ போன பிறவிக் கடன்! அவனைக் காப்பாற்றித் தீர்த்துக் கொண்டாள்! அவ்வளவே!

ஆனால், இப்போது என்ன செய்வது?

பழைய ஏதோ ஒரு பிறவியில், யாருக்காவது, ஏதாவது நல்லது செய்திருந்து, அதைத் திரும்பச் செய்வதற்காக, அவர்கள் வருவார்கள் என்று காத்துக் கிடப்பதா? அது முடியாதே!

அத்தோடு, அப்படி ஏதேனும் நல்லது செய்தவளாக இருந்திருந்தால், இந்த மாதிரியான நிலைமை அவளுக்கு ஏற்படுவானேன்?

முந்தையப் பிறவிகள் எல்லாவற்றிலுமே, அவள் மிகவும் கெட்டவளாக இருந்திருப்பாள் போல!

ஆனால், இந்தப் பிறவியில் நந்தினி நல்லவள்தானே? அதற்காகவேனும், கடவுள் அவளை மன்னிக்கக் கூடாதா? மன்னித்து, அவளுக்கு ஏதாவது ஒரு வழி காட்டலாமே!

வேலை வேலை என்று நந்தினி அலையாத இடம் இல்லை!

உன்னைப் போலச் சின்னப் பெண்ணை வேலைக்கு வைத்தால், விடப் பசங்கள் கூடி, கடைப் பெயர் கெட்டுவிடும் என்று ஒரு மளிகைக் கடையில் எடுபிடி வேலையேனும் தருமாறு கேட்டபோது சொன்னார்கள்!

கணக்கு எழுதும் வேலை கேட்டால், இரவு எட்டு மணிக்கு மேல் இருந்து செய்வாயா என்றார்கள்! அதற்குப் பிறகு, டவுனில் இருந்து எப்படி வீடு திரும்புவது?

டவுனிலேயே வீடு பார்க்கலாம் என்றால், வாடகை கட்டாது! அத்தோடு, அவ்வளவு தாமதமாகத் தனியாக வேற்றிடத்தில் இருந்து வேலை பார்க்க அவளுக்குப் பயமாக இருந்தது!

மற்ற மாதிரிக் கொஞ்சம் பெரிய, நேரத்துக்கு வந்து, நேரத்துக்கு வேலை முடித்துத் திரும்பும் வேலைகளுக்கு, அவளது படிப்பு போதவில்லை!

இப்படி, இல்லை, இல்லை என்று தோல்வியோடு திரும்பும்போதுதான், கடவுள், பிறவி என்றெல்லாம் என்று கண்ட கண்ட எண்ணமெல்லாம் அவளுள் தோன்றி, மனம் அலைபாயும்!

ஆனால், வேலைக்கு அலைவது உட்பட., அவளது எண்ணங்கள், செயல்கள் எல்லாமே பயனற்ற வீண் முயற்சிகளாகவே ஆயின!

காலம் யாருக்காகவும் நிற்பதில்லை!

விற்ற வயல், வீடு முதலியவற்றுக்கான பணம் முழுவதும் அவளது கைக்கு வந்து சேர்ந்துவிட்ட, வாக்களித்தபடி நந்தினிக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு, பூரணி தங்கை வீட்டுக்குப் பயணம் கிளம்பிச் சென்றுவிட்டாள்!

அதன் பிறகே, அவளைக் கொஞ்சிக் குலாவிட்டாலும், மாமன் வீடு அவளுக்கு அளித்து வந்த பாதுகாப்பு என்ன என்பது, நந்தினிக்கு நன்கு புரிந்தது!

யாருக்கும் அடங்காத இளவட்டங்கள் என்று பெயரெடுத்த சிலர் வீட்டின்

முன்னும் பின்னும் வட்டமிட்டனர்! கதவைத் தட்டித் தண்ணீர் கேட்டனர்!

இன்னமும் பத்து நாட்கள் வீட்டில் அவள் தங்கியிருக்க அனுமதி இருப்பதாக அத்தை சொல்லியிருந்தபோதும், இரவு எட்டு மணிக்கு வீட்டை வாங்கியவர் வந்து, "பஸ் போய்விட்டது! நம்ம சொந்த வீடுதான் இருக்குதே., அதிலேயே தங்கிவிடலாம் என்று வந்தேன்!" என்றார்!

உண்மையாகவும் இருக்கலாம்!

ஆனால், அரண்டு போய்ப் பக்கத்து வீட்டு அன்னக்கா வீட்டில் தஞ்சம் புகுந்தாள் நந்தினி.

வாசல் திண்ணையில் உறங்கும்படிக் கணவனை அனுப்பிவிட்டு, ஒற்றையறை ஒலைக் குடிசையில் சின்னவளை அருகே அமர்த்தி, இந்தக் கூறு கெட்ட ஊரை விட்டு உடனே கிளம்பும்படி அன்னக்கா சொன்னாள்.

"எங்கே போகன்னு அலமறாதே, தங்கச்சி! அன்னைக்கு, உன்னோட உசிரைப் பார்க்காமக் காப்பாத்தினியே, அவரு பெரிய ஆளாம்! பெரிசாப் பேப்பரு, புஸ்தகம் எல்லாம் போடுறவராம்! டவுனிலே இருந்து ஏஜென்டுன்னு வந்தாரே, அவரைப் போய்ப் பார்த்து, அவரோட ஆபீசுக்குக் பூப்போடற வாடிக்கையைப் புடிக்கப் போன போது, எங்க வூட்டுக்காரரு கிட்டே சொன்னாங்களாம்! அந்த ஆபீசுக்காரங்க கிட்டேருந்து, ஒரு புஸ்தகத்தையும், அவரு வாங்கி வந்தாரு! அந்தப் புஸ்தகத்திலே, அந்தாளோட பட்டணத்துப் பெரிய ஆபீசு விலாசமிருக்குது! அங்கன போய், உன் உசிரைக் காப்பத்தினேனே, மானத்தோட வாழ, ஒரு வேலை போட்டுக் கொடுன்னு கேளு! அந்தாளு பேச்சுக்குத் தக்கனபடி, கண்டிச்சோ, செஞ்சியோ கேட்டு, எப்படியாச்சும் சம்பாத்தியத்துக்கு ஒரு வேலைக்கு வழி பண்ணிவிடு! அந்தாளுக்கு, அது ஒண்ணும் கஸ்டமில்லை. அவ்வளோ வசதி. டவுன் ஆபீசிலே சொன்னங்களாம்! மத்தபடி, உன் பிளைப்புக்கு ஒண்ணுமில்லாம, இங்கன தனியா இருந்து, மானத்தோடப் பிளைக்க முடியாது, தங்கம்!" என்று நிறையச் சொன்னாள்!

அன்றைய ஒரே நாள் அனுபவத்தில், நந்தினிக்கும் அது உண்மை என்று புரிபட்டுப் போயிருந்தது! ஆதரவு இல்லாததோடு, பணமற்ற நிலைமையும் சேர்ந்துதானே, இவர்களுக்கு இவ்வளவு துணிச்சலைத் தந்திருக்கிறது!

யோசித்துப் பார்த்தால், அன்னம் சொன்ன அந்த ஒன்றுதான், அவள் முயற்சித்துப் பார்க்க மீதமிருக்கும் ஒரே வழியும் கூட!

அவனாக உதவ முன்வரவில்லையே, எப்படிக் கேட்பது என்று ரோஷம் பாராட்டும் நிலைமையில் அவள் இல்லை! அத்தோடு, அவன் அப்படி உதவ முன்வராததையே, அவளிடம் அவனுக்குத் தவறான எண்ணம் இல்லை என்று, நல்ல விதமாகவும் எடுத்துக் கொள்ளலாமே!

அப்படித்தான் எண்ணியாக வேண்டும்! வேறு வழியில்லை!

பொழுது விடியும்வரை அப்படியே உட்கார்ந்திருந்துவிட்டு, காலையில் அன்னக்காவுடன் சென்று, அவளது ஒரு சில துணிமணிகளை நந்தினி எடுத்து வந்தாள்.



அவளது பொருட்கள் கலைந்திருப்பதைப் பார்த்ததும், அவளுக்குத் திக்கென்றது!

நல்ல வேளையாக, அத்தை கொடுத்த ஆயிரம் ரூபாயை, முந்தானையிலேயே முடிந்து வைத்திருந்தாள்! இல்லாவிட்டால், அதுவும் போய்விட்டிருக்கும் போல இருக்கிறதே! மனிதர்கள் எவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறார்கள்!

அவர்களுக்கிடையே, ஓர் இரவு அடைக்கலம் கொடுத்ததோடு, நல்லதும் சொன்ன அன்னக்கா, நந்தினிக்குத் தெய்வமாகத் தெரிந்தாள்!

ஆனால், தெய்வத்தையும் அதிகம் சோதிக்கக் கூடாது!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, நந்தினி கல்லூரியில் சேர்ந்தபோது, ஓரளவு சுமாராக நாலு உடைகள் மாமன் தயவில் கிடைத்தன!

மீண்டும் ஒரு காலத்தில் படிப்பைத் தொடரும் வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், அவற்றை முடிந்தவரை பத்திரமாகவே வைத்திருந்தாள், அவள்.

அவற்றிலும் இரண்டை வேறு வழியின்றிப் போட்டு அடிக்கும்படி ஆகிவிட்டது. என்றாலும், இரண்டு செட் துணிகள் நல்லபடியாகவே இருந்தன.

அந்தச் சிறிய ஊரின் கல்லூரிக்கே கொஞ்சம் குறைவுதான் எனும்போது, சென்னையில், அதுவும் அந்த பத்திரிகைக்காரன் கண்ணில் இது எப்படித் தோன்றும் என்று, உள்ளூர அவளுக்குக் கூச்சமாகத்தான் இருந்தது!

ஆனால், ஒன்றும் இல்லை என்றுதானே வேலை கேட்பதற்காகப் போகிறாள்? நல்ல நல்ல ஆடை, அணிகள் வாங்கும் சக்தி இருந்தால், இந்த வேலையே தேவையில்லையே!

எனவே, உடையைப் பற்றி நந்தினி கூசத் தேவையில்லை!

ஆரஞ்சும் பச்சையுமாக அந்த உடை, நந்தினிக்கு எப்போதும் பிடித்தமானது. அன்றும் அதையே எடுத்து அணிந்து கொண்டு, மற்றதை அன்னக்காவிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்னைக்குக் கிளம்பினாள் பெண்.

பரிமளவாணி என்ற பத்திரிகையின் பெயரிலிருந்து, கடைசிப் பக்கத்தில் அச்சிட்டு வெளியிடுவோரின் பெயர், விலாசம் வரை, கிட்டத்தட்ட எல்லாமே நந்தினியின் மனதில் பதிந்து போயிற்று!

எனவே, பத்திரிகையின் அலுவலகத்தைக் கண்டுபிடித்துச் செல்வது, அவளுக்குக் கடினமாகப் படவில்லை!

ஆனால், பத்திரிகையின் நாலு மாடிக் கட்டடத்தை அண்ணாந்து பார்த்த போது, நந்தினிக்குத் திகைப்பாகத்தான் இருந்தது!

இவ்வளவு பெரிய கட்டிடத்தில் அரசனைப் போல இருந்து, தொழில் நடத்துகிறவனைப் பார்க்க வந்திருக்கிறாள்!

ஆனால், திகைப்பினூடே, கூடவே ஆறுதலாகவும் இருந்தது!

இவ்வளவு பெரிய இடத்தில் பெரிதான தொழிலை நடத்துகிறவனுக்கு, அவளுக்கு வேலை கொடுப்பது, சிரமமாக இராது!



முன் அனுமதி இல்லாமல் முதலாளியைப் பார்ப்பதா என்று வரவேற்புப் பகுதியில் இருந்தவர் தயக்கம் காட்டியபோது, அவளுக்குச் சங்கடமாகத்தான் இருந்தது! ஆனால், தடைகளையே பொருட்படுத்தக் கூடாது என்று, வழியெல்லாம் தனக்குத்தானே திடமூட்டிக் கொண்டே வந்தவள் ஆயிற்றே! வெறும் தயக்கத்துக்குப் பயந்தால் எப்படி?

உள்ளே இல்லாத அமைதியைக் குரலில் காட்டி, கொஞ்ச நாட்களுக்கு முன்பாகப் புரந்தரனுக்கு நேர்ந்த கார் விபத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அது தொடர்பாக, ஒரு முக்கிய விஷயமாக, அவனைச் சந்திப்பதற்காகவே, அந்த ஊரிலிருந்து கிளம்பி வந்திருப்பதாக அவள் கூறவும், வரவேற்பு ஆளுக்கு யோசனையாகிப் போயிற்று!

புரந்தரனுக்கு நேர்ந்த விபத்து எல்லோரும் அறிந்ததுதான்! அவன் காப்பாற்றப்பட்ட விதம் பற்றிக்கூட, அலுவலர்கள் அனைவரும் பிரமிப்பாகப் பேசியிருக்கிறார்கள்!

விபத்து நடக்கும் இடத்தில் கூடி, அரை உயிராய்க் கிடப்பவர்களிடமே கொள்ளையடிக்கும் புது மாதிரி நாகரீகம் பரவிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், புரந்தரன் நல்லபடியாகத் திரும்பி வந்தது அதிசயம் அல்லவா?

பூஞ்செடிகளைப் பயிரிட்டுப் பூக்களை விற்றுப் பிழைக்கும் அந்தச் சிற்றூர் மக்களின் மனமும் பூப்போல மென்மையாக இருந்திருக்கிறது என்று பாராட்டியது உண்டு!

அங்கிருந்து வந்திருக்கிறாள் என்றால்...

'ட' வடிவில், அந்தப் பெரிய அறையின் ஒரு புறத்தை அடைத்துக் கிடந்த சோஃபாவில் அவளை அமரச் சொல்லிவிட்டு, வந்திருப்பவளைப் பற்றி, உள்ளே தகவல் அனுப்பினார் வரவேற்புப் பகுதியின் பொறுப்பாளர்.

அரைக் கிணறு தாண்டிய உணர்வு நந்தினிக்கு.

இப்போது, அந்தப் புரந்தரன் அவளைப் பார்க்க மறுத்துவிட்டால்?

அந்த மாதிரியின்றி, அவளை உள்ளே அழைத்துப் போக ஆள் வந்தது!

முக்கால் கிணறா?

பரபரப்பாக இங்குமங்கும் சென்று வந்த யாரும், நந்தினியிடம் அக்கறை காட்டா விட்டாலும், அவள் சுற்றுமுற்றும் கவனித்துக் கொண்டேதான் போனாள்.

மருந்துக்கு ஒரு பெண்ணையும் காணோமே!

இவ்வளவுக்கு வந்து, முழுக்கிணறு தாண்ட முடியாமலே போகுமா?

இதமான ஏசியிலும் முகம் வியர்க்க, புரந்தரன் முன்னே அமர்ந்து அவனது கேள்விகளுக்குப் பதில் சொல்ல நேர்ந்தபோது, அப்படித்தான் என்று நிச்சயமாகவே அவளுக்குத் தோன்றிற்று!

முதலில், அவளைப் புரந்தரனுக்கு அடையாளமே தெரியவில்லை! ஒரு கணம் யோசித்துதான், "நீ அந்த... நான் படுத்திருந்த வீட்டில் இருந்த



பெண்தானே?" என்று கண்டுபிடித்தான்!

அவனைக் காப்பாற்றியதே அவள்தான் என்பது நினைவிருக்குமா என்று நந்தினி யோசிக்கும்போதே, "உன்னை, நானே வந்து... ஆனால் நீ ஏதோ முக்கிய விஷயம் என்றாயாம்! என்ன முக்கிய விஷயம்?" என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தான் அவன்.

உரையாடல் இப்படி இருக்கும் என்று நந்தினி எதிர்பார்க்கவில்லை!

தன்னைக் காப்பாற்றியவள் என்று உணர்ந்து, என்ன செய்ய வேண்டும் என்று கேட்பான் என்று நினைத்திருந்தாள். அதற்குப் பதில் உதவி செய்தே ஆக வேண்டும் என்று அவன் கேட்டு, அதன் பிறகு வேலையைப் பற்றி பேச்சு எழுந்தால் நன்றாக இருக்கும் என்பது, அவளது எண்ணம்! அப்படி நடக்க வேண்டும் என்பது, அவளது வேண்டுதல்!

ஆனால், புரந்தரன் நேரடியாகக் கேட்டுவிடவும், வேறு சொல்ல முடியாமல், "எனக்கு ஒரு வேலை வேண்டும்!" என்று அவளும் போட்டு உடைத்து விட்டாள்.

விழிகள் ஒரு தரம் அகன்று இடுங்க, "இது யாருக்கு முக்கியமான விஷயம்?" என்று கேட்டான் அவன்.

"எனக்குதான் சார்!" என்றாள் அவள் வெள்ளையாக

அவன் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கவும், "மெய்யாகவேதான் சார், எனக்கு இது ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம், சார்!" என்றவள், அவன் மறுத்துப் பேச இடமே கொடுக்காமல், தனக்கு இது எப்படி முக்கியமான விஷயம் என்பதை, வேகமாக எடுத்துரைத்தாள்.

தன் நிலைமை முழுதும் சொல்லிவிட்டு, "நான் சொல்லுவது எல்லாமே நிஜம், சார். வேண்டுமானால், எங்கள் ஊருக்கு வந்து, நீங்களே வேண்டுமானாலும் விசாரித்துப் பாருங்கள். பக்கத்து வீட்டு அன்னக்காவுக்கு எல்லாமே தெரியும்! ஒரு வேலை இல்லாமல், நான் உயிரோடு இருப்பதே கடினம், சார்! முடியாது என்றே சொல்லலாம்! அதனால், தயவு பண்ணி எனக்கு ஒரு வேலை கொடுங்கள், சார்! என்ன மாதிரி வேலை என்றாலும் பரவாயில்லை சார்!" என்று கெஞ்சிக் கேட்டுப் பேச்சை முடித்தாள்!

அன்னக்கா சொன்னதற்கும் அதிகமாகவே கெஞ்சியாயிற்று! இதற்கும் இவன் இளகவில்லை என்றால்... கடவுளே, அப்புறம் செத்துத்தான் தொலைக்க வேண்டும்!

அத்தை கொடுத்த ஆயிரம் ரூபாயில் டிக்கட், சாப்பாட்டுக்குச் செலவானது போக, மீதியை ஏதாவது தரும காரியத்துக்குக் கொடுத்துவிட்டு...

ஆனால், சாக மனம் வரவில்லையே! அப்பா, அம்மாவுக்குப் பிறகும் இத்தனை ஆண்டுகள் கடவுள் அவளை வாழ வைத்தது, இப்படி ஒரு சாவுக்காகவா?

ஆனால், என்னமோ தீவிரமாகச் சிந்திக்கிற மாதிரித் தோன்றினாலும், ஒன்றுமே சொல்லாமல், சும்மா உட்கார்ந்திருக்கிறானே!

இவ்வளவு யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?

இந்தப் பெரிய அலுவலகத்தில்அவள் செய்யக் கூடியதாக ஒரு வேலை கூடவா, இல்லாதிருக்கும்? ஒரு வேளை, ரொம்ப மோசமான வேலையாக இருக்குமோ?

உழைத்துப் பிழைப்பதற்குரிய வேலையில் என்ன மோசம் இருக்க முடியும்?

"பாருங்கள் சார்! வேலையில், எனக்குப் பெரிய கௌரவமெல்லாம் கிடையாது! பெருக்கித் துடைக்கிற வேலைஎன்றால் கூட..." என்றவளுக்குத் தன்னை மீறி உதடு நடுங்கிவிடச் சட்டெனப் பேச்சை நிறுத்தினாள்.

நல்லவேளையாக, அதற்கு மேலும் அவளைச் சோதிக்காமல், புரந்தரன் பேசலானான். "ம்ம்ம்... இதோ பார், உனக்கு வேலை தரக்கூடாது என்று இல்லை! ஆனால், ஒரே ஒரு வேலை தவிர, மற்றபடி பெருக்கித் துடைக்கிற வேலை வரை, எல்லாவற்றுக்கும் இங்கே ஆட்கள் இருக்கிறார்கள்! அதுதான் யோசனையாக இருக்கிறது..." என்று இழுத்தான்.

"ஆனால், ஒரு வேலை இருக்கிறதுதானே, சார்! அந்த வேலையை எனக்குக் கொடுங்கள், சார்! என்...ன்ன மாதிரி வேலை என்றாலும், நான் தயங்காமல் செய்கிறேன், சார். சம்பளம்கூட, அதிகம் வேண்டாம்! சாப்பாடு, துணி, குடக்கூலிக்கு மட்டுமாகக் கொடுத்தாலே போதும், சார்!" என்று ஆவலும் பரபரப்புமாகக் கேட்டாள் அவள்!

அப்போதும், அவன் வேலையைச் சொல்லுவதில் அவசரம் காட்டவில்லை!

"சம்பளம் ஒருவிதப்பிரச்சினையும் ஆகாது, பெண்ணே! ஆனால், அந்த வேலைக்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு! முக்கியமானது, வேலையை நிரந்தரம் ஆக்க முடியாது! நான் சொல்லுகிற வரைதான் வேலை! அப்புறம் போக வேண்டியதுதான்! ஆனால், வெறும் கையோடு போக வேண்டியிராது! ஆனால் முக்கியமான இன்னும் ஒன்று, நீயாக வேலையை விட முடியாது!"

நானாக, ஏன் வேலையை விடப்போகிறேன் என்று நினைத்து கொண்டாள், நந்தினி

எப்படியும், கொடுக்கிற வேலையை நன்றாகச் செய்தால், அப்புறமாக, அவனும்தான் ஏன் போகச் சொல்லப் போகிறான்? அப்படியே போகச் சொன்னாலும், பணமும் தருகிறேன் என்கிறானே! அந்தப் பணத்தைக் கொண்டு, ஏதாவது நல்ல வேலைக்குரிய பயிற்சி எடுத்துக் கொண்டால், அப்புறம், இப்படி வழி காணாத தவிப்புக்கு வழியிராதே!

"அது என்ன வேலை, சார்?" என்று மிகுந்த ஆர்வத்தோடு கேட்டாள் அவள்.

அப்போதும் அவசரப்படாமல், எழுந்து சென்று, "அந்த வேலை பற்றிப் பேசும்போது, குறுக்கீடு கூடாது!" என்று சொல்லி, அறைக் கதவை உட்புறமாகத் தாளிட்டான் அவன்.

புரியாத திகைப்புடன் நோக்கியவளிடம், "அது என் மனைவியாக இருக்கிற வேலை!" என்றான் புரந்தரன்!



## 7 நான் என்பதும் நீ என்பதும்



சற்று நேரம் நந்தினிக்கு ஒன்றுமே ஓடாத நிலை!

திகைப்பூண்டை மிதித்தது போல என்பார்களே, அது போலத் திக் பிரமித்து அவள் அமர்ந்திருந்தது, சில கணங்களே!

அதற்குள் அவளுக்குப் பயத்தையும் ஏமாற்றத்தையும் மீறிக்கொண்டு ஆத்திரம் பொங்கிவிட்டது!

இந்த ஆண்கள் என்ன, பிணந்தின்னிக் கழுகுகளா? எப்போது சாவு விழும் என்று காத்திருப்பதற்கு? சக்தியற்று விழுகிற வரை காத்திருந்து, இரை மேல் பாய்கிற கழுதைப் புலிகள்!

அவளுக்கு வேறு கதியில்லை என்று இவனிடம் சொன்னது தப்பு! இமாலயத் தவறு!

அதனால்தான், இப்படியொரு வார்த்தை சொல்லும் தைரியம் இவனுக்கு வந்திருக்கிறது!

கிராமத்திலே அந்தப் பையன்கள் என்றாலும், பாவம், படிப்பறிவு இல்லாதவர்கள்! பெண் என்றாலே, போகப் பொருளாக எண்ணி வளர்ந்தவர்கள்! வேலியற்ற பயிர்தானே என்ற தெனாவெட்டில் முயன்று பார்க்கலாம் என்று வந்தவர்கள்!

அங்கேயும், மாமாவின் வீட்டை வாங்கிய நடு வயதுக்காரருக்கு மன்னிப்பே கிடையாது!

ஆனால், அவர்கள் அத்தனை பேரையும் விடவும் இவன்... படித்தவன், அங்கிருக்கும்போது, அவளை நிமிர்ந்து கூடப் பாராமல் கண்ணியவான் போலக் காட்டிக் கொண்ட காதகன்!

இவனையெல்லாம்...

புரந்தரனை என்ன சொல்லித் திட்டலாம் என்று நந்தினி ஆத்திரத்துடன் கடுமையான வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கையில், அவனே பேசத் தொடங்கினான்!

"இந்த வேலை பற்றி உனக்குக் கொஞ்சம் விளக்கினால்தான் புரியும்! அதனால்..." என்றவனைக் குறுக்கிட்டு, "ஒன்றும் தேவையில்லை!" என்று சீற்றத்துடன் வெடித்தாள் நந்தினி.

தொடர்ந்து, "அப்படிப் புரியாமல் இருப்பதற்கு, நீங்கள் என்ன வேற்று மொழியிலா பேசினீர்கள்? என்ன அது? மனைவி வேலையா? என்ன திமிர்? உங்களுக்கு... உங்களைப் போல ஆண்களுக்கு எல்லாமே, பெண்களைப் பார்த்தால், இது ஒன்றுதான் நினைவு வருமா? எங்களுக்கெல்லாம், மானம்,



ரோஷம் ஒன்றுமே கிடையாதா? பசி, பட்டினி, பிழைப்புக்கு வழியில்லை என்றால், பெரிய தர்ம தாதாக்கள் மாதிரி, இப்படி வழி காட்டி விடுவீர்களாக்கும்! ஏன், ஆண்களில் ஏழைகள் கிடையாதா? ஒரு பணக்காரி அந்த ஆண்களை இப்படி நடத்தினால், அதை என்ன சொல்லுவீர்கள்? ஒத்துக் கொள்வீர்களா?" என்று படபடத்தவளுக்கு பேசிய வேகத்தில் மூச்சிரைத்தது!

அவள் முன்னே ஒரு தம்ளர் தண்ணீரை வைத்துவிட்டு, "கொஞ்சம் மூச்சு வாங்கிவிட்டு, இதைக் குடி, சூடு தணியட்டும், அதன் பிறகு, மேலே என்ன வேண்டுமானாலும் பேசலாம்! இதே போலக் கண்டபடி உளறுவதானாலும் சரி!" என்றான் அவன் ஏளனமாக.

"நான் ஒன்றும் உளறவில்லை! உண்மையைத்தான் சொன்னேன்!"

"உன் முன் அனுபவங்கள் எப்படியோ? என்னைப் பொறுத்தவரை உன் பேச்சு உளறல்தான். முட்டாள்த்தனமான உளறல்!"

வேண்டுமென்றே அவன், உளறல் என்ற வார்த்தையை அழுத்திச் சொல்ல, நந்தினி ஆத்திரத்துடன் முறைத்தாள்.

"நீங்கள் சொன்ன வார்த்தை அதுதானே? மனைவியாக இருப்பது! அதற்கு அர்த்தம் அகராதியிலே வேறு ஏதாவது போட்டிருக்கிறதா?" என்ற இப்போது, அவளது குரலில் ஏளனம் தெறித்தது!

"வார்த்தைகளை விழுங்கக் கூடாது, பெண்ணே! நான் உன்னை மனைவியாக இருக்கச் சொல்லவில்லை! மனைவியாக இருக்கிற வேலையைச் செய்யச் சொன்னேன்!" என்றான் அவன்.

"இரண்டும் ஒன்றுதானே?"

"இல்லை! நிறைய வேறுபாடு இருக்கிறது! கொஞ்சம் பொறுமையோடு கேட்டிருந்தால், அப்போதே, நான் அதை விளக்கியும் இருப்பேன்! அன்றைக்குத் தகுந்த முறையில் செயல்பட்டு, என்னைக் காப்பாற்றினாய் என்றார்கள்! அந்தத் தெளிவை எதிர்பார்த்துப் பேசினால், ஏமாற்றிவிட்டாயே!"

ஒரே ஒரு நிமிஷம் பொறுத்திருந்தால், இவனால் இவ்வளவு பேச முடிந்திராது!

இப்போதும், புரந்தரனின் பேச்சில் நந்தினிக்கு அப்படி ஒன்றும் நம்பிக்கை ஏற்பட்டு விடவில்லை! சமாளிக்கிறான் என்கிற சந்தேகம்தான்! ஆனால், ஒரு வேளை தானேதான் அவசரப்பட்டுவிட்டோமோ என்ற ஐயமும் அவளுக்கு ஏற்பட்டுவிட்டது.

சொல்வது அறியாமல் அவள் பேசாதிருக்க, அவனும் விளக்குவதில் அவசரம் காட்டவில்லை.

அவள் கெஞ்சிக் கேட்க வேண்டும் என்று எண்ணுகிறானா? ஆனால், எப்படியும் இந்த மனைவி வேலையை அவள் பார்க்கப் போவது இல்லை எனும்போது, எதற்காகக் கெஞ்சுவது?

"என்னவோ விளக்குவதாகச் சொன்னீர்கள்?" என்றாள் அவள் மிடுக்காக!



"ம்ம்ம், சொன்னேனில்லை? சொன்னேன்., சொன்னேன்! ஆனால், நீ இப்படி இடையிடையே எகிறினால் என்ன செய்வது என்றுதான் சஞ்சலமாக இருக்கிறது... பெண்ணே! முதலில் உன் பெயர் என்ன என்று சொல்லு. பெண்ணே, பெண்ணே என்றால் நன்றாக இல்லை!"

என்னவோ தெளிந்தாற்போல இருந்தது நந்தினிக்கு!

இந்தப் புரந்தரனுக்கு அவளது பெயரே தெரியவில்லை! பல மணி நேரம் அவள் வீட்டில் இருந்தபோதும், அவளது பெயரை அறிந்து கொள்ளும் ஆர்வம் அவனுக்கு இருக்கவில்லை!

அதாவது, இளம் பெண் என்பதற்காக, அவளிடம் அவன் அதிகப்படி அக்கறை காட்டவில்லை! முக்கால் மயக்கத்தில் கிடந்த முதலில் மட்டுமல்ல., உடம்பில் ஓரளவு நல்லதெம்பு வந்துவிட்ட சமயத்திலும் அப்படித்தான்!

ரொம்பச் சின்ன அறிகுறிதான்!

ஆனால் மனதில் இருந்த இறுக்கம் சற்றே தளர, "என் பெயர் நந்தினி." என்றாள் அவள்.

பெயரின் அர்த்தம், அழகு பற்றிய ஆராய்ச்சியில் இறங்காமல், "கவனமாகக் கேள் நந்தினி." என்று புரந்தரன் சொல்லத் தொடங்கியதுகூட, அவளுக்கு ஆறுதலாகவே இருந்தது!

எந்த விதத்திலும் அவளிடம் அவனுக்கு ஆர்வம் இல்லை என்றுதானே பொருள்?

"இதைச் சொல்லுவதற்காக, நீ ஆத்திரப்படக் கூடாது! எனக்குப் பொதுவாகப் பெண்களிடம் நம்பிக்கையோ, மரியாதையோ கிடையாது! அதனால், திருமணமே செய்து கொள்ளக் கூடாது என்று நினைத்திருந்தேன்! ஆனால், இப்போது திருமணம் செய்து கொள்ள வேண்டியதாக ஒரு கட்டாயம் நேர்ந்திருக்கிறது! அது... சரி, எப்படியும் காரணத்தைச் சொல்லித்தான் ஆக வேண்டும். அல்லது, உனக்குப் புரியாது..." என்று தொடங்கி, தந்தையின் வாழ்க்கை பற்றிக் கூறினான். "பெண்களிடம் ஏன் வெறுப்பு என்று உனக்கு இப்போது புரிந்திருக்கும்!" என்றவன் தொடர்ந்து, உயில் பற்றித் தெரிவித்தான்.

"என்னதான் அப்பாவின் கடைசியான உயில் என்று வக்கீல் அங்கிள் சொன்னபோதும், அதெல்லாம் என்னை மிரட்டித் திருமணம் செய்ய வைப்பதற்காகவே என்று ஒரு சிறு சந்தேகம் எனக்கு எப்போதுமே இருந்தது! உயில் பதிவு செய்யப்படாதது வேறு! அதனாலேயே, மாற்று உயில் ஒன்றை எதிர்பார்த்து, இத்தனை மாதங்கள் காத்திருந்தேன்! ஆனால், அப்பா குறிப்பிட்ட ஓர் ஆண்டு காலம் முடிவடைய, இன்னும் ஒரு வாரமே இருக்கிறது! வக்கீல் விரட்டுவதையும் கவலைப்படுவதையும் பார்த்தால், இதுதான் மெய்யான கடைசி உயிலாக இருக்கும் போலத் தெரிகிறது! அதனால்..."

"சொத்து சுகத்துக்காகக் கொஞ்சமும் பிடிக்காவிட்டாலும் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்தீர்கள் போல!" நந்தினியின் குரலில்,

இன்னொரு வகை ஏளனம் இருந்தது!

ஒரு கணம் தயங்கிவிட்டு, "வெளியிலிருந்து பார்த்தால், அப்படியும் தோன்றக் கூடும்! ஆனால் இந்தப் பத்திரிகையைப் பார்!" என்று மேஜை மீதிருந்த பரிமளவாணி பத்திரிகையை எடுத்து அவளுக்குக் காட்டினான்!

"இது என் தந்தை தொடங்கி, கடும் போட்டியிடையே வளர்த்தது! அன்றாட வாழ்வுக்குத் தேவையான எத்தனை விஷயங்கள், இதில் இருக்கின்றன தெரியுமா? ஒவ்வொரு பக்கத்தையும், ஒவ்வொரு வரியையும் எவ்வளவு கவனத்துடன் தயார் செய்கிறோம்..." என்றவன், "என்னோடு வா" என்று கதவைத் தாள் திறந்து, அவளை வெளியே அழைத்துச் சென்றான்.

தொடர்ந்து அரைமணி நேரம், அந்தப் பத்திரிகை நிறுவனம் முழுவதையும் அவளுக்குச் சுற்றிக் காட்டினான், புரந்தரன்.

யாருக்கும்... முக்கியமாக ஒரு பெண்ணுக்கு அவன் இப்படிக் காட்டுவது பழக்கமற்ற செயல் என்பது அந்தந்தப் பகுதியில் பணி புரிந்து கொண்டிருந்தவர்களின் குறுகுறு பார்வை தெரிவித்ததை, அவன் லட்சியமே பண்ணவில்லை!

முதலில் ஒரு மாதிரி உணர்ந்தபோதும், விரைவிலேயே நந்தினிக்கும் அந்தப் பார்வைகளைக் கவனிக்கத் தோன்றவில்லை!

திடுமென, "தொடரில், கதைக்கும் படத்துக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது, சார்! வீட்டுப் பணியாள் ஒரு பெண் என்று அடுத்த பகுதியில் வருகிறது! ஆனால், இந்த வார இதழுக்குப் பையன் படம் வந்திருக்கிறது! ஓவியர் ஊரிலில்லையாம். தொடர்பு கொள்ள முடியவில்லை! பக்கம் தயார் பண்ண, இன்றுதான் கடைசி நாள், என்ன செய்வது?" என்று கேட்டுக் கொண்டு ஒருவன் வந்து நின்றான்.

இதற்குள், இதழ் தயாரிப்பில் ஈடுபட்டுப் போயிருந்த நந்தினி, புரந்தரன் என்ன வழி சொல்லப் போகிறான் என்று ஆவலாகக் கவனித்தாள்.

படத்தைக் கொண்டுவரச் சொல்லிப் பார்த்துவிட்டு, "கதாநாயகன், நாயகியின் முகம் பாவனையோடு தெளிவாக இருக்கிறதல்லவா? அதை மட்டுமாக எடுத்துப் பெரிதுபடுத்தி, வைத்து விடுங்கள்! வேலையாள் இருக்கும் இடத்தில், எழுத்துப் பகுதியை நீட்டிவிட்டால் சரியாகிப் போகும்." என்று அவன் கூறவும், தன்னையறியாமல், "ஆஹா! பிரமாதம்!" என்றாள் அவள்.

புரந்தரன் சிறு வியப்புடன் திரும்பிப் பார்க்கவும், சட்டென முகம் கன்றி, "சாரி!" என்று முணுமுணுத்தாள்.

"எதற்கு 'சாரி'? அந்தப் பத்திரிகை ஆர்வம், எப்படி என்னைப் பிடித்தது என்று உனக்கு அனுபவப் பூர்வமாக நீ உணரத் தொடங்கிவிட்டது குறித்து எனக்கு சந்தோஷமே! இனி, அறைக்குப் போய்ப் பேசலாம், வா!" என்று அவளைத் திருப்பி அழைத்துச் சென்றான்.

அவனது அறைக்குள் சென்ற பிறகு, தானாகவே மூடிக்கொண்ட கதவை முன்



போலவே தாளிட்ட பிறகே புரந்தரன் பேசலானான். "இந்தப் பத்திரிகையை என்னால் விட முடியாததன் காரணம், இதை நான் வெறும் சொத்து சுகமாக மட்டும் கருதுவதால் அல்ல என்றும் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்! ஆனால், என் சிற்றன்னைக்கும், அவளுடைய மருமகளுக்கும் இது வெறும் சொத்து மட்டுமே. அதுவும், கூடிய விரைவில் விற்றுப் பணமாக்கி, அந்தப் பணத்தை சந்தோஷமாக அனுபவிப்பதற்கான கருவி. இது அவர்களது கைக்குப் போனால், அவ்வளவுதான்! பத்திரிகையின் ஆயுளே நாள் கணக்குதான்!" என்றான் வருத்தமும் கோபமுமாக.

"மருமகள் என்றால்... அங்கேயும் ஒரு மகன் இருக்கிறார் என்று தெரிகிறது! அந்த மகனிடம் அப்பாவுக்கு நம்பிக்கை இல்லையாமா?" என்று துருவினாள் நந்தினி.

"இல்லை! இருக்க வழியும் இல்லை! சித்தி வளர்த்த பிள்ளை, அவன்! அம்மாவுக்கு அடி பணிந்தே பழகிப் போனவன்! நல்ல பையன்தான் என்றாலும் தைரியம் குறைவு என்பதால், அவனது பொறுப்பும் எனக்குத்தான்! ஆனால், அவன் பேச்சு இப்போது அனாவசியம்! என் தேவை, உடனடியாக மனைவி என்ற பெயரில் ஒருத்தி! உனக்கு உடனடித் தேவை பாதுகாப்பான பின்புலம்! இரண்டும், இதில் நிறைவேறிப் போகும்! என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் அவன்.

அவன் சொல்வது ஒரு வகையில் சரிதான்! ஆனால், அவனது தேவைக்காலம், மிகவும் குறுகியது! உயிலில் சொல்லியிருப்பதன்படி, அவனுக்குத் திருமணம் நடந்து, பத்திரிகை கைக்கு வந்துவிட்டால், அத்துடன் முடிந்தது. அத்தோடு நீயும் போய்வாடி என்றானானால், அப்புறம், அவள் கதி என்ன ஆகும்?

இப்போது இருப்பதேதானே இதற்கு எதற்காக அறியாத ஒருவனை மணப்பதும், விட்டு விலகுவதும்?

அவள் மனதை உணர்ந்தவன் போல, "இது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உதவியே தவிர, ஒருதலைப் பட்சமானது அல்ல! என்னை நீ மணந்து, பத்திரிகை என் கைக்கு வருகிற நாளில், உனக்குக் கிடைக்கும்படியாக, நீ விரும்பும் ஏதாவது கல்வி பயிலுவதற்குத் தேவையாக பணத்தை பாங்கில் கட்டி விடுகிறேன். அத்தோடு, படிக்கிற காலத்தில் உன் செலவுக்காகவும் பாங்கில் இரண்டு லட்சம் ரூபாய் போட்டு விடுகிறேன்! மேலும், இது உண்மையான திருமணமாக இருக்கப் போவதும் இல்லை! என்ன சொல்லுகிறாய்?" என்று ஒப்பந்தத்தில் தன் பங்கு பற்றி விளக்கம் கொடுத்து வினவினான் அவன்.

இரண்டு லட்சம் ரூபாய்! ஒழுங்கான வருமானத்துக்கு உரிய படிப்பு!

ஒரே ஓர் ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு, எதிர்காலத்தை எண்ணிப் பயந்து விழித்துக் கொண்டிருந்தவளுக்கு, இது எவ்வளவு பெரிய அதிருஷ்டம்!

ஆனால்... கண் மூடி யோசித்தாள் அவள்.

இந்த அதிருஷ்டத்தின் விலை?



சும்மா வருவது எதுவுமில்லை என்பது, பெற்றோரை இழந்து, இத்தனை ஆண்டுகளில் நந்தினி நன்றாகவே தெரிந்து வைத்திருக்கும் பாடம்! உச்சந்தலையில் அடித்து உணர்த்தப்பட்டிருப்பது!

சொந்தத் தாய்மாமன் வீட்டிலும், படிப்பு துணிமணிக்குக் கூட, அவள் தனியாகத் தோட்ட வேலை செய்ய வேண்டியிருந்ததுதானே?

இப்போதும், இதற்கு விலை இருக்கிறது!

ஊர் உலகத்தைப் போல வாழும், ஆற்று நீரோட்டம் போன்ற அமைதியான குடும்ப வாழ்வு!

பொய்யாக என்றாலும், இவனது மனைவி என்று முத்திரை குத்தப்பட்ட பிறகு, இன்னொரு நல்ல வாழ்வு அவளுக்கு அமைவது கடினம்! அதிலும், அவளது குணத்துக்கு, முடியாது என்றே சொல்லிவிடலாம்!

எனவே, பெரிய இழப்புதான்!

ஆனால், அவள் அவ்வப்போது கனவு கண்ட அந்தக் குடும்ப வாழ்வு, பின்னர் ஏதோ ஒரு காலத்தில்தான் வரக்கூடியது என்பதோடு, அப்படி வருகிறபோதும், அந்த நல்ல வாழ்வு நிச்சயமாகக் கிடைக்கும் என்ற உத்திரவாதமும் கிடையாது!

திருமண வாழ்வு படுதோல்வியுற்று, மீண்டும் கல்லூரிப் படிப்பைத் தொடங்கிய இரு பெண்களை, படிக்கிற காலத்தில், அவளே பார்த்திருக்கிறாள்!

அவளது குடும்பக் கற்பனையும், அதேபோலக் கானல்நீர் ஆகாது என்று என்ன நிச்சயம்?

முக்கியமான இன்னும் ஒன்று! அவளது இன்றைய நிலையில் இதையெல்லாம் அவள் ஆராய்ந்து கொண்டிருப்பது கூட, ஒரு வகையில் மடத்தனமே!

கரையில் கிடந்து, தண்ணீருக்குத் தவிக்கும் மீனின் நிலை அவளுடையது! அவளது பிரச்சினைக்குத் தேவை, உடனடித் தீர்வு!

என்றைக்கோ ஒருநாள், ஒரு வேளை கிடைத்தாலும் கிடைக்கக்கூடிய மேன்மையான வாழ்க்கையைவிட, இன்று மானத்தோடு உயிர் வாழ்வதற்கான வழி முக்கியம் அல்லவா?

அதைத் தருகிறேன் என்று ஒருவன் நம்பகமாகச் சொல்லும்போது, அதை உதறிவிட்டுப் போனாலும், அந்த நல்ல காலம் வரும்வரை, என்ன செய்து எப்படிப் பிழைக்கப் போகிறாள்?

கண் திறந்து பார்க்கையில் அவன், மார்பின் குறுக்கே கட்டிய கைகளுடன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது!

அவளது யோசனையில் குறுக்கிடாமல், அவன் பொறுமையாகக் காத்திருந்தது, ஏதோ ஒரு வகையில் மீண்டும் அவளுக்கு ஆறுதலைத் தந்தது!

ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு, "சம்மதம்!" என்றாள் நந்தினி! "ஆனால், நீங்கள் எனக்குச் சில விவரங்கள் சொல்ல வேண்டும்!"

"தாராளமாக!" என்றான் அவன்!



# 8 நான் என்பதும் நீ என்பதும்



'சம்மதம்' என்று சொல்லிவிட்டபோதும், அவளுக்கு மனதில் எத்தனையோ சஞ்சலங்கள்., சந்தேகங்கள்., குழப்பங்கள்!

புரந்தரன் தருகிறேன் என்று சொல்லும் பணத்துக்கு, சற்று இலகுவாகப் பழகும் பெண்கள் எத்தனையோ பேர், அவன் சொல்லுகிற வேலையைச் செய்ய முன் வரலாம்.

அப்படி இருக்க, அவளை மட்டுமாக, அவன் ஏன் கேட்க வேண்டும்? ஊர்ப்புறத்துப் பெண்., சொன்னதைக் கேட்பாள் என்றா?

அல்லது, முகத்திலேயே ஏமாளி போலத் தெரிகிறதா?

இன்னும் சில நடைமுறைப் பிரச்சினைகள் பற்றியும், அவனிடம், அவள் கேட்க வேண்டியிருந்தது!

கேட்கும் விவரங்களைத் தரப் புரந்தரனும் சற்றும் தயங்கவில்லை!

இந்தத் திருமணம் தொடர்பான எதைக் கேட்கவும், அவளுக்கு உரிமை உண்டு என்றதோடு, இயன்றவரை பதில் சொல்வதாகவும் கூறினான்!

ஆனால், அவளது முதல் கேள்விக்கான பதிலிலேயே, அவள் சற்று அதிர்ந்து போனாள்!

"திருமணம் பற்றி, அவளிடம் ஏன் கேட்டான்? வேறு எந்தப் பெண்ணும் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லையா? "

கோபம் கொள்ளாமல் "அறியாத இன்னொருத்தியிடம் எதற்குக் கேட்பது? நீதானே இந்தப் பிரச்சினையில் என்னைக் காப்பாற்றுவதாக உறுதி கொடுத்திருக்கிறாய்! அதனால், உன்னைத்தான் தேடி வரலாம் என்று யோசித்திருந்தேன்." என்று புரந்தரன் வெகு இயல்பாகப் பதில் உரைக்கவும், அப்படியே திகைத்துப் போனாள் அவள்.

அவளைத் தேடி வருவதைப் பற்றிய பேச்சை, ஒரேடியாகப் பொய்யென்று கருத வழியில்லை! ஏனெனில், இன்று அவளை முதலில் பார்த்ததுமே அதே போலத்தான், அவன் என்னவோ சொன்னான்!

அன்று அரை மயக்கமாகக் கிடந்து பரிதவித்த அந்த நேரத்தில், அவன் ஏதோ சொல்லிக் காப்பாற்றுவாயா என்று கேட்டதும், அவன் உயிரைப் பற்றிக் கேட்கிறான் என்று எண்ணிக் காப்பாற்றுவதாகச் சொன்னதும்... இவனுக்குமே, எல்லாமே நினைவு இருக்கிறதே!

அந்த அரை மயக்க நிலையில் நிகழ்ந்தது கூட!

இவனுக்கு மன வலிமை அதிகம் என்று கொள்ள வேண்டுமோ என்று எண்ணுகையில், அவளுக்குச் சிறு பயம் உண்டாயிற்று!

ஆனால், இவன் நல்லவனாக இருந்தால் பயப்படத் தேவையில்லை!

அவளது ஆராயும் பார்வையைத் தாங்கிக் குறுநகை புரிந்தான் புரந்தரன்.

அவனது பிரச்சினை, அவன் விரும்பிய வண்ணம் தீருகிற நிம்மதி போலும்! சிரிப்பே வருகிறது என்று நினைத்தாள் நந்தினி.

ஆனால், அவளது நிலை அப்படி இல்லையே!

பிச்சைக்காரர்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது., போட்டதைத்தான் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று தனக்குள் பலமுறை சொல்லி, அவள் மனதை அமைதிப்படுத்திக் கொண்டிருக்கையில், "என்ன ஒரே கேள்வியோடு நிறுத்திவிட்டாய்? அல்லது, பிரம்மாஸ்திரம் இனித்தான் வரப் போகிறதா?" என்று கேட்டு முறுவலித்தான் புரந்தரன்.

தன்னையறியாது இறுக்கம் தளர, "முதல் பதிலேதான் பிரம்மாஸ்திரமான இருக்கிறதே! அன்றையக் 'காப்பாற்றுகிறே'னுக்கு, இப்படி ஒரு விளக்கத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை!" என்றாள் அவள்! "ஆனால் அந்த நேரத்திலும், இந்தப் பிரச்சினையைத்தான் நினைத்துக் கொண்டிருந்தீர்கள் எனும்போது, உங்களுக்கு இது எவ்வளவு முக்கியம் என்று புரிகிறது! அப்போது என்னிடம் கேட்டது... என்னைத் தேடி வருவதாக இருந்ததும், இன்று கேட்டதும், எல்லாமே அதற்காகத்தான் இல்லையா?." என்றாள் அவள்.

லேசாக முறுவலித்தான் அவன்.

"வெறும் 'பிசினஸ் மேணா'க மட்டும் பேசுவதானால், இந்த உண்மையை நான் ஒத்துக் கொள்ளக் கூடாது! ஆனால், இதில் பொய் பேசுவது எனக்கு நியாயமாகத் தோன்றாததால், நிஜத்தையே சொல்லுகிறேன்! நீ ஊகித்தது சரியே! உயிலில் குறிப்பிட்ட ஓர் ஆண்டுக் கெடு முடிகிற நாள் நெருங்க, நெருங்க, அது தவிர வேறு சிந்தனையே எனக்கு இல்லை எனலாம்! நானாக முயன்று மறந்தாலும், வக்கீல் அங்கிளும், அவருக்கு நேர் எதிரான இன்னொரு வழியில் என் சிற்றன்னையும், அதை நினைவுபடுத்தி விடுவார்கள்! அதே யோசனையில் காரை ஓட்டி வரும்போதுதான், அன்று அந்த விபத்து நேர்ந்தது! காரிலிருந்து என்னைக் காப்பாற்றியது நீ என்பது பெரிதாக மனதில் படவில்லை! ஆனால், கண்ணைத் திறந்து பார்க்கையில், என்னைக் காப்பாற்றியது போலப் பத்திரிகையையும் உன்னால்தான் காப்பாற்ற முடியும் என்று ஏனோ தோன்றியது! அதைச் சந்தேகத்துக்கு இடமின்றி, உன் வாயால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று, அந்த நேரத்தில் மிக மிக முக்கியமாகிவிட்டது. அதை உன்னிடம் கேட்டு, நீயும் காப்பதாகக் கூறியதும், மனம் நிம்மதியாகி, அப்படியே ஓய்ந்துவிட்டேன் என்று நினைக்கிறேன்..."

"ஆனால், அங்கே வைத்துப் பிறகு நீங்கள் அது பற்றிக் கேட்கவே இல்லையே! என்னை நிமிர்ந்து பார்த்ததும் இல்லையே!"

"பிரச்சினை முடிந்துவிட்டதாக என் உள்மனது கருதியதால், மறுபடி அந்த நினைவு எழவில்லையோ என்று இப்போது தோன்றுகிறது! ஏனெனில் சென்னைக்கு வந்து, அடுத்த வாரத்துப் பத்திரிகை வேலையைப் பார்ப்பதில்



மட்டும்தான், அப்போது என் முழுக் கவனமும் இருந்தது! அடுத்து... பெண்களை, அதுவும் இளம் பெண்களைக் கூர்ந்து பார்ப்பது எனக்கு அடியோடு பழக்கமில்லை! பெரிதாக நன்னடத்தை என்று எண்ணிவிட வேண்டாம்! பெண்களிடம் உள்ளூர இருந்த வெறுப்புதான் இதற்கு முழுக் காரணம். வெறுமனே பார்த்தாலே, இதுதான் சாக்கு என்று வந்து ஒட்டிக் கொள்ள முயற்சிப்பார்களே! அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்றுதான்!" என்றான் வெளிப்படையாக.

திக்கென்றது நந்தினிக்கு!

அவளையும் அப்படித்தான் நினைக்கிறானா?

ஓர் ஆபத்தில் அவனைக் காப்பாற்றியதை வைத்துக் கொண்டு, அவனைச் சந்திக்க வந்ததாக எண்ணுகிறானோ?

ஆனால், அவள் வேலை கேட்டுத்தான் வந்தாள்., திருமணம் பற்றிப் பேசியது, அவனே., அவளுக்கு அந்த மாதிரி எண்ணமே கிடையாது என்று சொன்னால் ஒத்துக் கொள்வானா?

ஒத்துக் கொள்கிறானோ, என்னவோ, அதைத் தெளிவுபடுத்தித்தான் ஆக வேண்டும்! அவன் அவளைத் தவறாகக் கணிக்க விடக்கூடாது!

இந்த எண்ணம் தோன்றவும், "எல்லாப் பெண்களையும் ஒரே மாதிரி மோசமாக நினையாதீர்கள், சார்! நான் உங்களைத் தேடி வந்தது வேலைக்காக மட்டும்தான்! வேறு நினைவு எனக்குக் கிடையாது! சரியாகச் சொல்வது என்றால், உங்களுக்கும் தவறான எண்ணம் இருக்கக் கூடாதே என்பதுதான் என்னுடைய பெரிய கவலை!" என்றாள் நந்தினி கறார்க் குரலில்.

அவளது பேச்சுப் புரியாதது போல, அவளைத் திகைப்புடன் பார்த்தான் புரந்தரன்!

உடனேயே அகன்ற அவனது விழிகள் மறு கணமே, இடுங்கிச் சுருங்கி, அவளைக் கூர்ந்து நோக்கின.

சற்றும் தளராமல், அவனது பார்வையை எதிர்கொண்டாள் நந்தினி.

மடியில் கனம் இல்லாதபோது, என்ன பயம்?

சில வினாடிப் பார்வைப் போராட்டத்தின் பின், "இல்லை! உன்னைப் பார்த்தால், அப்படித் தெரியவில்லை! ஆனால் முன்புமே, உன்னை நான் தப்பானவளாக நினைக்கவில்லை!" என்றபோது, புரந்தரனின் குரலிலேயே லேசான வியப்புத் தெரிந்தது!

தப்பாக அவளை நினைக்காததே அதிசயமாக இருக்கிறதாக்கும்?

"பின்னே ஏன், வரவில்லை? தப்பாக நினைக்கவில்லை என்றால், எப்போதோ என்னைத் தேடி வந்திருக்கலாமே! இன்னமும் ஒரே ஒரு வாரம் என்கிற அளவுக்குப் பிரச்சினை மிக நெருங்கி வந்த பிறகும், உங்களுக்கு என் நினைவு எந்த மாதிரித் தெரியவில்லையே!" என்று கேட்டாள் நந்தினி.

பெண்களைப் பற்றி அவ்வளவு பேசிய பிறகு, அவன் விளக்கம் சொல்லித்தானே ஆக வேண்டும்?



"வந்தது." என்றவனின் முகம் லேசாகக் கன்றியது! "ஆனால், அன்றிருந்த அரை மயக்க நிலையில், நான் கணித்தது தவறாக இருக்கலாமோ என்று, உடனேயே உன்னைப் பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்தேன். முக்கியமாக உன் குணத்தைப் பற்றி. கிடைத்த விவரம் திருப்திதான்! ஆனாலும், பெண்கள் விஷயமாக என் இயல்பு காரணமாக உன்னைக் காண நேரில் வருவதற்குத் தயக்கமாகவும் இருந்தது. கடைசியாக இன்றுதான்... இனியும் தயங்கினால், அது பெரிய தப்பாகிவிடக் கூடும் என்றுதான், இன்று மாலையில் நானே அங்கே வருவதாக இருந்தேன்!" என்றான் புரந்தரன்.

நம்பாதிருக்கக் காரணம் இல்லை! என்றாலும், முழுதாக நம்பலாம் என்பதற்கு உத்திரவாதமும் இல்லை! எல்லாமே வெறும் வாய் வார்த்தைகளே! இதில் உண்மை, பொய் அறிவது எப்படி? இன்னும் கேட்பதா?

ஆனால், ஏனோ அலுப்பாக இருந்தது, நந்தினிக்கு!

இந்தக் கேள்விகளிலும், பதில்களிலும் என்ன இருக்கிறது? எதையேனும் கண்டுபிடித்து விட்டால் மட்டும், எப்படியோ போ என்று உதறிவிட்டு, அவளால் போய்விட முடியுமா?

அவளது தலையெழுத்து, அவனது திட்டப்படி நடப்பதுதான்!

அது முடியாது என்று முறித்துக் கொண்டு போய்விட, அவளுக்கு சக்தியில்லை! எப்போதும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அவ்வளவுதான்!

பிறகென்ன?

வரப் போகும் சில நாட்களைப் பல்லைக் கடித்து சகிக்க வேண்டும்!

புரந்தரன் ஏமாற்றி விடக்கூடாது என்று கடவுளை வேண்டிக் கொண்டு, அவன் கைக்குப் பத்திரிகையின் உரிமை முழுதாக வரும்வரை பொறுத்திருந்து, அப்படி வந்ததும் அவன் தரும் பணத்தை வாங்கிக் கொண்டு, கிளம்ப வேண்டியதுதான்.

இந்தச் சில நாட்களையும், இந்தப் புரந்தரனையும் மறந்து, ஒரு நல்ல பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து, எதிர்காலத்துக்கு வேண்டிய எதையாவது நன்கு தேர்ந்தெடுந்துப் படித்து, வேலை தேடி, வாழ்வை அமைக்க வேண்டும்!

இதற்கு, இவனிடம் ஆயிரம் கேள்விகள் ஏன்?

நிமிர்ந்து அவனைப் பார்த்து, "என் சுய மரியாதைக்கு எந்தவிதக் குறைவும் நேராமல் இருக்க வேண்டும். அவ்வளவுதான்! மற்றபடி, இதற்கு மேல், எனக்குத் தெரிய வேண்டியது ஒன்றுமில்லை!" என்று முடித்துவிட்டாள். அவள்.

அவனும் நிம்மதியுற்றவனாக, வீட்டில் வசிக்கும் குடும்ப அங்கத்தினர் பற்றிய முக்கிய விவரங்களைச் சொன்னான்.

உயில் விவகாரத்திலேயே ஓரளவு ஊகித்தபடி, சித்தியம்மாள் நீலா, அவளுடைய மருமகள் சாயா இருவரின் சுயநலம், பேராசை பற்றித் தெரிவித்தான்.

"இருவரும் அவ்வளவு இலகுவாக இந்தத் திருமணத்தை நடத்த விட்டுவிட மாட்டார்கள். எனவே, வெளியே ஒரு வார்த்தை கசிவது கூட நல்லதல்ல! வக்கீல்



சகாயம் அங்கிளை வரச் சொல்லி இருக்கிறேன். உனக்குத் தங்கும் இடம் அவர் ஏற்பாடு செய்வார். திருமணம் வரை, அவர் மூலமாகவே, உன்னிடம் தொடர்பு கொள்ளுகிறேன்..." என்று புரந்தரன் அவளிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சகாயம் வேகமாக அங்கு வந்து சேர்ந்துவிட்டார்!

"என்னப்பா, என்ன? ரொம்ப முக்கியமான விஷயம் என்றாயே, கல்யாணமா?" என்று ஆர்வத்துடன் வினவினார்.

நந்தினியின் வியப்பைக் கவனித்து, "ஆச்சரியப்பட வேண்டாம் நந்தினி! சற்று முன் சொன்னேனே, வக்கீல் அங்கிள் என்று! அது இவர்தான். அங்கிளைப் பொறுத்த வரையில், என் சம்பந்தமாக அதி முக்கியமாக விஷயம், இப்போதைக்கு என் திருமணம் மட்டும்தான்!" என்ற புரந்தரன், மீண்டும் வக்கீலிடம் திரும்பி, "இவள் பெயர் நந்தினி அங்கிள். என் வருங்கால மனைவி!" என்று அறிமுகப்படுத்தினான்.

ஒன்றும் சொல்லாமல், சொல்ல மாட்டாமல் கரம் குவித்தவளை, மகிழ்ச்சியுடனும், அதே சமயம் சந்தேகத்துடனும் பார்த்தார் சகாயம், "நீ யாரம்மா?"

அவசரமாகக் குறுக்கிட்டு, "அதுதான் சொன்னேனே, அங்கிள்!" என்றான் புரந்தரன்.

"ஏய்ய்ப் பையா, நான் அவளிடம் அல்லவா, கேட்டேன்! நீ சொல்லம்மா!" என்று அவளை உந்தினார் வக்கீல்.

அவரது ஐயம் புரிந்து, "விபத்தில், அவரைக் காப்பாற்றியவள்!" என்றாள் நந்தினி சுருக்கமாக!

சட்டென சகாயத்தின் முகம் மலர்ந்தது. "அப்பாடா! ஏதாவது ஏஜன்சியில் சொல்லி, இந்த ஐந்து நாட்கள் நடிப்பதற்காக யாரையேனும் வரவழைத்திருப்பாயோ என்று நினைத்துவிட்டேன்! அப்புறம், அதிலிருந்து மீள முடியாமல் திண்டாடப் போகிறாயே என்று கவலைப்பட்டேன்! நல்ல வேளை! நீ காப்பாற்றிய போதே, உங்களுக்குள் ஒரு பொறி பற்றியிருக்கும்! இவன் வழக்கமான திருமண வெறுப்பில் தள்ளிப் போட்டான் போல! ஏதோ, இப்போதாவது, இவனுக்கு அறிவு வந்ததே! இன்னும் உறைக்கும் படியாக, பெண்களின் பெருமை பற்றி, இவனிடம் நிறையப் பேசு!" என்று இருவரையும் மாறிமாறிப் பார்த்துப் பேசினார் வக்கீல்!

"ரொம்ப நல்லது! நந்தினி பேசிக்கொண்டே இருக்கட்டும்! நாட்களும் போய்க்கொண்டே இருக்கட்டும்! அப்புறம், நடக்க வேண்டியது, தானாக நடக்கும்!" என்றான் புரந்தரன் கண்ணை உருட்டி, கேலிக் குரலில்.

"ஆஹா! அது கூடாதுப்பா! இன்னும் முழுதாக ஐந்தே நாட்கள்தான் இருக்கின்றன! இதில் நல்ல நாள் பார்த்து..."

"என்ன பெரிய நல்ல நாள்? நல்லது செய்யும் நாளெல்லாம் நல்ல நாள்தான் என்று படித்திருக்கிறேன்!"

"உன் வயதில் அப்படித்தான் தோன்றும்! ஆனால், ஆயிரம் காலத்துப் பயிராய் நிலைக்க வேண்டியதை, அப்படி அலட்சியமாக நடத்தக் கூடாது! இன்றைக்கு

நாலாவது நாளில் ஒரு நல்ல நாள் இருக்கிறது! அன்றைக்குத் திருமணத்தை வைத்துக் கொள்ளுவோம்! மிகவும் வேண்டிய கொஞ்சம் பேரை அழைத்து..."

"ம்! பிரமாதமாகக் கொண்டாட்டத்துடன் செய்ய வேண்டியதுதான்! அதிலும் முக்கியமாகச் சித்திக்கு விவரம் தெரிய வைக்க வேண்டாமா? அதனால், அவர்களையும் முறைப்படி கூப்பிட்டு, எப்படிச் செய்வது என்று அவர்களிடமே கேட்டு..."

"ஐயோ! வேண்டாம்பா! எப்படியாவது கெடுத்து விடுவார், அந்த அம்மா! காதும் காதும் வைத்த மாதிரித் திருமணத்தை முதலில் முடித்து விடுவோம்! நீயாக ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறாயா?" என்று அவனது வழிக்கே வந்து சகாயம் கேட்க, "இல்லை." என்று சொல்லி, அவரையே மேற்கொண்டு திட்டமிடச் செய்தான், புரந்தரன்!

திட்டமிட்டு முடித்ததும், "உயில் பொறுப்பை ஏற்கும் வக்கீல் என்றால், பாரபட்சம் இல்லாமல் நடக்க வேண்டாமா? ஒருவருக்கு ஆதரவாகக் கல்யாணப் புரோகிதர் வேலை பார்க்கிறீர்களே!" என்று சகாயத்தைக் கேலி செய்தான்.

நன்கு பழகிய இருவரின் உரையாடல் என்பதோடு, பேச்சின் கருப் பொருளும் உள்ளுரச் சஞ்சலத்தையே மூட்டவே, அவர்களது பேச்சைக் கவனித்தபடி, சும்மாவே உட்கார்ந்திருந்தாள் நந்தினி.

தன் லட்சியத்தை அடைய ஒரு கருவி என்பதற்கு மேலாகத் திருமணத்துக்குச் சிறிதளவு முக்கியத்துவம் கொடுக்கக் கூடப் புரந்தரனுக்கு விருப்பமில்லை என்பது, அவளுக்கு நன்றாகவே புரிந்தது!

ஆனால், பெரியவருக்கு நேர் மாறான ஆசை இருந்தது!

திருமணம் தடையின்றி நடக்க வேண்டும் என்பதில் மட்டும் இருவருக்குமே ஒத்த கருத்துதான்!

கூடவே, இலகுவாகக் கேலி பேசினாலும், புரந்தரனின் பேச்சில் ஓர் ஆழம் பார்க்கும் தன்மையும், கண்களில் கவனமும் இருப்பதையும் அவளால் உணர முடிந்தது! அதுவும் கடைசி வாக்கியத்தின் போது, பார்வை ரொம்பவே கூர்மை!

"என்ன செய்வது? எப்படியும் பத்திரிகையைக் காப்பதாக, நண்பருக்கு வாக்குக் கொடுத்து விட்டேனே. கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டாமா? உங்களுக்கெல்லாம் எப்படியோ? கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது, எங்கள் தலைமுறைக்கு ரொம்ப முக்கியம்ப்பா அது முடியாவிட்டால், நிம்மதியாகச் சாகக் கூட முடியாது! நீயானால், இடித்த புளி மாதிரி, இதைப் பற்றிக் கவலையே இல்லாமல் கல்லுப் பிள்ளையாராக உட்கார்ந்திருக்கிறாயே என்று எப்படிக் கலங்கிப் போயிருந்தேன், தெரியுமா?" என்றபோது, உணர்ச்சி வேகத்தில், வக்கீல் சகாயத்தின் குரலே சற்றுத் தகுதழுத்தது!

"சமயம் வாய்த்தது என்று புளி, கல்லு என்று திட்டித் தீர்க்கிறீர்களா, அங்கிள்?" என்று சிரித்தபோதும், அவன் கண்களில் ஏமாற்றம் தெரிவது போலவும், நந்தினிக்குத் தோன்றியது!

ஆனால், என்ன ஏமாற்றம்?



அவனது திட்டப்படிதானே, எல்லாமே நடக்கப் போகிறது?

ஆயிரம் காலத்துப் பயிர் என்று வக்கீல் திட்டமிட்டாலும் பத்திரிகை கைக்கு வந்த உடனேயே, அவன் வெட்டிவிடப் போகிறான்! அவளும் சம்மதித்தாயிற்று!

அப்புறம், புரந்தரன் ஏமாற, என்ன இருக்கிறது? ஓரளவு ஏமாறப் போவது வக்கீல்தான். அவருக்குமே, நண்பருக்குக் கொடுத்த வாக்கின்படி, பத்திரிகையைக் காப்பதுதான் முக்கியம் என்கையில், இது பெரிதாகத் தோன்றாது!

தெரிந்தே அடி வாங்கப் போவது, அவள் மட்டும்தான். ஆனால், அவளுக்கும் மானத்தோடு பிழைக்கலாம் என்பதாக, ஓர் ஆதாயம் இருக்கத்தான் செய்கிறது!

இன்றைய அவளது நிலையில், அதுவே சொர்க்க போகம் என்று தனக்குள் அவள் சொல்லிக் கொண்ட போதும், எங்கோ உறுத்தத்தான் செய்தது!

இந்தப் புரந்தரனை எந்த அளவுக்கு நம்பலாம்?

பணம் தராமல் ஏமாற்றினால்? அல்லது, தப்பாக நடக்க முயற்சித்தால் என்ன செய்வது?

தொடர்ந்த திட்டமிடலின் ஊடே நந்தினியின் முகத்தைத் தற்செயலாகப் பார்த்த சகாயம், புரந்தரனிடம் சைகை செய்து பேச்சை நிறுத்திவிட்டு, "என்னம்மா, வருங்கால மாமியார் பற்றிப் பேசியது, இப்போதே கலக்குகிறதோ? புரந்தரிடம், அவர்கள் ஜம்பம் ஒன்றும் சாயாது! இவன் ஆதரவு இருக்கும்போது, உனக்கு என்ன கவலை! என்ன திருமணம் முடியும் வரை, கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டும்! அவ்வளவே!" என்று கனிவாகக் கூறினார்.

அவரது தவறான ஊகம், மற்ற இருவருக்குமே புரிந்தது!

நந்தினி முயன்று முறுவலிக்க, புரந்தரன் வேறு வகையில் நிலைமையைச் சமாளித்தான்.

"அதெல்லாம் பயப்பட மாட்டாள், அங்கிள். இவளை எப்படித் தேற்றுவது என்று எனக்குத் தெரியும்! நீங்கள் சற்று முன்னதாகக் காருக்குப் போங்கள்! ஒரு பேச்சு சொல்லி, இவளை நான் சரிபண்ணிக் கூட்டி வருகிறேன்" என்று அவரை முன்னதாக அனுப்பினான்.

பெரியவரின் பின்னே கதவு சாத்திக் கொண்டதும், அவனை முந்திக் கொண்டு, "சாரி!" என்றாள் நந்தினி. "இனிமேல், முகபாவனையில் கவனமாக இருக்கிறேன்!" என்றாள் தணிந்த குரலில்.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். "நீயே உணர்ந்துவிட்ட பிறகு, நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? ஆனால், கவனம்! அங்கிள் பார்வைக்கு இலகுவாக இருப்பது போலத் தோன்றினாலும், படு கூர்மை! அத்தோடு கடமை உணர்வும் அதிகம்! இது நாடகம் என்று அவருக்குத் தெரிந்தாலுமே, எல்லாம் வீணாகிவிடும்! அத்தோடு, என்னைப் பற்றி எந்தச் சந்தேகமும், உனக்கு வேண்டாம்! நாளைக்கு, அங்கிள் மூலமாய், உனக்கு ஒரு பாங்க் கணக்கு தொடங்க ஏற்பாடு செய்கிறேன். உடனே, ஒரு செக்கும் கட்டி விடுவேன். திருமணத்தன்றே, அந்தக் கணக்கு இயங்கத் தொடங்கிவிடும்! மேலே என்ன படிக்க வேண்டும் என்பதை நீ உறுதியாகத் தீர்மானித்துவிட்டால், அதற்கும்

சேர்த்தே பணம் போட்டுவிடுவேன். அது பற்றி சந்தேகமோ, கவலையோ வேண்டாம்! என்று வேகமாகவும், தெளிவாகவும் சொல்லி முடித்தான்.

குன்றிப் போனாள் நந்தினி. அவள் மனதை, அப்படியே படித்துச் சொல்கிறானே! கூடவே, அவன் செய்கிறேன் என்றதை எண்ணி, அவள் மனதில் நன்றியும் நிறைந்தது!

நல்ல வேளை! புரந்தரன் கோபப்படவில்லை!

"சாரி!" என்றாள் சின்னக் குரலில் மீண்டும்.

கண நேரத்து அமைதிக்குப் பிறகு, "உன் நிலையில் யார் இருந்தாலும், பல விதமாய் மனம் அலைபாயத்தான் செய்யும்!" ஆனால், நீ அதிக நாட்கள் தொல்லைப்பட நேராது! திருமணம் முடிந்துவிட்டால், உயிலின் நிபந்தனைகள் நிறைவேறி விட்டதால், உரிமை எனக்கு என்று ஒரு பத்திரப் பதிவு பண்ணி, ஒரு சில நாட்களில் எல்லாம் முடிந்துவிடும்! அதுவரை பொறுத்துக் கொள்!" என்றான் அவன்.

உண்மையிலேயே அப்படித்தான் நடக்கும் என்று மனதார நம்பித்தான் புரந்தரன் அப்படிச் சொன்னான்!

ஆனால், நடப்பு நேர் மாறாக இருக்கப் போகிறது என்று அப்போது, அவனுக்குத் தெரியாது!

அவளுக்கும்!

## 9 நான் என்பதும் நீ என்பதும்



**வ**க்கீல் சகாயத்தின் வீட்டில் இருந்தால் கூட, நீலாவோ, சாயாவோ மோப்பம் பிடித்து விடக்கூடும் என்று, அவருடைய மகள் வீட்டில் நந்தினி தங்க ஏற்பாடாகி இருந்தது!

அவளிடம் கூட, நந்தினி யாரை மணக்கப் போகிறாள் என்று முதலில் சொல்லவில்லை. அவள் கல்யாணப் பெண் என்று இரண்டே நாட்களில், திருமணத்துக்கு ஏற்ற துணிமணி நகைகள் தயாராக வேண்டும் என்று மட்டுமே வக்கீல் சொல்ல ஏதோ ரகசியமாக நடக்கிற காதல் கல்யாணம் என்று எண்ணி, அவர் மகள் மதுவும் வேண்டிய உதவிகளை, ஆர்வத்துடனே செய்தாள்.

நல்ல உளவாளிகள், எந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்க வேண்டியிருந்தாலும், அந்த ஆளாகவே மாறி விடுவிடுவார்கள் என்பார்கள்! ஆனால், அந்த உளவாளிகள் போன்ற பயிற்சிகள் ஏதும் இல்லாமல் புதிதாக நடிக்க வந்த பஞ்சத்து ஆண்டியாக இருந்ததால், நந்தினி அவ்வப்போது சிறு சிறு தவறுகள் செய்து, மாட்டிக் கொள்ளும் நிலைக்குப் போய், எப்படியோ சமாளித்து மீண்டாள்!

முதலில் கல்யாணச் சேலை வாங்கப் போனார்கள்!



பதினைந்தாயிரம் விலையுள்ள ஒரு சேலையை எடுத்து வைத்துக் கொண்டு, "இந்தச் சேலை மிக அழகாக இருக்கிறது! ஆனால், இவ்வளவு விலை குறைவாக ஏன் வாங்கினாய் என்று அப்பா திட்டுவாரோ என்று பயமாக இருக்கிறது! அதனால், இன்னும் அதிக விலை உள்ளதாகப் பார்ப்போம்!" என்று மது கூறவும், நந்தினிக்கு மயக்கம் போடாத குறைதான்!

"இல்லையில்லை! இவ்வளவு அதிக விலையில் வேண்டாம்! ஒரே ஒரு நாள் கொஞ்ச நேரம் கட்டிக் கொள்வதற்கு, யாராவது, இவ்வளவு அதிகமாகச் செலவு செய்வார்களா? வேண்டாம்! விலை குறைவாகப் பார்ப்போம்!" என்று நந்தினி மறுக்கவும், "ஒரே ஒரு நாளா?" என்று அவளை விசித்திரமாகப் பார்த்துவிட்டு, செல்ஃபோனில் தந்தையுடன் பேசினாள் மற்றவள்.

பேசி முடித்துவிட்டு, செல்லை அவள் நீட்டவும், தயக்கத்துடன் வாங்கிப் பேசினாள், நந்தினி.

"என்னம்மா, என்ன பிரச்சினை?" என்று அவளிடம் விசாரித்தார், சகாயம். "பிரச்சினையை நீதான் சொல்ல வேண்டும்! ஏனெனில், பெரிய கடலில் மூழ்கி முத்தெடுப்பது போல, என் மகள் பேச்சில் விஷயத்தைக் கண்டுபிடிப்பது, மிகவும் கஷ்டம்!" என்றார் அவர் குரலில் சிரிப்புடன்!

தானும் முறுவலித்து, நந்தினி விஷயத்தைச் சொன்னாள். "சும்மாவே நிறையச் செலவு! இதில் வேறு, இவ்வளவா என்று புரந்தரனுக்கு ஆத்திரம் வராதா, ஆங்கிள்? அதைச் சொன்னால், மது, உங்களுக்கு ஃபோன் செய்துவிட்டார்கள்! அதுவும் நல்லதுதான்! விலை குறைவாக வாங்கும்படி, நீங்களே அவர்களிடம் சொல்லுங்கள் அங்கிள்!" என்றாள் சற்றே கெஞ்சுதலாக.

சிறு அமைதியின் பின், "சும்மாவே, புரந்தருக்கு அதிகச் செலவா?" என்ன செலவு? என்று சகாயம் கேட்கவும், நந்தினி வியர்த்தாள்!

அவளுக்குப் புரந்தரன் தரப் போகிற சில லட்சங்களை, வக்கீலிடம் எப்படிச் சொல்வது?

அவசரமாக யோசித்து, "இந்த விபத்து தொடர்பாக வைத்தியத்துக்கு, அப்புறமாக அங்கே காப்பாற்றியவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும்படி... இப்படி அவருக்கு நிறையச் செலவுதானே, அங்கிள்?" என்று சமாளித்தாள் நந்தினி.

"நல்ல பெண்ணம்மா நீ! இதெல்லாம் புரந்தருக்கு ஒரு செலவே கிடையாது! அவன் அம்மா வழிச் சொத்து, அம்மாவுக்கு அப்பா கொடுத்தது என்று அவனிடம் நிறையவே இருக்கிறது! அதனால், அவனுக்குச் செலவு என்று நீ கவலைப்பட வேண்டாம்!" என்றார் பெரியவர்.

"அதில்லாவிட்டாலும், ஒரு தடவை மட்டுமே அணிவதற்கு, இவ்வளவு செலவு செய்வார்களா, அங்கிள்? நியாயமாகத் தெரியவில்லையே!"

மீண்டும் ஒரு சிறு அமைதி.

மறுபடி என்ன என்று நந்தினி சஞ்சலமுறுகையில், சகாயம் பேசினார். "அதென்னம்மா, 'ஒரு தடவை மட்டுமே அணிவது'? திருமணமாகிவிட்டால், வளைகாப்பு, சீமந்தம் என்று கல்யாணச் சேலையைப் பலமுறை கட்ட



வேண்டியிருக்குமே! அது மட்டுமின்றி, நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணங்களுக்கு அதைக் கட்டுவதும் சௌபாக்கியத்துக்குச் சிறப்பு என்றுகூடக் கேள்விப் பட்டிருக்கிறேன்! அப்படியிருக்க, நீ ஏனம்மா, இப்படிச் சொன்னாய்? என் மகள் குழம்பிப் போனதில் வியப்பே இல்லை!"

நந்தினி மறுபடியும் வியர்த்தாள்!

பூரணி அத்தைகூட, அந்த மாதிரி ஏதோ சொல்லி, அவளது சிக்குப் பிடித்த வாசனை வந்துவிட்ட திருமணச் சேலையையே அவ்வப்போது கட்டியது, காலம் கடந்து, அவளுக்கு நினைவு வந்தது!

சகாயத்துக்கு என்ன பதில் சொல்வது என்று, அவசரமாக யோசித்து, அவள் பேசினாள்.

"ந்ந்நீ... நீங்கள் சொன்னது, நிஜமா, அங்கிள்? சே! என் தலைவிதியைப் பாருங்கள்! இந்த மாதிரி நல்ல விஷயங்களைப் பற்றி, எனக்குக் கற்றுத்தர, யார் இருக்கிறார்கள்? ஒரு வேளை என் மாமா... ஊகும்., அவருக்கே இது போன்ற சம்பிரதாயங்கள் எல்லாம் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன், அங்கிள்! அவருக்குத் தெரிந்ததெல்லாம், பூந்தோட்டமும் வயிற்றுப்பாடும்தான்!" என்று பெருமூச்சு விட்டாள், அவள்!

அதற்கு மேல், சம்பிரதாயம் பற்றி, சகாயம் அதிகம் பேசவில்லை!

"பழசைப் போட்டு நினைத்து மனதை வருத்திக் கொள்ளாதே நந்தினி! அதெல்லாம் முடிந்துவிட்ட, கடந்த காலம்! நீ பார்க்க வேண்டியது, வளமான வருங்காலத்தை மட்டும்தான்! செலவைப் பாராதே! அந்தத் தலைவிதியெல்லாம், இனி உனக்கு இல்லை! கல்யாணத்தின்போது அணிந்துகொள்ள ஒரு செட் நகைகளும் வாங்கும்படி, மதுவிடம் சொல்லியிருக்கிறேன்! உனக்குப் பொருத்தமாக, அழகாக இருக்கிறதா என்று மட்டும் பார்! பணம் காசு பற்றி எதுவும் யோசிக்க வேண்டாம்! மீண்டும் சொல்கிறேன் என்று எண்ணாதே! வேண்டாத காதுகளில் விழுந்தால், வீணே தொல்லையாகிவிடும் என்பதால், புரந்தரன் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாமல், போன வேலையை மட்டுமாய் முடித்துக் கொண்டு, நேராக வீடு வந்து சேருங்கள்!" என்று கூறிப் பேச்சை முடித்தார் பெரியவர்!

தன் பேச்சை வக்கீல் நம்பிவிட்டார் என்பதில், நந்தினிக்கு மிகுந்த நிம்மதி! நம்பாது போயிருந்தால், அவளது கதி என்ன ஆகும்?

யானை, தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வது போல, கிடைக்க இருக்கும் எல்லாவற்றையும் இழந்து, அன்னக்கா வீட்டில் இருந்து கிளம்பிய அதே நிலைக்குத் தள்ளப் பட்டிருப்பாள்!

கை நழுவிப் போயிருக்குமோ என்று தோன்றவும், புரந்தரன் தருவதாகச் சொன்னது, ரொம்பப் பெரிதாகத் தோன்றியது, நந்தினிக்கு. அதிலிருந்த குறைகள், இப்போது குறைகளாகவே தோன்றவில்லை!

இனி எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்! வார்த்தை, செயல் எல்லாவற்றிலுமே!



எண்ணியது போலவே, கவனமாகவும் இருந்தாள்.

ஆனால், என்ன பிரச்சினை ஆயிற்று என்றால், இந்தக் கவனத்தினால், அவளது பேச்சு ரொம்பவும் குறைந்து போனது!

அனாவசியமாக நந்தினியிடம் பேச்சுக் கொடுக்க வேண்டாம் என்று, மகளும் சகாயம் எச்சரிக்கவே, அவளுமே, நந்தினியிடம் எதையும் தானாகப் பேசத் தயங்கி ஒதுங்கிப் போனாள்.

ஆடை, அணிமணிகளை ஒரே நாளில் வாங்கி முடித்து விட்டதால், செய்வதற்கு ஒன்றுமில்லாமல், நந்தினிக்குப் போரடித்தது!

படிப்பதற்குப் பத்திரிகைகளைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு, மது சென்றுவிட, சற்று நேரம் சும்மா எதையாவது படித்துக் கொண்டிருந்தவளுக்குத் திடீரென ஓர் ஐடியா தோன்றியது!

எந்தப் படிப்பைத் தேர்ந்தெடுத்தாலும், அதற்குரிய பணத்தைக் கட்டி விடுவதாகப் புரந்தரன் சொன்னானே! வேண்டிய படிப்பைத் தேர்ந்தெடுக்கிற வேலை ஒன்று இருக்கிறதுதானே?

அதுவும், இந்த இரு தினங்களுக்குள் முடிக்கப் படவேண்டிய முயற்சியைத் தொடங்கவே இல்லாதிருப்பதா?

இப்படிச் சும்மா இருக்கிற நேரத்தில், அதைச் செய்யலாமே!

'லாமே' என்ன? செய்தாக வேண்டும்!

ஒவ்வொரு பத்திரிகையாகப் படித்துப் பார்த்து, வேண்டியதைக் குறித்து வைத்தால், புரந்தரனிடமே, எதைச் செய்வது என்று கேட்டுக் கொள்வது!

எண்ணியதைச் செயலாக்கத் தொடங்கினாள் நந்தினி.

கல்லூரி முதலாம் ஆண்டில், மற்ற மாணவிகளுடன் கலந்து பேசியது உதவியாக இருக்க, வரிசையாகச் சிலதைக் குறித்து வைத்தாள்.

அவற்றுக்கு ஆகக் கூடிய செலவுக் கணக்கைப் பார்த்து, அவற்றுள், சிலதை அடித்தாள். என்னதான், புரந்தரன் பணம் தருகிறேன் என்று சொன்னாலும், அதற்காக ஒரேயடியாக அதிகப் பணம் செலவாகும் கல்விப் பயிற்சிகளைத் தேர்ந்தெடுக்க, நந்தினிக்கு மனம் வரவில்லை.

மானத்தோடு பிழைப்பதே முக்கியமாக, வெறும் சாதாரணக் கூட்டிப் பெருக்கும் வேலைக்குக் கூடத் தயாராகவே, அவள் இங்கே வந்தாள். கடவுள் அருளால், சற்று அதிக வருமானத்துக்குரிய வேலைக்கு வாய்ப்பு வந்திருக்கிறது! அதற்கு மேல், பேராசைப் படக்கூடாது என்று எண்ணினாள் அவள்!

பேராசை பெரு நஷ்டமாகி விடுமோ என்ற பயம்!

மாலையில் மகள் வீட்டுக்கு வருகிற மாதிரி வந்து, நந்தினியைப் பார்த்துப் பேச வந்தார் வக்கீல் சகாயம்!

முன்தினம் வாங்கியவற்றைப் பார்வையிட்டு, நன்றாக இருப்பதாகச் சொன்னார்.

அன்று என்ன செய்தாள்., எப்படிப் பொழுது போயிற்று என்று விசாரித்தார்.

மூளையில் எச்சரிக்கை மணி அடிக்க, "சும்மா டீவி பார்த்தேன். கொஞ்சம் பத்திரிகை படித்தேன்." என்றாள் அவள்.

"நந்தினி, என்னைப் போல மக்கு அல்ல, அப்பா! சுடோக்கு, குறுக்கெழுத்து எல்லாம் செய்வாள் போல! எழுதி, எழுதிப் பார்த்து, அதில்தான் வெகு நேரம் மண்டையை உடைத்துக் கொண்டிருந்தாள்! கிட்டத்தட்ட நாள் முழுவதும் பத்திரிகைதான்!" என்றாள் தந்தைக்குக் காபியுடன் வந்த மது.

"ஆஆமாம். பொழுது போக வேண்டும் அல்லவா?" என்று பத்திரிகைகளை அவசரமாக அடுக்கி வைத்தாள் நந்தினி.

காலை நீட்டி, சோஃபாவில் சாய்ந்து கொண்டு, "இன்றைக்கு இரவுக்கு என்னம்மா? இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று எண்ணம்!" என்றார் சகாயம்.

"மழை கொட்டப் போகிறது!" என்று மகிழ்ச்சியோடு சிரித்தாள், மது. "என்ன வேண்டும், அப்பா? இட்டிலியா, சப்பாத்தியா?"

"சப்பாத்தியும் காய்கறி... இருக்கிற காய் போட்டு, ஒரு குருமாவும் வை ஏதேனும் காய்... வெங்காயம் நறுக்குவதற்கு வேண்டுமானால், உதவிக்கு நந்தினியை அழைத்துப் போயேன்! நான் கொஞ்ச நேரம் இப்படியே கண்ணை மூடிக் கொண்டு ஓய்வெடுக்கிறேன்! இன்று கோர்ட்டில், ரொம்ப நேரமாக நிற்கும்படி, ஆகிவிட்டது! போம்மா! நந்தினி, நீயும் கூடப் போய், மதுவிடம் சமையல் படித்துக் கொள். அவள் செய்யும் குருமா பிரமாதமாக இருக்கும்..." என்று இழுத்தவர் ஒரு கொட்டாவியோடு கண்களை மூடிக் கொண்டார் அவர்.

"இதோ!" என்று இரு பெண்களும் உள்ளே சென்றனர்.

சற்று நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தார் பெரியவர்

சமையலறையில், இரு பெண்களின் குரலும் மெல்லிசையாகக் கேட்டது!

கண் விழித்துப் பார்த்த சகாயம், சோம்பல் முறித்துவிட்டு, நந்தினி அடுக்கி வைத்த பத்திரிகைகளைக் கீழிருந்து மேலாக எடுத்துப் பார்க்கலானார்!

சாப்பிட்டுவிட்டுக் கிளம்புவதற்கும், அவர் அவசரம் காட்டவில்லை!

வெளியூர் சென்றிருந்த மருமகன் எப்போது திரும்புவார், என்ன என்று அதைப் பற்றி விசாரித்துப் பேசிக் கொண்டிருந்தார்!

கடைசியாக, "சரிம்மா. எப்படியும், மாப்பிள்ளை வர இரண்டு நாள் ஆகும் என்றாயில்லையா? இருக்கட்டும்! நாளைக்கும், இஷ்டம் போலச் சுற்றுங்கள் அவள் வீட்டில் சில பிரச்சினைகளால், நந்தினியிடம் இப்போது நல்ல துணிமணிகள் இல்லை! சல்வாரா, சுடிதாரா... என்னவோ சொல்வாயே, அதில் கொஞ்சம் நல்லதாக ஓர் ஆறு செட் வாங்குங்கள். சேலையும், ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் ரகத்தில், ஏழெட்டு செட்டாக வாங்கி விடுங்கள். பணம் அதிகம் ஆனாலும் பரவாயில்லை. அவசரம் என்று சொல்லி, உடனடியாகத் தைத்துத் தருமாறு ஏற்பாடு செய். அவள் வாழப் போகிற வீட்டில் மற்ற எல்லோரும் மதிக்கும்படி இருக்க வேண்டும்! ஏதோ பார்லர் என்பாயே, அங்கே



கூட்டிப் போய் என்ன வேண்டுமோ, செய்யச் சொல்லு! கல்யாணப் பெண்ணாக நந்தினியைப் பார்க்கிறவர்கள் பிரமித்துப் போக வேண்டும்! நீ சற்றுப் பொறும்மா, முதலில் நான் சொல்லி முடித்து விடுகிறேன்! திருமணத்தின் போது அணிவதற்காக, உனக்கும் பட்டிலே ஒன்று வாங்கிக் கொள், மது! விலையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். புரந்தரன் ஒன்றும் சொல்ல மாட்டான்! அப்புறம்... அவ்வளவுதான்! இப்போது சொல்லம்மா, உனக்கு வேறு என்ன வேண்டும்?" என்று, அவரது பேச்சில் பலமுறை குறுக்கிட முயன்ற நந்தினியிடம் கேட்டார் வக்கீல் சகாயம்.

"எனக்கு ஒன்றும்..." என்று எரிச்சலோடு தொடங்கிவிட்டுச் சட்டென நிறுத்தினாள் நந்தினி.

அவள் தொடங்கும்போதே, "புரந்தர் அண்ணனா?! அவருக்கும் நந்தினிக்குமா, திருமணம்? எவ்வளவு சந்தோஷமான விஷயம்! அப்பாடி! இனிமேல் உங்களுக்கு நிம்மதியாக இருக்குமில்லையாப்பா?" என்று மகிழ்ச்சியோடு கூவினாள் மது!

"ஷ்ஷ்! இப்படிக் கத்துவாய் என்றுதான், புரந்தர் பெயரைச் சொல்லாமல் வைத்திருந்தேன்! வெளியே எங்கேயும், அவன் பெயரே வரக் கூடாது! நினைவிருக்கட்டும்! என்னம்மா நந்தினி, நீ என்னவோ சொல்லத் தொடங்கினாயே!" என்று அவள் புறம் திரும்பினார் பெரியவர்.

அதற்குள், நந்தினியும் வேகமாக யோசித்திருந்தாள்!

ஒன்றுமே வேண்டாம் என்றால், இந்த வக்கீலுக்குச் சந்தேகம் வந்துவிடுமோ?

ஆனால், இவர் சொல்லுகிற மாதிரி, பல்லாயிரக் கணக்கில் வாங்கிக் குவித்தால், புரந்தரன் அவளைத் தப்பாக நினைக்க மாட்டானா?

சும்மாவே, அவனுக்குப் பெண்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாது! அவளைப் பற்றி மோசமாக நினைக்காதது பற்றி அவனுக்கே ஆச்சரியம்!

இப்போது இந்த வக்கீலின் பேச்சைப் கேட்டால், இந்த நிலையிலும், இயன்றவரை கறக்க முயற்சிக்கிறாள் என்று, அவளைப் பற்றியும் மோசமாகத்தானே எண்ணுவான்?

அது தாங்க மாட்டாத துன்பமாக இருந்தது!

வக்கீலிடம் மறுப்பதும் ஆபத்து!

எனவே, "எதற்கும், புரந்தரன் சா... புரந்தரனிடம் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு வாங்கலாமே!" என்று சமாளித்தாள் அவள்.

ஆனால், "இப்போதே பேசேன்!" என்று செல்ஃபோனில் நம்பர் போட்டுக் கொடுத்தார் சகாயம்!

ரொம்பவும் அவசியமான சகாயம்தான் என்று உள்ளூர எரிச்சல்பட்ட போதும், உதட்டால் முறுவலித்தபடி, செல்லை வாங்கினாள் நந்தினி.

இப்போது, புரந்தரனிடம் என்ன கேட்பது? இவர் முன், தன் நிலையை எப்படி வெளிப்படுத்துவது?



நல்லவேளையாக, மது அவளது உதவிக்கு வந்தாள்!

"என்னப்பா நீங்கள்? ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர்கள்! உங்கள் முன்னிலையில், அவள் புரந்தர் அண்ணனோடு எப்படிப் பேசுவாள்? வாருங்கள், நாம், அந்த அறையில் போய் இருப்போம்!" என்று அவரைப் பிடித்து இழுத்துக் கொண்டு, அங்கிருந்து விலகிப் போனாள், அவள்.

அப்பாடி என்று இருந்தது, நந்தினிக்கு!

அவ்வளவு நேரத்துக்குள்ளாக, "ஹலோ, ஹலோ அங்கிள், என்ன? என்ன விஷயம்?" என்று புரந்தரன் பரபரத்துவிட்டான்.

மதுவும், சகாயமும் அடுத்த அறைக்குள் சென்று, கதவு சாத்தப்படுவதை ஓரக்கண்ணால் கவனித்தபடி, "அங்கிள் இல்லை. நான்தான், நந்தினி!" என்றாள்.

"நந்தினியா? ஏன்? என்ன விஷயம்? அங்கிள் செல்ஃபோன் உன்னிடம் எப்படி வந்தது? அவர், அங்கேதான் இருக்கிறாரா? எதுவும் பிரச்சினையா?" என்று வேகமாகக் கேட்டான் அவன்.

அவனது கவலை புரிய, "இப்போதைக்குப் பிரச்சினை என்று எதுவும் இல்லை! அவரும் இங்கே இல்லை! ஆனால், சகாயம் சார், வீண் செலவை இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்! அவர் சொல்வதைப் பார்த்தால், நாலைந்து பத்தாயிரங்கள் ஆகக் கூடும் என்று தெரிகிறது! நானாக ஒரேடியாக மறுக்க முடியாத நிலை என்பதால், உங்களிடம் கலந்து ஆலோசித்த பிறகு வாங்கலாம் என்றேன். செல்லை எடுத்து உங்கள் எண்ணைப் போட்டுத் தந்துவிட்டார்!" என்றவள், என்ன செலவு என்பதைப் பற்றி விளக்கினாள்.

பொறுமையாகக் கேட்டுவிட்டு, "அவர் சொன்னால் வாங்கிக் கொள்ளுவதுதானே? மதுவின் தேர்வு நன்றாக இருக்கும், உனக்கும் நல்லதாக நாலு உடை கிடைக்கும்! இதில், என்னிடம் என்ன கேள்வி?" என்று அவன் கேட்ட விதம், நந்தினிக்கு வருத்தம் அளித்தது!

அவன் என்ன, அந்த நல்லதான நாலு உடைக்காகவா, ஏங்கிக் கொண்டிருக்கிறாள்?

கேவலப்படாமல் பிழைப்பது ஒன்றுதானே, அவளது குறிக்கோள்?

நல்ல உடைகளை அணியும்போது நன்றாகத்தான் இருக்கும்! அதற்காக, அவளுக்கு உரிமையற்ற பொருளை எடுத்துக் கொள்வாளா?

அப்படிப் புரந்தரன் எண்ணிவிடக் கூடாது என்றுதான் அவள் மறுத்ததே! அதையே, அவன் அவ்வளவு சாதாரணமாக, இயல்பு போலச் சொன்னது, அவளை வேதனைப் படுத்தியது!

மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "நல்லதாக நாறூறே கிடைத்தாலும், எனக்கு உரிமை இல்லாததன் மேல், எனக்கு ஆசை வராது! எனக்கு, நீங்கள் தருவதாகச் சொன்னதற்கு மேல் எதுவும் எனக்குத் தேவையும் இல்லை! எனவே, அப்போதைக்கு, அங்கிளின் முயற்சியைத் தவிர்ப்பதற்காகத்தான், உங்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று சொன்னேன்!" என்றாள் அவள் மரத்த



குரலில்!

"ஓ! தப்பாக எடுத்துக் கொண்டாயா?" என்றான் புரந்தரன்.

"தப்பென்ன? உங்கள் அர்த்தம் அதுதானே?" என்றாள் அவள் பதிலாக.

"அப்படியில்லை, நந்தினி!" என்று மறுத்தான் அவன். "இப்போது, பத்திரிகையைக் காப்பாற்றுவதுதான், நமக்கு முக்கியம்! அதற்காகவே, இது உண்மைத் திருமணம் என்று மற்றவர்களை... அங்கிள் உட்பட மற்றவர்கள் அனைவரையும் நம்ப வைக்க, நாம் இவ்வளவு பாடுபடுகிறோம்! கோடிக்கணக்கில் பெறுமானம் உள்ள தொழில்! அதிலும், மற்றவர்களுக்குப் பயன்படுகிற, மதிப்புக்குரிய நல்ல தொழில். அதைக் காப்பதற்காக, ஒரு சில லட்சங்களே செலவானாலும்தான், என்ன? இந்தத் தொழில் அழிந்து விடாமல் காப்பதுதான் முக்கியம்! அதனோடு ஒப்பிடுகையில், நம்முடைய சில்லறை சுய கௌரவங்கள் எல்லாம், ஒன்றுமே இல்லை! ஒரு நல்ல காரியம் செய்யும்போது, பக்க விளைவாகச் சில லாபங்கள் கிடைத்தால், அதை வேண்டாம் என்பானேன்?"

"ஆனால், நாம் பேசிய அளவு தந்தாலே எனக்குப் போதும்! அதற்கு மேல், வாங்கிக் கொள்ள எனக்குப் பிடிக்காது!"

"யோசி நந்தினி! உன் பின்புலம் அங்கிளுக்குத் தெரியும்! இந்த நிலையில், உனக்கு மிகவும் தேவைப்படுகிற சில துணிமணிகளை, நான் செலவழிப்பது இயல்புதானே? அதை நீ வாங்கிக் கொள்ள மறுத்தால், அவருக்கு சந்தேகம் வராதா? மனம் ஒன்றுபட்ட உண்மைத் திருமணம் என்றால், மறுப்பாளா என்று தோன்றாதா? அப்புறம், அவர் குடைய, சித்தி குடைய... திருமணம் நடக்க விடுவார்களா? அப்புறம் பத்திரிகை என்ன ஆகும்? தயவு பண்ணி, அங்கிள் என்ன சொன்னாலும், ஒத்துக் கொண்டு விடு! அப்புறமாக, நாம் பிரிகிற காலத்தில், உனக்கு வேண்டாம் என்றால், ஏதாவது இல்லத்துக்குக் கொடுத்து விடலாம்! இப்போதைக்கு, உன் கொள்கை, கோட்பாடுகளைக் கொஞ்சம் ஒதுக்கியே வைத்துக் கொள் ப்ளீஸ்...!" என்று புரந்தரன் வேண்டிக் கொண்டான்!

இதற்கு மேல் என்ன சொல்வது?

மறுநாளும் கடை கண்ணிகளில், மதுவும் அவளுமாகச் சுற்றினார்கள்.

புரந்தரன் அவளைத் தவறாக எண்ணப் போவதில்லை என்பதாலே என்னவோ, கடை கடையாக அலைந்து திரிந்து, வாங்குவது, நந்தினிக்கும் சந்தோஷமாகவே இருந்தது! ஆனால், இந்த அதிகங்களை வைத்துக் கொள்ளக் கூடாது என்பதிலும், அவள் உறுதியாகவே இருந்தாள்! இதில் பிடித்ததை எல்லாம், அப்புறமாக, அவள் வேலை செய்து சம்பாதிக்கும்போது வாங்கி, சந்தோஷமாக அணிய வேண்டும்!

ஆனால், மறுநாள் காலையிலேயே வயிற்றுக்குள் ஏதோ புளியைக் கரைக்கிற உணர்ச்சி என்பார்களே, அதுபோல ஒரு சங்கடமான உணர்ச்சி!

பொய்யான திருமணமே என்றாலும், அவளது வாழ்க்கையையும்

பலவிதங்களில் மாற்றி அமைக்கப் போவது ஆயிற்றே! நல்லதும், கெட்டதுமான எத்தனையோ விதங்களில்!

எப்படியும் முன்னே விட மோசமாகப் போவது இல்லை என்பதோடு, மிஞ்சி மிஞ்சி, ஐந்தாறு நாட்களில் எல்லாம் முடிந்து, அவள் தன் வழியைப் பார்த்துப் போய்விடுவாள்!

அதுவரையிலும், பழக்கமற்ற, பிடிக்காத எது நடந்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டபடியே நந்தினி திருமணம் தொடர்பான சகலச் சடங்குகளிலும் ஈடுபட்டாள்.

திருமணம் நல்லபடியாகத்தான் நடந்தது!

ஆனால், 'நாமொன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைத்தது' என்பது போல, திருமணத்துக்குப் பிறகு நடந்த கதைதான், நந்தினியும் புரந்தரனும் எண்ணியதற்கு நேர் மாறுதலாக அமைந்தது!

## 10 நான் என்பதும் நீ என்பதும்



மாலையும் கழுத்துமாகக் காரை விட்டு இறங்கிய தம்பதியரைப் பார்த்து, நீலாம்பிகை, அவள்தான் புரந்தரனுடைய சிற்றன்னை மகிழ்ச்சியோடு மஞ்சள் நீர் கரைத்து ஊற்றுவாள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லைதான்!

ஆனால், புரந்தரனின் வீட்டிலிருந்த சூழ்நிலை, அவன், வக்கீல் சகாயம் யாருமே எதிர்பாராததாக இருந்தது!

முதலாவதாக, அடையாறில் மூன்று மனையளவு நிலத்தில் இருந்த புரந்தரனின் வீட்டில், வழக்கமாக இருப்பவர்களுக்கும் மேலாக, அன்னியர்களின் நடமாட்டம் அதிகமாக இருந்தது!

வீட்டுப் பணியாளர்கள், அங்கும் இங்குமாகக் கண் பார்வைக்குச் சற்று மறைவாக நின்று, பரபரப்பாக, ஆனால் உரிமையோடு அலைந்து திரிந்த புதியவர்களைக் கவலையும் பயமுமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்!

நீண்ட அளவு நாடாவை வைத்துச் சிலர், தரையில் அளந்து கொண்டிருக்க, கையில் இருந்த குச்சியால் அங்குமிங்கும் காட்டி, "இது அவ்வளவு இடத்திலும் உள்ள செடி, கொடிகளை, முதலில் வெட்டி எறிய வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டிருந்தார், தொப்பியும், தொப்பையுமாகச் சுற்றியலைந்த ஒருவர்!

அவர் காட்டிய இடத்தைப் பார்த்த நந்தினிக்கே திக்கென்றது!

அவ்வளவு அழகான பூஞ்செடிகளும், மலர்க் கொடிகளுமாக இருந்தது, அந்தத் தோட்டம்! பூந்தோட்டங்களை வாழ்வின் ஆதாரமாகவே எண்ணி வளர்ந்தவள் ஆயிற்றே!

மெல்ல ஓரக் கண்ணால் பார்த்தபோது, புரந்தரனின் முகம், வெகுவாக



இறுகியிருப்பது, தெரிந்தது!

இவன் வீட்டில், இவனது அனுமதியின்றியே தாவரங்களை வெட்டுவதா? அதுவும், இவ்வளவு அழகானவற்றை!

"சார், வீட்டை உடைக்கிறபோது, கதவு, ஜன்னல்களிலேயே, நமக்குப் பெரும் தொகை கிடைக்கும், சார்! எல்லாம், அசல் வைரம் பாய்ந்த தேக்கு, சார்!" என்று தொப்பையிடம் ஒருவர் சொல்ல, "இல்லய்யா! அதெல்லாம் மடிப்பாக்கத்தில், என் புதுப் பெண்டாட்டிக்குக் கட்டுகிற புது வீட்டுக்கு என்று அப்போதே நினைத்துவிட்டேன். சிறு சேதம்கூட இல்லாமல், கவனமாக உடைக்க வேண்டும்!" என்றார் தொப்பை!

நந்தினிக்கே நெஞ்சு கொதித்தது!

புரந்தரன் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறான்?

அவனுக்கும் பொறுக்கவில்லை என்பது, பின் சீட்டிலிருந்து, கையை நீட்டி அவன் காரின் ஹாரனை அழுத்திய வேகத்தில் தெரிந்தது!

திடுமென அருகில் கேட்ட ஹார்ன் ஒலியில் திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்தபோதும், உடனேயே ஆத்திரத்துடன், "ஏய், யாரய்யா நீ? யாரிடம் இப்படி ஹாரனைக் அடிக்கிறாய்?" என்று ஆத்திரத்துடன் கத்தினான் தொப்பை!

அதற்குள், "போ!" என்ற புரந்தரனின் ஒரு வார்த்தையில், கார் சீறிப் பாய்ந்தது!

போர்டிகோவில் காரை நிறுத்திய வேகத்தில், இறங்கி ஓடிவந்து, கார்க் கதவைத் திறந்துவிட்டான் காரோட்டி!

வாயிலின் அகலப் படிகளின் மேல் வராண்டாவில் நின்று, வெளிப்புறப் பரபரப்பைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்த நீலாம்பிகை, சீறி வந்த காரை அலட்சியமாகப் பார்த்தாள்.

"அட, பெரிதாகக் கோபம் வந்திட்டதாக்கும்! இந்தப் பப்பு, இனி வேகாது! வாயைத் திறக்கவே படாது! சும்மா வாலைச் சுருட்டிக் கொண்டு..." என்று அவள் அலட்சியமாகச் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, மாலையும் கழுத்துமாகப் புரந்தரன் இறங்கி நிற்கவும் திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தினாள்.

அடுத்து, அவன் நீட்டிய கையைப் பற்றி இறங்கிய நந்தினியைக் கண்டதும், வாய்ப்பூட்டு மறைந்து வீறிட்டாள். "ஐயோ பாவி! இப்படிக் கல்யாணமே பண்ணிக் கொண்டு வந்து நிற்கிறியே, பாவி! ஒரு வார்த்தை சொல்லாமல், கொள்ளாமல் எப்படி... ஐயோ, ஐயோ, உன்னை... உன்னை என்ன செய்தால் தகும்..." என்று, மேலும் கத்தினாள்!

மாமியார் ஏன் கத்துகிறாள் என்று எட்டிப் பார்த்த சாயாவும் பிரமித்து நின்றாள்.

"இதோ பாருங்கம்மா, அடுக்கு வீடு கட்டுவதிலே நான் எவ்வளவு பெரிய ஆள் என்று, இவர் கிட்டே சொல்லி வையுங்கள்! என் கிட்டே மரியாதையாக நடக்க வேணும் என்றும்!" என்று தொப்பையும் வந்து நின்று ஆத்திரத்துடன் கத்தினார்!



"மரியாதைதானே? தாராளமாக! உங்கள் ஆட்களைக் கூட்டிக் கொண்டு, முதலில் இடத்தைக் காலி செய்யுங்கள்!" என்ற புரந்தரன், உள்ளே எட்டிப் பார்த்து, "என்ன அன்னம்மா? நானும் என் மனைவியும் வந்து எவ்வளவு நேரம் ஆயிற்று! ஓடிப்போய் ஆ ஆ, அதென்ன ஆலம், அதைக் கரைத்துக் கொண்டு வர வேண்டும் என்று, உங்களுக்குக் கூடவா, தெரியாது? இந்த வீட்டில் உள்ள மற்றவர்களுக்குத்தான், அதிர்ச்சியில் இருக்கிற கொஞ்சம் மூளையும் மரத்துப் போய்விட்டது! எப்போதும் புத்தியோடு செயல்படும் உங்களுக்கு என்ன வந்தது?" என்று ஓர் அதட்டல் போட்டான்!

அவ்வளவுதான்!

எல்லோருக்கும், முக்கியமான வேலையாட்களுக்கு உயிர் வந்தது!

"இதோ தம்பி!" என்ற அன்னம்மா, அருகில் நின்ற மற்றவர்களைப் பார்த்து, "என்ன செல்லி, தங்கம் சீக்கிரமாக ஓடிப் போய், ஒருத்தி தாம்பாளத் தட்டை எடுத்துக் கழுவு. அடுத்தவள் ஒரு தம்ளர் தண்ணி, மஞ்சள் தூள், சுண்ணாம்பு எல்லாம் எடு! ஓடு, ஓடு!" என்று விரட்டியபடி, தானும் வேகமாக வீட்டின் உட்புறம் சென்றாள்.

"சொன்னேனில்லையா, எங்கள் சமையல்கார அன்னம்மா! ரொம்ப வருஷங்களாக எங்களோடு இருப்பவர். புது தினுசு சமையல் தெரியாது! ஆனால், நம் பக்கத்துச் சமையலைச் சுவையோடு செய்வார்கள்! ஆனால், அதை ரசித்துச் சாப்பிடக் கூட, இங்கிருக்கும் பல பிறவிகளுக்குத் தெரியாது!" என்று, நந்தினியிடம் சொன்னான் புரந்தரன்!

சிற்றன்னையிடம் வேண்டும் என்றே உதாசீனம் காட்டுகிறான். ஏன்? சும்மா நல்லபடியாகவே நடந்து கொள்ளலாமே என்று தோன்றியது நந்தினிக்கு!

ஆனால், தொண்டை வரை வந்த வார்த்தைகள், அங்கேயே நின்றன.

இது அவன் வீடு! அவள் ஒரு குறிப்பிட்ட காலம்வரை, ஊதியத்துக்கு மனைவியாக நடிக்க வந்தவள். அவனுக்கு எதையும் எடுத்துச் சொல்ல அவளுக்கு உரிமை கிடையாது!

இதை, அவன் அவளுக்கு நினைவுபடுத்தும்படி நடக்கக் கூடாது!

எனவே, லேசாகப் புன்னகை செய்துவிட்டு, நந்தினி பேசாது நின்றாள்.

ஆனால் அதிலேயே கொதித்து, "என்னடி இளிப்பு? புளியங்கொம்பைப் பிடித்து விட்டோம் என்று திமிரா? அப்படி லேசில் விட்டுவிடுவேன் என்றா நினைக்கிறாய்? கிடையவே கிடையாது! அந்தப் பயலுக்குப் பெண்கள் என்றாலே பிடிக்காது! உன்னை மட்டும் எப்படிக் கட்டிக்குவான்? இருக்கவே இருக்காது! நான் நம்ப மாட்டேன்! சும்மா ரெண்டு மாலையை வாங்கிக் கழுத்திலே போட்டுக் கொண்டு வந்தால், கல்யாணம் என்று ஒத்துக் கொள்ள முடியுமா..." என்று வாயில் வந்தவாறு, அலறினாள் நீலாம்பிகை.

அவள் கத்திக் கொண்டிருக்கையிலேயே அன்னம்மாவின் மேற்பார்வையில், வீட்டுபணி செய்யும் செல்லியும் தங்கமும் புது ஜோடிக்கு ஆலத்தி எடுத்துவிட,



புரந்தரனும் அதை மெய்யாக்கும் விதத்தில், மூன்று பெண்களுக்கும் ஆளுக்கு நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு, நந்தினியைக் கையைப் பிடித்து, வீட்டினுள் கூட்டிப் போனான்!

"என்னம்மா, இப்போது எனக்கு என்ன வழி சொல்லுகிறீர்கள்? வீட்டை இடிப்பதற்கு என்றைக்கு வரட்டும் என்று சொல்லுங்கள்! அல்லது, இத்தனை பேரைக் கூட்டி வந்து வேலை செய்திருக்கிறேனே, அதற்கும், என் பொழுதை வீணடித்ததற்குமாகப் பத்தாயிரம் ரூபாய் தந்து விடுங்கள்!" என்று விரட்டினார் தொப்பைக்காரர்!

"அதெல்லாம் இந்த நிமிஷத்திலே, அப்படி அவசரமாக முடிக்க முடியாதய்யா! பார்த்தீங்களில்லை? சொல்லாமல் கொள்ளாமல் கல்யாணம் கட்டிக் கொண்டு வந்து நிற்கிறான்! அதை என்ன என்று பார்க்க வேணும்! நீங்கள் போய்விட்டு, அப்புறமாக வாருங்கள்!" என்று அந்தக் கட்டிடக்கலை நிபுணரை அனுப்ப முயன்றாள் நீலாம்பிகை!

ஆனால் அவரோ, அவளது பேச்சில் நம்பிக்கையற்று, அன்றையப் பத்தாயிரத்தையாவது வாங்கிவிடுவதில் முனைப்பாக நின்றார்.

இந்தக் கலவரத்தினூடே பெண்ணும் மாப்பிள்ளையும் உள்ளே சென்றுவிட, வக்கீல் சகாயம் சுற்றுமுற்றும் பார்த்தார்.

அவரது பார்வையில் பட்டுவிடாமல் சாயா சட்டென மறைந்து கொள்ள, சகாயம் வேகமாக உள்ளே சென்றார்!

ஹால் சோஃபாவில் உட்காராப் போன அவர்களை, அவசரமாகப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றார்.

கதவைச் சாத்தியதோடு மட்டுமின்றி, கதவுக்கு எதிர்ப்புறமாக முடிந்த அளவுக்கு அவர்களை இழுத்துச் சென்று, "என்னப்பா புரந்தரா, செய்வதெல்லாம் செய்துவிட்டு, வாய்ப் பேச்சால் எல்லாவற்றையும் கெடுத்துவிடுவாய் போல இருக்கிறதே! அந்தம்மாவை ஏன் சீண்டி விடுகிறாய்? சற்றுப் பொறுமையாக இருப்பதற்கென்ன?" என்று அதட்டிப் பேசினார் அவர்!

"பேசினால் என்ன? எவ்வளவு பெரிய சதிகாரி அவள் என்று உங்களுக்கு மறந்துவிட்டதா? பார்த்தாலே, எனக்குக் கொதிக்கிறது!" என்றான் புரந்தரன், ஆத்திரக் குரலில்.

"அந்தம்மா என்ன செய்தாள் என்பதிலேயே, உன் மனது இருக்கிறது! ஆனால், அவள் என்ன செய்யக் கூடும் என்று என் மனது கலங்குகிறது! முக்கால் கிணறு..." என்றவரைக் குறுக்கிட்டு, "அப்படி என்ன செய்துவிடுவாளாம்?" என்று, அப்போதும் அலட்சியமாகவே கேட்டான் இளைஞன்.

"பெரிதாக ஒன்றும் இல்லையப்பா! பத்திரிகையும் வீடும், உன் கைக்கு வராமல் தடுக்க முடியும்! அவ்வளவுதான்!" சிறு ஏளனம் கலந்த குரலில் கூறினார் சகாயம்!

"வாட்?!" என்று அதிர்ந்தான் புரந்தரன்!

நந்தினியும்தான்!

இந்தப் பாடு பட்டுத் திருமணமே செய்து கொண்டு வந்த பிறகு, இது என்ன இப்படியொரு பூதம் கிளம்புகிறது?

அதற்குள் சமாளித்து, "சும்மா என்னை மிரட்டுகிறீர்களா, அங்கிள்? அப்பா எழுதிய உயிலின் விதிப்படி, ஓர் ஆண்டு முடிவதற்குள்ளாகத் திருமணம் செய்தாயிற்று! அப்புறம் யார், என்ன செய்ய முடியும்?" என்று கேட்டான் புரந்தரன்.

"சொல்லுகிறேன், சொல்லுகிறேன்! நன்றாகக் கேட்டுக் கொள்! வெறுமனே தாலியைக் கட்டுவது திருமணமில்லை, புரந்தரா! இந்தத் திருமணம் என்பதே ஒரு பொய்யான செயல்., உயிலின் நிபந்தனையை நிறைவேற்றிவிட்டது போலக் காட்டி, சுதர்சனத்தின் சொத்தை ஏமாற்றி அடைவதற்காக நடிக்கப்படும் நாடகம்., அதனால் சொத்துக்களில் எதையும் உன்னிடம் ஒப்படைக்கக் கூடாது என்று அந்தம்மாள் ஒரு மனுக் கொடுத்தார்கள் என்றால், அப்புறம், இது எல்லா வகையிலும் உண்மைத் திருமணமே என்று நீ நிரூபித்த பிறகுதான் பத்திரிகையும், இந்த வீடும் உன் கைக்கு முழுதாக வரும்! அது வரை, இப்போது போல நடத்துகிற உரிமை மட்டும்தான் உனக்கு இருக்கும்! அதில்கூட, அவர்கள் தகராறு செய்ய முடியும்! ஆனால் ஒன்று! நீ சீக்கிரமே ஒரு பிள்ளைக்கு வழி செய்துவிட்டால், அதன்பிறகு, யாரும் வாயைத் திறக்கவே முடியாது!" என்று சகாயம் ஒரு போடு போட்டதில், மற்ற இருவருமே அதிர்ந்து போயினர்!

காசுக்கு நடிக்க வந்ததில், பிள்ளையா?

சகாயம் அது பற்றிச் சொல்லும்போதே, நந்தினியின் முகம் கன்றிச் சிவந்து போயிற்று!

புரந்தரனுமே, சொல்வது அறியாமல் விழித்துவிட்டான் எனலாம்!

சிறு அமைதியின் பின், "என்னப்பா, இரண்டு பேரும் அப்படி விழிக்கிறீர்கள்? கல்யாணம் ஆனால், அடுத்து பிள்ளை பிறப்பது இயல்புதானே? நீங்கள் விழிப்பதைப் பார்த்தால் எனக்கே..." என்று, வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினார் சகாயம்!

நந்தினிக்குத் தலைக்கு மேல் வெள்ளம் போகிற உணர்வு! இதில் அவள் சொல்வதற்கு ஒன்றுமில்லை! தானே கரை சேர்வதும், அவளைக் கரை சேர்ப்பதும், அவன் பொறுப்பே!

அதற்கேற்ப, "என்ன அங்கிள், திடீரென்று பிள்ளை, அது இது என்றுவிட்டீர்கள்? நாங்கள், நாலைந்து ஆண்டுகளாவது, ஜாலியாக இருக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம்! நீங்கள் திடுமெனப் பிள்ளை அது, இதெல்லாம், என்ன செய்வது, நம் திட்டம் என்ன ஆவது என்று, ஒன்றும் புரியாமல் குழம்பிப் போயிற்று! அதிருக்கட்டும் அங்கிள்! யாருக்காகவோ, நம் திட்டமிட்டதை மாற்றுவானேன்? பேராசை அதிகம் உண்டே தவிர, அந்த இரு பெண்களுக்குமே, உங்களைப் போலச் சட்ட நுணுக்கங்கள் ஏதும் தெரியாது!



இப்படி ஒரு சிக்கல் உண்டு பண்ணலாம் என்றுகூட, அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை, விடுங்கள்!" என்றான் புரந்தரன்!

"எதிராளியைக் குறைத்து மதிப்பிடுவது எப்போதுமே, தோல்வியை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிற மாதிரி! சட்டம் நீலாம்பிகை அம்மாளுக்குத் தெரியாவிட்டாலும், சட்டம் தெரிந்தவர்களிடம் அவர்கள் ஆலோசனை கேட்கலாம்தானே? உன் சித்திக்கு, இப்போது ஒத்த குணமுள்ள துணை வேறு இருக்கிறது! பேராசைப்படுவது, புறம் சொல்வது, அசிங்கம் பாராமல் உளவறிவது, ஒட்டுக் கேட்பது... எல்லாம் உள்ள துணை! அதனால், பத்திரிகை கைக்கு வரும்வரை, நீ எச்சரிக்கையோடுதான் இருக்க வேண்டும்! உங்களுக்குள் விளையாட்டாகக்கூடப் பிறர் தவறாகப் பொருள் கொள்ளும் விதமாகப் பேசிவிடாதீர்கள்! செய்கையிலும் அப்படியே! அப்புறம், அது அவர்களுக்கு வேண்டிய சாட்சியாகி விடக்கூடும்!" என்று வக்கீல் எச்சரிக்கவும், நந்தினிக்கு உள்ளூரப் பயமே வந்துவிட்டது!

அவள் எதிர்பார்த்தது போல, நாலு நாளில் முடியாதோ என்பதோடு, நல்லபடியாக முடியாதோ என்றும் பயம்!

நல்லபடியாக முடிந்தால்தானே, அவளாலும், இதிலிருந்து மீள முடியும்? மீண்டு, அவளது தனி வாழ்வைத் தொடங்க முடியும்? அதற்கே ஆபத்தாகி விடக் கூடாதே!

புரந்தரனுக்கும் எதிர்பாராத உறுத்தல்தான் என்பது, அவனது பேச்சில் தெரிந்தது!

"அப்படியானால், அவர்களை முந்திக்கொண்டு, நீங்கள் வேலையைத் தொடங்கிவிடுங்கள், அங்கிள்! திருமண ஃபோட்டோ, வீடியோ எல்லாம்தான் சாட்சிக்கு இருக்கிறதே!" என்றான் அவன்.

இந்த அழகான கல்யாணத்துக்குப் பெரிதாக ஃபோட்டோவும் வீடியோவும் தேவையா என்று எரிச்சலாக எண்ணியது, நந்தினிக்கு நினைவு வந்தது!

என்ன தேவை என்று புரிந்த இப்போதும், ஏனோ அதே மனநிலையாகத்தான் இருந்தது!

சந்தோஷமாகத் திரும்பிப் பார்ப்பதற்காக அல்லாமல், சட்டத்துக்குக் காட்டுவதற்காக மட்டுமாக வீடியோ, ஃபோட்டோ என்றால், வலிக்காதா, என்ன?

இந்தப் பிரச்சினை எல்லாம் சீக்கிரமாக முடிந்து, ஆளை விட்டால், அவள் மனதில் கொஞ்சமேனும் உற்சாகம் தோன்றக் கூடுமோ, என்னவோ?

ஆனால், இது போன்ற எந்தவித உணர்ச்சித் தாக்குதலும் இல்லாமல் புரந்தரன் கேட்ட கேள்விக்கு, சகாயமும் அவனைப் போலவே இயல்பாகப் பதில் சொன்னார்!

"செய்வோம்., செய்வோம்! ஆனால், இது போன்ற விஷயங்களில் அதிகப்படி அவசரம் காட்டுவதும், ஆபத்து! அதையே கூட, அவர்களுக்குச் சாதகமாக எடுத்துக் காட்டி விடலாம். உயில் பொறுப்பை ஏற்றிருக்கும் நான், ஒருதலைப்



பட்சமாக நடந்ததாக அவர்கள் காட்டி விட்டால், அப்புறம் என்னால் ஒன்றுமே செய்ய முடியாது! அதனால், நீங்கள் இருவரும் நல்லபடி குடும்பத்தை நடத்துங்கள்! பிரச்சினை உங்களுக்குச் சாதகமாகத் தீர, அது ஒன்றுதான் சரியான வழி! எளிய, இயல்பான வழியும்கூட!" என்ற வக்கீல், தொடர்ந்து, "வாருங்கள், ஹாலுக்குப் போகலாம்! நாம் மூவருமாகத் தனியே இங்கே நின்று அதிக நேரம் பேசுவது சரியல்ல! ஆனால், கவனம் இருக்கட்டும். இரவு பகல் எந்நேரமும் எச்சரிக்கையோடு இருங்கள்!" என்று தணிந்த குரலில் எச்சரித்துவிட்டுக் கதவைத் திறந்தார்.

ஹாலின் வெளிக் கதவருகே நின்றபடி, இவர்களது வருகையைப் பார்த்தவாறு நின்ற நீலாம்பிகை, "என்ன வக்கீலு, இரண்டு பேரையும் கூட்டிப் போய், என்ன ரகசிய மந்திரம் ஓதினே? ஓ! புருஷன் பெண்டாட்டி எப்படி நடக்க வேண்டும் என்று, அந்தப் பாடமா? கள்ளக் கல்யாணம் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள், அவர்களுக்கு, அது தெரியாதாக்கும்?" என்று நொடித்தாள்!

அசிங்கம் பாராது பேசும் குணம் என்றால் என்னவென்று, நந்தினிக்குப் புரிகிற மாதிரி இருந்தது! இவளோடெல்லாம் வாக்குவாதம் பண்ணி மீளமுடியுமா?

அத்தை பூரணி அன்பு காட்டாவிட்டாலும், இப்படித் தரக் குறைவாகப் பேசவே மாட்டாளே!

அத்தைக்காகக் கூட ஒரு நாள் ஏங்கக் கூடும் என்று நந்தினி எண்ணியதே கிடையாது! ஆனால் அந்த நேரத்தில், பூரணி அருகில் இருந்தால், எவ்வளவோ திடமாக இருக்கும் போலத் தோன்றியது!

ஏன், அவளது தலை மறைந்ததும் எப்படியெப்படியோ ஆட்டம் போட்ட கிராமத்து விடலைகள், அவள் ஊரில் இருக்கிறவரை, வாலைச் சுருட்டி வைத்திருக்கவில்லையா?

பூந்தோட்டத்துக்கே எத்தனை தரம் தனியே போய்வந்திருக்கிறாள்! புரந்தரனைக் காப்பாற்றிய நாள் கூட, அப்படித்தானே!

தோன்றாத் துணையாக அத்தையின் பாதுகாப்புதான், அவ்வளவு காலமும், நந்தினியைக் காத்து வந்திருக்கிறது!

அத்தை கிளம்பிய தினம் போலவே, தன்னந் தனியே நிற்பது போன்ற உணர்வில், நந்தினிக்கு லேசாக நடுக்கியது!

அச்சத்தைக் காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றபடிப் புரந்தரனைப் பார்த்தால், சிற்றன்னையின் பேச்சை லட்சியமே பண்ணாமல், வக்கீலுடன் சேர்ந்து, அந்தத் தொப்பைக்காரரிடம் ஏதோ தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

ஒரு தெரு நாய் குலைத்தால்கூட, இதை விடக் கவனிக்கத் தோன்றும்!

ஒரு வேளை இந்த அலட்சியமே, ஒரு திட்டமிட்ட அவமதிப்போ?

எந்த அசிங்கமும் பாராத அந்தச் சிற்றன்னை, இதற்குப் பதில் கொடுக்காமல் இருப்பாளா?

அவளது பதில் தாக்குதல், அவள் மீதும்தானே பாயும்?



ஆக, புரந்தரன் அவளிடம் சொன்னது போல, இது அப்படி ஒன்றும் எளிதாக முடியப் போகிற விஷயம் அல்ல!

என்னவோ சுழலுக்குள் சிக்கிக் கொண்டது போல உணர்ந்தாள் அவள்! அவனும்தான் மாட்டிக் கொண்டிருக்கிறான்!

இதையும் எப்படியாவது சமாளித்து, இருவருமே வெளி வந்தாக வேண்டும்!

இதில், தான் என்ன செய்யக் கூடும்?

யோசித்தவாறே பார்த்தால், அப்போதும் தொப்பைக்காரரிடம்தான் அவன் பேசிக் கொண்டிருந்தான். வேண்டும் என்றேதானோ, என்னவோ? சற்று உரக்க!

"பாருங்கள் மிஸ்டர் நாதன், நீங்கள் என்னதான் கொட்டிக் கொடுத்தாலும், அந்தப் பணம் எனக்கு வேண்டாம்! இது, நான் சந்தோஷமாக வளர்ந்த வீடு! நான் இருக்கும் வரையிலும், இந்த வீடு என்னதாகத்தான் இருக்கும்! வழி வழியாகவும், இந்த வீடு, என் வாரிசுகளுக்கு மட்டுமே உரியது! முட்டாள்த்தனமாக யாராவது, என்னவேனும் உளறினால், அதைக் கேட்டுக் கொண்டு இனியொரு தரம், இங்கே வந்து நில்லாதீர்கள், கிளம்புங்கள். போங்கள்! இன்னும் நின்றீர்கள் என்றால், நான் வேறு மாதிரி, உங்களை வெளியேற்ற நேரிடும்!" என்று சூசகமாக மிரட்டினான்,

மீண்டும், சிறிய தாயாரை மட்டம் தட்டுகிறான்!

அந்த அம்மாள் சீறப் போகிறாள் என்று பார்த்தால், தனக்குச் சாதகமாக ஏதாவது சொல்லக் கூடுமோ என்று உட்புறம் எட்டிப் பார்த்த தொப்பையின் பார்வை வீச்சில் பட்டுவிடாமல் ஒதுங்கிக் கொண்டிருந்தாள், அவள்!

அப்படியானால்...

அதற்கு மேல் நின்று பயனில்லை என்று உணர்ந்து, புரந்தரனிடம் நல்ல விதமாகவே ஏதோ சொல்லி விடை பெற்றுக் கிளம்பிப் போனார், அடுக்கு மாடிக் கட்டடக்காரர்! ஒரு வேளை, அவனது மனம் மாறினால், அவரை நல்லவிதமாகவே நினைக்கட்டுமே!

சகாயமும் பிறகு வருவதாகச் சொல்லிக் கிளம்பினார்.

இனியேனும் புரந்தரன் தன் புறம் திரும்புவானோ என்று நந்தினி எதிர்பார்க்கையில், "உன் பேர் என்னடீ?" என்று அவளிடம் கேட்டாள் நீலாம்பிகை.

குரலின் உதாசீனத்தோடு, 'டீ'யா என்று நந்தினி நிமிர்கையிலேயே, "நீ யார்? எங்கிருந்து வந்தாய்?" என்று, அதே பாணியில் தொடர்ந்தாள் பெரியவள்.

இதைச் சும்மா விட முடியாது!

நேராகப் போய், அங்கே கிடந்த சோஃபா ஒன்றில் அமர்ந்து, அதன் பிறகே சின்ன மாமியாருக்குப் பதில் சொன்னாள் நந்தினி!

"நான் திருமதி புரந்தரன். புரந்தருடைய மனைவி. திருமணம் முடிந்து, கோயிலில் இருந்து வந்தோம்." என்றாள் தெளிவாக!

இவர்கள் பேச்சில் அக்கறையற்று, வேலையாளைக் கூப்பிட்டு ஏதோ

சொல்லத் தொடங்கிய புரந்தரனின் பேச்சு நின்றுவிட, வியப்புடன் தலையைத் திருப்பி, அவளைப் பார்த்தான்!

அவனுக்கு வியப்பு என்றால், நீலாம்பிகைக்கு ஆத்திரம்!

வீட்டு விஷயத்தில் சற்று அவசரப்பட்டுவிட்டதால் அவளால் புரந்தரனை எதிர்க்க முடியாத நிலை என்றால், இன்றைக்கு வந்த இவளுக்குமா அலட்சியமாக இருக்கிறது?

கண் சிவக்க, "திமிரைப்பார்! நீ சொன்னது, இப்போதானே? அதற்கு முன்னாலே யாருன்னு கேட்டேன்! ஒரு வேளை, பதில் சொல்ல வெட்கப்படுகிற மாதிரியாய் இருந்தாயோ?" என்று ஆத்திரத்தைக் கொட்டினாள்.

உடல் விறைத்து ஏதோ சொல்ல வாய் திறந்த புரந்தரன், சட்டென நிறுத்திக் கொண்டு கவனிக்க, தலை சிலுப்பி, "விட்டால், முந்திய பிறவி விவரம் வரை கேட்பீர்கள் போல! என்னைப் பற்றி, என் கணவருக்குத் திருப்தி! அதற்குமேல், கண்டகண்டவர்களுக்கு விவரம் சொல்லும் தேவை எனக்கு இல்லை!" என்றுவிட்டு, டீபாயின் மேல் கிடந்த பத்திரிகைகளில், கைக்கு எட்டிய ஒன்றை எடுத்தாள் நந்தினி.

அது ஓர் ஆங்கிலப் பத்திரிகை!

தன்னைப் படிக்காதவள் என்று குத்திக் காட்டுவதற்காகவே ஆங்கிலப் பத்திரிகையை நந்தினி எடுத்ததாக எண்ணிய நீலாவுக்குக் கொதித்தது!

"கண்ட கண்டவளா? நானா? என்ன ரொம்பப் படித்தவள் என்று இங்கிலீஷ் பேப்பரை எடுத்துக் காட்டுகிறியா? மாமியாருக்கு மரியாதை கொடுக்கத் தெரியாதவளுக்குப் படிப்பு என்ன ஒரு கேடு?" என்று கத்தினாள்.

பத்திரிகையை அழுந்தப் பற்றிக் கை நடுக்கத்தை மறைக்க முயன்றபடி "நீங்கள் மாமியாரா? அப்படி, அவர் அறிமுகப் படுத்தவில்லையே!" என்று புரந்தரனைப் பார்த்தாள் நந்தினி.

லேசாக முறுவலித்து, "எங்கே அறிமுகப்படுத்துவது? வந்ததும் வராததுமாக இங்கே இவர்கள் செய்து வைத்திருக்கும் குளறுபடியைச் சரி செய்யவே நேரம் சரியாக இருந்ததே!" என்று மறுபடியும் சிற்றன்னைக்கு ஒரு குட்டு வைத்தான் புரந்தரன்!

பிறகு, "இவர்களை மாமியார் என்று சொல்ல முடியாது! சின்ன மாமியார் எனலாம்! அடுத்து, சொல்லப் போனால், உனக்கு உருப்படியாக அறிமுகப் படுத்த வேண்டிய ஒரே ஆள், என் தம்பி இந்திரேசனை. நல்ல பையன்! அவனை எங்கே?" என்று கேட்டான்.

சட்டென முகம் கன்றினாள் நீலாம்பிகை. "எங்கேயோ வெளியே போனான்!" என்றாள் முணுமுணுப்பாக.

அடுக்கு மாடி கட்டுகிறவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தைப் பார்த்து ஆத்திரப்பட்டுப் போனான் என்று எப்படிச் சொல்வது?

அதற்குள்ளாக வீட்டின் பின்புறமிருந்து உள்ளே வந்த பெண்ணைப் பார்த்து



"இவள் சாயா. தம்பி மனைவி." என்று அவளையும் அறிமுகம் செய்துவிட்டு, "வா, நம் அறையைக் காட்டுகிறேன்" என்று நந்தினியை அங்கிருந்து அழைத்துச் சென்றான்.

அவர்களின் தலை மறைந்ததும், அவசரமாக மாமியாரிடம் ஓடி வந்தாள் சாயா.

அறைக்குள் சென்றதும், "நல்லவிதமாகச் சித்தியம்மாளைச் சமாளித்தாய்!" என்று புரந்தரன் நந்தினியைப் பாராட்டிய அதே சமயத்தில், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, சாயா மாமியாரிடம் ஓடிச் சென்றாள்.

"அட, எதற்கு இப்படி மேலே முட்டுகிற மாதிரி ஓடி வருகிறே?" என்று நீலா எரிந்து விழுந்ததைப் பொருட்படுத்தாமல், "எல்லாம் நல்ல விஷயம்தான், அத்தை! கவனமாகக் கேளுங்கள்." என்று பெரியவளின் காதுக்குள் அவள் கிசுகிசுக்க, அந்த மாமியாரின் முகத்தில் எரிச்சல் மாறி, உற்சாகச் சிரிப்பு விரியலாயிற்று!

## 11 நான் என்பதும் நீ என்பதும்



அடுக்கு மாடி வீடுகள் கட்டுகிற நாதனிடம் நீலாம்பிகை பெருந்தொகைக்கு அந்த இடத்தை விலை பேசியிருந்தாள்! விலைப் பணம் போக இரண்டு பெரிய ப்ளாட்டுகள்! எல்லாம், கனவில் கண்ட புதையல் போல, ஒன்றுமில்லாமல் போய்விட்டதே!

ஒரு வருஷம்! அதில் முந்நூற்று அறுபது நாட்கள் கழிந்துவிட்டன!

இத்தனை நாட்களும் மற்ற எதிலும் ஒத்துப் போகாத மாமியாரும், மருமகளும் ஒரே கருத்தோடு கண்கொத்திப் பாம்புகளைப் போல அயராமல் கண்காணித்து, கொஞ்சம் கொஞ்சமாக நிம்மதியுறத் தொடங்கியிருந்தனர்!

இவ்வளவு நாள் எந்த முயற்சியும் எடுக்காத புரந்தரன், இனியும் திருமணம் செய்து கொள்ளவே மாட்டான் என்ற முடிவுக்கும் வந்திருந்தனர்!

இன்னமும் ஐந்தே நாட்கள்!

அப்புறம், இந்த மூன்று மனை நிலமும், அதில் இருக்கும் இந்தப் பெரிய வீடும், அவர்களுக்கு வந்துவிடும்!

சாயாவுக்கு உரிமை கிடையாது என்றாலும், அவளுடைய கணவனின் சொத்து, அவளுடையதுதானே?

இப்போதைக்குப் பாதிப்பங்கு! அப்புறம், மாமியார்க் கிழவி மண்டையைப் போட்ட பிறகு, தாயின் சொத்து பிள்ளைக்கு என்கிற முறைப்படி, எல்லாமே சாயாவுக்குத்தான்! அப்புறம் அவள் கோடீசுவரி!

இந்த கனவில் சாயா இருக்க, வெற்றுப் பத்திரத்தில் மகனிடம் கையெழுத்து வாங்கி வைத்து விட்டதால், எல்லாம் தனக்கே என்ற மமதையில் நீலாம்பிகை



இருந்தாள்!

இந்தக் கடைசி மாதம் தொடங்கும் போதே, இரு பெண்களுக்குமே ஒரே பரபரப்புதான்! வீட்டின் மூலம் சில கோடிகளும், பத்திரிகையின் வாயிலாகப் பல கோடிகளும் சொந்தமாகப் போகின்றன!

'முடியா இரவே, தொலையாப் பகலே' என்று நாட்களை நெட்டிப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தனர்!

அப்போதும், கவனத்தை விட்டுவிடவில்லை!

பத்திரிகை அலுவலகத்துக்குப் பூக் கொடுக்கும் பவளம் ஒரு விபத்தில் மாட்டிக் கொள்ள, பதிலாக வந்து பூக்கொடுத்த பவளத்துடைய மகள் ரொம்பச் சின்னப் பெண்தான்! ஆனால், பதினைந்து தாண்டினால், அவளும் அபாய வயதுக்காரிதானே? விட்டு வைக்கலாமா?

அவளை விரட்ட, ஒரு காக்கி உடுப்புக்காரரிடம் பணம் கொடுத்து ஏதோ மிரட்டப் போக, பவளம் நிஜப் போலீசையே கூட்டி வர, ரொம்பவும் அசிங்கமாகி விட்டது!

பெரிய அளவில் பரபரப்பான செய்தியாக உருவெடுக்காமல் அதை ஒரு வகையாகச் சமாளித்துவிட்டபோதும், ரொம்பவே மனம் அருவருத்துப் போய்த்தான், புரந்தரன் அன்று தனியே காரில் போய், விபத்தில் சிக்கியது.

அப்போதும், விபத்தின் பிறகும் வழக்கம் போலப் புரந்தரனை உளவு பார்க்கத்தான் செய்தார்கள்! ஏனெனில், அவனைக் காப்பாற்றியதில் பெரும் பங்கு ஒரு பெண்ணுக்கு என்ற அளவில் செய்தி வெளியே கசிந்து வந்திருந்தது!

பத்திரிகைத் துறையில் இருந்ததாலோ, என்னவோ, புரந்தரனுக்குக் குடும்பத்தைப் பற்றியோ, தன்னைப் பற்றியோ, வெளியே பேச்சு அடிபடுவது கொஞ்சமும் பிடிக்காது!

அதனாலேயே, இந்த விபத்து பற்றிய விவரமும், பெரிதாகப் பேசப்படாமலேயே அடங்கும்படிச் செய்துவிட்டான்.

அதற்கு மேல், அந்தப் பூந்தோட்டக் கிராமத்துடன் அவன் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை என்று, தன் கைக்கூலிகள் மூலமாகத் தெரிந்து கொண்ட பிறகு, நீலா நிம்மதியோடு அந்த ஊரைப் பற்றியே அடியோடு மறந்து போனாள்.

பல கோடிகள் கிடைக்கக் கூடிய எதிர்காலம் பற்றித் திட்டமிடும் வேலையும் எளிதானது அல்லவே! தேவையான ஆளைப்பிடித்து, பேரம் பேசி... என்னென்ன இருக்கின்றன!

எல்லாம் கஷ்டப்பட்டுச் செய்து முடித்தால், வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைந்தாற் போல என்று ஒரு பழமொழி உண்டே அது போல, திருமணத்தைச் செய்து கொண்டு வந்து, எல்லாவற்றையும் கெடுத்துவிட்டானே இந்தப் புரந்தரன் என்று, நீலாவுக்குப் பேராவேசம்தான்!

ஆனால், செலவுக்குப் பத்திரிகை அலுவலகத்திலிருந்து கொடுக்கும்



பணத்தில் புரந்தரன் கை வைத்துவிடுவானோ என்ற பயத்தில், அவனிடம் தன் ஆத்திரத்தை அதிகம் காட்டவும் முடியாமல், கொதித்துக் கொண்டிருந்தாள் அவள்!

அவனது அதிகாரம் ஒழிந்தது என்று எக்களித்த நேரத்தில் அல்லவா, இடி விழுந்துவிட்டது!

இந்தத் தவிப்பில் நீலா இருந்த நேரத்தில், சாயா வந்து சொன்ன சேதி அவளுக்கு மிகுந்த ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அளித்தது!

மகிழ்ச்சி வேகத்தில், கொஞ்சமும் பிடிக்காத அந்த மருமகளைக் கட்டிப் பிடித்துக் கன்னத்தில் முத்தம் கூடக் கொடுத்து, சாயாவை ஆச்சரியப்பட வைத்தாள்!

சாயாவை மட்டுமல்லாமல், அந்த நேரத்தில் வீட்டுக்குள் வந்த அவளுடைய அருமருந்தன்ன புத்திரன் இந்திரேசனையும் கூட!

ஆச்சரியம் மட்டுமல்ல!

அணுகுண்டையும், நைட்ரஜன் 'பாமை'யும் சேர்த்துப் பார்த்தது போல, அவன் பயங்கரமாக அதிர்ந்தே போனான்!

"என்ன? என்ன இங்கே சதி நடக்கிறது? இந்த வீட்டில் வெடிகுண்டு எதுவும் வைத்து விட்டீர்களா? எப்போது வெடிக்கும்?" என்று நிஜமாகவே அச்சத்துடன் கேட்டான் அவன்.

"அட அடய், டேய்! வாயை வைத்துக் கொண்டு! நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும், உன் அண்ணன், அந்தப் படுபாவி குண்டைத்தான் போட்டுவிட்டான்! ஆனால்..." என்று பெற்றவள் மேலே தொடருமுன், "குண்டா? எங்கே?" என்று துள்ளிக் குதித்தான் இந்திரேசன்.

"அடச்சீ மடையா! நிஜமான குண்டு இல்லைடா!" என்று எரிந்து விழுந்தாள் பெற்றவள்!

ஆசுவாசமாக மூச்சு விட்டு, "அதானே! உங்களைப் போல, அண்ணன் அப்படி எல்லாம் கிரிமினல் வேலை செய்ய மாட்டாரே என்று பார்த்தேன்! அவர் நல்லவர் ஆயிற்றே!" என்று சொல்லி, இரு பெண்களின் எரிச்சலையும் கிளப்பி விட்டான் மடையன்.

"நீங்கள், இவரை மடையன், மடையன் என்று சொல்லிச் சொல்லி, மடையனாகவே ஆகிவிட்டார்!" என்றாள் அவனுடைய அருமை மனைவி.

"எப்போதுமே மடையன்தான்! இல்லாவிட்டால், ஒரு காசுக்கு விதியற்ற உன்னை மணப்பானா?" என்று வழக்கமான பாணியில் கூறிவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் நீலா.

"நன்றி கெட்ட ஜென்மம்! இவர் என்னை மணந்ததால்தானே, நீங்கள் தப்பிப் பிழைக்க ஒரு வழியை, கெட்டிக்காரத்தனமாக ஒட்டுக் கேட்டு வந்து சொன்னேன்! எனக்கென்ன வந்தது? நான், இவருடைய மனைவி! அண்ணன் தம்பிக்குள் நன்றாக ஒத்துப் போகும்! அங்கே ஒட்டிக் கொண்டால், எனக்கும்

ஒரு குறையும் இராது! நீங்கள் எப்படியோ போங்கள்!" என்று சாயா முறுக்க, ஓடி வந்து மருமகள் தாடையைப் பிடித்தாள் நீலா.

"ஐயோ, மன்னித்துக் கொள்ளு, சாயா. பழக்க தோஷத்தில் என்னமோ சொல்லிவிட்டேன்! நீயும்தான், அந்தத் திமிர் பிடித்தவனை ஒட்டிக் கொண்டு பிழைப்பானேன்! அவனை ஓட்டி விட்டால், நீதானே ராணி! அதைப் பாராமல்... சரிடிம்மா! இனி, உன்னை ஒரு வார்த்தை சொல்லுவதில்லை! நாம் இருவரும் ஒற்றுமையாக இருந்து அவனை விழத் தட்டுவோம்! சரிதானா?" என்று குழைந்து வழிந்து, தாயார் தன் மனைவியைக் கொஞ்சிக் கெஞ்சுவதை, உலக அதிசயம் போல வாய் பிளந்து பார்த்தான் இந்திரேசன்!

வழக்கமாக, இது போன்ற சூழ்நிலையில், மாமியாருக்கும் மருமகளுக்கும் பேச்சு வார்த்தை தடித்து ஒருவரை ஒருவர் நாயே, பேயே என்று அழைத்து, குடுமியைப் பிடிக்காத குறையாகச் சண்டை போடுவார்கள்!

"வீட்டுக்கு வெளியே சத்தம் கேட்டால், இந்த மாதம் கைச்செலவுப் பணம் கிடைக்காது!" என்ற எச்சரிக்கைக்கு மேல், புரந்தரன் கண்டு கொள்ளவே மாட்டான்!

இந்திரேசன் பயந்து அவனது கம்ப்யூட்டர் அறைக்குள் போய், உட்புறம் பூட்டிக் கொள்வான்! அல்லது, வெளிப்புறமாகப் பூட்டிக் கொண்டு, யாராவது நண்பன் வீட்டுக்கு ஓடி விடுவான்!

ஓடத் தயாராக நின்றபடி, சாயாவைப் பார்த்தால், அவள் முகத்தில் முறுவல் தெரிந்தது! "அப்படி வாருங்கள் வழிக்கு! நாம் இருவரும் சேர்ந்து வேலை செய்தால்தான், ஜெயிக்க முடியும்! அதை மறந்து பேசுகிறீர்களே என்ற கோபம்தான்! மற்றபடி, ஒரு ராணியாக இருக்க வேண்டிய நான், கண்டவர் காலைப் பிடிப்பானேன்? ஆனால், நீங்கள் ஒத்துப் போகாவிட்டால்..." என்று அவள் இழுக்க, "இல்லையில்லை! இனி நாம் இருவரும் சேர்ந்தே இருப்போம்!" என்று பணிந்தாள் நீலாம்பிகை!

பிரமிப்பாய் நோக்கி, "நிஜமாகவே, நம் வீட்டில் குண்டு எதுவும் வெடிக்கவே இல்லையா? உலக அதிசயமாக, மாமியாரும் மருமகளுமாக இப்படிக் குழைகிறீர்களே!" என்று அதிசயப் பட்டான் இந்திரேசன்!

"வெடி குண்டை விட மோசம்டா! மனித வெடி குண்டு வந்திருக்கிறது! உன் அண்ணன், எங்கிருந்தோ ஒருத்தியைப் பிடித்துக் கல்யாணம் கட்டிக் கொண்டு வந்திருக்கிறான்!" என்றாள் அன்னை, வெறுத்த குரலில்!

நேர்மாறாக, "ஹையா!" என்று துள்ளிக் குதித்தான் இந்திரேசன். "அண்ணி வந்தாயிற்றா? வெரிகுட்! அண்ணி எப்படிம்மா இருக்கிறார்கள்? அண்ணனுக்குப் பொருத்தமாக, அழகாக இருக்கிறார்களா?" என்று ஆவலுடன் கேட்டான் புரந்தரனுடைய தம்பி!

ஆத்திரத்துடன் நொடித்தாள் அவனுடைய தாய். "இருக்கிறாள், பேய் பிசாசு மாதிரி!" என்று சீற்றமாக மொழிந்துவிட்டு, மருமகளைப் பார்த்து, "என்னமோ,



இவனை மடையன் என்று சொல்லக் கூடாது என்றாயே! தனக்கு சமாதி கட்டுவதற்கு ஆள் வந்துவிட்டது என்று சந்தோஷப்படுகிறானே, இவனை வேறு என்னவென்று சொல்லுவது?" என்று வெறுப்புடன் வினவினாள்...

"நான் ஒன்றும், இப்போது இவர் மடையனில்லை என்று சொல்லவில்லையே!" என்று மாமியாருடன் சேர்ந்து கொண்டாள் சாயா. "மடையன், மடையன் என்று நீங்கள் கூப்பிட்டு, அப்படியே ஆகிவிட்டார் என்று மட்டும்தானே சொன்னேன்?"

பெண்கள் இருவரின் வாக்குவாதத்தில், இருவரும் சேர்ந்து தன்னை முட்டாளாக்குவது, இந்திரேசனுக்குப் பிடிக்கவில்லைதான்! ஆனால், அதை என்னதான் வாய் கிழியக் கத்தி, அவன் சொன்னாலும், தாய், மனைவி இருவருமே அதைக் காதில் போட்டுக் கொள்ளப் போவதில்லை என்று அனுபவத்தில் புரிந்து வைத்திருந்ததால், அவர்களிடம் மேலே பேசிக் கொண்டு நில்லாமல், இந்திரேசன், அவனுடைய அண்ணனின் அறையை நாடி, ஓடினான்.

'அறையைக் காட்டுகிறேன்' என்று புரந்தரன் அழைத்துச் சென்றது, வெறுமனே அறையைக் காட்டுவதற்காக மட்டும் அல்ல என்று நந்தினி ஊகித்தது சரியாகவே இருந்தது!

அறைக்குள் சென்று, "சித்தியை நல்ல விதமாகச் சமாளித்தாய்!" என்று அவளைப் பாராட்டிக் கொஞ்சம் குளிர்வித்த பிறகே, அவளைத் தனியே அழைத்து வந்த காரியத்தைச் சொன்னான் அவன்.

"பத்திரிகையைக் கைவசப்படுத்துவதற்கு, அனாவசிய அவசரம் காட்டக் கூடாது என்று வக்கீல் அங்கிள் சொல்லுகிறார்! இப்படிக் கடைசி நேரத்தில், அவசரமாகத் திருமணம் செய்ததே சந்தேகத்தை உண்டு பண்ணுமாம்! அதுவே சந்தேகம் என்றால்... உனக்குப் புரிகிறதல்லவா, நாம் முன்பு நினைத்தது போல, உடனே நீ விலகிச் செல்வது கூடப் பிரச்சினைதான்! அதை, நிச்சயமாகவே சித்தி, அவர்களுக்குச் சாதகமாகக் காட்ட முடியும்! எந்த விதத்திலும், இந்தத் திருமணம் பொய்யானது என்று எதிர்த் தரப்பில் காட்ட முடிந்துவிட்டால், எல்லா முயற்சியும் வீணாகி விடுமாம்! அதனால், சந்தேகத்துக்கு இடமே கொடுக்கக் கூடாது என்கிறார், அங்கிள்! அதனால்..." என்று தயங்கினான் புரந்தரன்.

"சொல்லுங்கள்!" என்று ஊக்கினாள் அவள்.

"நான் முதலில் சொன்னதைவிட, சற்று அதிக நாட்கள், நீ இங்கே இருக்க நேரலாம்! இந்த மிருகக்காட்சி சாலையில் அதிக நாட்கள் இரு என்று உன்னைக் கேட்க எனக்கே தயக்கமாகத்தான் இருக்கிறது... ஆனால் முக்கால் கிணறு தாண்டி என்ன பிரயோஜனம், சொல்லு?" என்றான் அவன்.

அவளை ஒரேயடியாகக் கட்டாயப்படுத்த அவனால் முடியாது. அவள் கணக்கில் பணம் போடப்பட்டுவிட்டது, அவளுக்குத் தெரியும்! ஃபோட்டோக்கள், மாதிரிக் கையெழுத்து எல்லாம் கொடுத்து, இன்று பணம் வரும் விதமாக அவன் காசோலை கட்டியது வரை, அவள் அறிவாள்.

அந்த வகையில், புரந்தரன் சொன்ன சொல்லைக் காப்பாற்றிவிட்டான்.



அவளும்தான்!

திருமணம் முடிந்துவிட்டது எனும்போது, அவளும் கொடுத்த வாக்கைப் பெருமளவு நிறைவேற்றி விட்டாள் என்று சொல்லலாம்தான்!

இன்னும், மிஞ்சி மிஞ்சி ஒரு வாரம், அவனுடைய மனைவி என்ற பெயரில் அவள் ஒருத்தி இருப்பதாக நடிக்க வேண்டும்!

அத்தோடு இருவரும் ஏற்கனவே ஒத்துக் கொண்ட ஒப்பந்தம் முடிந்தது! அவன் தரும் பணத்துக்கு, அவளது பொறுப்பு அவ்வளவுதான்!

ஆனால், இந்த நாடகம் ஆடியதன் அடிப்படைக் காரணம் நிறைவேறுமுன், அவளது பொறுப்பு முடிந்துவிட்டதாக எப்படிச் சொல்ல முடியும்?

அத்தோடு, பத்திரிகை அவனது கைக்கு வரும் நாளில், பணம் அவள் கைக்குக் கிடைக்கும் என்றும் சொல்லியிருந்தானே!

அதைச் சொன்னபோது, ஒரு நிபந்தனை போலவோ, ஒப்பந்தத்தின் விதி போலவோ அவன் இதைச் சொல்லவில்லைதான். ஸ்விட்ச் போட்டதும் இயந்திரம் வேலை நடந்து முடிவது போல, அவன் திருமணம் நடந்ததும் அதைத் தொடர்ந்து, பத்திரிகையின் உரிமை அவனுக்குக் கிடைத்துவிடும் என்று நம்பியே சொன்னான்.

எனவே, அன்று அவளுக்குப் பணம் கிடைக்கும் என்றும் சொன்னான்.

இப்போது, பணத்தை அவள் கையாள்வதைத் தடுப்பானோ, என்னவோ, அவளுக்குத் தெரியாது!

ஆனால், இது அவனே எதிர்பார்த்திராத இக்கட்டு! பாவம்! அது தீருமுன் அவனை விட்டுப் போவது, அவளுக்கு நியாயமாகப் படவில்லை!

அதற்கு, அவளுக்கு மனமும் வரவில்லை!

அத்தோடு, அவளுக்குமே, எதிர்காலத் திட்டங்கள் பற்றி இறுதி முடிவெடுப்பதற்கு, சிறிது அவகாசம் தேவைப்பட்டது!

அதை வாங்கு, இதை வாங்கு என்று விரட்டிய வக்கீல் சகாயத்தின் புண்ணியத்தில், மது வீட்டில், அவளுக்கு அதற்கு நேரமே கிடைக்கவில்லை!

ஏற்கனவே அவள் பத்திரிகைகளில் குறித்து வைத்திருந்ததை எடுத்து வந்தால் பாதி வேலை குறையும் என்று பார்த்தால், அவை மற்ற பழைய பத்திரிகைகளுடன் சேர்த்து, அடுக்கப் பட்டுவிட்டதால், திரும்பவும் தேடி எடுக்க அவகாசம் இல்லாது போயிற்று!

இப்போது, புரந்தரனின் வேலை, அவனுக்குச் சாதகமாக முடிகிற வரையிலும், அதைச் செய்யலாமே! காத்திருக்கும் காலம், அவளுக்கும் பயனுள்ளதாக அமையும்!

கடைசியாக, "எவ்வளவு நாட்கள் ஆகக் கூடும் என்று நினைக்கிறீர்கள்?" என்று மெல்லக் கேட்டாள் அவள்.

"வக்கீலின் கணக்கு ஒரு மாதம்! ஒரேயடியாக, அதை நம்ப முடியாது! ஒரு வாரம் கூடவோ, குறையவோ செய்யலாம்! என்னால் இயன்ற அளவு சீக்கிரமாக



வேலை முடிய ஏற்பாடு செய்வேன். இதை நீ நம்ப வேண்டும்."

"சரி." என்றாள் அவள்!

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், "நன்றி, நந்தினி." என்று முயன்று முறுவலித்தான் புரந்தரன். "இந்த ஒரு மாதமும், இதே அறையில் நானும் இருப்பதைச் சகிக்கிற கஷ்டமும் உனக்கு இருக்கிறது!" என்றான் வேடிக்கை போல!

குற்ற உணர்ச்சியில் அவன் சங்கடப்படுவதை, நந்தினியால் புரிந்து கொள்ள முடிந்தது! நாலைந்து நாட்கள், ஓர் அசௌகரியத்தைப் பொறுத்துக் கொள்வது வேறு! அதையே மேலும் பல நாட்கள் நீட்டிப்பது, அவனுக்குக் குறுகுறுப்பாக இருக்கிறது!

வாக்குத் தவறுகிற வேதனை வேறு இருக்கும்!

உள்ளூர இரங்கியபடி, "அதே கஷ்டம் உங்களுக்கும்தானே?" என்றாள் அவள் அமைதியாக.

கொஞ்சம் சங்கடமாக இருக்கக் கூடும் என்றாலும், எனக்குப் பத்திரிகை முழு உரிமையாய் என் கைக்கு வரும் லாபம் இருக்கிறது! என் அப்பாவின் விருப்பப்படி, அது நாசமாகி விடாமல் காத்தோம் என்கிற திருப்தியும் கிடைக்கும்! உனக்கு எதுவும் இல்லையே! அன்றைக்குத் துணிமணி விஷயத்துக்குப் பிறகு, உன்னிடம் இன்னும் பணத்தை நீட்டவும், தப்பாக நினைப்பாயோ என்று, தயக்கமாக இருக்கிறது! ஆனால் இந்த அதிகப்படி ஒரு மாதத்துக்கும் சேர்த்து, ஏதாவது பணமாக வாங்கிக் கொள்ளேன்! எனக்கு நிம்மதியாக இருக்கும்! என்று, சற்றுக் கெஞ்சுதலாகவே கேட்டான் புரந்தரன்.

"தேவைப்பட்டால் கேட்பதற்கு, உங்களை விட்டால், எனக்கு யார் இருக்கிறார்கள்? அப்போது பார்த்துக் கொள்ளலாம்!" என்று முடித்தாள் நந்தினி.

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அறைக் கதவு தட்டப் படவும், எச்சரிக்கையோடு அவளைப் பார்த்துவிட்டு, போய்க் கதவைத் திறந்தான் புரந்தரன்.

வெளியே நின்றவனைப் பார்த்ததும், அவன் முகம் பளிச்சென மலர்ந்தது!

"ஹே, இந்தர்! வாவாவா! உள்ளே வா! அப்போது பிடித்து, உன்னைக் காணோமே என்று தேடிக் கொண்டிருந்தேன்!" என்று, அவனைக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான்!

"இங்கே அறியப்பட வேண்டிய முக்கியமான ஆள்! அப்போதே தேடினேனே அந்த என் தம்பி! பெயர் இந்திரேசன். இந்த வீட்டில், உனக்கும், எனக்கும் இருக்கும் ஒரே ஓர் உண்மை அன்பன்!" என்று நந்தினிக்கு அவனை அறிமுகப்படுத்தினான்!

"வெறும் அன்பன் இல்லை, அண்ணி. உங்கள் இருவருக்கும் லட்சுமணன்!" என்ற இந்திரேசன் சட்டெனக் குனிந்து அவளது காலைத் தொட்டு வணங்கவும் நந்தினிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது!

"ஐயோ என்ன இது? என் காலைப் போய்த் தொட்டுக் கொண்டு..." என்று அவள் நகர்ந்த வேகத்தில், புரந்தரனைப் போய் இடித்துக் கொண்டு, அந்த அதிர்ச்சியில் "சாரி, சாரி!" என்று மீண்டும் அவள் தடுமாற, கடைசியில் புரந்தரன்தான் அவளை விழாமல் பிடித்து, நேராக நிறுத்தும்படி ஆயிற்று!

பரபரப்பும் தடுமாற்றமுமாகத் திணறித் திண்டாடியபோதும், எல்லாம் வேடிக்கையாகவும் இருக்கவே, மூவருமே சிரிக்கத் தொடங்கிவிட்டனர்!

அந்தச் சிரிப்பு எல்லோர் மன நிலையையும் லேசாக்க, "உரிய மாதிரியாக மைத்துனருக்கு உபசாரம் செய்ய, இப்போதைக்குத் தைரியம் இல்லை! ஆனால், ஏதோ என்னாலானது, உட்காருங்கள்!" என்று அருகில் இருந்த இருக்கையைப் பதவிசாக இரு கைகளாலும் நந்தினி காட்ட, இந்திரேசன் ராஜ கம்பீரத்தோடு வந்து அதில் அமர, மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது!

## 12 நான் என்பதும் நீ என்பதும்



**சி**ரித்து முடித்ததும், "அப்ப்...பா, இப்படிச் சிரித்து, எவ்வளவு காலம் ஆயிற்று! அது மட்டுமில்லாமல், அண்ணியும் கூடச் சேர்ந்து சிரித்தது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது! இந்த வீட்டு முசுடுகள் மாதிரி இல்லாமல்... சரி! அந்தப் பேச்சு வேண்டாம்! அண்ணா, இந்தக் கட்டுமான ஆட்களை விரட்டி விட்டீர்கள், அல்லவா? வேண்டாம் என்றால், அம்மா கேட்கவே இல்லை! இதற்கு மேல் திருமணம் செய்ய முடியாது என்று... காலையில் ஒரே சண்டை! எனக்குக் கஷ்டமாக... கூடவே, நீங்களே எப்படியும் போகட்டும் என்று கை கழுவி விட்டீர்களோ என்று பயமாகவும் இருந்ததா? வீட்டில் இருக்கப் பிடிக்காமல் வெளியே போய்விட்டேன்! நல்ல வேளை! அப்பா சொன்னது போல, அருமையாக ஓர் அண்ணியைக் கொண்டு வந்து, எல்லாக் கண்ணராவியையும் நிறுத்திவிட்டீர்கள்!" என்றான் மகிழ்ச்சியோடு!

"அப்பா சொன்னது போலவா? எப்போது சொன்னார்?" என்று அண்ணன் வினவ, தம்பி விவரித்தான். "அப்பா சா... அப்பாவின் கடைசிக்குச் சில நாட்களுக்கு முன்பாக, அண்ணா! அவர் செய்த பிழையால்தான் நீங்கள் திருமணத்தையே வெறுத்து விட்டதாகவும், ஆனாலும்..." என்று அவன் விலாவாரியாக விளக்கத் தொடங்க, நந்தினி அவசரமாகக் குறுக்கிட்டாள்.

"நான் வேண்டுமானால், நீங்கள் இருவரும் பேசி முடிக்கும் வரை, அந்தப் பக்கமாய்ப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேனே!" என்று மொட்டை மாடிப் பக்கம் கையைக் காட்டி, நகரத் தொடங்கினாள்.

"ஐயோ, அவசியம் இல்லை அண்ணி! உங்களுக்குத் தெரியாமல், எங்களுக்குள் என்ன ரகசியம் இருக்கப் போகிறது?" என்று அவளைத் தடுத்து



நிறுத்தினான் இந்திரேசன். "ஆனாலும், அண்ணா, உங்கள் மேல் கொஞ்சம்... கொஞ்சமே கொஞ்சமாய் பொறாமையும் எனக்குள் வந்துவிட்டது, தெரியுமா? ஏதாவது ரகசியமாகப் பேசப் போகிறோம் என்று தெரிந்தாலுமே, காதைத் தீட்டிக் கொண்டு, ஒளிந்து மறைந்தேனும் கவனிக்கிற ரகம் என் அருமை மனைவி! அம்மாவும் அப்படியே! ஆனால், அண்ணியைப் பாருங்கள்! சாதாரணப் பேச்சில்கூட, அண்ணன் தம்பி தனியே பேசட்டும் என்று ஒதுங்குகிறார்கள்! கொடுத்து வைத்தவர் அண்ணா, நீங்கள்!"

நந்தினியும் புரந்தரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"பரவாயில்லை, இரு நந்தினி!" என்று புரந்தரன் கூற, "ஒரேயடியாகப் புகழாதீர்கள், இந்தர்சார்! எனக்கும் கூர்மையான பற்களும், நகங்களும் உண்டு என்று தெரியும்போது, உங்களுக்கு அதிர்ச்சியாகி விடப்போகிறது!" என்று வேடிக்கை போலவே சிறு எச்சரிக்கை ஒன்று கொடுத்து வைத்தாள் நந்தினி.

வேடிக்கையாகவே எண்ணிச் சிரித்துவிட்டு, "அப்பா சொன்னதைச் சொல்லி முடித்து விடுகிறேன், அண்ணா, எப்படியும் நீங்கள் திருமணம் செய்து கொள்வீர்கள். அப்போது, நேரே பாட்டி வீட்டிற்குப் போய்ச் சில நாட்கள் இருந்துவிட்டு வரச் சொல்ல வேண்டும் என்றார். இல்லாவிட்டால், புதுப் பெண் மனதை, அம்மாவும் சாயாவும் சேர்ந்து காயப்படுத்தி, விரட்டி விடுவார்களாம்! எலியும் பூனையுமாக இருக்கும் அம்மாவும் சாயாவும் சேர்வதாவது, காயப்படுத்துவதாவது என்று அப்போது நினைத்தேன். ஆனால், கிட்டத்தட்ட ஓர் ஆண்டாக அவர்களது கூட்டணியைப் பார்த்த பிறகு, அப்பா சொன்னது ரொம்ப சரி என்றே எனக்குத் தோன்றுகிறது! பாட்டிக்கும் உங்களைப் பார்க்க ஆசையாக இருக்கும்! அதனால் ஒரு தேனிலவு மாதிரி அங்கே சில நாட்கள் போய்விட்டு வாருங்கள்!" என்று முடித்தான் இந்திரேசன்.

யோசனையோடு நந்தினியைப் பார்த்தான், புரந்தரன்.

ஒரு சோறு பதமாக, வந்ததும் வராததுமாக நீலாம்பிகை நடந்து கொண்ட விதத்தில், நந்தினிக்கு உள்ளூரக் கலக்கம்தான்.

என்னதான் சமாளித்து, அப்போதைக்கு அவளுக்குப் பதில் கொடுத்தாலும், அந்த அம்மாளைப் போலக் கத்த, தன்னால் முடியாது என்பது நிச்சயம்!

இன்னமும், மாமியாரோடு அந்தச் சாயாவும் சேர்ந்து கொண்டால் எப்படி இருக்கும்?

புரந்தரனும் பத்திரிகை அலுவலகத்துக்குப் போய்விட்டால் அவள் தனியாக அல்லவா மாட்டிக் கொள்வாள்?

"பத்திரிகை அலுவலகத்தை விட்டுப் போவது பிரச்சினை இல்லை என்றால் போய் வரலாமே! பெரியவர்களைப் பார்க்க வேண்டும்தானே?" என்றாள் மெதுவாக.

"ஹையோ, இவ்வளவு மெதுவாகக் கூடப் பெண்கள் பேசுவார்களா? அண்ணா, திரும்பவும் சொல்கிறேன், பொறாமை வருகிறது!" என்ற தம்பியின்



தலையில் லேசாகத் தட்டிவிட்டு, "பத்திரிகையை நானே நேரில்தான் பார்த்தாக வேண்டும் என்பது இல்லை! செல்ஃபோனை வைத்து சமாளித்துக் கொள்ளலாம். அத்தோடு கிராமமும் நன்றாக இருக்கும்! எதற்கும் வக்கீல் அங்கிளிடம் இங்கேயே இருக்க வேண்டுமா என்று கேட்டுக் கொண்டு, பாட்டி வீட்டுக்குப் போய் வருவோம்!" என்றான் புரந்தரன்.

அவ்வாறே சகாயத்திடம் கலந்து பேசியபோது, உரிமை மாற்றம் தொடர்பான சட்டரீதியான வேலைகள் நடந்தேறச் சில நாட்கள் பிடிக்கும் என்பதால், அவர்கள் இருவரும் தாராளமாகப் போய் வரலாம் என்றுரைத்து அவர் சந்தோஷமாக வழியனுப்பவும், புரந்தரன், தன் சில நாள் மனவையான நந்தினியை, அவனுடைய பாட்டி வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

தன்னை அழைக்காமல், தன்னிடம் முன்கூட்டியே தெரிவிக்காமல் திருமணம் செய்தது பற்றிக் கொஞ்சமும் குறைப்படாமல், பேரனையும், பேரன் மனைவியையும் மனதார வரவேற்றாள் அந்த அம்மாள்.

"இவன் தனியாளாகவே இருந்து விடுவானோ என்று ரொம்பவும் கவலையாக இருந்தது! அந்தக் கவலையைத் தீர்த்த புண்ணியவதி! தொங்கத் தொங்கத் தாலியோடு ரொம்ப காலம் நன்றாக இருக்க வேணும்!" என்று சுருக்கம் விழுந்த விரல்களால் தலையை வருடிக் குரல் நடுங்கப் பாட்டியம்மாள் அன்பு ததும்ப ஆசீர்வதித்தபோது, முதல் முறையாக இந்தத் திருமணம் நிஜமானதாக இருக்கக் கூடாதா என்ற ஏக்கம், நந்தினிக்கு உண்டாயிற்று!

உறவென்று வேறு யாருமின்றி, இந்தப் பேரன் ஒருவனையே ஆதாரமாகக் கொண்டு வாழும் இந்த முதியவளை ஏமாற்ற வேண்டியிராதே! உண்மை தெரியும்போது, எவ்வளவு வேதனையாக இருக்கும்?

ஒன்றும் சொல்ல மாட்டாமல், அஞ்சுகம் அம்மாளின் கையைப் பற்றித் தடவிக் கொடுத்தாள் அவள்.

புரந்தரனுக்கும் அதுவே தோன்றியதோ, என்னமோ, தோட்டக் கிணற்றில் குளிக்கப் போவதாகச் சொல்லி, அங்கிருந்து நழுவிவிட்டான்!

"பேரனுக்கு இந்தக் குழம்பு பிடிக்கும், இந்த வறுவல் பிடிக்கும், கற்று வைத்துக் கொள், அங்கே சமையல்காரி இருந்தாலும், அவ்வப்போது இப்படி ஏதாவது செய்து போடு! அப்படியானால்தான், அவன் உன்னையே சுற்றி வருவான்! ஓர் ஆண்பிள்ளையின் மனசை, அவனது நாக்கு வழியேதான் அடைய வேண்டும் என்று சொல்வார்கள்!" என்று நந்தினிக்குச் சமையல் கற்றுக் கொடுத்தாள் பாட்டியம்மாள்.

தன் எதிர்காலப் படிப்புக்கும், வேலைக்கும் சமையல் சரிவராது என்றாலும், அஞ்சுகம்மாவிடம் மறுக்க மனம் வராமல், சமையல் செய்ததோடு, அதன் குறிப்புகளையும் பக்தி சிரத்தையாக எழுதி வைத்தாள் நந்தினி.

போடுகிற வேஷத்தைச் சரியாகப் போடுவதும் அவசியம் ஆயிற்றே என்று, தனக்குத் தானே சொல்லியும் கொண்டாள்!



என்னவோ, அதற்காகத்தான் எழுதிய மாதிரி!

அங்கிருந்த முதல் இரண்டு தினங்களுமே, பல காலத்துக்குப் பிறகு, நந்தினிக்கு மிகவும் சந்தோஷமாகக் கழிந்த நாட்கள் எனலாம்!

அஞ்சுகம்மாவின் பேச்சு, பெரும்பாலும் பேரனைப் பற்றியதாகவேதான் இருந்தது!

என்றாலும், அவள் எதிர்பார்த்ததுபோலப் பூந்தோட்ட கிராமத்துத்தனமாக இராமல், புரந்தரன் படித்தது, வளர்ந்தது பற்றிய தெளிவான விவரமாக இருந்தது!

அவனுக்குப் பிடித்த விளையாட்டுகள், அவன் அடைந்த வெற்றிகளுக்கெல்லாம், படித்த பாட்டியாய், அஞ்சுகத்திடம் பட்டியல் இருந்தது!

அதே போல, அவன் பிறந்ததில் இருந்து அவனது வளர்ச்சியைக் காட்டும் புகைப்படங்களின் வரிசையும் அவனுடைய பாட்டியிடம் இருந்தது!

"போதும் பாட்டி! நந்தினிக்கு போரடிக்கப் போகிறது!" என்று அவனைப் பற்றிய பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் புரந்தரன் முயன்றான்.

வியக்கத் தக்க விதமாக, நந்தினிக்கு இந்தப் பேச்சு சற்றும் போரடிக்கவில்லை! மாறாக, கேட்கக் கேட்கச் சுவை அதிகரிப்பது போலத்தான் தோன்றியது!

சுய உணர்வற்ற நிலையில் அவனது முதல் தோற்றத்திலிருந்து, தன்னுணர்வு வந்ததுமே அவன் வேகமாகச் செயல்பட்டு, அங்கிருந்து கிளம்பிப் போன இடம், பத்திரிகை அலுவலகத்தில் அவனது வேகம்... இன்னும் நடிப்பே என்றாலும் அருகமர்ந்து தாலி கட்டி, மாலையிட்டபோது, அவனது வீட்டில் சிற்றன்னையிடம், தம்பியிடம் என்று காட்டிய அவனது பல்வேறு தோற்றங்கள், எல்லாமே ஒரு பெரிய மர்மக் கதை போல, ஏற்கனவே அவளுள் ஒரு வியப்பையும், அவனிடம் பிரமிப்பையும் ஏற்படுத்தியிருந்தன!

அவனைப் பற்றி மேலும் மேலும் அறிந்து கொள்ள ஆர்வத்தையும்!

அவனைப் பற்றி, அவளாகக் கேட்டு அறிவது கடினம்!

அவள் விசாரிப்பதை அவன் அறிய நேர்ந்தால், அவளைத் தவறாகக் கருதலாம்!

ஆனால், தானாக வருவதை விடுவானேன்?

எணவே, பாட்டியைத் தடுக்காமல், அவள் சொன்னதையெல்லாம் முழுதாக உள் வாங்கிக் கொண்டாள் நந்தினி!

புரந்தரனின் சின்ன வயதுக் குறும்புகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினால், அஞ்சுகம்மாளுக்கு மற்ற எல்லாம் மறந்து போகும்!

அவளுமே இழப்பையே அறியாத சமயம் அது!

அவளுடைய கணவர் உயிருடன் இருந்தார்! மகளும் மருமகனும் நல்லபடியாகச் சேர்ந்து வாழ்ந்தார்கள்! எல்லோர் மனதையும் குளிர்விக்கும்படியாகப் புரந்தரன் பிறந்திருந்தான்.

சுகத்துக்கு மேல் சுகம் என்று மகிழ்ச்சியை மட்டுமே அறிந்திருந்த காலம்! நினைத்தால், எல்லாவற்றையும் போட்டுவிட்டுக் கணவனும் மனைவியும்

பேரனைப் பார்க்கச் சென்னைக்குப் படையெடுத்து விடுவார்கள்! ஆர அமர, இரண்டு நாள் பேரனோடு இருந்து, அவனது ஒவ்வோர் அசைவையும் ஆசை தீரப் பார்த்து ரசித்துவிட்டுத்தான் திரும்புவார்கள்!

அப்படி ரசித்தவற்றுள் பலதும் இப்போது நந்தினியிடம் இறக்குமதியாயின.

ஐந்தாறு மாதக் குழந்தையாக இருந்தபோதே, அவன் ரொம்ப ரோஷக்காரனாம்! குரல் கொடுத்ததும் தூக்காவிட்டால், தாயைக் கூட முகம் பாராமல் திருப்பிக் கொள்வானாம். அவனைச் சரிப்படுத்த, வெகு நேரம் கெஞ்சிக் கூத்தாட வேண்டுமாம்.

இதைக் கேட்டதும், ஆல்பத்தில் குட்டிக் குழந்தையாக இருந்த புரந்தரன் எப்படி முகம் திருப்பியிருப்பான் என்று நந்தினி கற்பனை செய்கையில், "இதே புத்தி வளர்ந்து, பிற்பாடு, தாய் தந்தை இருவரிடமுமே மனம் ஒட்டாமலே இருந்துவிட்டான். இருவரிடமுமே பிழை உண்டாம்! நல்லவேளை! என் மகளிடம் ரொம்பக் காட்டியதில்லை! திருமணம் பற்றி, அவனிடம் அதிகம் வற்புறுத்த நான் அஞ்சியதும், புரிப் பையனின் இந்தக் குணத்துக்குப் பயந்துதான்! உரியவரிடம் சொல்லிவிட்டு, அவர் சொல்படி புரியைத் தனியே விட்டுவிட்டு விலகி வந்துவிட்டேன்! என்னமோ, மருமகன் உயிரைக் கொடுத்து, நல்லதை நடத்தி வைத்திருக்கிறார்!" என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் அந்தப் பெரியவள்.

'புரிப் பைய'னுக்குப் பாட்டியும் தந்தையும் சேர்ந்து திட்டமிட்டது பற்றித் தெரிந்திருக்குமா?

"நன்றாக!" என்றாள் பாட்டி பெருமையாக! "அவன் அப்பா திருமணம் பற்றிப் பேசியதுமே, என் வேலை என்று உடனே ஊகித்துவிட்டானாம்! கெட்டிக்காரப் பயல்! வேறே வேலை தேடிக் கொண்டு வடக்கே போய்விடுவதாக மிரட்டி, அவர் வாயையும் அடைத்தானாமே! ஆனாலும், பத்திரிகையை வைத்து மகனை மாற்றி விடலாம் என்று மருமகனுக்கு நம்பிக்கை! ஏதோ, அவர் நினைத்தது, நல்லவிதமாக நடந்து, அவனுக்குப் பொருத்தமாக நல்ல மனைவியாக நீ வந்திருக்கிறாய்! என் பேரனின் வழியே எங்கள் சந்ததியும் தொடரும் என்று நினைக்கும்போது, எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது, தெரியுமா?"

இந்த முடிவுரைதான் நந்தினியைக் கொஞ்சம்... கொஞ்சமென்ன, நிறையவே கலக்கிவிட்டது!

இருவரும் பிரியும்போது, இந்த மூத்த தலைமுறையின் மனம் உடைந்தே போய்விடாதா?

ஆனால் அதற்காக அவள் என்ன செய்ய முடியும்?

அத்தை கிளம்புவதைத் தடுக்க முடியாமல் பார்த்திருந்த அதே கையாலாகாத்தனத்துடன், இப்போதும், சும்மா இருக்க வேண்டியதுதான்!

ஏதோ ஒரு வகையில் இந்தப் பாட்டிக்கு அமைதியைக் கொடுக்குமாறு, கடவுளை வேண்டலாம்! அவளால் இயன்றது, அது மட்டுமே!



அதே போல வேண்டிக்கொள்ளவும், மனதில் சற்று அமைதி உண்டாயிற்று.

அவள் பார்ப்பதற்காக இன்னொரு செட் புகைப்பட ஆல்பங்களைக் கொடுத்துவிட்டு அஞ்சுகம்மாள் வேறு வேலையாக எழுந்து சென்றாள்.

தனியே உட்கார்ந்து, அந்தப் படங்களில் அவள் ஆழ்ந்திருந்தபோது, ஓசையின்றி உள்ளே வந்தான் புரந்தரன்.

உதட்டில் கை வைத்துக் காட்டிவிட்டுத் தணிந்த குரலில், "பாட்டி பெரிய ஆள், நந்தினி! அவர்களுக்கு வேண்டியபடி நைசாகப் பேசுவார்கள்! நான் கண்டு கொள்வேன் என்று, உன்னை உருக்கப் பார்க்கிறார்கள்! என்னைப் போலக் கண்டிப்பாகப் பேச, உன்னால் முடியாது! ஆனால், இதையெல்லாம் பெரிதாக எடுக்க வேண்டாம்! ஆனால், பக்கத்திலேயே இருந்தால், விடாமல் ஏதாவது உரு ஏற்றிக் கொண்டேதான் இருப்பார்கள்! என்னோடு வாயேன், சற்று நேரம் தோப்பில் சுற்றிவிட்டு வரலாம்!" என்று அழைத்து, அவள் பற்றிக் கொண்டு எழுவதற்காகக் கையை நீட்டினான்!

அவனது நீட்டிய கையைக் கவனியாத பாவனையில் முன்னே விரித்திருந்த ஆல்பத்தை மூடிக் கையில் தூக்கியவாறே எழுந்துசென்று, அதை மேஜை மீது வைத்தாள் அவள்!

"பாட்டியிடம் சொல்லிவிட்டு வரட்டுமா?"

"வேண்டாம்! வழியில் யாரிடமாவது சொல்லி அனுப்பி விடலாம்!" என்று அவளை அழைத்துச் சென்றான் அவன்.

அதன்படியே பாட்டிக்குத் தகவல் தெரிவிக்கச் சொல்லிவிட்டுப் போனார்கள்!

அங்கங்கே சற்று தூரத்தில் நின்று, பல பண்ணையாட்கள், நந்தினியைக் காட்டிப் பேசியது முதலில் ஒரு மாதிரி இருந்த போதும், சிறிது நேரத்திலேயே அது மறந்துவிட்டது!

விதையில்லாத கொய்யா, இந்த சீசனில் கூவும் மாமரத்துக் கிளிகள், பெரிய யாழ்ப்பாணத் தென்னை என்று அவன் காட்டிய அனைத்தும் அவளது கவனத்தை இங்கங்கே அசையவிடாது பிடித்தன.

காட்டிய விஷயங்கள் மட்டுமல்ல! சிறு அழுத்தத்துடன் கூடிய அவனது குரல், ஒவ்வொரு எழுத்தையும் அவன் தெளிவாக உச்சரித்த பாணி, அவளுக்கு இதையெல்லாம் முழு மனதுடனேயே காட்டுவது போன்ற தோற்றம் என்று எல்லாமே அவளை ஈர்த்தன!

அது பாவனையாக இருக்குமோ என்று எண்ணக்கூடத் தோன்றவில்லை!

இவ்வளவு நேரம் பார்த்த புகைப்படங்களும் நினைவு வர, "சிறு வயதில் இங்கெல்லாம் விளையாடி இருப்பீர்கள் அல்லவா?" என்று படங்களைக் கற்பனையில் உருவகப் படுத்தியபடி, புன்னகையோடு வினவினாள்.

"எது? அந்தத் தேங்காயைப் பிடித்துக் கொண்ட நிற்கிற படத்தைப் பார்த்துச் சொல்லுகிறாயா? அது, அப்போது விளைவித்த குட்டை ரகத் தென்னையை வைத்துச் சும்மா எடுத்த படம். மற்றபடி, ஏக வாரிசு! சும்மாத் தோட்டத்துக்குள்



விட்டுவிடுவார்களா? பூச்சி பொட்டு கடித்து வைத்தால் என்று தோட்டத்துக்குள் லேசில் விடவே மாட்டார்கள்! என் காரியம் சாதிக்க வேண்டும் என்றால், இங்கே வந்து ஒளிந்து கொள்வேன் என்ற மிரட்டுவேனா, நடுங்கிப் போவார்கள்!" என்று சிரித்தான் புரந்தரன்.

சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்திவிட்டு, "பூச்சி பொட்டா? தரை சுத்தமாகத்தானே பராமரிக்கப்பட்டு இருக்கிறது? எங்கள் பூந்தோட்டம் என்றால், பெரும்பான்மைச் செடிகளே குத்துச் செடிகள்! அதிலும், மல்லிகை வாசம் பாம்புக்குப் பிடிக்கும் என்றே சொல்லுவார்கள்! ஆனால், நான் பார்த்தது இல்லை. ஆட்கள் நடமாட்டத்துக்குப் பயந்து அதெல்லாம் ஓடிவிட்டிருக்கும் என்று பூப்பறிக்கும் போது நினைப்பேன்!" என்றாள் நந்தினி இயல்பாக.

முதலில் இப்படி நினைத்துதான் தைரியப்படுத்திக் கொள்வாள். அப்புறம் இயல்பான சில எச்சரிக்கை நடவடிக்கைகளும் பூந்தோட்ட வேலையும் ஊர்க்காரர்களைப் போலவே அவளுக்கும் பழகிவிட்டது.

பக்கவாட்டில் அவனது பார்வையை உணர்ந்து, நந்தினி திரும்பிப் பார்த்தாள்.

யோசனையாக நோக்கி, "உன் சிறு வயது எப்படி, நந்தினி? மாமா வீட்டில் வந்திருக்க வேண்டுமானால்... இழப்பைப் பற்றிப் பேசப் பிடிக்காவிட்டால் விட்டுவிடு! ஆனால், சில சமயம் சொல்வதே சுமையிறக்கும்!" என்றான் புரந்தரன்.

லேசாக முறுவலித்தாள் நந்தினி. "இழப்பையே நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்க அவகாசம் கிடைத்திருந்தால், அது பெரிதாகத் தோன்றி, நிலைத்தும் இருந்திருக்கலாம்! ஆனால்... எனக்கு அதற்கு வாய்ப்பில்லை! பதினோரு வயதில், ஒரு தீவிபத்தில் உதவப் போய், அம்மா, அப்பா இருவரும் இறந்து போனார்கள்! மாமா வீட்டில் வசதி கிடையாது! தோட்ட வேலை செய்தால், கூலியாளுக்குக் கொடுக்கிற பணத்தை எனக்குத் தந்து, என் படிப்புக்குச் செலவு செய்ய முடிந்தது! அதற்காக இரக்கப்பட்டு விடாதீர்கள். சொந்த உழைப்பில் படித்தது எனக்கு மகிழ்ச்சிதான். கடைசியாக இரு ஆண்டுகள் மாமா நோய்ப்பட்டிராவிட்டால், என் படிப்பு நல்லவிதமாக முடிந்திருக்குமே என்ற வருத்தம் மட்டும்தான், எனக்கு! ஆனால், அனாதையாக விட்டுவிடாமல் பதினோரு வயதுப் பெண்ணின் பொறுப்பேற்று அழைத்து வந்தவருக்கு என்னால் ஆன பணிவிடை செய்து நன்றிக் கடன் செலுத்திவிட்ட திருப்தியும் கொஞ்சம் இருக்கத்தான் செய்கிறது!" என்றாள்.

சிறு அமைதியின் பின், "இன்னொரு நன்மையும் இருக்கிறது!" என்றான் புரந்தரன் மெதுவாக.

ஓரக் கண்ணால் பார்த்தவளுக்கு விஷயம் புரிந்து போயிற்று.

புரந்தரன் அவன் விஷயம் சொல்கிறான்!

அவள் படித்து முடித்து வேலையில் இருந்திருந்தால், அவனைத் தேடி வந்திருக்கவே மாட்டாளே!



கூடவே, கோடி கோடியாகக் கொடுத்தாலும், இப்படியொரு திட்டத்துக்கு இணங்கியும் இருக்க மாட்டாள்! அவனைப் பொறுத்தவரையில், இப்படிப் பிரச்சினையற்று பத்திரிகை கிடைத்திராது!

சிறு கசப்பை அவள் உணருமுன்பாகவே, "எண்ணிப் பார்த்தால் சுயநலமாக... தீப்பிடித்த வீட்டின் முன் நின்று குளிர்காய்வது போலக் கேவலமாகத் தெரிகிறது! ஆனால்... உண்மையில்..." என்று குரலில் குன்றலுடன் தொடர்ந்து புரந்தரன் கூறவே, தோன்றுமுன்பே கசப்பு மறைந்து போனது!

சுய லாபத்தை மட்டுமாக நினைத்து அவன் உற்சாகமும் மகிழ்ச்சியுமாக மட்டுமாக இருக்கவில்லை! அவளுக்காக வருத்தமும் படுகிறான்.

அவனுடைய பாட்டி காட்டிய படங்களில், புரந்தரன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு அழப் போவது போல ஒன்று இருந்தது!

அது நினைவு வர, அவனது பேச்சில் குறுக்கிட்டு, "என்ன கடுமையான உவமை!" என்றாள் நந்தினி. "கச்சா எண்ணையில் இருந்து பெட்ரோலைப் பிரித்தெடுக்கும்போது கிடைக்கும் பக்கப் பொருட்களைப் போல, இதில், ஒரு நன்மையும் கிடைத்திருப்பதாகச் சொல்லலாமே!" என்று அவள் இலகுவாகக் கூறவும், அவன் முகம் சற்றுத் தெளிந்தது!

தொடர்ந்து, "இன்னொரு பக்கப் பொருளாக, என் படிப்பு ஆசையும்தான் நிறைவேறப் போகிறதே!" என்று நந்தினி முறுவலிக்கவும், புரந்தரனுக்கும் சிரிப்பு வந்தது.

"நிச்சயம், நந்தினி. நீ விரும்பும் படிப்பைப் படிக்க வைப்பது என் பொறுப்பு." என்றான் அவன் உறுதிமொழி எடுக்கும் குரலில்! "அதைப் பற்றி ஏதாவது முடிவு செய்தாயா?"

"இல்லை. மது வீட்டில்... மரியாதை இல்லாமல் பெயர் சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள்., அவர்கள்தான் அக்கா என்றெல்லாம் கூப்பிடாதே, எல்லோருக்கும் நான் 'மது'தான்., அப்படியே கூப்பிடு., வேண்டுமானால், வாங்கள், போங்கள் என்று மரியாதைப் பன்மையில் மற்ற பேச்சு பேசிக் கொள் என்றார்கள். அதனால்தான் அப்படி! அவர்கள் வீட்டில், பத்திரிகையில் சிலது குறித்து வைத்தேன். ஆனால், தொடர்ந்து முழுசாக எல்லாக் குறிப்புகளையும் எடுத்துச் சேர்த்து வைத்து ஆராய்ந்து பார்க்க முடியாமல் போயிற்று. சென்னைக்குப் போய், மீண்டும் பார்க்க வேண்டும்!" என்றாள் அவள்.

நின்று, யோசனையோடு அவளை நோக்கி, "மது வீட்டில் ஏன் முடியாது போயிற்று?" என்று கேட்டான் புரந்தரன்.

"அதுதான், அங்கிள் சொற்படித் துணிமணி வாங்கியதில் நிறைய நேரம் செலவாகி விட்டது. அப்புறம் தேடிப் பார்த்தால் அந்தப் பத்திரிகைகளைக் காண... கடவுளே! தப்புப் பண்ணிவிட்டேனா? வக்கீல் அங்கிளுக்கு ஏதேனும் சந்தேகம்... அவர் ஏதாவது கண்டுபிடித்து விட்டாரா, புரந்தரன்?" என்று கவலையும் பயமுமாகக் கண்ணில் கலவரத்துடன் கேட்டாள் நந்தினி!

# 13 நான் என்பதும் நீ என்பதும்



**சி**ல கண நேரம் அங்கே அமைதி நிலவியது
சஞ்சலம் நிரவிய அமைதி!

அந்த நேரத்தில் நந்தினி பெரிதுமே கலங்கிப் போனாள்.

அவளது கவனக் குறைவால், தாலி கட்டுகிற சடங்குவரை செய்தும், எல்லாம் வீணாகிப் போயிற்றோ என்று நடுங்கிவிட்டாள்!

"ஐயோ, மது வீட்டில் வைத்து, நான் அந்த வேலை செய்திருக்கக் கூடாது போலத் தெரிகிறதே! இப்போது என்ன ஆகும், புரந்தர் சார்? எல்லா வேலையும் வீணாகி விட்டதா?" என்று தவிப்புடன் வினவினாள்.

அவனுக்குப் பத்திரிகை வராது! பக்க விளைவாக, அவளது படிப்பும் வெறும் கனவாகப் போகிறது!

"ஷ்! ஷ்... நந்தினி! அவசரப்பட்டுக் கலங்காதே! முதலில், அங்கிளுக்கு எந்த அளவுக்குத் தெரியும் என்று யோசிப்போம்! பத்திரிகைகளில் நீ குறிக்கும்போது... அவர் முன்னிலையில் நீ குறித்திருக்க மாட்டாய்!"

புரந்தரன் தன்னை ஒரே முட்டாளாகக் கருதவில்லை என்பதே ஆறுதலைத் தர,

"ஊகூம். இல்லை! பக்கம் மடக்கி, குறித்த பக்கம் வெளியே தெரியும்படியாகப் பத்திரிகையை மடித்து... இப்படியெல்லாம்கூட வைக்கவில்லை! வேலைக்கான படிப்பைத் தேடுவது வெளியே தெரியக் கூடாது என்றுதான் நினைத்தேன்!" என்று விவரித்தாள் அவள்.

"குட்! யோசித்துதான் செய்திருக்கிறாய்! அப்புறம், அந்தப் பத்திரிகைகளைத் தேடியது, எப்படி?"

"அதுவும் யாருக்கும் தெரியாமல்தான். யாரிடமும் பத்திரிகைகள் பற்றிப் பேசவே இல்லை! சும்மாப் பார்க்கிற மாதிரிதான் தேடினேன்."

"பழைய பேப்பர் வைக்கிற இடத்தில், வேலையாட்கள் எடுத்து வைத்திருப்பார்கள்!"

"அப்படி நினைத்துதான், ஓசைப்படாமல் அங்கேயே போய்த் தேடினேன்! ஆனால்... இப்போது யோசித்துப் பார்க்கும்போது கொஞ்சம் பயமாக இருக்கிறது, புரந்தர் சார்! இயல்பாக எடுத்து வைப்பது என்றால், அன்றுவரை வெளியே கிடந்த இந்தப் பத்திரிகைகள், மேலேதானே இருக்க வேண்டும்? அப்படி இருக்கவில்லை! அடுக்கில் நாலைந்து பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தேன். நான் குறித்து வைத்தது எதுவும் இல்லை! மொத்தமாக, வேறெங்கோ



வைத்திருக்கலாம் என்று அப்போது நினைத்தேன்! ஆனால், என்னை 'ஷாப்பிங்' அனுப்பிவிட்டு, வக்கீல்தான், அந்தப் பத்திரிகைகளை எடுத்து மறைத்து வைத்திருக்க வேண்டும் என்று இப்போது நிச்சயமாகத் தோன்றுகிறது! அவர் கெட்டிக்காரர் என்கிறீர்களே! எல்லாம் ஊகித்திருப்பாரா? செய்தது எல்லாமே வீணாகிவிட்டதா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"கெட்டிக்காரர்தான்! ஆனால், நாமாகச் சொல்லாமல், நம் திட்டத்தை அப்படியே முழுமையாக ஊகித்தறிவது கடினம்!"

"ஆனால், சந்தேகம் வந்திருக்கும்தானே? ஆனால், அவரைப் பார்த்தால், உங்களிடம் பிரியம் உள்ளவராகத் தோன்றுகிறதே! இதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட மாட்டாரா?" என்று நம்பிக்கையும் பயமுமாகக் கேட்டாள் அவள்.

"ஊகூம்!" என்றான் அவன். "சகாயம் அங்கிளுக்கு என்னிடம் அன்புதான்! அப்பாவுக்கும் நெருங்கிய நண்பரும் கூட! ஆனால், தொழில் கடமை என்று வரும்போது, அவருக்குப் பெற்ற மகள்கூட அடுத்தபடிதான்! உடனே பயந்துவிடாதே! அவருக்கு இருக்கக் கூடியது வெறும் சந்தேகம் மட்டும்தான்! அதை அழித்துவிட்டால், அதன்பின் பிரச்சினை ஏது?"

"எப்படி முடியும் புரந்தர் சார்? இதைப் பற்றி அவரிடம் பேசினால், 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்கிற மாதிரி ஆகிவிடாதா?"

"பேசுவதா? நம்மைப் பற்றி அவருக்கு, இப்படி ஒரு சந்தேகம் இருக்கக் கூடும் என்ற எண்ணமே நமக்கு இல்லாதது போல, நாம் நடந்து கொள்ள வேண்டும்! நாம் இருவரும் எல்லாப் புதுக் கணவன் மனைவி போல ஒட்டுதலாக... முதலில், இந்தப் 'புரந்தர் சாரை' விட்டு ஒழி! புரி, புரு, புரன் என்று சுருக்கமாக ஏதாவது செல்லம் போலத் தோன்றக்கூடிய பெயர் சொல்லிக் கூப்பிடு! நானும் நந்து, நந்தி என்று... ஓ, நந்தி என்று சொல்லக் கூடாதில்லையா? ஏதாவது யோசித்துச் சொல்கிறேனே! இப்போது..." என்று சுற்றிலும் பார்த்தவன், "பார் நந்தினி, அந்த யாழ்ப்பாணத் தென்னையில் ஓர் இளநீர் பறித்து வரச் சொல்லுகிறேன். அந்த ஒரே இளநீரை ஆளுக்கு ஒரு ஸ்டிராப் போட்டு, என்னோடு குடிப்பதில் உனக்கு ஆட்சேபனை இருக்கிறதா? வெறுப்பாக இருந்தால் சொல்லிவிடு. வேறு ஏதாவது யோசிப்போம்!" என்று கேட்டான் அவன்.

அவனது ஐடியா புரியவும், "அன்று மதுவோடு வெளியே போனபோது, அப்படித்தான் இருவரும் குடித்தோம். இப்போதும், அது போல எண்ணிக் கொள்கிறேனே!" என்றாள் அவள்.

முகம் மலர, "உன்னை மனைவியாக... நிஜமான மனைவியாக அடையப் போகிறவன் அதிருஷ்டசாலி, நந்தினி. ஆ, ஊ, ஐயோ என்ற அனாவசிய அலட்டல்கள் எதுவும் இல்லாமல், சட்டென விஷயம் புரிந்து ஒத்துக் கொள்கிறாய். இனிமையான குணம்...! உன் பெயர் முடிவிலும் 'இனி' என்ற எழுத்துக்கள் இருப்பதால், இனி என்றே கூப்பிடட்டுமா?" என்று வினவினான் அவன்.



"உங்கள் இஷ்டம்! ஆனால் என்ன, அடுத்து என்ன என்று கேட்பதுபோல இருக்குமோ என்று தோன்றுகிறது." என்றாள் அவள்.

"ஓகோ! இனி... என்றால், ஆமாம் அப்படித்தான் தெரிகிறது! சரி. வேறு யோசிக்கிறேன்! ஆனாலும் மாமனார் ரொம்ப மோசம்பா! செல்லமாகச் சுருக்குவதற்கு வசதியாக, ஒரு நல்ல பேர் வைத்திருக்கக் கூடாது?" என்று குறைப்பட்டான்.

பிறகு, மரியாதையுடன் தூரத்தில் நின்ற பணியாட்கள் பக்கம் திரும்பி உரக்க, "இந்தாப்பா பெருமாள்! வீட்டுக்குப் போய், இளநீர் குடிக்க ஸ்டிரா எடுத்து வா! வேலு, நீ அந்த யாழ்ப்பாணத் தென்னையில் நல்லதாக, ஒரே ஓர் இளநீர் பறித்துவா!" என்று ஏவினான்.

ஒரே இளநீரில் இரண்டு ஸ்டிரா போட்டு குடித்தது வேடிக்கையாகவும், ஒரு மாதிரி உற்சாகமூட்டுவதாகவும் இருந்தது!

இருவருக்குமே, இது போன்ற பழக்கங்கள் இல்லாத காரணத்தால், ஸ்டிராவை உதட்டால் பற்றக் குனியும்போது, முன்னந்தலையும் முட்டிக் கொண்டனர்.

சற்று வலிதான் என்றாலும், இருவருக்கும் சிரிப்பே பீறிக்கொண்டு வந்தது!

"இதற்குத்தான், எந்த வேலைக்கும் சிறு வயதிலிருந்தே பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது!" என்று பெரிய அறிவுரை போலப் புரந்தரன் பெரிதாகக் கூறவும், 'இதற்குமா' என்று, மீண்டும் இருவரும் அடக்க முடியாமல் சிரித்தனர்!

'விர்'ரென்று பறந்த கிளிகள், தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்த மைனாக்கள், எல்லாமே மேலும் மனதைச் சிறகடிக்க வைக்க, இருவரும் நகை முகத்தோடேயே தோப்பிலிருந்து திரும்பி வந்தனர்.

வரும்போது, "இந்த மாதிரி நான் சிரித்து வெகு காலம் ஆயிற்று! உனக்கும் எனக்கும் ஒரு... ஓர் இலகுவான புரிந்து கொள்ளுதல்... ஒத்த மனப்பான்மை இருக்கிறது என்று நினைக்கிறேன்! இது, இனி வரும் நாட்களில், சென்னையில் மிகவும் உதவியாக இருக்கும்." என்று புரந்தரனை சொல்லவும், நந்தினி சட்டென அமைதியானாள்.

சில வினாடிகளின் பின்னே, "புரந்தர், நான் ரொம்பவும் எளிமையான கிராமத்துப் பெண். நகர்ப்புறத்து விஷயங்கள் அதிகம் தெரியாது! ஓரளவு தெரிந்து கொண்டதெல்லாம், மதுவைக் கவனித்துப் பயின்றதுதான். கொஞ்சம் டவுன் கல்லூரியில் மற்ற மாணவிகளைப் பார்த்து! இதெல்லாம், சென்னையில் எந்த மூலைக்குப் போதும்! அதிலும், அந்தச் சாயா அதி நாகரீகமாக இருக்கிறாளே! அங்கே நான் எப்படித் தாக்குப் பிடிப்பேன்?" என்று கவலையுடன் கேட்டாள்.

நம்பிக்கையூட்டும் வண்ணம் முறுவலித்தான் புரந்தரன். "அவளுடையது வெறும் வெளித் தோற்றம் மட்டுமே. உள்ளே வெறும் அடி மட்டம்! ஒரு சின்னக் காற்றடித்தால், சீட்டுக் கட்டு மாளிகை போல, அவளது வேஷம் எல்லாம்



கலைந்து, நடுத்தெரு தரத்துக்கு விழுந்துவிடுவாள்! ஆனால், உனக்கு உள்ளம் தெளிவாக இருக்கிறது! அதனால், இயல்பாகவே, ஓர் அமர்ந்த தோற்றமும் இருக்கிறது. அதனால், மற்றது முக்கியமில்லை! மனோதிடத்தை மட்டும் விட்டுவிடாதே!" என்றான் அவன்.

வீட்டின் உள்ளே வந்ததும், "என்னப்பா, ஒரே ஒரு காய் மட்டும் பறிக்கச் சொன்னாயாமே! நாலைந்து பறிக்கச் சொல்லி, நிறைய இளநீர் குடித்திருக்கலாமே!" என்று அஞ்சுகம்மா குரலில் ஒரு குறுகுறுப்புடன் வினவினாள்.

"நிறையத்தான் குடித்தோம்! யாழ்ப்பாணத் தென்னை! ஒரு காயிலேயே இரண்டு ஸ்டிராப் போட்டு, வயிறு முட்டக் குடித்தோம்!" வெகு இயல்பாகப் பேரன் கூறப் பாட்டியின் முகம் மலர்ந்தது!

அதையும் கவனியாதது போல, "வா நதிம்மா. என் அறையில் இன்னும் சில முக்கியப் பொருட்கள் உனக்குக் காட்ட வேண்டும்!" என்று, நந்தினியின் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றான்.

அறைக்குள் சென்றதும், அவளிடம் உதட்டில் மேல் விரல் வைத்துக் காட்டிவிட்டு, ஒரு புறத்து ஜன்னலின் திரையை லேசாக விலக்கி, அவளுக்குக் காட்டினான்.

வீட்டுக்குள்ளே, முற்றத்துத் தாழ்வாரத்தின் ஒரு மூலை தெரிந்தது.

பாட்டியம்மா முக மலர்ச்சியுடன், டெலிஃபோனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்ததும்.

"எதிர்பார்த்தேன்! வக்கீலுக்கு அறிக்கை சமர்ப்பித்தாகிறது! கேட்டிருப்பாரோ என்று நினைத்தேன்! அப்போது, அங்கிளின் சந்தேகம் பாதி போயிருக்கும்! இதேபோலவே தொடர்ந்து நடந்து கொண்டாலே, அவரைச் சமாளித்து விடலாம்... ஆனால் நந்தினி, உனக்கு இந்த நடிப்பு அப்படி ஒன்றும் கடினமாக இல்லையே, எனக்கென்னவோ, ரொம்பவும் எளிதாகவே... சரியாகச் சொல்லப் போனால், உற்சாகமூட்டுவதாகவும்கூட இருப்பது போலத்தான் தோன்றியது!" என்றான் வியந்த குரலில்!

"ஆ... ஆமாம்!" என்றாள் அவளும் ஆச்சரியமாக!

இந்தப் பொய்யும் நடிப்பும், அவளுக்கும் உற்சாகமூட்டுவதா

அதுவும், மனமொத்த தம்பதிகள் என்று மற்றவர்களை நம்ப வைத்ததற்காக செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும், என்றோ ஒரு நாள் அவள் வாழக்கூடிய இயல்பான மண வாழ்வை முழுமையாக அழித்துவிடக் கூடியது என்று அறிந்த பிறகும், அதிலே உற்சாகப்படுவது என்றால், அவளுக்கு மறை கழன்றிருப்பது, மிகவும் நிச்சயமே!

இவ்வளவெல்லாம் யோசித்த பிறகும், பாட்டி அஞ்சுகத்தின் வீட்டில் இருந்த இரண்டு நாட்களுமே, நந்தினிக்கு மிகுந்த மகிழ்ச்சிகரமாகக் கழிந்தன.

நினைவறிந்த காலமாய், அவள் அந்த அளவு ஆனந்தமாக இருந் இல்லை எனலாம்!

லாப்டாப்பை வைத்துக் கொண்டு வேலை செய்த நேரம் போக, முழுநாளும் புரந்தரன் அவளுடனேயே இருந்தான்.

தோப்பு, தோட்டம், வயல், வாய்க்கால்கரை, கோயில் என்று அவன் ர அனுபவித்த அத்தனை இடங்களுக்கும், அவளை அழைத்துப் போ காட்டினான்.

வண்டின் ரீங்காரம் போல, அவ்வளவு நேரமும் பேசவும், அவர்களுக்கு நி விஷயங்கள் இருந்தன!

அவனுக்குப் பிடித்தவை, அவனது ரசனைகள் என்று நிறையச் சொன் அதேபோல, அவளுக்குப் பிரியமானவை பற்றி அக்கறையுடனேயே விசாரித்

கலை, விளையாட்டுகளில், அவனது பல்வேறு ஈடுபாடுகள் அவளு புதியனவாகவே இருந்தன. அவற்றையெல்லாம் அறிவதற்கு அவளு அவகாசமோ, பண வசதியோ இருக்கவில்லை என்று அறிந்ததும், அ அவற்றைப் பற்றி இலகுவாக எடுத்துச் சொன்ன விதத்தில், அவளு அவற்றில் ஆர்வம் பிறந்தது!

இடையிடையே ஏதாவது ஜோக்கடித்துச் சிரிக்க வைப்பது வேறு!

மொத்தத்தில், புரந்தரன் அவளுக்குக் கதாநாயகன் ஆகிக் கொண்டிருந்

சுய பச்சாதாபம் இல்லாமல், இயல்பாக நந்தினி அவளது நிலை ஏற்றிருந்த விதத்தில், அவனுக்கும் அவளிடம் பரிவும் பிரியமும் ஏற்படலாயி

எனவே, தடையற்று உரையாடவும், சிறு வேடிக்கை விளையா சிரிக்கவும் இருவராலும் முடிந்தது!

புதுக் கணவன் மனைவிக்கிடையே குறுக்கிடாமல், இங்கிதமாக ஒ இருந்து, அவர்களுக்கு வேண்டியதைப் பார்த்துச் செய்த அஞ்சுகம்மா செய்கைகள், இருவருக்கும் இன்னமும் சிரிப்பூட்டின.

இவர்களுக்குத் தெரியாமல் செய்வதாக எண்ணி, வக்கீல் சகாயத்துக்கு அம்மாள் டெலிஃபோன் செய்ததும் அவர்களுக்கு வேடிக்கையாகத் இருந்தது!

வெகு சில சமயங்களில், பாட்டியைப் பார்த்துப் புரந்தரன் பரிதாபப்படு உண்டு.

"பாவம், மிகவும் ஏமாற்றமாக இருக்குமே என்று நினைக்கும்போது, கஷ் இருக்கிறதும்மா. நாம் பிரிவதை, நிச்சயமாக இவர்கள் தாங்கவே மாட்டா முதலில் இப்படித் திட்டமிடும்போது, பாட்டியின் உணர்வுகளை நான் பெ நினைக்கவில்லை! சில பெரிய நன்மைகளுக்காக, சிலரது வருத்தத்தை ம தேவையில்லை என்று சாதாரணமாக எண்ணினேன்! ஆனால், சின்னக் கு மாதிரி பாட்டி சந்தோஷப்படுவதைப் பார்க்கையில், தப்பு செய்துவிட்ட உ சங்கடமுமாக இருக்கிறது. இவர்களுக்காக, நாம் இப்படியே இருந்துவி



ன்ன என்றுகூடத் தோன்றுகிறது!" என்றான் ஒரு தரம்.

நந்தினிக்கும் முதியவளைப் பார்த்துப் பரிதாபம்தான். ஆனால், இவனுக்கு ம்ம்...' என்று ஒற்றை வார்த்தையில் அரைகுறையாகப் பதில் சொன்னால்கூட, யல்பில் பெண்களைப் பிடிக்காத இவனுக்கு, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, வனோடு ஒட்டிக் கொள்ள முயற்சிப்பது போலத் தோன்றும் என்று எண்ணி, ய் திறக்காமல் இருந்துவிட்டாள்!

கூடவே, அவளும்தான் படித்து, பெரிய வேலை பார்க்கப் போகிறாள் ணும்போது, அவளது எதிர்காலமும், அஞ்சுகம் அம்மாளை மையமாகக் கொண்டது அல்லவே!

இப்போதைக்குப் பாட்டியம்மாளின் அன்பைப் பார்த்து ஓர் இளக்கம்! பொய்மையாக என்றாலும், தாலி கட்டிய புரந்தரன் பக்கத்திலேயே இருப்பதால், துவே குடும்பம் போல ஒரு மயக்கம்.!

அவ்வளவே!

புரந்தரனின் நடவடிக்கையும் வெறும் நடிப்பே! அவனுடைய பாட்டியையும், ட்டி மூலமாக வக்கீல் சகாயத்தையும் நம்ப வைப்பதற்கான நடிப்பு!

இதில் எதையும் உண்மை என்று நினைத்து, அவள் மதி மயங்கிவிடக் டாது!

தெரிந்த உண்மைதான் என்றாலும், திரும்பத் திரும்பச் சொல்லியே, நந்தினி வளது மனதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியிருந்தது!

செய்தாள்! மனதுக்குப் பிடிக்காவிட்டாலும், பிடிவாதமாகச் செய்தாள்!

இரண்டு தினங்கள் இனிமையாகக் கழிந்ததும், சில பத்திரங்களில் கையெழுத்திடத் தேவைப்படுவதாக வக்கீல் அழைக்க, அஞ்சுகம்மாவிடம் பிரியா டை பெற்றுக் கொண்டு, இருவரும் சென்னைக்குக் கிளம்பிச் சென்றனர்.

ஆனால், சென்னை வீட்டின் சூடான சூழ்நிலை அவர்கள் இருவரையும் வந்த ரைவிலேயே அங்கிருந்து கிளம்பி ஓட வைத்தது!

சென்னைக்கு வந்ததுமே, "உங்கள் கல்யாணத்தை நம்ப முடியாது., அது வெறும் நாடகம்., சுதர்சனத்தின் சொத்துகளுக்காக நடிக்கப்படுவது! ஒரு பொய்யான நாடகத்தை நம்பி, புரந்தரன் வசம் பத்திரிகையை ஒப்படைக்கக் கூடாது என்று, நீலாவும் சாயாவும் புகார் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி ரில் பேச வேண்டும்." என்று சகாயத்திடமிருந்து தகவல் வர, இருவரும் வரைப் பார்க்கப் போனார்கள்!

திருமண வீடியோ, ஃபோட்டோக்களை மட்டும் காட்டிப் பயன் இல்லையாம்! எத்தனையோ டீவி சீரியல்களில், திரைப்படங்களில் திருமணம் நடப்பதாக கிறதே, அதைப் போலத்தான் இதுவும்., வெறும் நடிப்பு என்று, மாமியாரும் மகளும் பிடித்திருக்கும் வக்கீல் சொல்லுகிறாராம்!

ஆனாலும் கெட்டிக்காரத்தனமாக, புரந்தரன், நந்தினியைப் பொறுத்தவரை,



இது உண்மையான திருமணம்தான்! அப்படி இல்லை என்று யாரேனும் அநியாயமாகச் சொன்னால், சொல்லுகிறவர்கள்தான் அவர்களது கூற்றை நிரூபிக்க வேண்டும் என்று சகாயம் தெளிவாகச் சொல்லிவிட்டாராம்!

"சீக்கிரம் நிரூபிப்பதாக, நீலாவும் சாயாவும் சவால் விட்டிருக்கிறார்கள், புரந்தரன். திருமணம் ஆன பிறகும், அதை ஏற்காமல் அவர்கள் இப்படி வம்பிழுப்பது மடத்தனமாகத்தான் தெரிகிறது! ஆனால், பலகோடி பெறுமானம் உள்ள சொத்து. அதை, அவர்கள் இருவரும் சும்மா விட்டுவிட மாட்டார்கள். அதை அடைய, முழு மூச்சுடன்... எந்த அளவுக்கும் இறங்கி முயற்சிப்பார்கள். அசட்டையாகவோ, விளையாட்டுத்தனமாகவோ, அவர்களுக்கு ஏதேனும் இரை கொடுத்து விடாதீர்கள்! அப்புறம், பெரும் பிரச்சினை ஆகிவிடும்! அதனால், எப்போதும் கவனமாக இருங்கள்!" என்று எச்சரிக்கை செய்தார் அவர்.

திரும்பி வருகையில், "என்ன பெரிய கவனம்?!" என்று சற்று அலட்சியமாகவே கூறினான் புரந்தரன். "பாட்டி வீட்டில் இருந்ததை, இன்னும் சில நாட்கள் நீட்டிக்க வேண்டும். அவ்வளவுதானே?"

அப்படி இராதே என்றிருந்தது, நந்தினிக்கு.

பாட்டில் வீட்டில், சில கணக்கு வழக்கு பார்ப்பதைத் தவிரப் புரந்தரனுக்கு வேறு வேலை கிடையாது! அவர்கள் இருவருமாகத் தோட்டம் துரவு என்று சேர்ந்தே போனார்கள்., சுற்றினார்கள்., வந்தார்கள்!

வீட்டில் சற்று நேரம் பாட்டியோடு நந்தினி இருக்க நேர்ந்தாலும், அஞ்சுகம்மா அன்பான பெண்மணி என்பதால், அந்த நேரமும் சந்தோஷமாகவே கழிந்தது!

ஆனால், இங்கே அப்படியல்லவே!

புரந்தரன் பத்திரிகை அலுவலகத்துக்குச் சென்று விடுவான். அவள் அல்லவா, தனியாகப் பகையாளிகள் நடுவில் இருந்தாக வேண்டும்!

வக்கீல்... ஏன், புரந்தரனே சொன்ன அளவில், நியாய அநியாயத்தோடு, நாகரீகமும் பாராத பகையாளிகள்!

தப்பைத் தேடாதவர் சகாயம் அங்கிள். அவரிடமே நேர்ந்தது போல, அவளால் பிரச்சினை ஏற்பட விட்டு விடக் கூடாது என்று எண்ணினாள் அவள்!

அதற்காகவே, பத்திரிகைகளில் படிப்பு, வேலை வாய்ப்பு பற்றிய பகுதிகளை அவள் பிரித்துப் பாராமலே ஒதுக்கிவைத்தாள்.

புரந்தரன் அதைக் கவனித்தானோ என்ற சந்தேகம்!

ஆனால், அது சந்தேகம் என்றால், பத்திரிகைகளில் அவள் என்ன படிக்கிறாள், எப்படிப் படிக்கிறாள் என்று, அவளது ஒவ்வோர் அசைவும் ஊன்றிக் கவனிக்கப்படுகிறது என்பது, சந்தேகமே இல்லாத சர்வ நிச்சயம்!

பத்திரிகை படிப்பது மட்டும் அல்ல. புரந்தரனோடு அவள் எப்படிப் பேசி, பழகுகிறாள் என்பதைக் கண்குத்திப் பாம்பாக, அதே குறியாகக் கவனித்தார்கள்

மைக்ராஸ்கோப்பில் வைத்துப் பார்ப்பது போல, அவர்களது செயல்கள்



ல்லாமே அலசி ஆராயப்படும் என்று உணர்ந்ததால், நந்தினியும் ச்சரிக்கையுடனேயே நடந்து கொண்டாள்.

புரந்தரனின் கார் அந்தப் பக்கம் திரும்பியதுமே, வீட்டின் மற்ற இரு பெண்களும் நந்தினியின் இரு புறமுமாக அமர்ந்து கொண்டு, கேள்விக் ணைகளைத் தொடுக்கலாயினர்.

அவள் யார், எந்த ஊர், பிறந்த வீடு எப்படி, சொத்து சுகம் இருக்கிறதா? பெரிய டத்து உறவினர் இருந்தால், அவர்களைப் பற்றிய விவரம்...!

இது போன்ற விசாரணைகளை எதிர்பார்த்து, என்னென்ன சொல்வது என்று, ரந்தரனும் நந்தினியுமாகத் தீர்மானித்து வைத்திருந்தனர்.

கூடுமானவரை உண்மையிலிருந்து விலகிப் போகாமல், அதே சமயம் வீண் ண்டைக்கும் இடம் தராமல், நந்தினி அமைதியாகவே பதில் சொன்னாள்.

சொல்லிக் கொள்ளுகிறாற் போல உறவினர் இல்லை என்றதுமே, மற்ற ருவரிடமும் ஒரு மிதப்பு தெரியலாயிற்று.

பேச்சில் ஓர் உதாசீனமும்!

சாப்பிட்டால் சாப்பிடு, இல்லாவிட்டால் விடு என்பது போலக் கண்டு கொள்ள ட்டாளே தவிர, முதுகெலும்பை உடைத்துக் கோழையாக்கும் விதமாகப் பூரணி வளை நடத்தியதில்லை!

அத்தோடு, இந்த இருவரைப் பற்றியும், அவளுடைய கணவன் அவளிடம் ற்கனவே சொல்லியிருக்கிறான்தானே?

எனவே, "மாமாவை மணக்குமுன் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள், ன்ன அத்தை?" என்று அவர்களைப் போலவே, நந்தினி விசாரித்தாள்.

நீ யார், என்ன என்று கேளாமல், என்ன செய்து கொண்டிருந்தாய் என்ற கேள்வியிலேயே, இவளுக்கு விஷயம் ஏதோ தெரியும் என்று புரிந்து, நீலாம்பிகை றுத் திணறிப் போனாள்.

சிறு கேலியாக நோக்கிவிட்டு, "நீங்கள்..." என்று நந்தினி சாயாவிடம் ரும்பவும், அவளுக்குத் திடீரென்று தொண்டை கமறி, தண்ணீர் குடிக்கப் போக வண்டியதாயிற்று!

"ஒரே தலைவலி! காப்பிக் கொண்டு வரச் சொன்னால், இந்தச் சமையல்காரி ன்னதான் பண்ணுகிறாளோ? அங்கே போய்த்தான் குடிக்க வேணும்..." என்று முணுத்தபடி நீலாம்பிகையும் எழுந்து சென்றாள்.

'விரட்டுகிற நாய் கல்லைக் கண்டால் ஓடும்' என்பது இதுதான் போலும் என்று எண்ணிய நந்தினிக்குச் சிரிப்பு வந்தது!

ஆனால் அந்தச் சிரிப்பு விரைவிலேயே மறையும் வண்ணம், மாமியாரும், மகளுமாக, அவர்களது அடுத்த முயற்சியைத் தொடங்கினர்!

# 14 நான் என்பதும் நீ என்பதும்



**சா**யா, நீலாம்பிகையின் கோட்டையில், பலவீனமான ஒரு பகுதி இருந்தது!

அது, நீலாவுடைய அருமைப் புத்திரன் இந்திரேசன்தான்.

தாய், மனைவி இருவரிடமுமே அவனுக்குக் குறை இருந்தது!

தாய், தன் சுகத்தை மட்டுமே பேணுகிறவள் என்பதால், இந்திரேசன் எப்போதும் தந்தை பிள்ளை!

பெற்றவரிடம் அவனுக்கு இருந்த ஒரே வருத்தம், அவனது இருபது வயது கிறுக்குத்தனத்திலிருந்து அவனை மீட்க முயலாமல், தந்தை, அந்தச் சாயாவையே, அவனுடைய மனைவியாக ஆக்கியதுதான்!

கிட்டத்தட்டத் தாயைப் போலவே மனைவியும் என்பது புரிந்து போன பிறகு, அவனுக்குக் கம்ப்யூட்டர்தான் ஒரே ஆறுதல்!

தந்தையின் கடைசிக் காலத்தில், அவர், அவனிடம் சில பொறுப்புகளைக் கொடுத்தார்!

முக்கியமானது பத்திரிகையைக் காப்பது!

அடுத்தது, அண்ணனுக்குத் துணை நிற்பது!

அண்ணனுக்கு ஒன்று செய் என்று, அவனிடம் யாரும் கட்டாயப்படுத்த வேண்டியது இல்லை! ராமாயணத்து லட்சுமணனாக, உயிரையும் கொடுப்பான்!

இப்போதும், அதே விதமாக, மனைவி தாயாரின் சதி வேலைகள் பற்றி, அவனே புரந்தரன் தம்பதிக்குத் தகவல் கொடுத்தான்!

எந்தெந்த இடங்களில் இருந்து ஒட்டுக் கேட்பார்கள், எந்தெந்த இடங்களில் பதுங்கியிருக்கக் கூடும், இருவரும் என்னென்ன செய்யத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள் என்று, எல்லாமே அண்ணன், அண்ணியிடம் முன்னறிவிப்பு செய்து விடுவான்!

எனவே, பேச்சு செயலில் புரந்தரனும், நந்தினியும் கவனத்துடன் இருந்து, மாட்டிக் கொள்ளாமல் தப்ப முடிந்தது!

ஒருநாள், "இன்றைக்கு நம் பெண்கள் பத்திரிகைக்கு, பெண்களுக்குத் தனிச் சலுகை தந்து கொடுக்கப்படும் ஒரு பயிற்சியும், அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புகள் பற்றியும் ஒரு விளம்பரம் வந்திருந்தது! நல்ல சம்பளம்! அதனால்..." என்று மெதுவான குரலில் சொல்லிக் கொண்டே போன புரந்தரனின் பேச்சில், நந்தினி குறுக்கிட்டுப் பேசினாள்.

"ஆகா! என்ன அற்புதமான பயிற்சி! அந்த விளம்பரத்தின் ஒரு காப்பி எனக்கு உடனே கிடைக்குமா? அனுப்பினால், என் தோழி பாமா மிகவும் சந்தோஷப்படுவாள்! சீக்கிரமே, ஏதாவது நல்ல வேளையில் சேர்ந்தே ஆக வேண்டும் என்கிற நிலை என்று அன்றைக்குப் பேசும் போது சொன்னாள்!"



என்று, இடையில் மூச்சுக் கூட எடுக்காமல் வேகமாக அவள் கூறவும், இடையில் குறுக்கிடாமல், அவனும் கவனித்துக் கேட்டான்.

கேட்டுவிட்டு, "நிச்சயமாகக் கொண்டு வருகிறேன்! உன் தோழி என்கிறாய். அதற்குப் பிறகு, அவளுக்குச் செய்ய எனக்குக் கசக்குமா?" என்று சரசமாக மொழிந்தான் அவன்!

இருவரின் கலகலவென்ற சிரிப்பைத் தொடர்ந்து, சற்றுப் பொறுத்து, 'விசுக் விசுக்' கென்று, சாயா அங்கிருந்து சென்றதோடு, அந்த இடத்தில் அன்றையக் காட்சி நிறைவடைந்தது!

தனிமையில் பேசும்போது, சமயத்தில் இந்திரேசன் எச்சரிக்கை செய்தது பற்றி, நந்தினி தெரிவித்தாள். "நாம் இந்த வராண்டாவில் உட்கார்ந்து பேசுவதைக் கவனித்து, டேப் ரிக்கார்டருடன் சாயா முன்னதாக இங்கே வந்து ஒளிந்து கொள்ளப் போவதாக, அம்மாவும் மனைவியும் பேசிக் கொண்டிருந்தார்களாம். மாலைக் காஃபியின் போது இந்திரேசன் ஜாடையாகச் சொன்னார். அதற்குள் நீங்களும் அலுவலகத்திலிருந்து கிளம்பிவிட்டதோடு, வீட்டிலும், காஃபியை அனுப்பச் சொல்லி விட்டு, நேராக இங்கே வந்தே உட்கார்ந்துவிட்டீர்கள்! முன்னதாக உங்களிடம் எச்சரிக்க வாய்ப்பே கிடைக்கவில்லை!" என்றாள் அவள் விவரமாக.

வேலை படிப்பு பற்றித் தெரிவித்துவிட்டு, "இது உனக்கு ஒத்து வரக் கூடியதான நல்ல வாய்ப்பாகத் தோன்றியது. கூடவே, குறிப்பிட்ட அளவு இடங்கள்தான் என்பதால் சீக்கிரமாகச் சொல்லி, முயற்சி எடுக்கச் சொல்லலாம் என்று நினைத்தேன்!" என்றான், அவன்.

நல்ல வாய்ப்புதான். கிடைத்தால், மேலே மேலே படித்து முன்னேறவும் வழி இருந்தது! ஆனால், அதைப் பற்றிப் பேசுவது கூட ஆபத்தாக இருக்கிறதே! ஒன்று தொட்டு ஒன்றாகப் புரந்தரனுக்குப் பத்திரிகை வருமுன், மற்றது நடக்க வழியில்லை!

"எங்கே?" என்றாள் அவள். "சூழ்நிலையைப் பார்த்தால், இதைப் பற்றிய பேச்சைத் தொடங்குவதே ஆபத்தாகத் தெரிகிறதே! அதற்கு மேல், பயிற்சிக்கு எப்படிப் போவது? இருக்கட்டும். முதலில் உங்கள் பிரச்சினை நல்லபடியாக முடியட்டும். அதன் பிறகு என் தலைவிதியை என்னவென்று பார்க்கலாம்."

"தலைவிதி?"

தலைவிதிதான்! நாள் முழுவதும் நீலாம்பிகை, சாயாவைச் சமாளிக்க நேர்வதை மோசமான தலைவிதி எண்ணாமல், வேறு என்ன சொல்வது?

"ஆமாம். இவ்வளவு காலமும் எதுவும் நினைத்தது போல எனக்கு நடந்ததில்லை! திட்டமிட்டபடியும் நடத்த முடியாமல் எங்கெங்கோ இடிக்கிறது! சரி., தானாக என்ன வருகிறதோ, வரட்டும் என்று எப்போதும் போலக் கையைக் கட்டிக் கொண்டு பொறுமையோடு காத்திருப்பதுதான் மேலோ என்று இப்போது தோன்றுகிறது!" என்றாள் நந்தினி சலிப்பை மறைக்க முயன்றபடி.

"நான் அப்படியில்லை! திட்டமிடுவதும், செயலாற்றுவதும்தான் என்



பழக்கம்!" சற்று அழுத்தமான குரலில்.

"இப்போது போலத் தடை நேர்ந்தால்?"

"என் திட்டத்தில் பிரச்சினை நேர்ந்தால், மறு திட்டமிட்டு, அதைச் செயல்படுத்துவேன்! சகித்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டேன்!" என்றான் புரந்தரன்.

சகித்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டிய நிலை எவ்வளவு வேதனை என்பது, இவனுக்கு என்ன தெரியும் என்ற எண்ணினாள் நந்தினி. கடவுள் புண்ணியத்தில் தெரியவும் வேண்டாம்! பெரும்பாலும் தன் விருப்பம்போல நடந்து பழகிய இவனால், அதைத் தாங்க முடியாது!

புரந்தரனே சலித்துப் போகிற அளவுக்குச் சாயாவும் நீலாவுமாகச் செயல்பட்டார்கள்.

வீட்டில் ஒரு பத்து நிமிஷம், இலகுவாக இருக்க முடியாமல் போயிற்று!

எந்நேரமும் கையில் டேப் ரிக்கார்டரையும் செல்ஃபோனையும் வைத்துக் கொண்டு, மாமியாரும் மருமகளும் வேட்டை நாய்களாய் இவர்கள் இருவரையும் விரட்டினார்கள்.

அசந்து மறந்து, ஏதேனும் ஒரு சமயத்தில் உண்மையைப் பேசிவிடுவார்களாம்! இந்தத் திருமணம் நடிப்பு என்பது வெளிப்பட்டு விடுமாம். அதை, டேப்பில், செல்ஃபோனில் பதிவு பண்ணி விடுவார்களாம்.

அப்புறம், அந்த ஆதாரத்தைக் கொண்டு, நந்தினியை வீட்டை விட்டு விரட்டி விடுவார்களாம்!

கையோடு, சொத்துக்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு புரந்தரனையும் தெருவில் ஓட்டி விடுவார்களாம்!

அப்புறம் சொத்தெல்லாம் அவர்களுக்கே!

விற்று, எத்தனையோ கோடி தேற்றலாம்!

அந்தப் பணத்தைக் கொண்டு... என்று எத்தனையோ கனவுகள்!

எல்லாவற்றுக்கும் அடிப்படை புரந்தரனும் நந்தினியும் கணவன் மனைவி அல்ல என்கிற உண்மை! அதை அடைவதற்கு, எந்த வழியும் தப்பாகப் அவர்களுக்குப் படவில்லை!

அதனால்தான், புதிதாகத் திருமணம் செய்தவர்கள் என்பதையும் பாரா இங்கிதம் என்ற வார்த்தையையே அறியாதவர்கள் போல, கணவன் மனைவியின் பின்னோடு அலைந்தார்கள்.

பெரும்பாலும் இந்திரேசன் உளவு சொன்னதால், நெருக்கமாக இருப்பது போலப் பேச்சிலும், ஓரளவு செயலிலும் காட்டி அவர்களை அசடு வழிய வைப்பது முதலில் சற்று வேடிக்கையாகத்தான் இருந்தது! ஆனால், இயல்பாக ஒரு வார்த்தை கூடப் பேச முடியாத நிலை, விரைவிலேயே இந்த இருவருக்கும் எரிச்சலூட்டலாயிற்று!

பொறுத்துப் போவதில் பழக்கம் உள்ள நந்தினிக்கே அலுப்பாக இருந்தது என்றால், புரந்தரனைப் பற்றிக் கேட்கவே தேவையில்லை!



நாளாக நாளாக, முகத்தில் கடுப்பும் எரிந்து விழுவதுமாக யாரும் அவனை நெருங்கிப் பேசத் தயங்கி ஒதுங்கும்படி ஆயிற்று!

இந்தக் கடுமையை ஒருதரம் நந்தினியும் அனுபவிக்க நேர்ந்தது!

புரந்தரனின் அறையின் ஒரு புறம் மாடிப் படிகளில் இருந்து அறைகளுக்கு வரும் வராந்தா என்றால், எதிர்ப்புறத்தில் அகலமான கண்ணாடியால் ஆன தள்ளு கதவுடன் கூடிய பெரிய 'சிட்அவுட்' இருந்தது!

இரு பகுதிகளில் அமர்ந்திருப்பதுமே அவனுக்குப் பிடிக்கும்!

உள் வராந்தா பல இடங்களில் இருந்து பார்க்கக் கூடியதாக இருந்ததால், இப்போதெல்லாம் அவன் வெளி 'சிட்அவுட்'டிலேயே அதிகமாக அமரத் தொடங்கியிருந்தான்.

காற்றாட அங்கே அமர்ந்து, அலுவலகத்திலிருந்து கொண்டு வரும் ஃபைல் பார்ப்பான். அல்லது அங்கே கிடந்த சின்ன கண்ணாடி மேஜைமீது 'லாப்டாப்'பை வைத்து வேலை செய்து கொண்டிருப்பான்.

சும்மாவே அன்று புரந்தரனுக்கு ஆத்திரம்!

வக்கீல் சகாயம் அவனைத் தொடர்பு கொண்டு, நீலாம்பிகை, அவளது ...த்தை நிரூபிப்பதற்காக இன்னும் கொஞ்சம் அவகாசம் கேட்டிருப்பதாகவும், ...தற்கு ஒத்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்.

"ஏன் மறுக்கவில்லை?" என்று புரந்தரன் எரிச்சல் பட்டதற்கு, அப்புறம் அதை ...டுத்துக் கொண்டு நீலாம்பிகை கோர்ட்டுக்குப் போனால், உயிலை ...டைமுறைப் படுத்தும் பொறுப்பாளரான அவர், ஒருதலைப் பட்சமாக ...ந்ததாக ஆகிவிடும் என்று விளக்கவே, அதை மறுத்துப் பேச முடியாமல், ...வன்தான் சும்மா இருக்கும்படி ஆயிற்று!

அத்தோடு, "எவ்வளவு நாட்கள் ஆனால் என்ன புரந்தர்? பத்திரிகை நிர்வாகம் ...ன் கையில்தானே இருக்கிறது? அதற்காக அவசரம் காட்டும்படி நாம் ...கோர்ட்டில் கேட்கவும் முடியாது! நாம் பேசாமல் உட்கார்ந்திருப்போம். ...வர்களாக முட்டி, மோதி தலை குனிந்து, தோற்றோம் என்று வரட்டுமே! ...தில் நமக்கென்ன பிரச்சினை?" என்று அவர் கேட்கையில் அவனால் எதுவும் ...சொல்ல முடியாது போயிற்று!

எரிச்சலை உள்ளடக்கி, "நீங்கள் சொல்வது சரிதான், அங்கிள்! அவர்களாகத் ...தோல்வியை ஒத்துக் கொள்ளட்டும்!" என்றுதான் சொல்ல நேர்ந்தது!

அத்தோடன்றி, வீட்டில் நந்தினியிடம் வேறு இதைச் சொல்லி, 'இன்னும் சில ...நாட்கள் பொறுத்திரு' என்று தப்பு செய்தவன் போலக் கேட்க வேண்டும்!

என்னதான் 'கையைக் கட்டிக் கொண்டு காத்திருப்பேன்' என்று அவள் ...சொன்னாலும், எப்போது பொறுமையிழந்து கத்தப் போகிறாளோ?

இப்படி ஒரு நிலையில் மாட்டும்படி ஆகிவிட்டதே!

இந்த மாதிரி மன நிலையில்தான், புரந்தரன் 'சிட்அவுட்'டில் அமர்ந்து அடுத்த ...இதழ்த் தலையங்கத்தைப் படித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மூன்று கொடூரமான சம்பவங்கள்! பெண்கள் ராட்சசிகளாக மாறி,

குற்றமிழைத்திருந்தார்கள்! அவர்களை நியாயப்படுத்தி, பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தார்!

அவற்றுள் ஒன்றில், கணவனையும், அடுத்தவளையும் மனைவி கொன்றிருந்தாள்.

படிக்கையில், புரந்தரனுக்குத் தன் பெற்றோரின் நினைவு வந்தது!

எதிர்ப்புக் காட்டிப் போராடவில்லை என்று தாயிடம் அவனுக்குக் கோபம் உண்டு!

ஆனால், இந்தப் பெண் காட்டிய எதிர்ப்பு! அடியோடு நியாயமில்லை என்று சொல்ல முடியாதுதான்! ஆனால், இனி அவளுடைய பிள்ளைகளின் கதி?

தனக்காகத்தான் தாயும் பொறுத்தாளோ? ஆனாலும் மனம் தாங்க மாட்டாமல்தான் ஒரேயடியாக ஒதுங்கினாளோ கோழை என்று தப்பாக நினைத்தானே!

இந்தத் தவிப்பில் அவன் இருந்தபோது, அவனது தோளில் கை வைத்து, நெருக்கமாக நந்தினியின் முகம் வந்தது!

"என்ன, வந்ததுமே வேலையில் இறங்கிவிட்டீர்கள்?"

எந்நேரமும் காவல் நாய்களாக மோப்பம் பிடித்துக் கொண்டு அலைகிறவர்களுக்காக இது போன்ற தோற்றங்கள் அவ்வப்போது கொடுப்பதுதான்!

ஆனாலும், 'சிட்அவுட்' சற்றுத் தனிமையான இடம் என்றுதானே, புரந்தரன் இங்கே வந்து அமர்ந்தான்?

உள்ளிருந்த எரிச்சலும் தவிப்பும் வடிகால் தேட, "உருக்கம் பலமாக இருக்கிறதே! இந்த சுகங்கள் பழகப் பழக, இப்படியே இருந்து விடலாம் போலத் தோன்றுகிறதா? வேலை, பயிற்சி எல்லாம் நினைப்பது போலக் கூடத் தெரியவில்லையே!" என்று அடிக் குரலில் விஷத்தை உமிழ்ந்துவிட்டான்!

ஆனால் சொல்லி முடிக்கும்போதே, அவனது தோளில் படிந்திருந்த கையின் சிறு நடுக்கம் புரிபட்டுப் போயிற்று!

கூடவே, அவனது பேச்சினால், அவளிடம் உண்டான விறைப்பும்!

தப்பாக வாயை விட்டுவிட்டதை உணர்ந்து அவன் "சாரி, சாரி!" என்று வருத்தம் தெரிவித்ததைக் கவனியாதவள் போன்று, "பாருங்கள், என் தலை இருக்கும் கோணத்துக்கு நேர் பின்புறம் இருக்கும் மரத்தின் பின்னே, சின்ன ஏணியில் ஏறி, சாயா வீடியோ கேமிராவோடு நிற்கிறாள். இந்த இடத்தை மற்றபடி பார்க்க முடியவில்லையாம். இப்போது என் தலையும் கூந்தலும் உங்களை மறைக்கிற விதமாக இருப்பதால், உதட்டு அசைவைக் கொண்டு கூட, ஒன்றும் கண்டுபிடிக்க முடியாது! இப்படி ஒரு போஸ் கொடுத்து, சாயாவை விரட்டும்படி, இப்போதுதான் இந்திரேசன் சொன்னதால்..." என்று ஒரு மரத்த, அதே சமயம் தணிவான குரலில் சொல்லி முடித்தவள், மெல்ல நிமிர்ந்தாள்.

நந்தினியோடு கூடவே உள்ளே வந்து, அவளது கையைப் பற்றி நிறுத்தி, "ப்ளீஸ் நந்தினி, என் பேச்சு ரொம்பவும் தப்பு! உள்ளிருந்த எரிச்சலில், சற்றும்



யோசியாது சொன்னது. சொல்லும்போதே புரிந்துவிட்டது. ஆனால்... வீட்டுக்குள் வந்தாலே இவர்களது சித்திரவதை தாங்க முடியவில்லை! வெளியேயும்... எதையுமே, உன்னைப் போலப் பொறுத்துப் போய் எனக்குப் பழக்கமில்லை! என்றாலும், அதற்காக உன்னைக் காயப்படுத்தியது எந்த விதத்திலும் நியாயம் இல்லைதான்! ஆனால், தயவுபண்ணி மன்னித்துவிடு!" என்றான் அவன் வருத்தமாக.

"அன்றைக்கு நீங்கள் பயிற்சி பற்றிச் சொன்னதை, நான் சரியாக ஏற்கவில்லை என்று எண்ணினீர்களோ என்று, அப்போதைக்கு எனக்குச் சந்தேகம் இருந்தது." என்றாள் அவள் அவனை நேராகப் பார்த்து.

இந்தப் பார்வைக்கு எப்படிப் பொய்யான பதில் சொல்வது?

"ஒருதரம் அப்படி நினைத்தது நிஜம்தான், நந்தினி. ஆனால் உடனேயே, இப்போதைக்கு உன்னால் எந்தவிதக் கல்விப் பயிற்சிக்கும் போக முடியாது என்பதும், அது எனக்காகவே என்றும் புரிந்து போயிற்று! அதனால், அப்படி எந்த எண்ணத்தையும் மனதில் வைத்திருந்து, இப்போது சொல்லவில்லை! எனக்குள்..." என்று சொல்லும்போதே, வெளியே மெல்லிய காலடி ஓசை கேட்க, அவனது பேச்சு நின்றது.

கண்களை ஒரு முறை இறுக மூடித் திறந்தவன், "வா நந்தினி. நாம் இருவரும் வெளியே போய்ப் பல நாட்கள் ஆகிவிட்டன. கொஞ்சம் சுற்றிவிட்டு வருவோம்!" என்று உரத்த குரலில் கூறியவாறே, 'ப்ளீஸ்' என்பது போலக் கையால் சைகை செய்தான்.

என்னதான் வருத்தம் தெரிவித்தாலும், தப்பை ஒத்துக் கொண்டாலும், அவனது நியாயமற்ற குற்றச்சாட்டினால் ஏற்பட்ட கோபம் நந்தினிக்கு முழுதாக மறையவில்லை. என்றாலும், அவன் இன்னும் ஏதோ சொல்ல விரும்புகிறான் என்று புரியவே, சிறு தயக்கத்தின் பின் ஒப்புதலாகத் தலையாட்டினாள்.

இருவருமாகக் காரில் செல்லுகையில், "பத்திரிகை விஷயமாகப் புதிதாக ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்டாள்!

"புதிதாக என்ன? எல்லாம் பழைய பிரச்சினைதான்!" என்று சலிப்புடன் சகாயத்தின் பேச்சைச் சொன்னான் அவன்.

"அவரே இன்னும் சந்தேகத்தில் இருப்பது போலத் தோன்றுகிறதே!" என்றாள் அவள். "என்னால் வந்தது என்றும் எண்ணியிருப்பீர்கள்!" மது வீட்டில், பத்திரிகையில் நான் குறித்து வைத்ததால்தான் என்று...

"இல்லை!" என்றான் அவன் சுருக்கமாக. "ஆனால், இன்னும் கொஞ்ச நாட்கள் கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திரு என்று உன்னிடம் எப்படிச் சொல்வது என்ற எரிச்சல்! அதுவும், நான் அப்படியெல்லாம் இருக்க மாட்டேன்., செயல் வீரனாக்கும் என்றெல்லாம் பெரிதாக அளந்துவிட்டு!"

அவன் சொன்ன விதத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட, அவனும் லேசாக அசடு வழிந்தான்.

ஆனால், அந்த மலர்ச்சி உடனே மறையவும், "இன்னும் ஏதோ இருக்கிறது



போலத் தெரிகிறதே!" என்றாள் அவள்.

பத்திரிகைத் தலையங்கத்தைப் பற்றிச் சொன்னவனுக்குத் தாயைப் பற்றியு[ம்] தடையற்றுக் கூற முடிந்தது!

"சொல்வது சுமை இறக்கும் என்று உன்னிடம் சொன்னேன். அதை நாே[ன] உணரக் கூடும் என்று அப்போது நினைக்கவில்லை!" என்று ஒரு நெடுமூச்சுட[ன்] முடித்தான் புரந்தரன்.

தாயிடமே கோபம் என்றால், அந்த வயதில் எப்படித் தவித்திருப்பான் என்[று] மனம் உருகினாள் அவள்! அந்த உருக்கத்தில், அவளது ஆத்திரம் இருந்த இட[ம்] தெரியாமல் மறைந்து போயிற்று!

காரை நிறுத்தி ஆளுக்கோர் இளநீர் வாங்கிக் குடித்துவிட்டுத் திரும்[பி] வந்தபோது, இருவர் மனமுமே சற்று லேசாகியும் இருந்தது.

வீட்டுப் பிரச்சினைகளை அலட்சியமாக எதிர்கொள்ளும் திடமும் கை வந்திருந்தது!

ஆனால் மறுநாளே இந்திரேசன் அண்ணனைத் தனியாக அழைத்[து] எச்சரித்தான். "அம்மாவும் சாயாவும் ஏதோ பெரிதாகச் செய்யப் போகிறார்கள், அண்ணா. நான் உங்களுக்கு ஆதரவாகச் செயல்படுகிறேன் என்[று] இப்போதெல்லாம், எனக்குத் தெரியாமல் கூடிப் பேசுகிறார்கள். புதிதா[க] என்னவோ கண்டுபிடித்தும் விட்டார்கள். இது பிரம்மாஸ்திரம்., இதிலிருந்[து] நீங்கள் தப்பவே முடியாது. முடியாது என்று அம்மாவிடம் சாயா சொல்லி[க்] கொண்டிருந்தது என் காதில் விழுந்தது! கவனித்துக் கேட்கலாம் என்[று] பார்த்தால், என்னைக் கண்டதும், 'உஸ் உஸ்' என்று இருவரும் பேச்சை நிறுத்[தி] விட்டார்கள். அது என்ன பிரம்மாஸ்திரம் என்று புரியவில்லை!... அண்ணா[!] இப்போது சில நாட்களாக எனக்கே குழப்பமாக இருக்கிறது! உண்மையை[ச்] சொல்லுங்கள், உங்கள் திருமணம் உண்மையானதுதானா? சாயாவும் அம்மாவு[ம்] சொல்வது போல இல்லையே?"

நேரடியாகப் பதில் சொல்லாமல், "என்னடா திடீரென்று உனக்கு இப்படி ஒ[ரு] சந்தேகம்?" என்று பதில் கேள்வி கேட்டான் பெரியவன்.

கூடக் கொஞ்சம் கெட்டிக்காரனாக இருந்தால், தான் கேட்டதற்கு உடனடி பதில் தராமல், திசை திருப்பும் விதமான இன்னொரு கேள்வியிலேயே உண்மையை உணர்ந்திருப்பான். ஆனால் அந்த யோசனையே இல்லாமல் அண்ணனுக்குப் பதில் சொல்ல முனைந்தான் இந்திரேசன். "தெரியலை அண்ணா! சாயா சொல்கிறாள், அண்ணியிடம் திருமணமான பெண்ணின் தோற்றமே இல்லையாம். படிக்கிற அறியாப் பெண் போலத்தான் இருக்கிறார்கள். அதனால் நீங்கள் கணவன் மனைவியே இல்லை என்று அடித்து[ச்] சொல்கிறாள்..."

"உன்னையா?"

ஒரு கணம் திகைத்த இந்திரேசன், விஷயம் புரிந்து நகைத்தான்.

பிறகு, "போங்கண்ணா! என்னை அடிப்பாளா? ம்ம்ம்... போகிற போக்கை[ப்]



பார்த்தால், அடித்தாலும் அடிப்பாள். அப்படி அடிக்கிறபோது, வெளியே தெரியாமல் அடிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்!" என்றவன் தொடர்ந்து, "என்னண்ணா நீங்கள், எவ்வளவு முக்கியமான விஷயம் பேசிக் கொண்டிருக்கும்போது ஜோக்கடிக்கிறீர்களே! நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்... ம், எனக்கு ஏன் சந்தேகம் என்றுதானே? சாயா சொன்ன பிறகு, நீங்களும் அண்ணியும் அடுத்தவர் முன்னிலையில்தான் சிரித்துப் பேசுவது போல, எனக்கே தோன்றுகிறது! சும்மா பார்த்தால், நீங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள்., அண்ணி ஏதாவது படித்துக் கொண்டோ, வரைந்து கொண்டோ இருக்கிறார்கள். அதனால்தான் சந்தேகம்!" என்று விளக்கம் சொல்லி முடித்தான்.

இதுதான் பரம்பரை ஆண்டிக்கும் பஞ்சத்து ஆண்டிக்கும் உள்ள வேறுபாடு!

எப்போதும் நடிக்கத் தோன்றாததால், கொஞ்சம் மந்தம் என்று சொல்லப் படுகிற இவனிடமே மாட்டியிருக்கிறார்கள்!

இவனை சமாளிப்பது பெரிதல்ல! ஆனால், மற்றவர்கள்?

கடகடவென்று சிரித்து, "பெரிய துப்பறியும் புலி ஆகிவிட்டாய் போல! டேய் தம்பி, யோசித்துப் பார்! சித்தியும் உன் மனைவியும், எங்கிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற ஐயத்துடனேயே இருக்கும் போது, எப்படிம்மா, நாங்கள் இயல்பாக இருக்க முடியும்? அந்த நினைப்பே, இயற்கை உணர்ச்சியைக் கொன்றுவிடாதா? அதுவும், நாங்கள் இருவரும் நன்றாகப் பழகுவதற்கு முன்பாகவே இங்கே வந்துவிட்டோமா, எங்களுக்கு எவ்வளவு தயக்கமாக இருக்கும்? யோசித்துப் பார்த்துச் சொல்லு! நீயும் திருமணம் ஆனவன்தானே?" என்று மீண்டும் இந்திரேசனையே பதில் சொல்ல வைத்தான் புரந்தரன்.

முகம் வாட, "இது மட்டுமா? இயற்கை உணர்வுகளைக் கொல்ல இன்னும் எத்தனையோ இருக்கிறதே!" என்று பெருமூச்சு விட்டான் தம்பி.

பிறகு, "பேசாமல், இவர்கள் யார் கண்ணிலும் படாமல் அண்ணியை அழைத்துக் கொண்டு எங்கேனும் போய் விடுங்களேன், அண்ணா! இந்தப் பத்திரிகைப் பிரச்சினைக்காக, நீங்களும் தேனிலவுக்கு எங்கும் போகாமல், நேரே இங்கே வந்துவிட்டீர்கள்! பாட்டி வீட்டில் இருந்ததையும் தேனிலவோடு சேர்க்க முடியாது! இப்போதேனும் போய், வேண்டிய நாள் தங்கி, ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டு, அப்புறம் திரும்பி வாருங்களேன்!" என்றான் இந்திரேசன்.

"நல்ல ஐடியா! நானும் நதியும் இது பற்றி யோசிக்கிறோம்!" என்று அப்போதைக்குத் தப்பிச் சென்றான் புரந்தரன்!

இந்தத் தேனிலவுப் பயணம், அப்போதைக்கு வெறும் ஐடியாவாகச் சொன்னதுதான்.

ஆனால், இரண்டே நாட்களில் நிஜமாகவே புரந்தரன் மனைவியோடு தேனிலவுக்குக் கிளம்பிவிட்டான்!

# 15 நான் என்பதும் நீ என்பதும்



**நோ**க்கம் நிறைவேறியதும், எப்படியும் பிரிந்துவிடப் போவதாக இருந்ததால், தேவைக்கு அதிகமாகத் தங்கள் திருமணத்தை வெளியே பறைசாற்றக் கூடாது என்று, புரந்தரன், நந்தினி இருவருமே தீர்மானித்திருந்தனர்.

அதனாலேயே, வேலை என்ற சாக்கில், பலர் அறியச் சுற்றுவதைத் தவிர்த்திருந்தனர்.

பாட்டி வீடு கூட, வேறு வழியின்றிச் சென்றதுதான்!

தவிர்க்கப் பட்டதில் தேனிலவும் அடக்கம்!

ஆனால், தேனிலவு பற்றிப் பேச்செடுத்த இரண்டே நாட்களில், இந்திரேசன், பத்திரிகை அலுவலகத்துக்கே வந்து, அண்ணனைத் தனியே சந்தித்தான்.

அவனைத் தனியே அழைத்துச் சென்று, "நீங்கள் இருவரும் உடனே கிளம்பி எங்கானும் போய் வாருங்கள், அண்ணா! அம்மாவும் சாயாவும் அவர்களடைய பிரம்மாஸ்திரத்தைத் தயார் பண்ணி விட்டார்கள் போலத் தெரிகிறது! நாளைக்கே உங்கள் இருவரையும் மடக்கிப் பிடித்துக் காலை ஒடித்துவிடப் போகிறார்களாம்! வெற்றியில் எவ்வளவு நம்பிக்கை பாருங்கள், அந்த அடுக்கு மாடி வீட்டு ஆ... நாதனையும் வரவழைத்துப் பேசியிருக்கிறார்கள்! இந்தத் தடவை தட்டினால், அப்புறம் முகத்திலேயே முழிக்கக் கூடாது என்று அவர் சொன்னதை, நானே கேட்டேன்! எதற்கும், அவரைத் தட்டி விடுவதற்காகவாவது, இரண்டு பேரும் எங்கேனும் போய் வாருங்கள்! தேனிலவுக்கு என்றாலே, அவர்கள் முகத்தில் க... பூசிய மாதிரியும் இருக்கும்!" என்று அவசரப் படுத்தினான்.

ஒரு கணம் யோசித்துவிட்டு, "எனக்குச் சம்மதம்தான். ஆனால், அண்ணி என்ன சொல்லுகிறாளோ?" என்றான் புரந்தரன்.

"ஒரு கல்லில் இரு மாங்காயாக, அம்மா, சாயாவின் தொல்லையிலிருந்து தப்பின மாதிரியும் இருக்கும்., நீங்கள் இருவருமாகத் தனியே ஊர் சுற்றின மாதிரியுமாகக் கொஞ்ச நாள் எங்காவது வெளியூர் சென்று வந்தால் என்ன என்று, நான் வரும்போதே அண்ணியிடம் கேட்டுவிட்டுத்தான் வந்தேன்! நீங்கள் என்ன சொல்லுவீர்களோ என்றுதான் அண்ணிக்கு யோசனை!" என்றான் இந்திரேசன்.

மேலும் யோசனையோடு தம்பியைப் பார்த்தான் மூத்தவன்.

"என்னண்ணா, என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை. இது போலப் பத்திரிகையின் பக்கம் தயாராகும் நேரத்தில் விட்டுவிட்டு வெளியூர் போவது கஷ்டம்..."

"போகாவிட்டால், பெரும் கஷ்டமாகி விடும் போலத் தெரிகிறதே!"



"அதனால்தான் ஓர் ஐடியாப் பண்ணியிருக்கிறேன்! அடுத்துச் செய்ய வேண்டிய வேலையைக் கம்ப்யூட்டரில் குறித்து வைக்கிறேன்! நீ தினமும் அலுவலகம் வந்து, அதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்! வேலை நடக்கிறதா, இல்லையா என்று கவனித்து, எனக்குத் தகவல் சொல்ல வேண்டும்!"

திகைத்து, "நா...ன்... நானா, அண்ணா? இதெல்லாம் செய்வதற்கு, எனக்குப் பத்திரிகை பற்றி என்ன தெரியும்? அதனால்தானே, அப்பா கூடப் பத்திரிகையை உங்களுக்கு மட்டுமாகக் கொடுத்திருக்கிறார்!" என்று , தன் இயலாமையைத் தெரிவித்தான் சின்னவன்.

"தெரியாமல் போவதற்கு, இது ஒன்றும் செப்பிடு வித்தையல்ல, இந்தர்! நீ செய்ய வேண்டியது கம்ப்யூட்டரில் இருக்கும்! அதைப் பார்த்து, செயல்படுத்து, அதுவே இப்போதைக்குப் போதும்! பார் தம்பி, அப்பாவுக்கு நாம் இரு பிள்ளைகள். இருவருமாக, அவர் தொடங்கியது அழிந்து போகாமல், உறுதியோடு இருந்து காப்பாற்ற வேண்டும்! இதில், அடுத்தவர் தலையீட்டை அனுமதிக்கக் கூடாது! அது, அப்பாவுக்குச் செய்யும் துரோகம் என்று நினைவு வைத்துக்கொள்! சரிதானா? இனி, நான் கிளம்புவதைப் பார்க்கிறேன்!" என்று நந்தினிக்கு ஃபோன் செய்தான்.

அவள் கிட்டத்தட்டத் தயாராகவே இருந்தாள்.

இந்திரேசனின் யோசனையைக் கேட்டதுமே, அவளுக்கு உள்ளூர ஆசை வந்துவிட்டது!

ஊர் சுற்றுவதற்காக அல்ல! அந்தச் சாக்கில், வீட்டின் மற்ற இரு பெண்களின் கண்காணிப்பிலிருந்து சில நாட்கள் தப்பலாமே என்ற ஆசை!

அதற்காகக் கூடுதலாக ஒரு நூறு பேர் அவர்களை ஜோடியாகப் பார்த்தாலும் பரவாயில்லை என்றே அவளுக்குத் தோன்றியது!

அத்தோடு, பாட்டி வீட்டில் சேர்ந்து சுற்றிய அந்த இரு தினங்களின் நினைவும் ஆவலைத் தூண்டியது!

ஆனால், புரந்தரன்?

அவனும், அவளைப் போல எண்ண வேண்டுமே!

ஆனால், "அண்ணனைக் கிளப்ப, ஒரு பிரம்மாஸ்திரம் இருக்கிறது! நீங்கள் பயணத்துக்குத் தயாராகுங்கள்!" என்று மைத்துனன் கூறவே, அவனது சொல்லுக்கிணங்கி, வெளியூர் செல்ல, எல்லாம் எடுத்து வைக்கத் தொடங்கிவிட்டாள், நந்தினி!

இந்த இருவரின் ஊட்டிப் பயணம் நேர்ந்தது, இப்படித்தான்!

நந்தினி கற்பனை செய்து வைத்திருந்ததைக் காட்டிலும் ஊட்டி மிக அழகாக இருந்தது!

'பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்த பரிபூரணானந்தமே' என்று தாயுமானவரின் பாடலில் வரும்!

அது போலப் பார்க்கும் இடமெல்லாம் பசேலென்று, ஊட்டி கண்ணுக்கு



விருந்தாகி ஆனந்தத்தை அளித்தது!

சீசன் முடிந்துவிட்டதால், பூக்கள் அதிகம் இல்லை என்றாலும், அங்கங்கே வண்ணக் குழம்பாய் அழகழகாகத் தென்பட்டு, கருத்தைக் கவர்ந்தன!

ஆனால் அவள் அறிந்திராதது, எதிர்பார்த்தும் இராதது, ஊட்டியின் குளிரைத்தான்.

ஏதோ கொஞ்சம் குளிராக இருக்கும்., கொஞ்சம் கனமான துப்பட்டாவால் சுற்றிக் கொண்டால் போதும் என்று நினைத்தால், சீசன் முடிந்து அதிகரிக்கத் தொடங்கியிருந்த ஊட்டியின் குளிர் அவளது நெஞ்சுக்குள்ளேயே ஊடுருவவும் திணறிப் போனாள்.

வக்கீல் சகாயத்துக்காக அவள் வாங்கியவற்றுள், கம்பளித்துணி எதுவும் கிடையாது! சென்னையில் அதை வாங்கும் அவசியமும் நேரவில்லை. வந்தாலும், புரந்தரனிடம் கேட்டு வாங்கியிருப்பாளா என்பது சந்தேகமே!

இப்போதும், தனக்காக எதையும் வாங்கச் சொல்ல மனமின்றி, தன் தேவையைக் காட்டிக் கொள்ளாமலேதான் நந்தினி சமாளிக்க முயன்றாள்.

ஆனால், தாவரப் பூங்காவில் உடலைக் குறுக்கிக் கொண்டு அவள் நடந்த விதத்தைப் பார்த்ததுமே அவன் விசாரித்ததில், ஸ்வெட்டர் இல்லாத நிலை வெளியாகிப் போயிற்று!

"எவ்வளவு பெரிய உதவி செய்து கொண்டிருக்கிறாய்! இதைப் போய்ப் பெரிதாக நினைத்தாயா? என்ன நீ... இதோ, இதைப் போட்டுக் கொள்!" என்று தன் கம்பளிக் கோட்டின் பட்டன்களைக் கழற்றத் தொடங்கினான் புரந்தரன்.

குளிரின் தாக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தவளால், அதை அனுமதிக்க முடியவில்லை. அவனுக்கும் குளிரும்தானே?

யதார்த்தம் புரிந்த அவனாலும், அதை மறுக்க முடியவில்லை!

எனவே, "நாளைக்கு, உனக்கு வாங்கி விடுவோம். அதுவரை... இதுவும் யதார்த்தம்தான். இங்கே வந்துவிடு." என்று அவளைத் தன் கையணைப்புக்குள் இழுத்தான்.

கம்பளிக் கோட்டும் பெரிதாக, நீளமாகவும் இருக்கவே, கதகதப்பாக, வெகு சுகமாகவே இருந்தது!

ஆனாலும், "பார்க்கிறவர்கள் தப்பாக நினைப்பார்கள்!" என்றவாறு சுற்றிலும் கூச்சத்துடன் பார்த்த நந்தினி திகைத்தாள்!

எல்லோரும் ஜோடி, ஜோடியாக ஒட்டியவாறுதான் சென்று கொண்டிருந்தார்கள்!

"இது ஊட்டிம்மா! இப்படிச் சுற்றிப் பார்க்க வந்தவர்கள் பெரும்பாலும் இப்படித்தான் இருப்பார்கள்! இங்கே நீ ஒரு பக்கம், நான் ஒரு பக்கமாகப் போனால்தான், தப்பாகத் தெரியும்!" என்று அவன் கூறியபோது, அவளுக்கும் மறுக்கத் தோன்றவில்லை!

பாதுகாப்பாக அணைத்திருந்த கை வளையத்திலிருந்து விலக மனமும்



வரவில்லை!

நன்றாகச் சுற்றிவிட்டு, கணப்பருகே அமர்ந்து உணவருந்தி வெப்பமூட்டப்பட்ட அறைக்குத் திரும்பி வந்தபோது, ஏதோ புது உலகத்தில் இருப்பது போன்ற உணர்வு!

மறு நாளும், அவளுக்கு ஸ்வெட்டர் வாங்கும் எண்ணம் இருவருக்குமே வரவில்லை!

காலையில் எழுவதும், எதையாவது உண்டுவிட்டுக் கிளம்புவதும், ஒட்டிக் கொண்டே சுற்றுவதும், மாலையில் திரும்பி வந்து அறைக்குள் முடங்குவதுமாக, ஏதோ மாயா லோகமாகவே ஊட்டி தோன்றியது!

இல்லை., இந்தப் பூவுலகில்தான் இருக்கிறார்கள் என்பதை நினைவுறுத்துவது போல, தினந்தோறும் இரவில் இந்திரேசன் தொடர்பு கொள்ளுவான்.

அன்றாடம் பத்திரிகை அலுவலகத்தில் நடைபெற்ற வேலைகள் குறித்துத் தகவல் சொல்வான். ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால், அது பற்றியும் சொல்லி, ஆலோசனை கேட்பான். புரந்தரனும் சொல்லுவான்.

அந்த நேரத்தில்தான் நந்தினிக்கு ஒரு விழிப்பு ஏற்படும்!

என்ன செய்கிறோம்., எப்படி இருக்கிறோம் என்றெல்லாம் எண்ணிப் பார்த்து விதிர் விதிர்த்துப் போவாள்.

ஒரு கேவலமான வாழ்வு அல்லது தற்கொலைக்குப் புரந்தரனுடைய மனைவி என்ற வெறும் பெயரில் வெகு சில நாட்களைக் கழித்துவிட்டு, அதற்குரிய கூலியில், படித்து நல்ல வேலை தேடிக் கொண்டு ஒழுக்கமான வாழ்வு வாழ்வது எவ்வளவோ மேல் என்று எண்ணியே, புரந்தரனின் திட்டத்துக்கு நந்தினி ஒத்துக் கொண்டாள்!

திட்டப்படி அவள் வெறும் பெயரளவு மனைவி மட்டுமே!

புரந்தரன், நந்தினி இருவருமே, அதில் திடமாக இருந்தார்கள்!

இப்போதும், ஒழுக்கக் கேடாக அவர்கள் நடக்கவில்லைதான்!

ஆனால், முதல் திட்டப்படிக் கட்டுத் திட்டமாகவும் நடந்து கொள்ளவில்லை!

எல்லாம் நீர்த்துப் போன மாதிரித் தோன்றிற்று!

மற்றபடி, அவன்... ஓர் ஆணின் தோளில் சாய்ந்து கொண்டு, அவள் ஊர் சுற்றுவாளா?

பெண் என்றாலே பிடிக்காது என்கிற அவன்தான், அவளை அணைத்துக் கொண்டு அலைவானா?

குளிருக்காக அணைத்தான் என்று காரணம் சொல்லலாம்., ஆனால் அவளுக்கு ஒரு ஸ்வெட்டர் வாங்குவதை, யார் தடுத்தார்கள்?

அதை வாங்க முடியாத அளவு புரந்தரன் ஏழையோ, அன்றி அவள் கேட்டாலும் வாங்கிக் கொடுக்க முடியாது என்று சொல்லக் கூடிய கஞ்சனோ இல்லையே!

நீர்த்துதான் போயிற்று!

ஸ்வெட்டர் வாங்கும் எண்ணம், இருவருக்குமே வரவில்லையே!

காரணம், அவனை ஒட்டிக் கொண்டு அலைவது, அவளுக்கும் பிடித்திருந்தது., கட்டிக் கொண்டு சுற்றுவது, அவனுக்கும் அப்படியே!

ஆனால்... இங்கேயே இப்படியே இருக்க முடியாது! சென்னைக்குப் போயாக வேண்டும்! அவனது பிரச்சினை முடிந்து, பத்திரிகை கைக்கு வந்து, அவர்கள் இருவரும் பிரிந்தாக வேண்டும், பிரிந்து, அவரவர் வழியைப் பார்த்துக் கொண்டு போவதுதான், நிச்சயமான நடப்பு!

மற்றபடி, இந்த ஒட்டல், உறவாடல், பேச்சு, சிரிப்பு எல்லாம் பட்டென்று அடியோடு அறுந்து விடக் கூடிய நூலிழைதான்!

நல்லவேளையாக, இருவருக்குமே முழுதாக மூளை கெட்டுவிடவில்லை!

இனியேனும் புத்தியோடு நடந்து கொள்ள வேண்டும் என்று அப்போதைக்கு நினைத்தாலும், மறு நாள் விடிகையில், இன்னும் ஒருநாளோ, இரண்டு நாட்களோ? அதுவரை, இந்தக் கனவு மயக்கத்திலேயே இருந்து விடலாமே என்று தோன்றிவிடும்!

வேறு திருமணமோ, இன்னொருவனோடு வாழ்வோ கிடையாது என்பது அவளது முடிவு! நினைத்துப் பார்த்து மகிழ்வதற்கு, இந்த ஒரு சில நாட்கள்தான் இருக்கட்டுமே!

ஊட்டிக்கு வந்து, அன்று நாலாவது நாள்!

அன்றும் வழக்கம் போலத்தான் இருவரும் கிளம்பினார்கள்., சுற்றினார்கள்!

ஆனால், திரும்பி வரும்போதுதான், ஹோட்டலுக்கு வரும் வழியில் சிலர் கூடி நிற்க, ஏழெட்டு வயது இருக்கக்கூடிய ஒரு சிறு பெண் கத்திக் கதறி அழுவது கேட்டு சற்றுத் திகைத்து நின்றார்கள்.

ஏதாவது உதவி வேண்டுமா என்று புரந்தரன் கேட்க, " என்னங்க உதவி? பாராலே என்ன உதவி செய்ய முடியும்? இந்தப் பொண்ணு, இங்கே இருக்கிற தாத்தா பாட்டி வீட்டுக்கு முன்னாடியே வந்துவிட்டதாம். வெளி நாட்டிலே இருந்து இன்னிக்கு வருகிறதாக இருந்த அம்மாவும் அப்பாவும், அங்கேயே விமான விபத்திலே போய்விட்டாங்களாம்! தகவல் தெரிந்ததிலே இருந்து, ஒரு மணி நேரமாக, அம்மா வேணும், அப்பா வேணும் என்று இப்படித்தான் அழுது கதறுது, பாவம்! என்ன சொல்லித் தேத்துறதுன்னு இல்லாமல் சொந்தக்காரப் பெரியவுங்களும் கூடச் சேர்ந்து அழுவுதுங்க!" என்று விவரம் சொன்னார் ஒருவர்!

கல்லாய் உறைந்து போனாள் நந்தினி.

இப்படித்தான், அவளிடமும் பெற்றோர் மறைவு பற்றிச் சொல்லப்பட்டது!

அடையாளம் தெரியாமல் கருகி விட்டதால், பார்க்கவே முடியாது என்று...

காலையில் தலை பின்னிவிட்ட அம்மா! சாப்பிடும்போது, சேப்பங்கிழங்கு வறுவலோடு, அவளுக்கு வாயில் பிடி அள்ளித் தந்த அப்பா!

"சத்தம் போட்டு அழுதால், அத்தைக்குப் பிடிக்காதும்மா. அத்தைக்குப் பிடித்தபடிதான் இங்கே நடக்க வேண்டும்..."



அதிர்ந்து நின்றவளின் உடல் வெடவெடவென்று நடுங்குவதையும் கண்ணில் நீர் வழிவதையும் கண்ட புரந்தரன், சட்டென விஷயம் புரிந்து, அவளைத் திருப்பி, ஹோட்டலுக்கு வழி நடத்திச் சென்றான்!

அறைக்குள் சென்றதும் கணப்பு ஸ்விட்சைத் தட்டி விட்டுவிட்டு, அவள் தலையைத் தன் தோளில் அழுத்தித் தடவிக் கொடுத்தான்.

என்னென்ன இழப்புகள் எல்லாம் நினைவு வந்ததோ, நந்தினி அழுது தீர்த்தாள்.

பிறகும் விசித்தவாறே உறங்கிய அவளைப் பார்த்தபடியே, புரந்தரன் நெடு நேரம் அமர்ந்திருந்தான்!

மறுநாள் காலையில், வழக்கம்போலக் குளித்து உணவருந்திய பிறகும் வெளியே செல்லும் வேகம் இருவருக்குமே வரவில்லை!

அன்றாடம் அறையில் கொண்டு வந்து வைக்கப்படும் பத்திரிகைகளில் ஒன்றை எடுத்துப் புரட்டினாள் நந்தினி.

ஆனால், அதைத் தொடர்ந்து படிக்காமல் அவள் கீழே வைக்கவும், "கொஞ்சம் பேசுவோமா, நந்தினி?" என்று கேட்டபடி, புரந்தரன் அவள் அருகே வந்து அமர்ந்தான்.

சென்னையில் இருந்து ஏதேனும் தகவல் வந்திருக்குமா?

என்னவாக இருக்கும் என்று யோசித்தவாறே நந்தினி தலையாட்டினாள்.

"நந்தினி, நாம் இருவரும் திருமணம் செய்த போது, முழுக்க முழுக்க ஒரு வியாபார ஒப்பந்தம் மாதிரிதான் செய்தோம்! மிஞ்சி மிஞ்சிப் பத்தே நாட்கள் நிலைத்திருக்கக் கூடிய திருமணம்! பெரும்பாலும் நானும், ஓரளவுக்கு நீயும் திட்டமிட்டதும் ஒத்துக் கொண்டதும், அந்த அளவுக்குத்தான்!"

"ஆனால், நாம் நினைத்தது போலக் கடவுள் நினைக்கவில்லை என்று இப்போது தெரிகிறது! அந்தப் பத்து நாட்களில் முடிக்க விடாததோடு, இன்னும் எத்தனை காலம் தொடரக் கூடும் என்று கால வரையறையே சொல்ல முடியாத நிலைமை ஆகிவிட்டது!"

"அது மட்டுமல்ல! என்னைப் பொறுத்த வரையில்... நந்தினி, உனக்கு என் மேல் அக்கறை உண்டு என்பது எனக்குத் தெரியும். மற்றபடி பத்திரிகை என் கைக்கு வருவதற்காக, இத்தனை நாள் இந்த நாடகத்தைத் தொடர, நீ சம்மதித்திருக்க மாட்டாய்! அத்தோடு, என்னிடம் வெறுப்பு இல்லை என்பதும் நான் அறிவேன். கடந்த மூன்று தினங்களே அதற்கு சாட்சி!..."

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் தலை குனியவும், "இதில் அவமானப்பட ஒன்றுமில்லை, நந்தினி! ஏன், நான் வெளிப்படையாக ஒத்துக் கொள்கிறேனே, எனக்கு, மிகவும் சந்தோஷமாகத்தான் இருந்தது! சந்தோஷம் மட்டுமல்ல. அதற்கும் மேலாகவும் ஒன்று இருக்கிறது என்றும் தெரிந்து கொண்டேன்!" என்றான் அவன்.

ஆராய்ச்சியும், கேள்வியுமாக, கூடவே ஆவலுமாக அவள் நோக்க, அவளது



கையைப் பற்றி வருடினான் புரந்தரன்! "பார் நந்தினி, கொஞ்ச காலமாகவே லேசுபாசாக நான் நினைத்து வந்ததுதான்! ஆனால், நேற்று நீ அழுதாய் பார். அப்புறம்... இதற்கு மேல், உன்னைத் தனியே என்னால் விட முடியாதும்மா! ஹே, கண்களை இவ்வளவு பெரிதாக விரிக்காதே! அப்புறம் நான் அதிலேயே முழுகிவிடுவேன்... சந்தோஷமாக!"

கண்களை விரித்தது மட்டுமில்லாமல், காதுகளையும் தேய்த்துவிட்டாள் அவள்! காதில் சரியாக விழுந்ததோ, இல்லையோ என்பது போல!

"ஏய், எல்லாம் காதில் சரியாகத்தான் விழுந்தது! சொல்லும்மா, நான் என்பதே இல்லாமல், நாம் இருவருமே, அடுத்தவருக்காகப் பார்க்கிறோம்! அப்படிப்பட்ட நாம் ஏன் பிரிய வேண்டும்? திருமணம் என்னவோ, தாலி கட்டி, அம்மி மிதித்து, அருந்ததது பார்த்து ஃபோட்டோ, வீடியோ எல்லாம் எடுத்து முறைப்படிதான் நடந்தது! இதை மாற்றுவானேன்? கால முழுமைக்கும் கணவன் மனைவியாகச் சேர்ந்தே வாழலாமே! வாழலாம்தானே?" என்று, கணவனாக, மனைவியின் சம்மதத்தைக் கேட்டான் அவன்!

மூன்று நாட்களாக, அவனது கோட்டுக்குள் அவனை ஒண்டிக் கொண்ட அலைந்தது, நந்தினிக்கு நினைவு வந்தது!

அதே நினைவில் வாழ்ந்து முடிக்கப் போவதாக எண்ணினாளே!

ஆனால்... "உங்களுக்குப் பெண்களைப் பிடிக்காதே!" என்று கேட்டாள் நந்தினி.

அவனது கரங்கள், அவள் தோளில் விழுந்தன. "அப்போது எனக்கு உன்னைத் தெரியாதே, கண்மணி!" என்று குனிந்தான் அவன்.

அவசரமாக, "எப்படியும் நான் படிக்க வேண்டும்!" என்றாள் நந்தினி.

"கட்டாயம் படி! 'ஜார்னலிசம்' படி! நாம் இருவரும் சேர்ந்து பத்திரிகையை நடத்த வசதியாக இருக்கும்!" என்றுரைத்து, மனைவியை அன்போடு பற்றி, ஆசையாக முத்தமிட்டான் புரந்தரன்!

திட்டமிட்டு வந்த ஏழு நாட்களில், மிச்சமிருந்த மூன்று தினங்களும், மூன்று நிமிஷங்களாக ஓடி மறைந்தன.

"முதல் நாலு நாட்களை அநியாயமாக வீணாக்கிவிட்டோமே!" என்று புரந்தரன் ஏகமாக வருத்தப்பட்ட விதத்தில், அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது!

"எப்படி அழைப்பது என்று குழம்பினேனே! என் கண்ணின் மணியான கண்மணி அல்லவா, நீ! கண்மணி!" என்று குலவினான்!

மொத்தத்தில், முப்பது நாட்களின் அன்பை, அந்த மூன்று நாட்களில் கொட்டித் தீர்த்தான் எனலாம்!

அவளும் மகிழ்ச்சியில் பூரித்து நின்றாள்!

சுமார் பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு, கலப்படம் அற்ற ஆனந்தம்!

இந்த சந்தோஷம் நிலைக்குமா என்ற பயம்கூட வந்தது அவளுக்கு!

இடைப்பட்ட பதினோரு ஆண்டுகளை ஈடு செய்ய, இன்னும் எவ்வளவோ



மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றான் அவளுடைய கணவன்!

அப்படி இருக்க வைக்கப் போகிறானாம்!

இவ்வளவு அன்பான கணவன் இருக்கையில், அதில் சந்தேகம் என்ன?

மகிழ்ச்சியோடு சென்னைக்குத் திரும்பி வந்தால், இங்கே எல்லாமே தலைகீழாக மாறிப் போயிற்று! கணவனின் அன்பு உட்பட!

## 16 நான் என்பதும் நீ என்பதும்



புரந்தரன், நந்தினியின் வரவில் மகிழ்ச்சி காட்டியது, இந்திரேசன் மட்டுமல்ல!

அவனது கண்களிலேனும் சிறு கவலை இருந்தது எனலாம்!

ஆனால், அவனுடைய மனைவியும் தாயாரும்கூட, முகமெல்லாம் சிரிப்பாக, "வாடியம்மா, வா! இப்போவேனும், சொந்த வீட்டுக்கு வரவேணும் என்று தோன்றி ஒரு வழியாக வந்து சேர்ந்தாயே! வா!" என்று நந்தினியை வரவேற்றதைப் பார்த்து, அவனுக்கு ஒரே அதிசயமாகிப் போயிற்று!

அவன் அண்ணனைப் பார்த்துக் கண் சிமிட்டி, "வானிலைச் செய்தியில், இன்று மேக மூட்டம் என்றுகூடப் போடவில்லை., ஆனால் மழை கொட்டோ, கொட்டென்று கொட்டப் போகிற மாதிரித் தெரிகிறதே!" என்று, கேலிக் குரலில் கூறினான் இந்திரேசன்.

தம்பியின் பேச்சில் சிரித்த புரந்தரன், வேலையாளைக் கூப்பிட்டு, சாமான்களை அவனது அறைக்குள் கொண்டு வைக்கச் சொன்னான்.

மனைவியிடம் கண்ணால் விடை பெற்றுக் கொண்டு, "இந்தா, சற்று வா! நேற்று அலுவலகத்தில்..." என்று அவனிடம் ஏதோ கேட்டபடி, தம்பியோடு அங்கிருந்து நகர்ந்தான்!

சாமான்களோடு நந்தினி அறைக்குச் சென்றுவிட, தனித்து விடப்பட்ட மாமியாரும் மருமகளும், இரு பிரிவாகச் சென்று கொண்டிருந்தவர்களை ஆத்திரத்துடன் முறைத்துப் பார்த்தனர்!

"மரியாதையே இல்லாமல், என்ன அலட்சியம் பார்! இவளை...என்று மேலே ஏதோ சொல்ல வாயெடுத்த நீலாவை, அவளுடைய மருமகள் உதட்டில் விரல் வைத்து அடக்கினாள்.

"போடுகிற ஆட்டத்தை எல்லாம் போடட்டும், அத்தை! அப்புறம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடட்டும்! அப்படி ஓடுகிறபோது, நாக்கைப் பிடுங்குகிற மாதிரிக் கேட்டு, நாம் சிரிப்போம்!" என்றாள்!

வன்மத்துடன் மாடியை ஒரு தரம் நோக்கிவிட்டு, "அப்போது, அதற்கான ஏற்பாட்டைச் செய்!" என்றாள் அத்தையம்மாள்.

"செய்யத்தானே போகிறோம்! ஆனால், கொஞ்சம் பொறுத்திருங்கள்! உங்கள்

அருமை மூத்தார் பிள்ளை அலுவலகத்துக்குப் போய்ச் சேரட்டும்! அப்புறமாகச் சரியாக ஏற்பாடு செய்து பேயோட்டி விடுவோம்! அவருக்கு ஏதாவது சந்தேகம் வந்தால், முன்னேப் போல மீண்டும் அவளை எங்காவது அழைத்துப் போய் விடுவார்!"

"சந்தேகம் தானாகவா வந்தது? எல்லாம், நீ உன் முட்டாள் புருஷனிடம் போய் உளறிக் கொட்டியது! உன் திருவாயைக் கொஞ்சம் மூடிக் கொண்டு இருப்பதற்கென்ன?" என்று ஆத்திரப்பட்டாள் மாமியார்.

"நீங்கள் பெற்றது, இவ்வளவு அறிவு கெட்டதாக இருக்கும் என்று, எனக்கு என்ன தெரியும்? தாலி கட்டிய மனிதனாயிற்றே என்று சொன்னேன்! அது. தனக்கு நல்லது எது என்று கூடத் தெரியாமல், வேண்டாத இடத்தில் உளறிக் கொட்டும் என்றா எதிர்பார்க்கத் தோன்றும்? பெற்று, இத்தனை வருஷம் நீங்கள் வளர்த்த லட்சணம் இப்படி என்று, முதலில் அதை ஒத்துக் கொள்ளுங்கள்!" என்று பதிலுக்குத் திருப்பிக் கொடுத்தாள் சாயா.

"மாமியார் என்கிற மரியாதை இல்லாமல், எதிருக்கு எதிராகப் பேசுகிறாள்! இவள் தலைமுடியைப் பிடித்து நாலு அறை வைக்கத் துப்பில்லாமல், என்னடா பார்த்துக் கொண்டு சும்மா நிற்கிறாய்? எல்லாம் உன்னால் வந்தது!" என்று அங்கே வந்த மகனை ஏசினாள் நீலா!

"தலைமுடியைப் பிடித்து அறைவதா? ஓ.கோ! அவ்வளவு தைரியம் வந்து விடுமா? குள்ள நரி மாதிரி ஒளிந்து மறைந்து, வேண்டாத இடத்தில் போய் வத்தி வைக்கத் தெரியுமே தவிர, இந்த ஆளுக்கு என்ன தெரியும் என்று இப்படிக் கத்துகிறீர்கள்? என்னமோ ரொம்பக் கெட்டிக்காரப் பிள்ளையைப் பெற்று விட்ட மாதிரி!" என்று மாமியாரைச் சாடுகிற பாவனையில் கணவனையும் சேர்த்துத் திட்டினாள் சாயா.

ஒரு வாரம் முன்னதாக, உருப்படியாக ஒரு வேலை முடிந்திருக்கும் என்ற எண்ணம் அவளுக்கு! கணவன் என்ற பலவீனத்தில், அரைகுறையாக என்றாலும் அவனிடம் ஒரு வார்த்தையை விடப் போய், சிரமப்பட்டு யோசித்துப் போட்ட பிரமாதமான திட்டம் எந்த அளவுக்கு நாசமாகி இருக்குமோ என்கிற கவலை வேறு!

தாயும் மனைவியும் சேர்ந்து ஏசவும், இந்திரேசனுக்கும் கோபம் வந்துவிட்டது!

"ஆமாம்! அப்படித்தான்! உங்கள் பிரம்மாஸ்திரம் பற்றி, நான்தான் அண்ணனை எச்சரித்து, இங்கிருந்து அனுப்பி வைத்தேன்! இன்னும் நூறு திட்டங்கள் நீங்கள் போட்டாலும், அவை அத்தனையையும் அப்படித்தான் உடைப்பேன்! எனக்கு அப்பாவின் விருப்பம்தான் முக்கியம்! நீங்கள் இருவரும் எக்கேடோ கெட்டுப் போங்கள்!" என்று கத்திவிட்டு, அங்கிருந்து வேகமாகத் தன் கம்ப்யூட்டர் அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டான் அவன்!

ஒரு வாரமாகப் பூட்டிக் கிடந்த அறையைக் கூட்டிப் பெருக்குவதற்காக வேலையாளை அழைக்க வந்த நந்தினியின் காதுகளில், இந்த உரையாடல் முழுவதும் நன்றாக விழுந்தது!



என்னவென்று புரியாவிட்டாலும், புரந்தரனுக்கு எதிராகத் தாயும் மனைவியும் ஏதோ திட்டம் போட்டதைச் சரியான தருணத்தில் இந்திரேசன் அண்ணனிடம் சொல்லி எச்சரித்து, அண்ணன் குடும்பத்தை வெளியூர் செல்ல வைத்துவிட்டான். அதனால், அவர்களது சதி பிசுபிசுத்துப் போய்விட்ட ஆத்திரத்தில் அவர்கள் இருவரும் இருக்கிறார்கள் என்கிற வரையிலும், அவளுக்கு நன்றாகப் புரிந்தது!

கதவு மூடப் பட்டால், கடவுள் ஜன்னலைத் திறந்து வைப்பார் என்பது போல, இரு மோசமாக விரோதிகள் இருக்கும் இடத்தில், உதவிக்கு இந்திரேசன் இருப்பது, எவ்வளவு அதிருஷ்டம்! கடவுள் அவனது வாழ்வை எப்படியாவது சீர்ப்படுத்தி, நல்லபடியாக வாழ வைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள் அவள்!

செய்வார்!

இப்போது அவளுக்குச் செய்யவில்லையா?

எத்தனையோ துன்பம், துயரம் வேதனைகளுக்குப் பிறகு, எவ்வளவோ சிறப்பான, சந்தோஷமான வாழ்வைத் தரவில்லையா?

அதே போல, அவனுக்கும் செய்வார்!

ஆனாலும், எவ்வளவு மகிழ்ச்சி!

இதற்காகத்தான் திருமணம், திருமணம் என்று எல்லோரும் அலைகிறார்களோ? நான், நீ என்பதே இல்லாமல், இரு மனமும் ஒரு மனமாகி...

கதவை யாரோ தட்டுவது கேட்டு, நந்தினி எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

சாயாவும் நீலாவும், கொஞ்சம் ஒல்லியான ஒரு நடுத்தா வயதுப் பெண்மணியும் நின்று கொண்டிருந்தார்கள்!

மூவருக்கும் பின்னே, டாக்டரின் பை போன்ற ஒன்றைத் தூக்கிக் கொண்டு, ஒரு வேலைக்காரப் பெண்.

"என்ன?" என்று விசாரித்தாள் நந்தினி.

"எல்லாம் நல்ல விஷயம்தான்!" என்றபடி அவளைத் தள்ளிக் கொண்டு நீலாம்பிகை அறையின் உள்ளே வந்தாள்.

சின்னத்தனமாக நடக்கும் சின்ன மாமியாரைத் தடுக்கலாமா என்று யோசித்துவிட்டு, வேலையாட்கள் முன்னிலையில் ரசாபாசம் கூடாது என்று எண்ணியவளாக வழியை விட்டு ஒதுங்கினாள் நந்தினி.

"இந்தா, பையை அந்த மெஜை மேலே வைத்துவிட்டு ஓடு!" என்று வேலைக்காரப் பெண்ணைச் சாயா விரட்ட, அவளும் ஒரு தரம் எல்லோரையும் பார்த்து விழித்துவிட்டு, ஓடிப் போனாள்!

வேலைக்காரி அறிவது, இவளுக்கும் விருப்பமில்லை!

அவர்கள் மூவர்! அவள் ஒருத்தி!

சிலீரென்று ஒரு கணம் தோன்றிய பயம் உடனே மறைந்தது!



தப்பு எண்ணி வந்திருந்தால், வேலைக்காரி அறிய வர மாட்டார்கள்!

மீண்டும் "என்ன விஷயம்?" என்று அவள் கேட்கும்போதே, "இதுதான் பெண்ணா?" என்று கேட்டாள் அந்த நடுத்தர வயதுப் பெண்.

"ஆமாம், டாக்டர்!" என்று சாயா பதிலிறுக்கவும், பையைத் திறந்தபடி, "என்னம்மா, வெளியூர் போவதானால், முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாது? அனாவசியமாக என்னை அலைய வைத்தாயே!" என்று கேட்டார் அந்த பெண் மருத்துவர்!

ஒன்றும் புரியாமல், "நான் அலைய வைத்தேனா? எப்போது?" என்று வியப்புடன் கேட்டாள் நந்தினி.

"போன வாரம், இதே நாளில்தான்! மெனக்கெட்டு வந்தால், நீ எங்கோ வெளியூருக்குப் போய்விட்டாய்! சரி, நீங்கள் இருவரும் வெளியே இருங்கள்!" என்று அழைத்து வந்த பெண்களிடம் டாக்டர் கூறினார்.

தயங்கி, "இல்லை! நாங்களும் இருப்போம்!" என்ற நீலாவிடம் டாக்டர் எரிந்து விழுந்தார். "கொஞ்சம் நாகரீகமாக நடந்து கொள்ளுங்கம்மா! இந்த மாதிரி சோதனை எல்லாம், பார்வையாளர்களை வைத்துக் கொண்டு செய்ய முடியாது! ஒன்று, நீங்கள் போங்கள்! அல்லது நான் கிளம்புகிறேன்!" என்று டாக்டர் கண்டிப்பாகக் கூறவும், சாயாவின் இழுப்புக் கிணங்கி, நீலாம்பிகை அவளோடு வெளியே சென்றாள்.

என்னவோ வயிற்றில் பிசைய, "என்ன சோதனை, டாக்டர்?" என்று நந்தினி வினவினாள்.

"அவர்களுக்கு என்னவோ, அசட்டுக் கவலை! நீ அறியாத கிராமத்துச் சின்னப் பெண்ணாம்! ஏதோ காரணமாக, அவர்கள் பையன் உன்னைச் சும்மா இங்கே கொணர்ந்து வைத்திருக்கிறான் என்று சந்தேகமாம்! அப்படி இருந்தால், அவனுக்குப் புத்தி சொல்லித் திருத்த வேண்டுமில்லையா? அதனால், நீ கன்னியாகத்தான் இருக்கிறாயா என்று சோதிக்கச் சொன்னார்கள்! சோதனை முடிவை வக்கீல் சகாயத்துக்கும் கட்டாயம் அனுப்பச் சொன்னார்கள். அவரும் வேண்டும் என்றார்!"

"போன வாரமும், இதற்காகத்தான் வந்தீர்களா, டாக்டர்?"

"ஆமாம்மா! சொன்னார்களே என்று வந்தால், நீ அவசரமாக வெளியூர் போய்விட்டதாகச் சொன்னார்கள்!..."

சட்டென்று நந்தினியின் உடலில் தீப் பற்றிக் கொண்டது!

பிரம்மாஸ்திரம் பற்றி, அண்ணனிடம் எச்சரித்து அனுப்பி வைத்தேன் என்றானே!

அவள் கன்னியென்று நிரூபிக்கப் பட்டால், புரந்தரனுக்குப் பத்திரிகையும், சொத்தும் கிடைக்காது!

இதுதான் பிரம்மாஸ்திரம்!

இதை முறியடிக்கத்தான் அவசரமாக வெளியூர்... அதுவும் ஊட்டிக்குப் போய்...



உண்மையான அன்பு தோன்றி வளர்ந்ததாக எண்ணினாளே!

சீச்சீ! எப்படி ஏமாந்திருக்கிறாள்!

"பாரம்மா..." என்று அழைத்த மருத்துவரின் சோதனைக்கு நந்தினி எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை!

"நீண்டகால சந்தோஷ வாழ்வுக்கு என் வாழ்த்துக்கள்!" என்று டாக்டர் வாழ்த்தியதற்கு, உதட்டால் முறுவலித்து வைத்தாள்.

டாக்டர் கீழிறங்கிச் சென்ற சில நிமிஷங்களில், அங்கிருந்து காட்டுக் கத்தல் கேட்டது!

"நீங்கள் சொல்கிறது தப்பு! அவனுக்குப் பெண் என்றாலே பிடிக்காது! நாங்கள் நல்லா விசாரித்து விட்டோம்! அவள், வீட்டுக்கடங்கின சின்னப் பொண்ணு! கஷ்டப்பட்ட குடும்பம் என்கிறதாலே, காசுக்கு நடிக்கதான் வந்திருப்பாள்! இப்போ நீங்க பொய் சொல்கிறீங்கன்னுதான் எனக்கு நிச்சயம்! நீங்களும், மூத்தார் மகன் கிட்டே காசு வாங்கிட்டீங்களா..."

இந்த ரீதியில், நீலாம்பிகை, சாயாவின் பேச்சும், "அடச்சீ, கண்டபடி உளறாதீர்கள்! சோதனை முடிவு இதுதான், வக்கீலுக்கும் அனுப்பி விடுகிறேன்! பில் வரும். உடனே, பணம் கட்டி விடுங்கள்!" என்ற டாக்டரின் அதட்டலோடு, "இந்தாப் பொண்ணு, இந்தப் பையைக் காரிலே கொண்டு வை!" என்ற உத்திரவும் கேட்டது!

"உன் பேச்சைக் கேட்டு, ஒரேயடியாக முழுகப் போகுதே! அந்தம்மா, வக்கீலுக்கும் அனுப்பப் போகுதே! எல்லாம் உன்னாலே!" என்று நீலாம்பிகையும், "வக்கீலுக்கு அனுப்பணும் என்று சொன்னது நீங்கள்தானே? எல்லாம் உங்களாலேதான்!" என்று சாயாவும் மாறி மாறிக் குற்றம் சாட்டியது எங்கோ போலக் கேட்டது!

மனதிற்குள் தொடர் வெடி வைத்துத் தகர்த்தாற்போல, மூன்று நாள் சொர்க்கம் இடிந்து, இடிந்து விழுந்தது!

திட்டம் போடுவதில் வல்லவன் ஆயிற்றே!

சும்மாக் கேட்டால் மறுத்திருப்பாள் என்று, அவளையும் திட்டம் போட்டு வீழ்த்தி இருக்கிறான்!

ஆனால், இவ்வளவு எளிதாக ஏமாற, அவளுக்குப் புத்தி எங்கே போயிற்று!

பெண்களை வெறுக்கிறவன், இப்படித் தலைகீழாக மாற முடியுமா என்று யோசித்திருக்க வேண்டாமா?

ஆனால், கேட்டாளே! அவன் என்னவோ சத்தியசந்தன் என்று, அவனது பதிலை நம்பியதுதான் மடத்தனம்!

ஆனால், இதெல்லாம் முடிந்து போனது!

இனி என்ன செய்வது என்று அதை யோசிப்பதுதான் முக்கியம்!

அவன் என்ன செய்யக் கூடும்?

பத்திரிகை அவனுக்குச் சொந்தமாகிவிடப் போவது நிச்சயம்.

ஏதேனும் செய்து, அதைத் தடுக்கும் எண்ணம், இப்போதும் அவளுக்கு இல்லைதான்!

இதற்காகத்தானே இவ்வளவு வேலை செய்தான்! பெண்களைப் பிடிக்காதவன் என்றாலும், பெண்ணாகிய அவளை, வெறுப்பை மறைத்து, கஷ்டப்பட்டு அணைத்து... இல்லை! இப்படி நெஞ்சைக் கசக்கிக் கொள்ளக் கூடாது!

பத்திரிகையின் உரிமை கிடைத்ததும், அவளை ஒதுக்க, அவன் முயற்சி செய்வான்.

ஆனால், அந்தக் கேவலத்துக்கு ஆளாகுமுன், அவள் இங்கிருந்து வெளியேறி விடவேண்டும்!

மீண்டும் படிப்பு, பயிற்சி இல்லாமல் என்ன செய்வது?

ஏதேனும் செய்யலாம்! சும்மா பயந்து கலங்க, அவள் ஒன்றும் உலகம் அறியாத பூந்தோட்டப் பெண் அல்லவே!

நாலு வீட்டில் பாத்திரம் தேய்த்துப் பிழைக்கலாம்! ஏதாவது தொண்டு நிறுவனங்களில் உணவு, உடை, உறைவிடம் மட்டும் பெறறுப் பணி புரியலாம்!

ஒப்பந்தப் பணத்தை வைத்துக்கூட.... சே. வேண்டாம். அவனிடம் எதையும் கேட்டுப் பெற வேண்டாம்! சும்மாக் கைச்செலவுக்கு என்று புரந்தரன் கொடுத்த ஏழெட்டு ஆயிரங்கள், அத்தை கொடுத்த ஆயிரத்தில் மீதி... இதை வைத்து சமாளிக்க வேண்டியதுதான்!

என்னதான் பிடிவாதமாக எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்க முயன்றாலும், கண்ணீரை அவளால் நிறுத்த முடியவில்லை!

ஆனால், அதுவும் ஒரு வசதியாகி, "ஜலதோஷம், தலைவலி" என்று அவனிடம் இருந்து விலகிக் கொள்ள முடிந்தது!

பாசக் கணவனாக, "வைத்தியரிடம் போவோமா?" என்று பதறினான்.

அவள் மறுத்ததும், மாத்திரை கொடுத்து, தைலம் தேய்த்து விட்டு, பக்கா கனவானைப் போலத் தனியே படுத்துக் கொள்ளச் சொல்லி, போர்வையால் மூடி விட்டான்.

எங்கே சாக்கு என்று காத்திருந்தான் போலும் என்று எண்ணியவளுக்கு, அதற்கும் கண்ணீர் வந்தது!

ஏற்கனவே, வக்கீல் சகாயம் இது பற்றி ஏற்பாடுகள் செய்திருப்பார் போல!

நீலாம்பிகையின் ஆட்சேபணை தவறு என்று ஆகி விட்டதால், மறுநாளே, பத்திரிகையின் சட்ட பூர்வமான உரிமையாளனாகப் புரந்தரன் அறிவிக்கப்பட்டான்.

முக்கியமான எல்லாப் பத்திரிகைகளிலும், அது பற்றிய விளம்பரம் வந்தது!

அந்தப் பத்திரிகைகளைக் கொணர்ந்து காட்டிவிட்டு, "இதைக் கொண்டாட முடியாமல், உனக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டதே! இப்போதும் வலி பரவாயில்லையா, கண்ணம்மா? இல்லாவிட்டால், எதற்கும் நம் டாக்டரிடம்



போய்ப் பார்த்துவிடலாம்!" என்று பரிந்தான்.

உரிய விதமாகப் பேசி அதை மறுத்துவிட்டு, "இனி, இந்த உரிமை பற்றி, வேறு பிரச்சினை வராதே?" என்று வினவினாள் நந்தினி.

"வராது! ஆனால், நான்தான் ஒரு வேலை செய்யப் போகிறேன். எப்படியும், இந்தர் என் தம்பி அல்லவா? அத்தோடு, நாம் ஊட்டியில் இருந்த போது, அவனுக்கு நான் கொடுத்திருந்த வேலைகளைச் சிறப்பாகவே செய்திருந்தான். அதனால், பத்திரிகையில் அவனையும் ஒரு பங்குதாரர் ஆக்கப் போகிறேன். அது பற்றிய வேலைகளைப் பார்க்குமாறு வக்கீலிடம் சொல்லி விட்டேன்." என்றான் புரந்தரன்.

பிரம்மாஸ்திரம் பற்றி எச்சரித்தவனுக்கு இந்த நன்றிகூடச் செய்யாவிட்டால் எப்படி என்று உள்ளூர வலியுடன் எண்ணினாள் நந்தினி.

ஆனால், அப்படிக் கொடுப்பதும், கொடுக்காமல் இருப்பதும், அவனது சொந்த விஷயம்! இனி, அவளுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை!

அசதி போல அவள் கண்ணை மூடிக் கொள்ளவே, அவளைத் தொந்திரவு செய்யக் கூடாதென்று, சத்தமில்லாமல் அங்கிருந்து அகன்றான் கணவன்!

மறுநாள் புரந்தரன் அலுவலகம் செல்லும்வரை சோர்வு போலப் படுத்திருந்துவிட்டு, அவன் அலுவலகத்திலிருந்து ஃபோன் செய்தபின் அவசரமாக எழுந்தாள்.

புரந்தரனின் திட்டப்படி, இந்திரேசனும் அவனோடு சென்றாயிற்று!

அங்கே மற்றவர்களுக்கு அவளைப் பற்றி என்ன கவலை?

ஒரு சிறு குறிப்பு, "உங்கள் நோக்கம் நிறைவேறிவிட்டது. உங்களுக்கு என் தேவையும் முடிந்துவிட்டது! போகிறேன்." என்று எழுதி வைத்தாள்.

தேவைப்பட்ட துணிமணிகள், பொருட்கள், கையில் இருந்த பணத்தோடு, நந்தினி கிளம்பிவிட்டாள்.

அப்படிக் கிளம்பி அவள் போய்ச் சேர்ந்த இடம் ஒரு பெண்கள் தங்கும் விடுதி.

சென்னையின் புறநகர்ப் பகுதி தொடங்கும் இடத்தில், மத்திய தரத்தோர் தங்கக் கூடியதாய் இருந்த அந்த விடுதியின் பெயரை, யாரோ சொல்லக் கேட்டிருந்ததால், இடம் தேடி அவள் சென்ற முதல் விடுதியே அதுதான்.

நல்ல வேளையாக, அவள் தங்குவதற்கு அங்கே இடமும் கிடைத்துவிடவே, அந்தப் பெண்கள் விடுதியில் நந்தினியின் வாசம் தொடங்கியது!

புறநகர்ப் பகுதி என்பதால், புரந்தரனைச் சந்திக்கும் நிலைமை ஏற்பட வாய்ப்பிராது என்றுதான், அவனது வீட்டுக்கு நேர் எதிர்த்திசையில், நந்தினி இவ்வளவு தூரம் வந்தது!

தங்க இடம் கிடைத்ததுமே, ஏதாவது ஒரு பணியோ, அல்லது, கையில் இருக்கும் பணத்தைக் கொண்டு ஏதாவது தொழிலோ செய்யத் தொடங்கி விட வேண்டும் என்றுதான், அவள் நினைத்திருந்தாள்.

ஆனால், புரந்தரனைப் பிரிந்து வந்துவிட்டோம் என்ற எண்ணம் நெஞ்சைக்



கசக்க, பிழியப்பிழிய அழுவது தவிர அவளால் வேறு ஒன்றுமே செய்ய முடியவில்லை!

யாரும் தப்பாக எண்ணிவிடக் கூடாது என்பதற்காகக் காலையில் குளித்து, ஏதோ உணவைக் கொறித்துவிட்டு, வந்துவிட்டால், நிம்மதியாக அழுகைதான்!

இப்படி அவள் அழுது கரைந்தபோது, மூன்றாவது நாளில், அவளது அறைக்கதவு தட்டப்பட்டது!

அறை சுத்தம் செய்கிறவளாக இருக்கும்., வேண்டாம் என்று திருப்பி அனுப்ப வேண்டும் என்று எண்ணிக் கதவைத் திறந்தால், அங்கே வக்கீல் சகாயம் நின்றார்!

## 17 நான் என்பதும் நீ என்பதும்



சகாயத்தைப் பார்த்ததும், அதிர்ச்சியில் சற்று நேரம் அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை!

ஐயோ அவளைக் கண்டுபிடித்துவிட்டாரே, பத்திரிகை விஷயத்தில் புரந்தரனுக்கு ஏதேனும் செய்து விடுவாரோ என்ற கலக்கம்தான் முதலில் ஏற்பட்டது!

ஆனால், 'பரிமளவாணி' சட்டப்படி அவனுக்கு உரிமையாகிவிட்டது. இனி அதை மாற்ற முடியாது என்பது நினைவு வர, மனம் சற்று அமைதி அடைந்தது!

அடுத்து, இந்த இடத்தின் பெயரும் இருக்குமிடமும் எப்படித் தெரிந்தது என்பது!

சகாயத்துடைய மகள் மதுதான், இந்த விடுதி பற்றிச் சொல்லி, இதன் உரிமையாளருடைய வக்கீல் தந்தையே என்று கூறியது, காலம் கடந்து நினைவு வந்தது!

இருந்திருந்து, இங்கே வந்து தங்கியது, எவ்வளவு மடத்தனம்!

ஆனால், இனி அதை எண்ணிப் பயன் இல்லை!

"புரந்தரனிடம் சொல்லி விடுவீர்களா, அங்கிள்?" என்று கண்ணீர்க் குரலில் வினவினாள்.

"உள்ளே போய்ப் பேசுவோம்!" என்று அறைக்குள் வந்தார் அவர்!

உள்ளே வந்து, "ஆக, பத்திரிகைக்காக ஒப்பந்தத் திருமணம் செய்கிறீர்கள் என்று நான் நினைத்தது சரிதான் போல!" என்றார் அவர்!

அவள் மௌனமாக இருக்கவும், "ஆனால், அப்புறம்தான் மெல்ல மெல்ல எல்லாம் சரியாகிப் போயிற்றே! டாக்டர் அறிக்கையும் அப்படித்தான் சொல்கிறது! அப்புறம் எதற்காக, இந்தப் பிரிவு, தலைமறைவு?" என்று விசாரித்தார்!

அவளுக்கு விருப்பம் இருக்கிறதோ, இல்லையோ, இப்படி நன்றாக மாட்டிக்



கொண்ட பிறகு, பதில் சொல்லாமல் முடியாதே!

நந்தினி சுருக்கமாக விவரம் சொன்னதும், "என்னது? நடிப்பா? முழுக்க முழுக்கத் தப்பான கணிப்பு!" என்றார் அவர், குரலில் அழுத்தத்துடன்! "திருமணம் என்று அவன் சொன்ன போது, இரண்டு பேருமேதான் நடித்தீர்கள்! ஆனால், அதைக் கண்டுபிடிக்க முடிந்தது! அதனால்தான், திருமணமாகிப் போன போது, உங்களிடம் ரகசியமாக எச்சரிப்பது போல, சாயாவைச் சீண்டி விட்டேன்! மாமியும் மருமகளுமாக உங்களை விரட்டி விரட்டி, ஒன்றாக்குவார்கள் என்று நான் நினைத்தது போலவே, செய்தார்கள்! அப்போதே, உங்கள் நடிப்பு மறைந்து போய், அக்கறையும் அன்பும் தோன்றிவிட்டதே! அதுவும் இப்போது... ஊகூம்! அப்படித் தோன்றவே இல்லையேம்மா!" என்று மறுத்தார் பெரியவர்!

வக்கீல் பொல்லாதவர்தான்! அவளை நன்றாகவே கண்டுபிடித்திருக்கிறார்! ஆனால், அவன் பெண்களை வெறுத்து, கடினப்பட்டவன் ஆயிற்றே! அந்தப் பாறையில், பயிர் எப்படி வளரும்?

"இல்லை அங்கிள்! அவருடையது நடிப்புதான். அவர் அன்பு போலக் காட்டியதற்குக் காரணமும் இருக்கிறது!" என்று தொடங்கி, 'பிரம்மாஸ்திரம்' எச்சரிக்கையையும், அதன் தொடர்ச்சியையும் வருத்தத்துடன் தெரிவித்தாள்.

அப்போதும் அவர் ஒத்துக் கொள்ளவில்லை!

"நீ சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம்! ஆனால், உன்னைக் காணாமல் இரு தினங்களாகப் புரந்தரன் தவிக்கும் தவிப்பு! அது நடிப்பில்லை என்பது, நீ நேரில் பார்த்தால்தான் தெரியும்!" என்றார் அவர்!

அவளும் பிடிவாதமாகவே, மறுத்துத் தலையசைத்தாள்! "அது நடப்பதற்கில்லை!"

அவரும் விடவில்லை!

"ஒன்று செய்! என் வீட்டு மாடியில் இரு! அங்கே வேறு யாரும் வருவதற்கில்லை! இங்கே உன்னை விட்டுவிட்டுப் போனால், நீ உண்ணாமல், உறங்காமல், அழுதே கரைந்து போவாய். அப்படி இருக்கவில்லை என்று சொல்லாதே! இப்படி, இங்கே ஒரு பெண் இருக்கிறாள், என்ன செய்வது என்று, விடுதிப் பொறுப்பாளர் கவலைப்பட்டுச் சொன்னதில் ஐயமடைந்துதான், நான் உன்னைப் பார்க்க, இந்த அறைக்கு வந்ததே! உன் நிலையைப் பார்த்த பிறகும், இனியும் உன்னை இங்கே தனியாக விட முடியாது! அதனால், கிளம்பு. போகலாம்! உன்னைப் பற்றி, நானாகப் புரந்தரிடம் எதுவும் சொல்ல மாட்டேன்! ப்ராமிஸ்! உனக்காக அவன் அன்பில் திருப்தி ஏற்படும் வரை, நீ அவனிடம் போகவும் வேண்டாம்! உன்னை நான் வற்புறுத்தவும் மாட்டேன்!" என்று வாக்குக் கொடுத்தார் அவர்!

அதன் பிறகுதான் நந்தினி, வக்கீல் சகாயத்தின் வீட்டுக்கு குடி பெயர்ந்ததே!

ஆனால், வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், மேலும் இரு தினங்கள் இப்படியேதான் கழிந்தன.

ஆனால், தனிமையில் போல, அவளால் அழுது தீர்க்க முடியவில்லை.

மூன்றாம் நாள், இயல்பாக இருப்பது போலக் காட்டிக் கொள்வதற்காகச் சும்மா மேலோட்டமாகப் பத்திரிகையைப் பார்த்த நந்தினி துள்ளி எழுந்து சகாயத்திடம் அந்தப் பத்திகையைக் காட்டினாள்.

பெரிய விளம்பரமாக வந்திருந்தது!

அதில், என் கண்மணி என்று புரந்தரன் அவளை அழைத்திருந்தான்!

"என் கண்மணி, என்னைப் பிரிந்து போக, உன்னால் எப்படி முடிந்தது? உன் பிரிவால், நடைப் பிணமாக அலைகிறேன்! கண்மணி, பத்திரிகை எனக்கு முக்கியம்தான்! ஆனால், உன்னை விடவும் முக்கியம் அல்ல! என்னால் இதை நிரூபிக்கவும் முடியும்!"

"இன்னும் நான் உனக்குத் தரும் அவகாசம், ஒரு வாரம்! ஏழே நாட்கள்! அதற்குள் நீ திரும்பி வரவில்லை என்றால், இப்போது கிடைத்த அத்தனையையும் திருப்பிக் கொடுத்துவிடுவேன்! "எது, எப்படிப் போனாலும், உன்னைவிட எனக்கு, எதுவும் முக்கியம் இல்லை என்று, அது உனக்குக் காட்டும். இது உறுதி!" என்று முடித்திருந்தான் புரந்தரன்!

பத்திரிகையை மடித்துப் போட்டுவிட்டு, அவனைப் பார்த்தார் பெரியவர்! "என்னம்மா, நிரூபணம் போதுமா? பத்திரிகை, அவனது உயிர் என்பான்! அதுவே, வேண்டாம் என்கிறான்! அத்தோடு யோசித்துப் பார்! அவன் எவ்வளவு கௌரவம் பார்க்கிறவன்? மனைவி பிரிந்து போவதும், திரும்பி வா என்று அவளைக் கெஞ்சுவதும் பெருமைக்குரிய விஷயமா? ஆனாலும், நீ திரும்பி வருவதுதான் முக்கியம் என்று, பல லட்சம் பேர் படிக்கும் பத்திரிகையிலேயே வெளியிட்டுவிட்டான்! இனி நீதான் முடிவெடுக்க வேண்டும்!"

"எனக்கு ஒரு வாரம் வேண்டாம், அங்கிள்! இப்போதே போகப் போகிறேன்!" என்று கிளம்பிவிட்டாள் அவள்!

புரந்தரனுக்கு அவள் வேண்டும்! பத்திரிகைக்காக, மனம் பிடிக்காமல், வேண்டா வெறுப்பாக, அவன் அவளைத் தொடவில்லை! அதில், வேறே ஏதோ குழப்பம் இருக்கிறது!

ஆனால், எது எப்படி இருந்தாலும், அவளுடைய கணவனுக்கு, அவளிடம் நேசம் நிச்சயமாக இருக்கிறது! அது ஒன்றே அவளுக்குப் போதும்!

புரந்தரன் இன்னமும், அலுவலுக்குக் கிளம்பியிராத நேரம்தான்!

திடுமென அறைக்குள் நந்தினியைப் பார்த்ததும், சற்று நேரம் அவன் ஒன்றுமே சொல்லவில்லை!

பிறகு, "இன்னொரு தரம், இப்படி என்னை விட்டுப் பிரிந்து போய்ப் பார், கன்னம் பழுத்து விடும்!" என்று மிரட்டலாகக் கூறியவன், சட்டென அவளை இழுத்து அணைத்தான்!

நாலு நாள் பிரிவின் தாக்கம் சற்று அடங்கியதும், "அடிப்பீர்களா? ரொம்பவும் காதல் கணவன்தான், நீங்கள்!" என்று கண்ணீரிடையே பரிகசித்தாள் அவள்!



அவளது மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, "பின் என்னவாம்? நாலு நாட்களா என்ன பாடு பட்டுவிட்டேன், தெரியுமா? இந்த இருபத்தி ஆறு ஆண்டுகள், ந இல்லாமல், எப்படித்தான் வாழ்ந்தேனோ என்றிருக்கிறது!" என்றவன், அவளைத் தள்ளி நிறுத்தி, ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "என்ன, அம்மையாருக்கும் அதே நிலைதான் போல!" என்றான் கேலியாக!

ஆனால், உடனே அவளை இறுக அணைத்து, "ஏன்? ஏன் அப்படிச் செய்தாய் நந்தினி? ஏன் என்னைப் பிரிந்து சென்றாய்?" என்று கோபமும், தாபமுமாகக் கேட்டான்!

அந்தக் கேள்வியில், அவள் முகமும் வாடியது!

"ஏதோ... அதில் ஏதோ குழப்பம் இருப்பதாக, இப்போது எனக்குத் தோன்றுகிறது! அந்த... அந்த மருத்துவப் பரிசோதனைக்காகத்தான்... வந்து அதற்காகத்தான் நீங்கள் என்னிடம் அன்பாகப் பழகினீர்களோ என்று எண்ணிவிட்டேன். அது அவமானமாக... ரொம்பக் கேவலமாக இருந்ததால்... என்று முடிக்காமேலே பேச்சை நிறுத்தினாள் நந்தினி.

"இப்போதும் எனக்குப் புரியவில்லை!" என்றான் புரந்தரன்! "திடீரென்று நீ என்னை உதறிச் சென்றுவிட்டாய் என்று தெரிந்ததும், ஊட்டியிலிருந்து வந்ததிலிருந்து, வீட்டில் என்னென்ன நடந்தது என்று முழுசாக விசாரித்தேன். மருத்துவப் பரிசோதனை பற்றியும் தெரிய வந்தது! என்னதான், அந்த சோதனையின் முடிவினால்தான் பத்திரிகை விஷயம் சீக்கிரமாக முடிந்தது என்று அங்கிள் சொன்னாலும், உனக்குப் பிடிக்காத சோதனையை, ஏன் செய்தாய்? முதலில், அப்படித்தான் நிரூபிக்க வேண்டும் என்று, நமக்கு என்ன அவசியம்?"

கனம் குறைந்து கொண்டே வந்த மனம், பறவை இறகு போல் லேசாகிப் பறக்கலாயிற்று!

இவன், அதைத் தேவை என்றே எண்ணவில்லையே!

பின்னே இந்திரேசன் எச்சிரித்ததும், ஊட்டிக்குக் கிளம்பியதும், 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த' கதைதானா? அப்படித்தான் இருக்க வேண்டும்!

நூறாயிசு என்பார்களே, அதுபோல அவனை நினைத்ததும் வந்து கதவைத் தட்டினான் இந்திரேசன்!

"என்ன அண்ணி, இந்த மாதிரிப் பண்ணி விட்டீர்கள்? இங்கே, நாங்கள்... முக்கியமாக அண்ணன் பட்ட பாடு தெரியுமா?" என்று குறையோடு கேட்டவனுக்குப் பதில் சொல்லாமல், "நீங்கள் பிரம்மாஸ்திரம் என்று அண்ணனை மிரட்டி எங்களை வெளியூருக்கு அனுப்பினீர்களே, அது... அப்போது... அது... இந்த ம...மருத்துவப் பரிசோதனையைப் பற்றி..." என்று தொடங்கிவிட்டு, மேலே சொல்ல முடியாமல் நந்தினி திணறினாள்.

சரியான விளக்கம் ஒன்று இருக்கும் என்ற நம்பிக்கை வந்துவிட்டபோதும், இது பற்றி இலகுவாகப் பேச அவளால் முடியவில்லை!

கவனித்துக் கொண்டிருந்த புரந்தரன் சட்டென இடைப் புகுந்து, "இந்த

மருத்துவப் பரிசோதனை பற்றி என்னிடம் தெளிவாகச் சொன்னாயா என்று கேட்கிறாள்!" என்று விளக்கம் கொடுத்தான்.

"தெளிவாகவா? ஹையோ, எனக்கே அது என்னவென்று அப்போது தெரியாதே! என்னவோ பிரம்மாஸ்திரம், மரண அடி என்று, இரண்டு பேரும் குசுகுசுத்துக் கொண்டார்கள். சாயாவைக் கொஞ்சம் நைஸ் பண்ணியதில், இந்தப் பிரம்மாஸ்திரத்துக்கு, நீங்கள் இருவரும் தப்பவே முடியாது என்று என்னிடம் பெருமையடித்தாளா, பயந்து போய், அண்ணனிடம் ஓடிக் கிளம்பச் சொன்னேன்! பிறகு இப்போது, இந்தப் பிரம்மாஸ்திரம் இப்படி ஒரு மண்ணாங்கட்டிதான் என்று தெரிந்த பிறகுதானே, அனாவசியமாக உங்களைக் காபுராப் படுத்திவிட்டேன் என்று எனக்கே தெரிந்தது! ஆனால், அதிலேயும் ஒரு நன்மை! அண்ணன் சொல்லித் தந்ததில், எனக்குக் கூடப் பத்திரிகை வேலை கொஞ்சம் புரிகிறது! தொழிலில் அண்ணன் பங்கு தரப் போகிறார் என்றதும், சாயாவும் என்னிடம் கொஞ்சம் மரியாதையாக இருக்கிறாள்..." என்று சந்தோஷமாகச் சொல்லிக் கொண்டே போன இளையவனின் பேச்சில் குறுக்கிட்டு, "தம்பி, ஜூட்!" என்றான் புரந்தரன்.

"எ...என்ன அண்ணா?" என்று புரியாமல் குழம்பினான் சின்னவன்.

பார்வை மனைவியிடமே இருக்க, "உனக்குத் தொழிலில் போலவே, உன் அண்ணிக்கும் சிலது சொல்லித்தர வேண்டியிருக்கிறது! கற்றுக் கொடுத்துவிட்டு வருகிறேன். நீ கொஞ்சம் சீக்கிரமாக அலுவலகத்துக்குப் போய் வேலையைப் பார்!" என்று பெரியவன் கூற, "சரி அண்ணா!" என்று லட்சுமணனாகவே பணிந்து கிளம்பிப் போனான் இந்திரேசன்!

"ஆக, இவ்வளவு மோசமாகவா என்னைப் பற்றி நினைப்பது? நானானால், தினம் தினம் உன்மேல் வளரும் அன்பையும், ஆசையையும் அடக்க அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறேன்! என்னைப் போய்... அதெல்லாம் போகட்டும். மூன்று நாள் சொர்க்கத்துக்குப் பிறகு, ஆறு நாள் அல்லல்பட வைத்ததற்கு, உரிய தண்டனையை முதலில் தர வேண்டாமா? வா இங்கே!" என்று மனைவியை மிரட்டி அழைத்தான் புரந்தரன்.

பயந்தவள் போலப் பணிவு காட்டி அருகில் வந்து, ஆசைக்கணவனின் கைகளுக்குள் ஆனந்தமாகச் சிறை புகுந்தாள் நந்தினி!

**- முற்றும் -**

Owned Published Edited and Printed by SP. Ramu, Published at 6/84, Mallan Ponnappan St., Triplicane, Chennai - 600 005. Phone : 2848 7533, 2848 3163. Telefax: 2848 0610. Printed at Sri Parameswari Printers & Binders, 9, Swami Aachari Street, Pudupakkam, Chennai - 600 016. Editors: SP. Ramu, Editor incharge: Bharathi. E-mail: vivekpublications@usa.net